"கிரேக்க நாட்டில் **அரிஸ்டாட்டில்** என்கிற அறிஞர் இருந்தார். அவருடைய குருநாதர் **பிளேட்டோ** என்கிற மாமேதை. **மகா அலெக்ஸாண்டர்** மாணவன். ஆனால் அரிஸ்டாட்டிலுக்குப் பிளேட்டோவின் மாணவன் என்பதில் தான் பெருமையே தவிர, அலெக்ஸாண்டருக்குக் குரு என்பதால் அல்ல.

என்னைப் பல நூல்கள் எழுதிய ஆசிரியன் என்று போற்றிப் பேசினார்கள். ஆனால் நூலாசிரியன் என்பதைவிட, **திரு.வி.க.**வின் சிஷ்யன் என்பதில் தான் பெருமை. திரு.வி.க. பிளேட்டோ ஆனால் நான் அரிஸ்டாட்டில் அல்ல."

- சாமிநாத சர்மா

தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017
தொ.பேசி: 24339030

24

திரு.வி.க. தமிழ்க்கொடை

# திரு.வி.க.
## தமிழ்க்கொடை

24



தமிழ்மண்

- கிறிஸ்து மொழிக்குறள்
- இருளில் ஒளி
- இருமையும் ஒருமையும்
- அருகன் அருகே அல்லது விடுதலை வழி
- பொருளும் அருளும் அல்லது
  மார்க்ஸியமும் காந்தியமும்
- சிந்தந் திருந்தல் அல்லது
  செத்துப் பிறத்தல்
- முதுமை உளறல்
- வளர்ச்சியும் வாழ்வும் அல்லது
  படுக்கைப் பிதற்றல்

# திரு.வி.க. தமிழ்க்கொடை

## 24

*ஆசிரியர்*

**திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார்**

*தொகுப்பாசிரியர்*

**இரா. இளங்குமரனார்**

*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

தமிழ்மண் பதிப்பகம்

*நூற் குறிப்பு*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **திரு.வி.க. தமிழ்க்கொடை – 24** |
| ஆசிரியர் | : | திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார் |
| தொகுப்பாசிரியர் | : | இரா. இளங்குமரனார் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2006 |
| தாள் | : | 18.6 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 32+312=344 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 320/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | இ. இனியன் |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | தமிழ்மண் பதிப்பகம்<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர்,<br>சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030 |

# நுழைவுரை

தமிழக வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பல்வேறு நிலைகளில் சிறப்பிடம் பெறத்தக்க குறிப்புகளை உடையது. பன்னூறு ஆண்டுகளுக்குப் பின் மொழியுணர்ச்சியும், கலை யுணர்ச்சியும் வீறுகொண்டெழுந்த நூற்றாண்டு. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டின் வரலாற்றை - பண்பாட்டை வளப்படுத்திய பெருமக்களுள் **தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனாரும்** ஒருவர். இவர் உரைநடையை வாளாக ஏந்தித் தமிழ்மண்ணில் இந்தியப் பெருநிலத்தின் விடுதலைக்கு உன்னதமான பங்களிப்பைச் செய்தவர்; வணங்கத் தக்கவர்.

நினைவு தெரிந்த நாள்முதல் பொதுவாழ்வில் ஈடுபாடுடை யவன் நான். உலகை இனம் காணத் தொடங்கிய இளமை தொட்டு இன்றுவரை தொடரும் என் தமிழ் மீட்புப் பணியும், தமிழர் நலம் நாடும் பணியும் என் குருதியில் இரண்டறக் கலந்தவை. நாட்டின் மொழி, இன மேன்மைக்கு விதைவிதைத்த தமிழ்ச் சான்றோர்களின் அருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழருக்குக் கொண்டுசேர்க்க வேண்டும் எனும் தளராத் தமிழ் உணர்வோடு **தமிழ்மண் பதிப்பகத்தைத்** தொடங்கினேன்.

**தமிழ்த்தென்றல் திரு.வி.க.** தமிழ் வாழ்வு வாழ்ந்தவர். ***54* நூல்களைப்** பன்முகப்பார்வையுடன் எழுதித் தமிழர்களுக்கு அருந்தமிழ்க் கருவூலமாக வைத்துச்சென்றவர். இவற்றைக் காலவரிசைப்படுத்தி, பொருள்வழியாகப் பிரித்து வெளியிட் டுள்ளோம். தமிழறிஞர் ஒருவர், தம் அரும்பெரும் முயற்சியால் பல்வேறு துறைகளில் எப்படிக் கால்பதித்து அருஞ்செயல் ஆற்ற முடிந்தது என்பதை உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும் எனும் பெருவிருப்பத்தால் இத்தொகுப்பு களை வெளியிட்டுள்ளோம்.

திரு.வி.க. வின் வாழ்க்கைச் சுவடுகளும், அறவாழ்க்கை நெறியும், குமுகாய நெறியும், இலக்கிய நெறியும் , சமய நெறியும், அரசியல் நெறியும், இதழியல் நெறியும், தொழிலாளர் நலனும், மகளிர் மேன்மையும் பொன்மணிகளாக இத் தொகுப்பு

களுக்குப் பெருமை சேர்க்கின்றன. இவர்தம் உணர்வின் வலிமையும், பொருளாதார விடுதலையும், தமிழ் மொழியின் வளமையும் இந் நூல்களில் மேலோங்கி நிற்கின்றன. இந்நூல்களைத் தமிழ் கற்கப் புகுவார்க்கும், தமிழ் உரைநடையைப் பயில விரும்புவார்க்கும் ஊட்டம் நிறைந்த தமிழ் உணவாகத் தந்துள்ளோம்.

திரு.வி.கலியாணசுந்தரனார் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் மூலவர்; தமிழ் உரைநடையின் தந்தை; தமிழ் நிலத்தில் தொழிற்சங்க இயக்கத்துக்கு முதன்முதலில் வித்தூன்றிய வித்தகர்; தமிழர்கள் விரும்பியதைக் கூறாது, வேண்டியதைக் கூறிய பேராசான்; தந்தை பெரியார்க்கு **வைக்கம் வீரர்** என்று பெயர் சூட்டி மகிழ்ந்த பெருமையர்; தமிழ்ச் சிந்தனை மரபிற்கு அவர் விட்டுச்சென்ற சிந்தனைகள் எண்ணி எண்ணிப் போற்றத் தக்கவை. இன்றும், என்றும் உயிர்ப்பும் உணர்வும் தரத்தக்கவை.

சமயத்தமிழை வளர்த்தவர்; தூய்மைக்கும், எளிமைக்கும், பொதுமைக்கும் உயிர் ஓவியமாக வாழ்ந்தவர்; அன்பையும், பண்பையும், ஒழுங்கையும் அணிகலனாய்க் கொண்டவர்; தன்மதிப்பு இயக்கத்துக்குத் தாயாக விளங்கியவர்; பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருந்தவர்; எல்லாரையும் கவர்ந்து இழுத்த காந்தமலையாகவும்; படிப்பால் உயர்ந்த இமயமலையாகவும்; பண்பால் குளிர் தென்றலாகவும், தமிழகம் கண்ணாரக் கண்ட காந்தியாகவும், அவர் காலத்தில் வாழ்ந்த சான்றோர்களால் மதிக்கப்பெற்றவர். .

சாதிப்பித்தும், கட்சிப்பித்தும், மதப்பித்தும், தலைக்கு ஏறி, தமிழர்கள் தட்டுத் தடுமாறி நிற்கும் இக்காலத்தில் வாழ்நாள் முழுதும் தமிழர் உய்ய உழைத்த ஒரு தமிழ்ப் பெருமகனின் அறிவுச் செல்வங்களை வெளியிடுகிறோம். தமிழர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக. தமிழரின் வாழ்வை மேம்படுத்தும் அனைத்துத் துறைகளிலும் தமிழ் இடம்பெற வேண்டும் எனும் தொலை நோக்குப் பார்வையோடு எம் பதிப்புச் சுவடுகளை ஆழமாகப் பதித்து வருகிறோம். தமிழர்கள் அறியாமையிலும், அடிமைத் தனத்திலும் கிடந்து உழல்வதிலிருந்து கிளர்ந்தெழுவதற்கும், தீயவற்றை வேரோடு சாய்ப்பதற்கும், நல்லவற்றைத் தூக்கி நிறுத்துவதற்கும் **திரு.வி.க.வின் தமிழ்க்கொடை** எனும் செந்தமிழ்க் களஞ்சியங்களைத் தமிழர்களின் கைகளில் தவழ விடுகிறோம். கூனிக்குறுகிக் கிடக்கும் தமிழர்களை நிமிர்த்த முனையும் நெம்புகோலாகவும், தமிழர்தம் வறண்ட நாவில் இனிமை தர வரும் செந்தமிழ்த்தேன் அருவியாகவும் இத்

தமிழ்க் கொடை திகழும் என்று நம்புகிறோம். இதோ! பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும், தமிழ்ப் பதிப்புலக மேதையும் செந்தமிழைச் செழுமைப்படுத்திய செம்மலைப் பற்றிக் கூறிய வரிகளைப் பார்ப்போம்.

> "தனக்கென வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் கலியாண சுந்தரனார் அவர்களைப் படிப்பினையாகக் கொள்வார்களாக"
>
> **- தந்தை பெரியார்.**

> "திரு.வி.க. தோன்றியதால் புலவர் நடை மறைந்தது; எளிய நடை பிறந்தது. தொய்வு நடை அகன்றது; துள்ளு தமிழ் நடை தோன்றியது. கதைகள் மறைந்தன; கருத்துக்கள் தோன்றின. சாதிகள் கருகின; சமரசம் தோன்றியது." **- ச. மெய்யப்பன்.**

தமிழர் அனைவரும் உளம்கொள்ளத்தக்கவை இவை.

தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளப்பரிய காதல் கொண்டவர் திரு.வி.க. இவர் பேச்சும் எழுத்தும் தமிழ் மூச்சாக இருந்தன. தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் ஆங்கிலமே பேச்சுமொழியாக மதிக்கப்பட்ட காலத்தில் தமிழுக்குத் தென்றலாக வந்து மகுடம் சூட்டிய பெருமையாளர். தமிழின் - தமிழனின் எழுச்சியை அழகுதமிழில் எழுதி உரைநடைக்குப் புதுப்பொலிவும், மேடைத் தமிழுக்கு மேன்மையும் தந்த புரட்சியாளர்.

கலப்பு மணத்துக்கும், கைம்மை மணத்துக்கும் ஊக்கம் தந்தவர்; வழுக்கி விழுந்த மகளிர் நலனுக்காக உழைத்தவர்; பெண்களின் சொத்துரிமைக்காகப் பேசியவர்; ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை என்று வாதிட்டவர்; பெண்ணின எழுச்சிக்குத் திறவு கோலாய் இருந்தவர்; 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டுமன்று ஆண்களுக்கும் உண்டு என்று வலியுறுத்தியவர்; மாந்த வாழ்வியலுக்கு ஓர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர்; இளமை மணத்தை எதிர்த்தவர்; அரசியல் வானில் துருவ மீனாகத் திகழ்ந்தவர்; தமிழர்களுக்கு அரசியலில் விழிப்புணர்வை ஊட்டியவர்; சமுதாயச் சிந்தனையை விதைத்தவர்; ஒழுக்க நெறிகளைக் காட்டியவர்.

சங்கநூல் புலமையும், தமிழ் இலக்கண இலக்கிய மரபும் நன்குணர்ந்த நல்லறிஞர், ஓய்வறியாப் படிப்பாளி, சோர்வறியா உழைப்பாளி, நம்மிடையே வாழ்ந்துவரும் செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார் அவர்கள், **'தீந்தமிழ் அந்தணர்'** திரு.வி.க.வின் நூல் தொகுப்புகளில் அடங்கியுள்ள பன்முக மாட்சிகளை - நுண்ணாய்வு நெறிகளை ஆய்வு செய்து, அவர்தம் பெருமையினை மதிப்பீடு செய்து நகருக்குத் தோரணவாயில்

போன்று இத்தொகுப்புகளுக்கு ஒரு **கொடையுரையை** அளித்துள்ளார். அவர்க்கு எம் நெஞ்சார்ந்த நன்றி.

தமிழர் பின்பற்றத்தக்க உயரிய வாழ்க்கை நெறிகளைத் தாம் படைத்தளித்த நூல்களின்வழிக் கூறியது மட்டுமின்றி, அவ்வரிய நெறிகளைத் தம் சொந்த வாழ்வில் கடைப்பிடித்துத் தமிழர்க்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார் திரு.வி.க. என்பதை வாழும் தலைமுறையும், வருங்காலத் தலைமுறையும் அறிந்துகொள்ள வேண்டும் - பயன்கொள்ள வேண்டும் எனும் விருப்பத்தோடு இந்நூல்களை வெளியிட்டுள்ளோம்.

**தமிழ்த்தென்றல் திரு.வி.க.** நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து , உவந்து உவந்து எழுதிய படைப்புகளைத் தொகுத்து ஒருசேர வெளியிட்டுத், தமிழ்நூல் பதிப்பில் மணிமகுடம் சூட்டி உள்ளோம். விரவியிருக்கும் தமிழ் நூல்களுக்கிடையில் இத் தொகுப்புகள் தமிழ் மணம் கமழும் ஒரு பூந்தோட்டம்; ஒரு பழத்தோட்டம். பூக்களை நுகர்வோம்; பழங்களின் பயனைத் துய்ப்போம். தமிழ்மண்ணில் புதிய வரலாறு படைப்போம். வாரீர்! இந்நூல் உருவாக்கத்திற்கு துணை நின்றோர் அனை வருக்கும் எம் நன்றியும் பாராட்டும்.

***திரு.வி.க. வெனும் பெயரில் திருவிருக்கும்;***
***தமிழிருக்கும்! இனமிருக்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரில் திருவாரூர்ப்***
***பெயரிருக்கும்! இந்தநாட்டில்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் தொழிலாளர்***
***இயக்கங்கள் செறிவுற்றோங்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் பொதுச்சமயம்***
***சீர்திருத்தம் திகழுமிங்கே!***

- பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**

**– கோ. இளவழகன்**
*பதிப்பாளர்*

# கொடையுரை

**கிறிஸ்து மொழிக்குறள்**

*கிறிஸ்து பெருமான் மொழிந்த செய்திகளைக் குறள் யாப்பால் கூறும் சுவடி கிறிஸ்து மொழிக்குறள் என்பது பெயரா லேயே விளங்கும்.*

*"கிறிஸ்து பெருமான் மொழிகளைத் தழுவியே பாடிச் சென்றேன்" என்று தம் முன்னுரையில் குறிப்பிடுகிறார் திரு.வி.க.*

*கிறிஸ்து பெருமான் நற்செய்திகளைத் தமிழில் வடிக்க நெடிய காலத்திற்கு முன்னரே வேட்கை உண்டாகியதையும் அதனை நிறைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுப் பயின்றதையும் பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டத்தின்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட நிலையில் நூல் இயற்றியதையும் முன்னுரையில் சுட்டுகிறார்.*

*"இந்நூற்கண் திரட்டப்பட்டுள்ள மணிமொழிகள் அப்படியே அடுக்கப்படவில்லை. அவை, கருத்துக்கு இயைந்த முறையில் ஒவ்வொரு தலைப்பின் கீழ் ஒல்லும் வகை ஒழுங்கு செய்யப் பெற்றன. இதனால் சில இடங்களில் தொடர்பின்மை காணப்படும்" எனப் பொருள் வைப்பு முறை பற்றிக் கூறுகிறார்.*

*காந்தியடிகளின் பருவுடல் வீழ்ச்சி நூல் வெளியீட்டை உந்தியமையைச் சுட்டும் திரு.வி.க., தோற்றுவாய்க்கு முன்னர்க் 'காந்தியடிகட்கு' ஒன்பான் கண்ணிகளைப் பெய்துள்ளார். இறுதிக் கண்ணியில்,*

***"ஏசுநாதன் இசைத்த மலைமொழி***
***ஏனை வாய்மொழி ஏந்தி ஒழுகினை***
***நேச அம்மொழி நேர்ந்தஇந் நூலினை***
***நினைவுக் காக்கினன் நின்னடி வாழ்த்தியே"***

*என்கிறார்.*

*தோற்றுவாய், மலைமொழி, மணிமொழி, இறுவாய் என்னும் நாற்பகுப்பில் நூல் நடையிடுகின்றது. குறட்பா எண்ணிக்கை 541.*

'அரசற்ற சமூகப் புதிய நல்ல அமைப்பே'

என்றும்,

'அரசற்ற ஒன்றே மக்களாட்சி அல்லது முழுப் பொதுமை'

என்றும்,

'மார்க்சினுடையது சடப்பொதுமை; கிறிஸ்துவினுடையது தெய்வப் பொதுமை இரண்டுக்கும் பொதுவில் பொலிவது பொதுமை' என்றும்,

கிறித்து மொழி வழியாகத் தோற்றுவாயில் தம் உள்ளீடுகளைப் பதிவு செய்கிறார்.

***"ஒல்லும் வகைதழுவி ஓதவும் வான்மலையை***
***இல்லை தகுதி எனக்கு"***

***"ஐயன் அருள்மொழியை அன்பால் உளறுகின்றேன்***
***வையம் பொறுக்க மறு"***

இன்னவை **அவையடக்கம்** என்ன அமைந்த நூனெறியாம்.

***"என்னுள்ளே நீ பிறந்தாய் ஏசு பெருமானே***
***உன்னுள்ளே யானிறந்தேன் உற்று"***

என்று கிறிஸ்துவின் அருள் வேட்டலில் குறிப்பிடுவார் திரு.வி.க. 'என்னுள்ளே நீ பிறந்தது' என்பது ஏசுபெருமான் வாழ்வாலும் வாக்காலுமேயாம் என்பதைத் தெளிவிப்பதே மலைமொழியும் மணிமொழியுமாம்.

பாடலின் இயல்பான ஓட்டம், எளிமை, இனிமை, பொருள் விளக்கம், பாவாக்கம் என்பவற்றுக்குக் காண்க.

***"போக்க வரவில்லை போந்தேன் நிறைவேற்ற***
***ஏக்கமுற வேண்டா இனி"*** (18)

***"காணிக்கை ஏந்திக் கடவுள் திருக்கோயில்***
***பேணினுளச் செம்மை பெறு"*** (29)

***"நேயரையே நேசித்தால் நேர்பயன் என்னையோ***
***ஆயரும் செய்வ தது"*** (66)

இங்கே வரும் ஆயர் 'மக்களைத் தொல்லைக்குட்படுத்தி நெருக்கிப் பறித்துண்ணும் ஒரு கூட்டத்தினர்' என்பது திரு.வி.க. குறிப்புரை.

***"தேவை இதுவென்று செம்மொழியால் வேண்டுமுனம்***
***தேவன் உணர்ந்துள்ளான் தேர்"*** (85)

***"நாளைக் கெனக்கவலை நண்ணாதீர் நாளைக்கு***
***நாளை கவலையுறும் நாள்"*** *(122)*

*"மற்றவர்க்கு நீரளத்தல் எவ்வளவோ அவ்வளவே*
*உற்றிடும் நுந்தமக் கூர்ந்து"*

இவை மலைமொழிகளுள் சில.

***"ஆக்கையைக் கொல்வோருக் கஞ்சற்க; ஆன்மாவைப்***
***போக்கஅவர்க் குண்டோ புலம்"*** (8)

***"அப்பன் மகனை அனுப்பினன் இவ்வுலகை***
***ஒப்புர வாக்க உவந்து"*** (28)

***"குழந்தைகள் என்பால் குலவ விடுக***
***விழுந்துதடை செய்யாதீர் வோர்த்து"*** (141)

***"எங்கிருவர் மூவரோ என்பெயரால் கூடினால்***
***அங்கிருப்பேன் நடுவில் ஆர்ந்து"*** (172)

இவை மணிமொழிகளுள் சில.

நூல் முன்னுரையில் 'குணம் கிறிஸ்துவின்பாலது; குற்றம் என் பாலது' என்று திரு.வி.க. கூறுவது அவர்தம் சான்றாண்மைச் சான்று.

## இருளில் ஒளி

'இருளில் ஒளி' சுவடிப் பெயர். இருட்போதில் 'ஒளி' வந்தால், இருள் நிற்குமா? ஒளி வரும்போதே இருள்தானே அகன்று விடல் கண்கூடு.

உயிரியாம் மாந்தர்க்குப் புறவொளிக் கண்கள் உள; அவற்றொடு உள்ளொளி பெருக்கும் அகக்கண்ணும் உண்டு. அகங்கண் - அங்கண்; உள்ளொளியாம் அகம்கண்.

திரு.வி.க. வின் கண்கள் படலத்தால் ஒளி இழந்த போதில் உள்ளொளியால் பாடப்பட்ட நூல் இந்நூல்.

"இந்நூலுக்கு எத்தலைப்பு வேயலாம் என்று சிந்தித்தேன். முதலில், 'முதுமை உளறல்', 'காலக்குறள்', 'கட்டில் காற்று' முதலியன தோன்றின. அவற்றிடை 'இருளில் ஒளி' என்று ஒலித்தது. அதையே தலைப்பாக வேய்ந்தேன். புற இருளில் அக ஒளியால் ஆக்கப்பெற்ற ஒரு நூலுக்கு 'இருளில் ஒளி' என்னும் தலைப்புப் பொருந்தியதே; சாலப் பொருந்தியதே" எனத் திரு.வி.க. தம் முன்னுரையில் குறிக்கிறார்.

முன்னுரைக்கு முற்பட பார்வை இழந்த மில்தனார், சுந்தரர் பாடல்களை வைக்கிறார். முன்னுரை நிறைவிலும் கசிந்துருகு பாடல்களை வைக்கிறார். தாம் பலதிறத் தொண்டுகளில் ஈடு பட்டமையால் நூல்தொண்டு இரவிலேயே செய்ய நேர்ந்ததை

யும், உறக்கம் கெட்டதையும், உடல் கெட்டதையும், கண்ணொளி குன்றியதையும் கற்பார் உளம் கொள உரைத்து, அவர்க்கு உடலோம்பல் வழியைத் தெளிவிக்கிறார்.

உள்ளொளி, படுக்கையில் பிதற்றல், முதுமை உளறல் முதலிய சுவடிப் பெயரீடுகளையும் உணர உணர்த்து கிறார். படுக்கையில் கிடந்து சொல்லி எழுதிய வகையால் கிடைத்த நூல்களுள் ஒன்று இருளில் ஒளி. ஒரு நல்ல பிறவி இறுதிமூச்சு வரை தொண்டாற்றலைக் கைவிடாது என்பதற்குச் சீரிய எடுத்துக்காட்டு திரு.வி.க. வாழ்வும் இத்தகுநூல்களுமாம்.

பரம், படைப்பு, கல்வி, அரசு, உடல், எண்ணம், வாழ்க்கை, உலகம், அறம், சமயம், தீர்க்கர், வாழ்த்து என்னும் பன்னிரு குறுந்தலைப்புகளில் நூல் அமைந்துள்ளது. இதில் அமைந் துள்ள குறட்பாக்கள் 652 ஆகும்.

தலைப்புக்குப் பொருள் வரம்பை அன்றி, எண்வரம்பு கொள்ளப்படாமையால் 12 குறள் கொண்ட தலைப்பும் (12) 80 குறள் கொண்ட தலைப்புகளும் (3, 5) இடம் பெற்றன. வேண்டும் குறிப்புரையும் அடிக்குறிப்பாக உண்டு.

***"எப்பொருளும் கோயிலே எவ்வுயிரும் கோயிலே***
***ஒப்பில் பரத்துக் குணர்"***

***"உள்ளம்உரைக் கெட்டா உயர்பரமென் றஞ்சறக***
***உள்ளுக சூழியற்கை உற்று"***

பரத்திற்கு இலக்கணமும் பரத்தை அடையும் வகையும் கூறியவை இவை.

உள்ளது சிறத்தலாம் கூர்தலறமே படைப்பு என்பதை,

'கூர்தலறத் தத்துவம் கூறும் படைப்புநுட்பம் தேர்தல் அடைதல் திறம்" என்கிறார்.

உயிர்கள் என்னும் இறை உலகைப் பலவிதமாய் உண் டாக்குதலை நண்டு, வளைஎடுத்தல், சிதல் புற்றெடுத்தல், வண்டு ஈடுகட்டல், பறவை கூடு கட்டல், விலங்கு குகை தேடல், குரங்கு கிளையேறல் வழியாக,

***"குடிசையும் மாடியும் கோபுரமும் மக்கள்***
***படியில் எழுப்பினர் பார்"***

எனப் படைப்புத் தூண்டலைக் குறிக்கிறார்.

***"கல்லூரிக்கல்வி கழகத்துக் கல்வியெலாம்***
***மல்லூரும் கல்வி மயக்கு"***

*"ஒருகுண்டால் பாரழிவை உன்னுவதோ கல்வி*
*பெருகுபுயல் வேண்டாவே பேசு"*

*"கல்வி கொளலயாகும் காலமும் வந்ததே*
*அல்லல் அகல்வழியை ஆய்"*

என நிகழும் கல்விமுறையைக் கடியும் திரு.வி.க,

*"குருகுலக் கல்வியைக் கூர்ந்துகூர்ந் தாய்க*
*பெருகும் அறிவொளிப் பேறு"*

*"தாவரம் கற்பிக்கும் சார்புயிர் கற்பிக்கும்*
*பாவுகதிர் கற்பிக்கும் பார்"*

*"உள்ளத்தை உள்ளம் உணர்கல்வி மக்களிடைக்*
*கள்ளம்பொய் நீக்கும் கடிது"*

என வேண்டத்தக்க கல்வி மாண்பைத் தூண்டி எழுப்புகிறார்.

இற்றைக்கு ஐம்பத்து ஆறு ஆண்டுகளின் முன்னை இருந்த கல்வியே இக்குறைகளுக்கு இடமாயின், இற்றை நிலை இதன் நூறுமடங்கு இழிவுடையதாம் எனல் வெளிப்படை.

*"வறுமை மடமை வளர்க்கும் அரசு*
*சிறையைப் பெருக்கல் சிரிப்பு"*

*"வறுமை பசிநோய் மடமை முதலாம்*
*சிறுமை ஒழிஅரசைத் தேடு"*

*"ஆண்பெண் உரிமையுடன் அன்பாய் உலவிவரப்*
*பேண்பெரிய ஆட்சியே பேறு"*

இன்ன அடிப்படை கொண்ட அரசை அவாவுகிறார் திரு.வி.க.

*"காற்றின் மகவாகிக் காலம் கழிப்பவரைக்*
*கூற்றம் அணுகாது கூர்ந்து"*

*"கீரையும் மோரும் கிளர்குடல் மாசுகளின்*
*வேரைக் களையும் விரைந்து"*

*"உணவு செரியாமுன் உண்டுண் டடைத்தல்*
*பிணவுடலம் ஆக்கும் பிணித்து"*

*"உடம்பிறை கோயிலெனும் உண்மை உணர்ந்தோர்*
*திடம்பட மெய்யென்றார் தேர்ந்து"*

என்பவை உடல்நலக் குறிப்புகளுள் சில.

எண்ணத்தால் சிறந்த மக்களையும் எண்ணத்தால் இழிந்த மக்களையும் இவர் இவர் என எடுத்துக் காட்டிய அருமையது எண்ணப்பகுதி.

***“எண்ணம் உடலோம்பும்; எண்ணம் உயிரோம்பும்;***
***எண்ணம் உலகோம்பும்; இன்பு”***

என எண்ணநலம் கூறும் திரு.வி.க.

***“செல்வத்துட் செல்வமெது? தீயெண்ணர் ஆகாமை;***
***கல்வியில் கல்வியது கல்”***

என்று நல்லெண்ணக் கல்விச் செல்வத்தைக் கற்கத் தூண்டு கிறார்.

தேவைக்கு மேலெண்ணாச் சீரிய வாழ்க்கையை விரித் துரைக்கிறார்; ஏழ்மைக்கு உதவுதல் ஏழ்மையை வளர்ப்பது; ஏழ்மை பெருகா வளவாழ்வு வேண்டும் எனத் தேர்ந்துரைக் கிறார்.

பொதுமை உலகையும் புதுமை உலகையும் எதிர்நோக்கிப் பாடுவது உலகம். ஈருலகப் பெருமக்களையும் கொள்கை களை யும் விரித்துரைக்கிறார்.

***“உலகமே ஓருடலாய் ஒத்துயிரோர் அன்புக்***
***குலமுகிழ்த்தால் என்னகுறை? கூறு”***

என வினாவுகிறார்.

வள்ளுவ அறம், விவிலிய அறம், காந்திய அறம் ஆயவற்றை நறுக்குத் தெறித்தாற் போல் கூறுகிறது அறம்.

சமயங்களில் சார்ந்துள்ள அழுக்குகளை விரித்துரைக்கும் திரு.வி.க. சமயச் சால்புகள் எவையெனவும் காட்டுகிறார். சன் மார்க்கச் சிறப்பை,

***“பன்மார்க்கத் தீங்குகளைப் பாரில் ஒழிக்க எழு***
***சன்மார்க்கம்”***

எனப்பாராட்டுகிறார்.

தீர்க்கர் என்பார் குருமார். தீர்க்கச் சிறப்பை,

***“மக்களின் துன்பமும் மற்ற உயிர்த் துன்பமும்***
***ஒக்கநினை தீர்க்கம் உயர்வு”***

என்று கூறி, வாழ்த்துடன் நூலை நிறைவு செய்கிறார்.

### இருமையும் ஒருமையும்

இருமை என்பது இரண்டு. இது பன்மையின் அடையாளம்; பன்மை என்பதன் இலக்கணம், ‘ஒன்றல்ல பல’ என்பதாம்.

வடமொழியர் ஒருமை, இருமை, பன்மை என மும்மைப் படுத்துவர். தமிழரோ ‘ஒன்றல்லது பல’ (பன்மை) எனக் கண்டனர்.

உலகம் இருமைப்பட்டது; ஒவ்வொன்றும் இருமைப் பட்டவை. இருவேறு 'உலகத்து இயற்கை' என்பது வள்ளுவம். ஆக்கமும் கேடும் என்பவை அவை.

கொடுப்பதும் மழை; கெடுப்பதும் மழை;

சோறாக்கும் தீயே, சுட்டெரிக்கவும் செய்யும்.

மூச்சுக் காற்று, தென்றல் நிலையும் ஆகும். மலையைச் சாய்க்கும் நிலையும் ஆகும்.

ஒழுக்கம் இழுக்கம்; அவா, துன்பம்;

நோய், நலம்;

தண்மை, வெம்மை;

எல்லாமும் இருமையாய் நிற்றல் வெளிப்படை.

கடிகையாரம் பன்மை;அப்பன்மை உறுப்புகளின் இயக்கம் ஒருமை.

உடல் பன்மை; அப்பன்மை உறுப்புகளின் இயக்கம் ஒருமை;

இருமை ஒருமையாதல் - ஏன்? பன்மை ஒருமையாதல் வேண்டும்!

பன்மையுள் ஒருமை காணும் பான்மையே ஆக்கம்.

ஒருமையைப் பன்மையாக்கல் அழிப்பு, சிதைப்பு.

உடற்கூறு - உடலியக்கம் - உள இயக்கம் - அறிவியக்கம் என்னும் இயக்கம் அனைத்தும் இருமையில் ஒருமையாய் இயல்பவை.

மாந்தன் இரண்டுகாலால் ஒருமுக நடையிட்டால், விலங்கு நான்கு காலால் நடையிடுகிறது; அறுகால் பூச்சி, எண்கால் பூச்சி என்பவை ஒரு முக இயக்கம் கொள்கின்றன; ஆயிரம் கால் பூச்சியும் அப்படியே ஒருமுக இயக்கம் கொள்கின்றது. ஆயிரம் ஆறுகள் ஒரு கடலாய் ஒருமா கடலாய்ப் பெருக்கம் காட்டு கின்றன.

ஆயிரம் தெய்வம், ஆயிரம் சமயம் எனினும் அவை ஒருமையானவையே " தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத்தீயை வளர்ப்பவர் மூடர் " என்பது பாரதி பாடல்.

"ஒருருவம் ஒரு நாமம் ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம் நாமம் சொல்லல்" என்பது மணிவாசகர் மொழி.

இருமையில் ஒருமை காணும் உலகம் உய்யும்!

ஒருமையைப் பன்மையாக்கும் பார்வை, கெடுத்தொழிக்கும் உலகை. இருமையில் ஒருமை கண்ட திரு.வி.க. தம் காட்சியை உலகுணர வைக்கிறார். இருமையும் ஒருமையும் என்பது நூலின் பெயராயிற்று.

"இச்சிறு நூலில் பல பொருள்கள் செறிந்து கிடக்கின்றன. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கன இரண்டு. ஒன்று இருமை; மற்றொன்று ஒருமை" என்கிறார் திரு.வி.க.

இச்சுவடி 1930 இல் வெளிவந்தது. அகவல் நடையது. அடியால் 405 கொண்டது.

கண்ணொளி இழந்து படுக்கையில் இருந்த நிலையில் நினைவில் இருத்தித் தக்கார் ஒருவர் எழுதச் சொல்லியது ஆகும்.

எதுகை மோனை எங்கெங்கும் விஞ்சி நிற்கின்றன. தொடர் தொடராகப் பொருள் விரிகின்றது.

"கடவுளே! கடவுளே! கண்ணளி கடவுளே எனத் தொடங்கி, அதே தொடராலேயே நிறைவு கொள்கின்றது.

கண்ணொளி குன்றுங்கால்

உள்ளொளி விஞ்சும் என்பதை,

" முதுமையில் எனது கண்களைப் படலத்தால் மறைப்பித்துச் சிந்தனா சக்தியைப் பெருக்கி, என் மனத்தில் எழும் கருத்துக்களை உளறுமாறு செய்துள்ளதை" என்னும் முன்னுரையால் சுட்டுகிறார். இதன் விளக்கம் 'உள்ளொளி' யில் காணவும் ஏவுகிறார்.

கடவுள் நிலை இரண்டு, என்பதை "இயற்கையைக் கடந்தும் கலந்தும் நிற்றல்" என்கிறார். கடந்த நிலையினும் கலந்த நிலையே அருள்நிலை எனத் தெளிகிறார்.

உலகம் இருமையாய் இயக்கமுறுதலை நூற்றுக் கணக்கான சான்றுகள் காட்டி வளர்ச்சி பெருகப் பெருக அழிவு பெருகுதலும், ஆசைப் பேய் ஆட்டிப் படைத்தலும் ஆசையை ஒழித்து,

'இருமை மடிய ஒருமை படிய' (200) நேர்தலைக் காட்டுகிறார்.

ஒருமைத் திருவை அடையாமையே அலைக்கழிவு என விளக்குகிறார்.

'ஐந்து பூதம் உந்தியது ஆவி' (236) எனும் கொள்கை அறிவியலால் விளக்கம் பெறும்.

***"ஆவியின் உண்மை அறிந்தவன் வீரன்" (252)***

***"அவனே நற்றவன்; மற்றவன் பாவி"***

*"தன் குறை மறைக்கப் பிறர்குறை பேசுவன்; தன் புகழ் நாடிப் பிறர்தமை இகழ்வன்; தன்னலம் கருதிப் பிறரை வதைப்பன்; பருத்த உடலைத் திருத்தவே முயல்வன்; உள்ளம் திருத்த உள்ளவே மாட்டான்"-258-262*

***"உள்ளம் திருந்தின் கள்ளம் போமே" 306***

*"ஒழுக்கத் தொண்டுகள் பழுக்க ஆற்றுவர்; அவரே அந்தணர் அவரே முனிவர்*

*அவரே சித்தர் அவரே புத்தர்*

*அவரே பெரியர் அவரே தொண்டர்*

*அவரே இனியர் அவரே மனிதர்" - 370-374*

***"ஒருமை, பன்மையில் மருவித் திகழும் - 290***
***மக்கள் எல்லாம் ஒக்கல் ஆவர்.***
***மற்ற உயிர்களும் சுற்றம் ஆகும்***
***உலகம் ஒருமைக் குலமாய் இலங்கும்" 394 - 396***

*என இறையருள் வேண்டி நூலை நிறைக்கிறார்.*

*திரு.வி.க. நூல்களின் ஊடகம் பொதுமை! பொதுமை நலம்! பொதுமை நலப் பேறே!*

*என்பது இச் சுவடியாலும் விளங்கும்.*

## அருகன் அருகே அல்லது விடுதலை வழி

*திரு.வி.க. நூல்கள் பெரிதும் அவர் முன்னுரை கொண்டே அமையும். அரிதாகப் பிறர் முன்னுரை பெற்ற நூல்களுள் ஒன்று இந்நூல். அருக சமயத்தரும் அச்சமயத்தில் ஆழங்கால் பட்ட குடிவழியும் ஆய்வுவழியும் கொண்டவருமாகிய சக்கரவர்த்தி நயினார் முன்னுரை அதுவாம்.*

*"யான் எம்மதச் சார்புடையவனும் அல்லன்; மதவெறிய னும் அல்லன். எவ்வித வெறியும் என்னை அலைப்பதில்லை. சமயங்களிலுள்ள ஒருமையை வலியுறுத்துவது எனது வழக்கம். அவ்வொருமை 'சன்மார்க்கம்' என்று விளக்கப்படுகிறது" என்று நூல் முகவுரையில் தந்நிலை விளக்கம் செய்கிறார் திரு.வி.க. அவர் வரலாற்றையும் அவர் நூல்களையும் கற்றார் எவர்க்கும் பளிச்சிட்டுத் தோன்றும் ஒளி ஈதாம்.*

*முதல் தீர்த்தங்கரர் விருசபதேவர்; இன்னா செய்யாமைக் கொள்கையை உலகுக்கு அருளியவர். அக்கொள்கையே உலகை*

உய்விக்கும் எனத் தேர்ந்து தெளிந்தவர். அக்கொள்கையில் அழுந்தி நின்ற சன்மார்க்கர் திரு.வி.க. ஆதலால் போருலகம் ஒழிந்து அமைதிப் பேருலகம் தோன்ற வேண்டும் என்னும் அவாவில் இந்நூலை இயற்றுகிறார். சொல்லி எழுதிய நூல் இது. ஓடும் ஓட்டத்தில் தட்டுத் தடையின்றி எடுத்த கருத்துகளை இயம்ப ஏற்ற நடை அகவல்நடை. அவ்வகவல்பா ஒன்றே நூலாகின்றது. அதன் அடி 425.

**பெருமன்** என்பான் ஒருவன்; **தவனன்** என்பான் ஒருவன்; இருவரும் உடன் பயின்றவர். நெடுநாள் கழித்து இருவரும் கடற்கரை மணற்பரப்பில் சந்திக்கின்றனர். அமைந்து பேசுதற் காக அலைவாய்க் கரையை அணுகி அமர்ந்தனர்.

இயற்கை எழிலும் இயக்கமும் அமைந்த அவ்விடத்துக் காட்சிகளில் ஆர்வம் இல்லாமல் பெருமன் இருத்தலைக் கண்ட தவனன் "என்ன நண்ப! உன்றன் கவலை இன்னல்" என்றான். "என்னிலையை எப்படி உணர்ந்தாய்? எங்கே உளநூல் கற்றாய்?" என்றான் பெருமன்.

"உன்னைத் தழுவிய போது நழுவியது உன்கை; நடந்து வந்த போது உன் கால்கள் பின்னிட்டன; இயற்கையைக் கேட்க இசைந்தில காதுகள்; இவை உன்னிலை உணர்த்தின" என்றான் தவனன்.

பெருமன் கண்ணீர் வடித்து மண்ணில் சாய்ந்தான். தவனன் தன் மடியில் கிடத்தித் தேறுதல் கூறினன். "கவலையுறாதே; கவலை சவலை ஆக்கும்; நரம்புக் கட்டை அழிக்கும்; அல்லல் ஆக்கும்; தவநெறி நின்றால் கவலை ஒழியும்" என்றான்.

விழுந்த பெருமன் எழுந்தான், " என்னிலை கேட்க என்று சொல்லலானான். 'படிப்பு விடுத்தேன்; பணம் பெற்றேன்; கள்ள வணிகம் புரிந்தேன்; குடித்தேன்; களித்தேன்; கயமையன் ஆனேன்; ஒதுங்க ஓரிடமில்லை. அரசியலில் புகுந்தேன்; சட்டமன்றும் சென்றேன்; பொய்க்கலை கற்றேன்; வறுமையும் நோயும் கவலையும் வாட்டலாயின; உலகம் வெறுத்தது; முடிவு காணக் கடலை அடுத்தேன்; கண்டேன் உன்னை" என்றான் பெருமன்.

உயிரின் விடுதலைக்காகவே உடலைத் தாங்கினோம்; தவத்தை அழிப்பது கவலை; அதனை விடுக. கவலையை ஒழிக்க வழிகள் சில உள. ஒன்று: வள்ளுவர் கூறியது. 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு மனக்கவலை இல்லை' என்பது; 'அவனைப் பற்றுக' என்று தவனன் சொல்லவும், 'அவன் யார், அருள்க' என்றான் பெருமன்.

கோசலநாட்டு அயோத்தியில் கதிரொளி தோற்றிய தோற்றம்போலத் தோன்றி இல்லறம் ஏற்று பல்வகை அறங்களும் பாலித்து வளர்த்தவன். 'அகிம்சை மேலாம் அறமென முதல் முதல் அருளியவன்; மன்னுயிர் ஓம்பி எல்லா உயிரிலும் இருக்கை பெற்றவன்; ஆட்சி துறந்து ஐம்புலம் வென்று அசோகின் நிழலமர்ந்து அறமுரைத்தவன்; உயிரிகள் அனைத்தும் ஒன்றாய்ப் பரிவு கூரத் தவத்தில் ஓங்கிப் பரகதி அடைந்தவன்; அவனே அருகன்; அவனை அடைந்தால் விடுதலை வழியைக் கடிதில் பெறலாம்'' என்றான்.

அறக்கூறுகள் அனைத்தும் அருகம்; அகிம்சை அறமே அருகம்; அருக அருளறம் உலகச் சமயங்களாய் விரிந்தது; கலக உலகம் உய்ய அருக அறப்பணி வேண்டும்; மிகுபொருள் விரும்பாச் சீலம் தோன்றின் போர்கள் ஒழியும் என்று கூறினான்.

"என்னவோ நினைந்து இங்கே வந்தேன் என்னை ஆள இங்கே குருவாய் எழுந்தனை'' என்ற பெருமனைத் தவனன், " உன்னுவம் பணியென'' உரைத்து அருட் பணியாற்றக் கிளர்ந் தனர்; பிறர்க்கென வாழும் வாழ்வில் பிறங்கினர். கூறவிரும்பும் கருத்தை கதை வடிவாலும், உரையாடல் வகையாலும்வெளிப் படுத்துதல் திரு.வி.க. கொண்ட உத்திவகைகளுள் ஒன்று என்பதற்கு இந்நூல் ஒரு சான்று.

### பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்

"பொருள் மார்க்ஸியம்; அருள் காந்தியம்'' என நிரல் நிறை அணிநயம் பெறும் தலைப்பு இது. "மார்க்ஸியத்தின் உயிர்நாடி பொருள்; காந்தியத்தின் உயிர்நாடி அருள்'' என்பது திரு.வி.க. முன்னுரை.

அருளிலாப் பொருள் வளம் ஆக்கம் ஆகாது; அவ்வாறே பொருளிலா அருளும் பொருந்திய நலம் ஆக்காது. இரண்டன் ஈட்டமும் கூடின் வீட்டு நலமும் நாட்டு நலமும் உலகிலும் ஓங்கும்.

> ***"அருள் என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்***
> ***செல்வச் செவிலியால் உண்டு''***

என்னும் பொய்யா மொழி மெய்யாம் நெறி விளக்கம் இந்நூல் எனலாம்.

திரு.வி.க. தொண்டில் பெரிதும் கவர்ந்து கொண்டது தொழிலாளர் தொண்டு. அத்தொண்டு பொருளியல் வழிப் பட்டது என்பது வெளிப்படை. பொருளியல் ஆய்வு விளக்கம் மார்க்சியம். அதில் மட்டும் தோய்ந்தார் அல்லர் திரு.வி.க.

காந்தியத் தொண்டையும் உயிர்ப்பாகக் கொண்டவர். இரண்டன் இணைவே உலகநலமாக்கும் என்பதைத் தம் ஆய்வு வழியாலும் இயக்க வழியாலும் தேர்ந்து தெளிந்த பட்டறிவே அவர் யாத்த எந்நூற்கண்ணும் பொதுளி நிற்கக் காணலாம். அதன் சிறப்புத் தனிவெளிப்பாடு இஃதாம்.

இந்நூல் அகவல் நடையது; ஒன்பான் பகுப்புடையது. புனைவுக் காட்சியும் பொருந்திய விளக்கமும் பொலிவது; இயற்கைக் கொழுமைச் செறிவு மிக்கது; வரலாற்று வளமும் தேக்கியது. 1284 அடிகளால் நடைநயம் புரிவது.

இரண்டாவதாம் குருகுலக் காட்சியில் 'வடலை' என்றொரு நாடும் 'திடலை' என்றொரு நாடும் விரித்தோதப்படு கின்றன. வடலை வளமும் திடலை வளமும் தனித்தனி ஓதப்படுகின்றன. இரண்டற்கும் இடையே இயற்கைக் குருகுல ஆட்சியும் மாட்சியும் உரைத்து அமைதி உலகம் அரும்ப ஆற்ற வேண்டும் தொண்டை உரைக்கிறார்.

ஆதிமனிதன் நீதியில் வாழ்ந்ததும் வர்க்கப் பிரிவு இல்லாமையும் இயற்கை இன்பம் எய்தியதும் பேசி, ஆசைப் பேய் அரசுக்கேடு அணுஆய்வு அறிவியல் வெறி இன்னவை பேசி, 'ஆதி நீதி' இயற்கைச் சூழலால் எய்தும் என்கிறார்.

வளர்ச்சி வகை, கருத்து வேற்றுமைக்கு இடம் தரல், திருந்திய உணவு, அறிவியல் ஆக்கம், பொருளும் அருளும் என்பவை 'வளர்ச்சியும் விஞ்ஞானமும்' என்னும் பகுதியில் ஓதப் படுகின்றன. ஐந்தாம்பகுதி 'பொருள்' என்பதாம். பொருள் நூல், காவியம், பொருளும், சீலமும், அருளாளர் உரைகள் அதில் இடம்பெறுகின்றன.

அடுத்தபகுதி அறப்புரட்சி என்பதாம். 'நரம்பிநாடு', 'விரும்பிநகர்' 'கொள்ளி' என்பான் ஆட்சியன் எனப் புனைந்து அவன் கொடுங்கோன்மை, 'மரணநாளில் புங்கவன் ஒருவன் உரையால் இரத்தம் சிந்தாப் புரட்சி நிகழ்ந்தது' அறத்துப் புரட்சியைக் கருத்தில் கொள்க ' என்கிறார்.

அடுத்த பகுதி அறம் (8) 'பொன்னன்' 'வள்ளல்' என்பார் அன்புப் பதியில் இரட்டையராய்ப் பிறந்தனர். அவர்தம் ஆட்சி அறப்பணி என்பவற்றைக் கூறி அருளறம் வேண்டுமென நூலை நிறைக்கிறார்.

இந்நூல் மணிமொழிகள் சில:

**"உழவும் தொழிலும் விழவா நடக்கும்"**

**"இல்லார் இல்லை; கல்லார் இல்லை"**

*"மாந்தர் கைகள் ஏந்தி நில்லா"*

*"கூட்டறம் தன்னலம் ஓட்டல் இயற்கை"*

*"கலகம் எழுப்பாக் கருணை விடுதலை"*

*"ஈர நெஞ்சில் வீரமும் தியாகமும்"*

*"கருத்து வேற்றுமை பொருத்தும் வளர்ச்சியை"*

*"மிகுபொருள் விரும்பா மேன்மை ஒழுக்கம்"*

*"சீலம் அழிக்கும் ஆலம் தன்னலம்"*

*"மாசில் மனத்தில் நேசம் நிலைக்கும்"*

"இந்நூற்கண் மார்க்ஸியச் சாரம் பிழியப்பட்டிருக்கிறது. அதனுடன் காந்தியத்தேனும் கலந்துள்ளது" என்னும் திரு.வி.க. முன்னுரை, 'இக்காலப் பொருளியல் நோய்க்கு மருந்து இதுவே' என்பதை உட்கொண்டு உரைக்கும் தொடராகும்.

**சித்தம் திருந்தல் அல்லது செத்துப்பிறத்தல்**

தமிழுக்கு வாய்த்த பாவகையுள் இயல்பும் எளிமையும் ஓடும் ஓட்டமும் அமைந்த பா அகவற்பா. அதன் ஒலியை மயிலின் 'அகவல்' ஒலியாகக் கூறுவர். ஆசிரியர் தம் கருத்துகளை மாணவர்க்குத் தந்து மனத்தில் பதித்து எளிதில் வரப்படுத்த வாய்த்த பா அகவல் ஆயிற்று. அதனால் அதற்கு ஆசிரியப்பா என்றொரு பெயரும் வாய்த்தது.

அகவலாம் ஆசிரியப்பாவின் இலக்கணம் மிகச் சுருங்கியது. "ஈரசை நாற்சீர் அகவற் குரிய" என்பது அதன் இலக்கணம்.

தேமா, புளிமா, கருவினம், கூவிளம் என்பவை ஈரசைச் சீர்கள். இச்சீர்கள் நான்கு கொண்டது ஓரடி. மூன்றடிச் சுருக்க மாகவும், பாடுவோர் எண்ணம் போல் பெருகுவதாகவும் அகவல் அமையும்.

மூன்றடிச் சுருக்கத்தையும் நாற்சீர் அளவையும் வாய்ப்புப் போல் குறைத்து அதே அகவல் பா வகையில் நூல்கள் இயற்றல் மேலும் எளிமையும் இயல்பும் சுருக்கமும் ஆதலைக் கருதி, ஒருவகைப் பா இயற்றினர். அது நூல் இயற்றுதற்கெனச் செய்யப் பட்டது. ஆதலால், நூற்பா என்றும், சுருங்கிய சொற்களால் விரிந்த பொருள் தர நுட்பமாக அமைக்கப்பட்டது கொண்டு சூழ்த்திரம் என்றும் கூறினர். அதுவே சூத்திரம் எனலாயிற்று.

மடக்கு, திரிபு, ஓரடி (ஏகபாதம்) எனக் கடும்பா இயற்று தலே புலமைத் தலைக்கோல் என வாழ்ந்தவர் படைப்புகளை ஒதுக்கித்தள்ளும் வகையில், வள்ளலார், பாரதியார், பாவேந்தர்

முகிழ்த்தனர். அதில் திரு.வி.கவும் பங்களிப்புச் செய்தார். தென்றல் நடை கண்ட திரு.வி.க. மேடைத் தமிழும் இதழ்த் தமிழும் ஒடுங்கிக் குன்றிப் படுக்கைக் கிடப்பும் ஒளி இழப்பும் ஆகிய நிலையில், உள்ளொளி கொண்டும் நினைவுத் திறம் கொண்டும் இம் மண்ணுக்குத் காலமெல்லாம் வள்ளியராகத் திகழ வாய்த்த பா, அகவற்பாவாம்.

படுக்கையில் இருந்து எண்ணி, நினைவேட்டில் எழுதி வைத்து, தக்கார் ஒருவர் வாய்க்கும் போது எழுத்துருவாக்கி அச்சிட்ட அருமையும் பெருமையும் வாய்ந்தன சில நூல்கள். அவற்றுக்கெல்லாம் இச்செய்தி பொதுமைப் பட்டதாம்.

“படுக்கையில் கிடந்து கொண்டு சிற்சில வேளைகளில் சிறு சிறு நூல்களைப் பாக்களால் - பெரிதும் அகவற்பாவால் - சொல்லி வருகிறேன். அந்நூல்களுள் இந்நூலும் ஒன்று” என்று சித்தம் திருந்தல் அல்லது செத்துப்பிறத்தல் என்னும் நூல் முன்னுரையில் வரைகிறார். இதனை இயற்றுங்கால் அவர்தம் அகவை அறுபத்தாறு (1951)

இந்நூல் 369 அடிகளைக் கொண்ட ஓர் அகவலால் அமைந்த நூல். திரு.வி.க. தம் நூல்களில் பெரும்பாலான வற்றுக்கு இருபெயரிடல் வழக்கு. அவ்வழக்குக் கொண்டது இந்நூலும்.

இந்நூற்பெயர், இந்நூலின் ஓரடியில் அமைந்து சிறக்கிறது. அது,

**“சித்தம் திருந்தினன் செத்துப் பிறந்தனன்”**

என்பது (188) “சித்தம் திரும்பல் செத்துப் பிறத்தலே” என்பது மேல் தெளிவு (197). சுருங்கிய எளிய இந்நூல் கருத்தோ அருமையுடையது. பற்பல சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குவது. பல்வேறு வாழ்வியல் அறமணிகளை ஆங்காங்கே பதித்துச் செல்லும் அருமையது.

எடுத்துக் கொண்ட கருத்தை விளக்க ஒரு கதையைப் புனைந்து கதைபொதி பாநூல் ஆக்கிவிடுகிறார். காதை என்பது அதுவே என்பது சிலப்பதிகாரத்தால் விளங்கும். மனையறம் படுத்த காதை, அரங்கேற்று காதை முதலிய காதைப் பெயர் களையும் காதை என்பது கதைபொதி பாட்டு என்பதையும் சிலம்பில் அறியலாம்.

வெள்ளி என்பான் ஒரு மன்னன். அவன் ஆட்சி புரிந்த ஊர் சித்தம்; அவன் செய் தீமைகளால் தொழுநோய் உண்டாயது. அவன் வாழ்ந்த உருக்குச் சித்தன் ஒருவன் வந்து அவனுக்கு

மருந்து தந்தான். மன்னன் நோய் அகன்றது. சித்தன் தன் கடமை முடிந்ததால் அயலூர் செல்ல விரும்பினான். வெள்ளி மன்னன் தன் குறைகளைச் சித்தனிடம் கூறி அழுதான். உன் அழுகை பாவத்தை ஒழித்தது; அழுகை பாவம் கழிக்கும் மருந்து; நாளும் நொடியும் பிறப்பும் இறப்பும் நிகழும். கேள்:

கொந்தி என்பான் கொலைஞன்; கொள்ளையன்; அவன், ஒரு புலவன் கூறிய மலைப்பொழிவுச் செய்தியை ஒரு நாள் கேட்டான். கூட்டம் முடிந்து புலவனைக் கண்டான்; அன்பன் ஆனான். பழங்கொந்தி இறந்தான்; புதுக்கொந்தி பிறந்தான். இன்னும் கேள்:

ஒரு மன்னன் குடும்பத்தில் மகன் ஒருவன் பிறந்தான். அவனால் இன்னல் பெருகியது; ஆட்சி, அமைச்சு குடி, நாடு ஆயவற்றால் கவலை இல்லை; மகனால் கவலை பெருகியது; சிறந்த ஆசான் ஒருவன் வழியாய் மகனைத் திருத்த முயன்றான் மன்னன். மகன் ஆசானை அறைந்தான்; அவன் வருதல் ஒழிந்தான்; மகன் செய்யாதனவெல்லாம் செய்து வந்தான். ஒருநாள் அவ்வூர்க்கு நந்தி என்னும் முனிவன் ஒருவன் நண்ணினான். அவனுரை கேட்டான் ஒருநாள்; மேலும் கேட்டான்; மனமாற்றம் உற்றான்; பொல்லான் ஒருவன் நல்லான் ஆகும் வழியும் உண்டோ? என வினாவினான் முனிவனிடம். முனிவன், "நல்லான் பிறர்குறை சொல்லான்; நல்லார் இணக்கம் வல்லமை தரும்" என்றான். பிறர்குறை பேசா அறம் பேணினான்; தன்குறை உணர்ந்தான்; சித்தம் திருந்தினான்; செத்துப் பிறந்தான். பெற்றவர் மகிழ்ந்தார். இந்நிகழ்ச்சிகளை எண்ணுக! அழுகின்ற நீ இறந்து பிறந்தாய்! புதியனாய் வாழ்க! வன்மை பிறர்க்கு நன்மை செய்வதே. "ஜெப தப தியானம் செய்தல் நன்று; செய்யும் தொண்டால் வையம் வளரும்" என்று கூறிப் புறப்படலானான் சித்தன். வெள்ளி மன்னன், 'வீடும் வேண்டேன்; பீடும் வேண்டேன்' எனச் சித்தனைத் தொடர்ந்தான். சித்தன்,

***"வீர வழிபா டென்னும் பேரால்***
***தனித்தனி மனிதனைத் தலையில் தூக்கி***
***வெறிகொண் டாடல் அறிவா காது;***
***கொள்கை வளர்க்கக் கொள்க அன்பை"***

என்று கூறி மேலும் பேசினார்.

"புது வெள்ளிப் புலமையரே, கேளும்: சிலுவையில் அறைந்த கொலைஞரிடத்தும், அருளைப் பொழிந்த பொறுமை வள்ளல், போதனை வாழ்வில் சாதனை செய்க; என்று கூறிப்

பலப்பல நல்லறங்களை நவின்று சித்தன் புறப்பட்டான். வெள்ளி கதறினான். நலமார்குருவின் சொல்வழி நில்லெனச் சித்தன் கூற வெள்ளி அமைந்தான். சித்தன் சொல்வழி நின்றான்! இதுவே கதைச்சுருக்கம்.

இதில் அமைந்துள்ள அருமணிகள் சிலவற்றை எண்ணுக:

| | |
|---|---|
| ***'உயிரின் அழுகை ஒழிக்கும் பாவம்'*** | *- 34* |
| ***'முறையிட் டழுதால் கரையும் பாவம்'*** | *- 45* |
| ***'இன்ப துன்ப இருப்பிடம் பிள்ளை'*** | *- 111* |
| ***'வன்மை பிறர்க்கு நன்மை செய்வதே'*** | *- 208* |
| ***'தொண்டால் மூர்க்கம் அண்டா தொழியும்'*** | *- 288* |
| ***'மூத்த அநுபவம் மாக்கலை நிதியே'*** | *- 306* |
| ***'விளம்பர நோன்பு களங்கம் ஆகும்'*** | *- 330* |

எவை எவை பொல்லானை நல்லான் ஆக்கும் என்ற திரு.வி.க. எவை எவை பொல்லானை நல்லான் ஆக்கா என்பதை விரித்துரைத்தல் தனிப் பெருஞ் சிறப்பினதாம். (162-173)

மீள் பிறப்பு உண்டு என்பார். இல்லை என்பார். மீள்பிறப்பு ஏழு என்பார்; ஏழேழு என்பார்; எண்ணற்ற தென்பார்; ஒரு பிறப்புள்ளே எழுபிறப்பென்பார்; நாளும் நாளும் இறப்பும் பிறப்பும் என்பார்" திருந்திய வாழ்வு புதுவாழ்வு: புதுப்பிறவி கொண்ட வாழ்வு " என்பது இந்நூல். இதன் சிறப்பை எண்ணுக.

**பெயரீடு:**

நாட்டின் பெயர் சித்தம்

மன்னன் பெயர் வெள்ளி

குருவன் பெயர் சித்தன்

கொலைஞன் பெயர் கொந்தி

முனிவன் பெயர் நந்தி

பிள்ளைத் தீயனுக்குப் பெயரீடு இல்லை.

இப்பெயரீடுகள் உள்ளீடு உடையவை அல்லவோ! நூற்பெயரே. நூற்பொருள் திரட்டுத்தானே!

**முதுமை உளறல்**

***"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு***
***பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டா அங்கு"***

என்னும் திருமுருகாற்றுப்படை இரண்டடிகளுக்கு ‘கருமுகில் சூழல்; பெரும்புயல் தாக்கல்; கருமுகில் இரிவு; பரிதித் தோற்றம்; உலக உவப்பு” எனப் பொருள் கொள்ள வாய்க்கும்.

“கருமுகில் - ஏகாதிபத்தியம் ; பெரும்புயல் - புரட்சி; கருமுகில் இரிவு - ஏகாதிபத்திய முறிவு; பரிதித் தோற்றம் - சுதந்திர உதயம் ; உலக உவப்பு - பொதுமை இன்பம்” என உவம உருவகக் காட்சியாக்கல் முதுமை உளறலா? மூதறிவுப் பேறா?

வறட்டு முதுமை, செருக்கு முதுமை, தந்நல முதுமை, ஒத்ததறியா முதுமை, உளறும்; உதறும்; உதைக்கும்; உருக் குலைக்கும். ஆனால் பண்பட்ட முதுமை, விரிய விரிய விரியும் பொது நலச் சுரப்பாகி உலகுக்கு வழிகாட்டும். அது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வப் பேறுறும் திருநெறிச் செல்வம் கொண்டது. அதற்கொரு சான்று இந்நூல்.

எனக்கொரு பயிற்சி இளமை தொட்டே உண்டு. பாடலை இரவுப் பொழுதில் விளக்குப் போடாமலே எழுதும் பயிற்சி. பின்னே விடியல் வெளிச்சத்தில் படியெடுத்துக் கொள்ளல். இதிலும் இடர் உண்டு. எழுத்துப் படிந்திராது: எழுத்தின்மேல் எழுத்து, வரிமேல் வரி இருக்கும். ஆனால் திரு.வி.க. தாம் இயற்றும் பாடல் அடிகள் எத்தனை எனினும் நெஞ்சக் களனில் சிதையாது நிறுத்தி, எழுதத் தக்கார் கிட்டியபோது சொல்லி எழுதுவித்தல் எத்தகு அருமை மிக்கது! இத்தகு முதுமைத் தொண்டு உலகுக்குப் புதுமைத் தொண்டே! இப்படிக் கிளர்ந்த நூல்களைத் தோற்றுவாயில் காட்டுகிறார் திரு.வி.க.

கடவுள் பற்றிய பகுதியில்,

***“கடவுள் ஆய்வில் மேய்தல் வேண்டா***
***கடவுள் நிலையை அடைதல் நன்றே”***

என்கிறார்.

***“என்னைக் கிள்ளின் எனக்குத் துன்பம்***
***உம்மைக் கிள்ளின் உமக்குத் துன்பம்***
***துன்பம் விழையும் அன்பரும் உளரோ?***
***துன்பம் நீங்க வாழ்தல் இன்பம்”***

குழந்தையும் உணரக் கூறும் முதுமை நயம் இது.

அம்மா அப்பாவின் பிழிவு என்ன?

***“கைம்மா றெண்ணா அம்மா! அப்பா!”***

வையம் எப்படி?

***“முதுமை அறியாப் புதுமை உடையவள்”***

*பிள்ளைப் பேற்றின் பேறென்ன?*

***"இருவரை ஒருவர் ஆக்கிய காதல்
பிள்ளை ஆகும் 'கள்ளம்' காண்க"***

*மனிதன் நிலை என்ன?*

***"விலங்கி னின்றும் வெளியே வந்தும்
விலங்கை மனிதன் விலக்க வில்லை"***

*மலைநலம் என்ன?*

***"கொலைவதை நீங்க மலைமருந் தாகும்"***

*தூக்குத் தண்டனை ஆமா?*

***"தூக்குத் தண்டனைப் போக்குக் கெட்டது"***

***"காட்டு மிராண்டி நாட்களில் தோன்றிய
தண்டனை இந்நாள் கொள்வது தவறே"***

*கண்ணகியார்க்கு ஒரு பாராட்டு*

***"மாதவி மீதும் தீதெணாக் கண்ணகி"***

*எந்த வாழ்க்கை வேண்டும்?*

***"வறுமை செல்வம் இரண்டும் அற்ற
வாழ்க்கை தேவை; வாழ்த்துக அதனை"***

*ஒழுக்கம் நிலைப்பது எப்படி?*

***"ஒழுக்கம் பொதுமை ஒழுங்கில் நிலைக்கும்"***

*நட்பு என்பது என்ன?*

***"உள்ளம் உள்ளம் நள்ளல் நட்பே"***

*குற்றம் குறைக்கும் வழியாது?*

***"முறையிடும் பயிற்சி குறைக்கும் குற்றம்"***

*எதுவீரம்?*

***"குறைகள் குற்றம் முறையிடல் வீரம்"***

*சாதி மத வெறி:*

***"சாதி அன்பு நீதி அன்று"***

***"மதப்பிடி வாதம் அதட்டும் அறிவை"***

*நிறைவு*

***"முன்னோர் மொழியைப் பொன்போல் போற்றுக
என்றும் போற்றுக; என்றும் போற்றுக"***

*என நூல் நிறைகிறது.*

**வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்**

*நூலுக்கு இடப்பட்டுள்ள இரண்டாம் பெயரே, நூல் எழுதப்பட்ட வகையைத் தெரிவிக்கும். சொல்லி எழுதப்பட்ட நூல் இது. அகவல் நடையது. 16 தலைப்புகளைக் கொண்டது. நூலின் முதற்பெயர் அதன் உள்ளுறையைச் சுட்டும் வகையால் அமைந்தது.*

*“இந்நூல் ஒருவிதத் தத்துவத்தை அடிப்படையாக் கொண்டது. அது வளர்ச்சித் தத்துவம், வளர்ச்சித் தத்துவக் கூறுகள் பலவிதத் தலைப்பில்- பலவகையில் - சுருங்கிய முறையில் -இந்நூற்கண் ஓதப்பட்டுள்ளன. அக்கூறுகளை ஒன்றுபடுத்திப் பார்த்தால் தத்துவ ஒருமைப்பாடு நன்கு புலனாகும். இந்நுட்பம் தொகுப்பில் இனிது விளங்கும்” என முன்னுரையில் இந்நூல் பொருளமைவு குறித்துக் கூறுதல் எண்ணிப் பயிலத் தக்கதாம்.*

*வளர்ச்சி இல்லாமல் வாழ்வு இல்லை. அவ்வளர்ச்சியைத் தாம் நோக்கிய வகையால் பதினாறாக்கிச் சொல்கிறார் திரு.வி.க.*

*“உலகை நோக்கினால் வளர்ச்சி இயல்கள் கடவுள் உண்மையில் நிலைக்கும்” என்பது கடவுள் பற்றியது. (1)*

*“ஆய்ந்து ஆய்ந்து கண்டால் எந்தப் பொருளும் அழிதல் இல்லை; மாறுவது இயற்கை புலப்படும்” என்பது வளர்ச்சி.(2)*

*“வளர்ச்சிக் கல்வி பயில, உள்ளம் உருகும்; பாவம் அருகும்; இருள் இரியும்; அருள் விரியும்;” இது உருகல். (3)*

*“நூல் நுண்ணியது; மன்பதைப் பொதுவை உணர்த்துவது நூல்; அன்பும் தெய்வமும் நூலே; நூலைப் பயில்க; நூலைப் பாடுக” என்பது நூல். (4)*

*“மரத்தடியாவது பரத்தடி; மாசு நீக்கி அற ஒளி பரப்பும் மரத்தடி” என்பது மரத்தடி. (5)*

*“வேட்டை தவிர்க; நாட்டு வளம் மல்கும்; வேட்டை நாட்டம் வேண்டா; உள்ளத்துள்ளே உள்ளது காடு; ஆங்குள விலங்கை ஓட்டுக” என்பது வேட்டை. (6)*

*“பற்பல கலைகள்; பற்பல மதங்கள்; போரை ஒழிக்கப் போர்; குண்டைத் தொலைக்கக் குண்டு; மூர்க்கம் வீறி மூண்டது கண்டோம்; பொதுமை அறத்தைப் போற்றுக;ஒருமை நாட்டம் பெருமை கொள்ளும்” என்பது தவநெறி. (7)*

*“இயற்கை, சமயம்; அது பொதுமை வாய்ந்தது; சமயம் இன்றி அமையாதுலகம்; வள்ளுவம் சொல்லும் வழிபாடுள்ளது; கடமை புரிதல் திடவழிபாடு; முறையிட்டழுதலும் நிறை*

வழிபாடு; உயிரிக்கிதம் செய்தல் உயர்வழிபாடு; வெறியைக் கடந்தது அறிவுச்சமயம்; உலகமெல்லாம் ஒரு குலம் ஆக்கச் சமயம் வேண்டும்;" இது சமயம். (8)

"தொண்டால் மலரும் பண்டை வாழ்வு; இளமை தொட்டே வளமைத் தொண்டைப் பயிற்சி செய்க; நல்ல தொண்ட்டைத் தந்தை ஆற்றின் மைந்தன் ஆற்றுவன்; சுற்றம், உலகம் ஏற்கும்; கலகம் விலகும்; தொண்டு செய்க" என்பது தொண்டு. (9)

"அன்பே தெய்வம்; அன்பே வையம்; இன்பக் காதல் அன்பின் திறவு; காதல் நெறியே இருமை கெடுத்து ஒருமை கூட்டும்; அன்பு வாழ்க" என்பது அன்பு. (10)

"நல்லுடல் உள்ளம் பல்கலை உலகம்; நல்லன படைக்க நல்ல எண்ண ஊற்றெழல் வேண்டும்; இயற்கை நாட்டமும் இறைமை உறவும் இடையீடின்றி நடையில் கொண்டால் நல்ல எண்ணச் செல்வம் சுரக்கும்" என்பது எண்ணம். (11)

"வாழ்வு வளர்வது; தேய்வது அன்று; கல்வி பயிலாச் செல்வம் மாந்தன் பெற்றான்; சுரண்டல் வாழ்வில் புரண்டான் இல்லை; பின்னே கெட்டான்; அச்சோ! மனிதன் செத்தே போனான்; கட்டிடப் படிப்பு பட்டப்படிப்பு; கூடை கூடையாய் மேடைப் பொழிவு; போதனை என் செயும்? வேதனை நீக்குமோ?குறையை முறையிட் டிறையை வேண்டின் இனிது வளரலாம்; இனிது வாழலாம்" என்பது வாழ்வு. (12)

"அறவோர் தொண்டின் உறவோர்; நன்னயர் அறவர்; அவருயிர் தொண்டே; அறவர் வழிஞர் பழிகள் நிகழ்த்தினர்; கலகமூட்டி உலகைக் கெடுத்தனர்; குருகுலக் கல்வி தருமே அறவரை; பகைமை அறியாத் தகைமையர் அறவர்;" என்பது அறவோர். (13)

"மன்னவர் ஆட்சி மன்பதை ஆட்சியாய் விளங்கும்; சிற்சில இடங்களில் கொடுங்கோல் நடுங்க வைத்தது; மன்னர் ஆட்சி பின்னம் உற்றது; கெட்டவரிடத்தும் கிட்டிய தரசே; மேடைகள் நஞ்சின் ஓடைகள் ஆயின; மாற்றம் செய்ய ஆற்றுககடனே; மன்னர் ஆட்சி துன்ன வேண்டும்; அறவோர் மன்றம் உறவால் அமைக்கலாம்; நல்ல ஆட்சியே அல்லல் களையும்; மன்னருள் பொதுமையை இந்நிலம் ஏற்றல் உறுதி; அருளின் ஆட்சி அதுவாம்" என்பது பொதுமை. (14)

"உள்ளத்துள்ளே வள்ளல் உள்ளான்; அவனை நினைத்தே முறையிட்டழுதால், உருகும் பாறை; ஈரநெஞ்சில் கோரம் படியாது; பாவம் பறக்கும்; ஆவி நலமுறும்" என்பது முறையீடு. (15)

"இம்மண் என்றோ செம்மையுற்றிருக்கும்; வளர்ச்சிக் கிடையிடை தளர்ச்சி நேர்ந்தது; வளர்ச்சிக்கு ஒழுக்க வளப்பம் தேவை; வளர்ச்சித் தத்துவம் வாளாகிடவா; தீய குணமெலாம் நல்லன ஆகும்; விளைவு பெருகும் வளமை கொழிக்கும்; ஒன்றே குலமும் ஒன்றே உலகமும் ஒன்றே தெய்வமும் என்றே வாழ்வர்; என்பினுள்ளும் அன்பு நிலவும்; இதுவே பொதுமைப் புதுமை மலர்ச்சி" என்பது தொகுப்பு. (16)

தலைப்பு ஒழுங்கில் வளர்ச்சியும் வாழ்வும் விளங்குதல் அறிக.

திரு.வி.க. நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பயன்பாட்டால் அவர்தம் நூல்கள், கட்டுரை கள் ஆகிய அனைத்துப் படைப்புகளும் 'திரு.வி.க. தமிழ்க் கொடை' என்னும் வரிசையில் வெளிப்படுகின்றன.

திரு.வி.க. நூல்களையும் கட்டுரைகளையும் ஒருமொத்த மாகப் பெறும்பேறு இதுகாறும் தமிழ்மண்ணுக்கு வாய்க்க வில்லை. அவர்வாழ்ந்த நாளிலேயே சிலநூல்கள் கிட்டும்; சிலநூல்கள் கிட்டா! 'தேசபக்தன்' 'நவசக்தி' யில் வந்த கட்டுரை களுள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றையன்றி முற்றாகப் பெறும் பேறோ அறவே வாய்த்திலது. திரு.வி.க. வழங்கிய வாழ்த்து, அணிந்துரை முதலியனவும் தொகுத்தளிக்கப் பெறவில்லை. இவற்றையெல்லாம் தனிப்பெருஞ் சீரிய பதிப்பில் ஒருமொத்தமாக வழங்கும் பெருமையைக் கொள்பவர் **தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ.இளவழகனார் ஆவர்.**

பாவாணர் நூல்கள், ந.சி.க.நூல்கள், அப்பாத்துரையார் நூல்கள், இராகவனார் நூல்கள், அகராதிப் பதிப்புகள் எனத் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டு, அவ்வெளியீட்டுத் துறையின் வழியே தமிழ்மொழி, தமிழின மீட்சிப் பணிக்குத் தம்மை முழுவதாக ஒப்படைத்துப் பணியாற்றும் இளவழகனார் திரு.வி.க. தமிழ்க் கொடைத் தொகுதிகளை வெளியிடுதல் தமிழகம் பெற்ற பெரும் பேறேயாம். வாழிய அவர்தம் தொண்டு! வாழியர் அவர்தம் தொண்டுக்குத் துணையாவார்!

அன்புடன்

**இரா. இளங்குமரன்**

# பொருளடக்கம்

நுழைவுரை v
கொடையுரை ix

**நூல்**

**கிறிஸ்து மொழிக்குறள்**

முன்னுரை 2
காந்தியடிகட்கு 5
தோற்றுவாய் 7
1. மலைமொழி 13
2. மணிமொழி 28
இறுவாய் 53

**இருளில் ஒளி**

முன்னுரை 59
1. பரம் 65
2. படைப்பு 68
3. கல்வி 72
4. அரசு 79
5. உடல் 82
6. எண்ணம் 89
7. வாழ்க்கை 94
8. உலகம் 98
9. அறம் 105
10. சமயம் 111
11. தீர்க்கர் 117
12. வாழ்த்து 120

**இருமையும் ஒருமையும்?**

முன்னுரை 125
இருமையும் ஒருமையும்? 127

**அருகன் அருகே அல்லது விடுதலை வழி**

முகவுரை 147
அருகன் அருகே அல்லது விடுதலை வழி 149

**பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்**

முன்னுரை 168
1. வாழ்த்து 169
2. குருகுலம் 171
3. மனிதன் 181
4. வளர்ச்சியும் விஞ்ஞானமும் 191
5. பொருள் 199
6. உரிமை 204
7. அறப் புரட்சி 206
8. அறம் 214
9. வேண்டுதல் 221

**சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்**

முன்னுரை 224
சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல் 225

**முதுமை உளறல்**

முகவுரை 240
1. தோற்றுவாய் 241
2. கடவுள் 244
3. அம்மா! அப்பா! 246
4. வையம் 247
5. ஞாயிறு 249
6. பிள்ளைப் பேறு 251
7. மனிதன் 253
8. மலை 256
9. மனம் 259
10. வாழ்க்கை 264
11. ஒழுக்கம் 267
12. நட்பு 269

13. நோன்பி 271
14. தவம் 272
15. சீர்திருத்தம் 275
16. முன்னோர் மொழி 279

**வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்**

முன்னுரை 282
1. கடவுள் 283
2. வளர்ச்சி 284
3. உருகல் 285
4. நூல் 286
5. மரத்தடி 287
6. வேட்டை 288
7. தவநெறி 289
8. சமயம் 291
9. தொண்டு 294
10. அன்பு 296
11. எண்ணம் 298
12. வாழ்வு 299
13. அறவோர் 303
14. பொதுமை? 305
15. முறையீடு 309
16. தொகுப்பு 311

# கிறிஸ்து மொழிக் குறள்

(1948)

# முன்னுரை

***ஏசு மொழியும் இனியதிரு வாசகமும்***
***நேசஅருட் பாவுமென் நெஞ்சு.***

*கிறிஸ்து பெருமான் திருவாய் மலர்ந்தருளிய 'நற்செய்தி'யை- 'சுவிசேஷ'த்தை - எளிய தமிழில் வடித்தல் வேண்டுமென்ற வேட்கை பல ஆண்டுகட்கு முன்னர் என்னுள் எழுந்தது. அவ்வேட்கை தணிதற்குரிய வாய்ப்பு அந்நாளில் எனக்குக் கிட்டவே இல்லை. பின்னையாதல் - அக்கால அணிமையில் - அவ்வாய்ப்புக் கிட்டியதோ? இல்லை. ஏன்? பலதிறத் தொண்டுச் சூழலும், நெருக்கும், பிறவும் எனக்கு ஓய்வளிக்கவில்லை. ஆனால், எழுந்த வேட்கைமட்டும் என்னுள் எங்கேயோ ஒன்றியது.*

*1947 ஆம் ஆண்டு, சென்னையில் பஞ்சாலைத் தொழி லாளர் வேலைநிறுத்தம் நிகழ்ந்தது. அத்தொழிலாளர் சங்கத்*[1] *தலைவர் தோழர் - எஸ்.ஸி.ஸி. அந்தோணி பிள்ளை அவர்களை அரசாங்கம் விசாரணையின்றிச் சிறைப்படுத்தியது. பழந் தலைவன் என்ற முறையில் வேலைநிறுத்தத்தை நடாத்தும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. ஏறக்குறைய நூறுநாள், வழக்கம்போல, முறைப்படி, வேலைநிறுத்தம் நடைபெற்றது. அவ்வேளையில் 'யான் வீட்டை விடுத்து (9-6-1947 - 10-7-1947) வெளியேகலாகாது' என்று அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. ஆனால், அக்கட்டளை, மக்கள் வரவு செலவைத் தகையவில்லை. அதனால், வீட்டுக் காப்பிலும் யான் போதிய ஓய்வு பெற்றே னில்லை; சிறிதே பெற்றேன்.*

*அவ்வோய்வில் என்னுள்ளத்தில் எங்கேயோ ஒன்றிக் கிடந்த பழைய வேட்கை விரைந்து வீறியது. அதன் பயனாகக் கிறிஸ்து பெரு மான் மலைமொழியையும், மற்ற மணிமொழி களில் சிலவற்றையும் தழுவி, அவற்றைக் குறள்வெண்பாவால் யாக்கலா னேன். நூலுக்குக் 'கிறிஸ்து மொழிக் குறள்' என்னும் முடி வேயப் பெற்றது.*

1. சென்னைத் தொழிலாளர் சங்கம் ; இந்தியாவில் முதல்முதல் (1918) தோன்றியது.

*சாது அச்சகத்தின் வேலைத்துதைவும், பிறவும்நூலை அப்பொழுதே வெளியிட இடந்தரவில்லை; நாளை நாளை என்று காலம் நடந்தது; கடந்தது. இந்நிலையில் (30-1-1948) காந்தியடிகள் பருவுடல் வீழ்ந்தது. அவ்வீழ்ச்சி கிறிஸ்துவின் மலைப்பொழிவு மீது என் கருத்தை உந்தியது. காரணம், காந்தியத்துக்கும் மலைப் பொழிவுக்குமுள்ள தொடர்பேயாகும். காந்தியம், மலைப் பொழிவின் பரிணாமம் என்பது உலகறிந்த தொன்று. அடிகளின் வீழ்ச்சி, 'கிறிஸ்து மொழிக் குறளை' வெளியிட என்னை முடுக்கியது. அம் முடுக்கலையும் சில தடைகள் மறித்தன. 'பருவத்தா லன்றிப் பழா' என்னும் மூதுரை பொய்ப்படாது போலும்! இந்நாளில் நூலை வெளியிடல் நேர்ந்தது.*

*தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள பலதிறப் 'பைபில்' பதிப்புக்கள் என் முயற்சிக்குத் துணைநின்றன. அவற்றில் பெரிதும் கருத்து வேற்றுமைகள் காணப்படவில்லை; சிலசொல் - சொற் றொடர் - வேற்றுமைகள் காணப்பட்டன. அக்காட்சியில் என் நெஞ்சம் சுழலும். அந்நெஞ்சம் கிறிஸ்து பெருமான் திருவடியில் படியும்; சுழல் நீங்கும்; பாடல் ஓடும். குணம் கிறிஸ்துவின்பாலது; குற்றம் என்பாலது.*

*கிறிஸ்து பெருமான் மொழிகளைத்* **தழுவியே** *பாடிச் சென்றேன். (தோற்றுவாய் பார்க்க). 'மணிமொழி'யில் சந்தர்ப் பங்களை ஆங்காங்கே குறித்தேனில்லை. சிற்சில இடங்களில் பெருமான் மொழிகளிலேயே சந்தர்ப்பங்கள் விரவுமாறு செய்துள் ளேன். சந்தர்ப்பங்களைக் கருதாது பொருள்மீது கருத்துச் செலுத்தும் படி நேயர்களை வேண்டுகிறேன். நூலிற் சில இடங் களில் ஒருமை பன்மை மயக்கம் உற்றுள்ளது. அது மூலத்தைத் தழுவியதென்க.*

*இந்நூற்கண் திரட்டப்பட்டுள்ள மணிமொழிகள் அப்படியே அடுக்கப்படவில்லை. அவை, கருத்துக்கு இயைந்த முறையில் ஒவ்வொரு தலைப்பின்கீழ் ஒல்லும்வகை ஒழுங்கு செய்யப்பெற்றன. இதனால் சில இடங்களில் தொடர்பின்மை காணப்படும்.*

*கிறிஸ்துவைப் பற்றிச் சில கட்டுரைகள் முன்னே வரைந்தேன். அவை, 'தமிழ்ச் சோலை'யில் சேர்க்கப்பட்டன. 'கிறிஸ்துவின் அருள் வேட்டல்' என்றொரு நூல் அணித்தே என்னால் யாக்கப் பெற்றது. இப்பொழுது இந்நூற்றொண் டாற்றினேன். மூர்க்கம் பெருகிவரும் இந்நாளில் கிறிஸ்துவின்*

அருளறம் யாண்டும் பரவுதல் வேண்டு மென்பது எனது உட்கிடக்கை.

வேட்கை எழுந்தபோது இந்நூற்றொண்டில் யான் இறங்கி யிருந்தால், நூலின் போக்கும் நடையும் பிறவும் வேறுபட் டிருக்கும். இந் நூற்கண் வழக்கச் சொற்களையும், சம்பிரதாயக் குறியீடுகளையும் அவ்வவ்வாறே பெய்துள்ளேன். எவர்க்கும் எளிதில் பொருள் விளங்கும் முறையில் நூல் அமைந்துள்ளது.

வயது ஏற ஏற நூல் இயற்றுவதில் எளிமையே தோன்று கிறது. ஆனால் அச்சுப்பிழை திருத்துவதில் நிலைமை மாறு கிறது. இதில் இளமையிலெழும் ஊக்கம் முதுமையில் எழுவ தில்லை. மேல்நாடுகளில் அச்சுப்பிழை களைவதில் ஆக்கியோர் பெரிதும் தலைப்படுவதில்லை. அதற்கெனத் தேர்ச்சிபெற்ற தனிக்குழு உண்டு. அவ்வமைப்பு நமது நாட்டிலும் விரைவில் ஏற்படுதல் வேண்டும்.

எனது உடல்நலன் குலைந்துள்ள இந்நாளில் யான் நூற்றொண்டையும் பகற்காலத்திலேயே செய்து வருகிறேன். பகலில் என்னைக் காணவருஞ் சூழல் அதிகம். இந்நூல் அச்சாகியபோது, என்னைக் காணவந்தவருள் சிலர் அவ்வப் போது அன்புகூர்ந்து அச்சுப்பிழை திருத்துவதில் துணை புரிந்தனர். அவர் அனைவர்க்கும் எனது நன்றி உரியதாக.

புறத்தே தடியும் ஈட்டியும் துப்பாக்கியும் ஏந்திய போலிஸ் படை சூழ்ந்து நிற்ப, அகத்தே கிறிஸ்து பெருமான் மலைக்காட்சி அமுதம் பொங்க, முதுமையில், உடல் மெலிந்து நலிந்துள்ள வேளையில் இந்நூல் என்னால் இயற்றப்பெற்றது. புலவோர் உலகம் பிழை பொறுப்பதாக.

சென்னை,
9.6.48 **திருவாரூர். வி. கலியாணசுந்தரன்**

## காந்தியடிகட்கு

*அறத்து நன்மரம் அன்பு நறுமலர்*
*அருளின் செங்கனி ஆகிய காந்தியே*
*பொறுத்து நீழல் புரிந்து பொலிந்தனை*
*புயலுந் தென்றலாப் போந்துமுன் வீசுமே.* 1

*வழக்கம் போலிறை வாழ்த்துங் குழுவிடை*
*வணங்கு கைம்மலர் வார விழிமலர்*
*செழிக்கும் புன்னகைச் செம்மலர் வாசமே*
*சிந்தி மக்களின் சிந்தை நடந்தனை* 2

*சாதிப் பேயோர் சமய வெறியனாய்ச்*
*சாய்ந்து கும்பிடு வான்போல் தடுத்துனைப்*
*போதில் சுட்டனன் பொங்கு குருதியில்*
*பூத்த தன்னே* ***புதிய உலக****மே.* 3

*அருமை மெய்யெரிந் தற்றது தீயினால்*
*அசையா மாமலை ஆடித் துடித்தது*
*கருமைக் காடசை வின்றிக் கசிந்தது*
*கனையும் ஆழி கவிதை இழந்தது.* 4

*கானப் புட்கள் ககனம் எழவிலை*
*கால்வி லங்கு தரைவிட் டெழவில்லை*
*வானப் பேரொளி மங்கி வதைந்தது*
*மக்கள் கூட்டம் மகிழ்விழந் தோய்ந்தது.* 5

*வீழா நல்லுடல் வீழ்ந்தது மெய்ய! நின்*
*வீர ஆவி விடுதலை பெற்றது*
*தாழா தெங்குத் தழைத்துப் படர்ந்தது*
*சாந்தம் சாந்தம் தனிமை அடைந்தது* 6

---

2. வார – அன்பு, அருள்.

3. போதி – அப்போதில். குருதியில் – இரத்தத்தில் அன்னே – அப்பொழுதே.

4. மெய் – புற உடல்.

5. கானப்புட்கள் – இசைப்பறவைகள். ககனம் – வானம்.

6. தனிமை – ஒப்பற்ற ஒருநிலை.

*கொல்லாப் பேரறங் கூறி வளர்ந்தனை*
*குண்டின் ஆட்சி குலைக்க முயன்றனை*
*நல்லார் பொல்லார் நடுநின் றொழுகினை*
*நரனும்! தோன்றினன் நல்லுடல் சாய்க்கவோ* 7

*உன்னைக் காணவும் உன்பணி செய்யவும்*
*உன்னை நூலில் உணர்ந்தே எழுதவும்*
*சின்ன வன்பெறத் தேவன் அருளினன்*
*செய்யு நன்றி செகத்தினில் உண்டுகொல்!* 8

*ஏசு நாதன் இசைத்த மலைமொழி*
*ஏனை வாய்மொழி ஏந்தி ஒழுகினை*
*நேச அம்மொழி நேர்ந்தஇந் நூலினை*
*நினைவுக் காக்கினன் நின்னடி வாழ்த்தியே.* 9

7. நரனும் – மனிதப்பிறவி தாங்கிய ஒருவனும்.

# தோற்றுவாய்

அன்பு

*அன்பே இறைவனும் அன்பேநல் லாவியும்*
*அன்பே மகனுமொன் றன்பு.* 1

*அன்பே குமரனும் அன்பே அவன்மொழியும்*
*அன்பே அவன்வழியும் ஆறு.* 2

*அன்பரசு கண்டருள அவ்வுலகம் விட்டிங்கே*
*அன்பு மகன்வந்தான் அன்று.* 3

*கொலைஅரசு வீழ்க குமரனரு ளன்புக்*
*கலைஅரசு வாழ்க கதி.* 4

அரசு

*ஆதியில் மக்கள் அரசற்ற வாழ்க்கையாம்*
*நீதியில் நின்றார் நிறைந்து.* 5

*அந்நாளில் மக்கள் அமைதி இயற்கையில்*
*எந்நாளும் நின்றார் இயைந்து* 6

*பின்னர் அரசாட்சிப் பேய்புகப் பல்பெயரால்*
*இன்னல் விளைந்ததே இங்கு.* 7

*கோனாட்சி என்றும் குடியாட்சி என்றுங்கொல்*
*ஊனாட்சி ஓங்கியதே ஊறு.* 8

---

1. பிதா குமரன் பரிசுத்த ஆவி மூன்றும் அன்பே; ஒன்றே.

5. ஆதியில் – மிகப் பழைய காலத்தில்(Primitive age). விதையினின்றும் முளை எழுகிறது; முளை செடியாகிறது; செடி மரமாகிறது; மரம் கவடு கோடு விட்டு விரிந்து பரந்து நிற்கிறது; பின்னே மரம் என்ன ஆகிறது? திங்கள் ஆகிறதா? ஞாயிறாகிறதா? இல்லை. மரம், மலர் – காய் – கனி – உதவுகிறது. கனியுள் (பழைய) விதை (புதுமைபெற்று) இருக்கிறது. விதை பலப்பலவாகி எழுந்து விரிந்து மீண்டும் விதையாதல் காண்க. இவ்வாறே பழைய அரசற்ற சமூகம், பலதிற அரசு வகைகளாக விரிந்து பரந்து பெருகி மீண்டும் அரசற்றதாதல் நியதி. பழைய அரசற்ற சமுகத்துக்கும் புதிய அரசற்ற சமுகத்துக்கும் சிற்சில வேற்றுமைகளிருக்கும். பழையதில் விஞ்ஞானமில்லை; புதியதில் விஞ்ஞானம் உண்டு. ஈண்டுக் கருதற்பாலது அரசற்ற சமுக அமைப்பொன்றே.

## கொடுமை

*எங்கணும் சேவகர் எங்கணும் சேனைகள்*
*எங்கணும் போர்கள் எரி.* 9

*கொள்ளை கொலைகளெங்கும் கோரங்கள் எங்கெங்கும்*
*கள்ளவினை எங்குங் கரவு.* 10

*சட்டங்கள் செய்யும் சபைகளே எங்கெங்கும்*
*கட்டுச் சிறைகளெங்குங் காட்டு.* 11

*பட்டம் பதவிகள் பாவிகட் கெங்கெங்கும்*
*வட்டமிடும் ஆணவ வாழ்வு.* 12

*வாழ்வுப் பொருள்பெருக வாய்த்ததொழிற் கூடம்,போர்ப்*
*பாழ்கருவி செய்வதென்ன பாடு!* 13

*சேவகர் இன்றியும் சேனைகள் இன்றியும்*
*ஏவரும் வாழவிலை இன்று.* 14

*தொல்லை அரசாட்சி தூய இயற்கையைப்*
*புல்ல விடாது புக.* 15

## தெய்வப் பொதுமை

*பழைய அரசற்ற பண்புலகம் மீள*
*உழைத்தல் அறிவுடைமை ஒத்து.* 16

*வழிகண்டார் மார்க்ஸ்முனிவர் மாண்பொதுமைக் கிந்நாள்*
*பழுதுண் டொருகூற்றில் பார்.* 17

*நல்லதே மார்க்ஸ்பொதுமை, ஞானப் பரனெறி*
*இல்லை அதன்கண் இலை.* 18

*ஏசு மொழியில் இறையும் பொதுஅறமும்*
*நேசத்தில் உண்டு நினை.* 19

*அன்புப் பொதுமை அருளாட்சி ஆகுமே*
*துன்பஅர செற்றுக்குச் சொல்.* 20

*மக்களுள் ஈசன் மருவல் உணர்தலன்பு*
*தொக்க பொதுமைத் தொடர்பு.* 21

---

**11.** காட்டு – காட்டல்; காட்சி.

**15.** புல்ல – தழுவ.

**16.** முதற்பாட்டுக் குறிப்பைப் பார்க்க.

**17.** ஒரு கூற்றில் – ஒரு பகுதியில். பழுது என்னை? வரும் பாட்டை நோக்குக.

*அன்பால் உயிர்கள் அணைந்திருத்தல் கண்டாலே*
*இன்பாம் பொதுமை எழும்.* 22.

*ஏசுதிரு வாய்மொழியில் எல்லாம் பொதுஅன்பு*
*நீச மெலாநீக்கு நீர்.* 23

*தெய்வப் பொதுமை செறியுங் கிறிஸ்துமொழி*
*செய்யும்அர சற்ற செகம்.* 24

***கிறிஸ்து மொழியினைக்*** *கிண்டியிரு கூறாப்*
*பொறித்தலிந் நூலின் பொருள்.* 25

*ஒன்று மலைமொழிமற் றொன்று மணிமொழி*
*என்று பிரியுமிந் நூல்.* 26

*அறத்து மொழிகள் அடங்கும்இந் நூற்பேர்*
***'கிறிஸ்து மொழிக்குறள்'*** *கேள்.* 27

வாழ்த்து

*மாணாக்கர் சூழ மலையில் இருக்கின்றார்*
*காணாக் கிறிஸ்துபிரான் காண்.* 28

*மலைஆற வைத்த மலரடிகள் நெஞ்சில்*
*சிலைஆக; என்னுள் சிறந்து.* 29

*கருணையே பேச்சாய்க் கனமழையாய் வெள்ளம்*
*பெருகி வழிகிறது பேறு.* 30

*ஏசுபிரான் சேவடிகள் என்னெஞ்சில் நிற்க,அவர்*
*வாசகமும் அவ்வாறே வந்து.* 31

---

22. மக்களுள் ஈசன் உண்மையை உணர்வோர் தம் உயிர்க்கோ பிற உயிர்க்கோ தீங்கு செய்யார். தம்முள்ளிருப்பதும் பிறருள் இருப்பதும் பொதுவான ஒன்றே என்று எண்ணும் உலகம் அமையின் அரசு எற்றுக்கு? அரசற்ற ஒன்றே மக்களாட்சி அல்லது முழு பொதுமை (Perfect Communism) என்பது.

23. நீர் – ஒளி ; 'நெடுநீர் வார்குழை களைந்தென' – நெடுநல்வாடை : 139: (நீர்மை – ஒளி)

24. தெய்வப்பொதுமை : இது மார்க்ஸால் சொல்லப்பட வில்லை; கிறிஸ்துவால் சொல்லப்பட்டது. மார்க்ஸினுடையது சடப்பொதுமை; கிறிஸ்துவினுடையது தெய்வப்பொதுமை (Spiritual communism). இரண்டுக்கும் பொதுவில் பொலிவது பொதுமை. 17 ஆம் பாட்டையும் குறிப்பையுங் காண்க.

25. கிண்டி – கிளறிப்பார்த்து ; ஆராய்ந்து.

26. மலை – மலைமொழி; மணி – மணிமொழி (ஆகுபெயர்)

29. ஆற – அமைதியடைய. மலை அமைதியுடையது; அதற்கு அமைதி வழங்குவது கிறிஸ்து பெருமான் திருவடி. அமைதிக்கும் அமைதி வழங்குவது கிறிஸ்துபெருமான் திருவடி என்றபடி. சிலை ஆக – கல்லைப்போல உறுதியாக; நிலைபேறாக.

*போற்றி விழிமலர் போற்றிதிரு வாய்மலர்*
*போற்றி அடிமலர்ப் போது.* 32

*வாழி மலைவாழி வாய்மை மணிவாழி*
*வாழி உலகு மலர்ந்து.* 33

*வாழி மலைவாய்மை வாழச்செய் மத்தேயு*
*வாழி வழிவழி வாய்ப்பு.* 34

*வாய்மை எழுதிய மத்தேயு மார்க்குலுக்*
*காய்வில்யோ வான்வாழி கால்.* 35

மாண்பு

*மாட்சி மணிவிளக்காய் மாமலையில் ஏசுதரும்*
*காட்சியினைக் காண்பதுவே கண்.* 36

*மலையில் குமரன் மலர்ந்தபெரு வாய்மைக்*
*கலையினைக் கேட்பதுவே காது.* 37

*வரையேறி ஏசு மழைபொழிந்த வெள்ளம்*
*நிரையேற மூழ்குவதே நெஞ்சு.* 38

*அண்ணல் குமரன் அழகு மலைப்பொழிவே*
*உண்மை மறையென் றுணர்.* 39

*பாவம் கரைக்கும் பரமன் மலைஅமிழ்தை*
*ஆவிக் குணவென் றறி.* 40

*மன்னுயிர்கள் மாசழிக்கும் வன்மூர்க்க வேரறுக்கும்*
*பொன்மொழியின் பேச்சே பொருள்.* 41

*தோழர்க்குத் தொண்டுசெயத் தூண்டுமே உள்ளத்தை*
*ஆழி அருட்சொல் அரண்.* 42

---

34. மலைவாய்மை– மலையிற் பிறந்த சத்திய மொழி. மத்தேயு – கிறிஸ்துபெருமான் சுவிசேஷத்தை எழுதியவருள் ஒருவர்; இவர்தம் எழுத்தில் மலைப்பொழிவு சிறந்து பொலிகிறது; மற்றவர் எழுத்தில் அப்பொழிவு அவ்வளவில் பொலியவில்லை. மத்தேயு: 5, 6, 7 ம் அதிகாரங்களில் மலைப்பொழிவு திகழ்தல் காண்க.

35. வாய்மை – கிறிஸ்துவின் சத்தியத்தை; சத்தியமொழியை. கிறிஸ்துபெருமான் நற்செய்தியை (சுவிசேஷத்தை) எழுதியவர் நால்வர். அவர் மத்தேயு, மார்க், லூக்கா (லூக்காஸ்), யோவான் (அருளப்பர்). கால் – கால்வழி.

37. வாய்மைக்கலை – சத்தியக்கலை; மலைப்பொழிவு.

38. வரை – மலை. நிரை – பெருக்கு; வெள்ளப்பெருக்கு; வெள்ளப்பெருக்கு மேலிட மூழ்குவது.

**அடக்கம்**

*அப்பன் அருள்மலையை அப்படியே பேர்த்தெடுத்தல்*
*எப்படிஎன் னாலியலும் ஈங்கு.* 43

*தழுவியே னும்மலையைத் தண்டமிழால் பேர்த்தே*
*உழமுயன்றேன் கிட்டவிலை ஓய்வு.* 44

*கண்ணனைய நாட்டாட்சி கண்ணற்ற தானமையால்*
*நண்ணியதே ஓய்வு நயந்து.* 45

*துப்பாக்கிச் சூழலிடைத் தூய மலைக்காட்சி*
*இப்பாவி பெற்றேன் இனிது.* 46

*குண்டாட்சி போக்கக் குமரன் அருண்மொழித்*
*தொண்டாற்றல் வேண்டுந் தொடர்ந்து.* 47

*கலகம் குழப்பமின்றிக் காட்டும்அன் பாட்சி*
*இலகு கிறிஸ்துமொழி இங்கு.* 48

*ஒல்லும் வகைதழுவி ஓதவும் வான்மலையை*
*இல்லை தகுதி எனக்கு.* 49

*வன்மமுறு நெஞ்சை வழங்கா மலைப்பொருளென்*
*புன்மை கழிக்கும் புகல்.* 50

*மலையில் முகிழ்த்த மலரைப் புனைய*
*அலைநாரைக் கொண்டதென் அன்பு.* 51

---

42. ஆழி – சமுத்திரம். அரண் – காப்பு; காவல்.

43–44. நூலைப் பெயர்த்தெழுதல் ஒருவிதம். அதைத் தழுவியெழுதல் வேறுவிதம். முன்னையது முதல்நூலில் உள்ளவாறே சொற் பொருளைப் பெயர்ப்பது; பின்னையது முதல்நூலின் சாரத்தைத் தழுவிச் சில மாறுதலுடன் வடிப்பது. இதில் சொல்லுக்குச் சொல், பொருள் இராது. ஈண்டுக் கொள்ளப்பட்டது தழுவுமுறை. உழ – உழைக்க.

45. யான் காங்கரஸில் நீண்டகாலம் தொண்டு செய்தவன்; நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டவன். அதனால், நாட்டாட்சி 'கண்ணனைய நாட்டாட்சி' என்னப்பட்டது. யான் காங்கரஸ் பணியுடன் தொழிலியக்கப் பணியையும் ஆற்றிவந்தேன்; முதுமை காரணமாகப் பற்பல இயக்கங்களை விடுத்து விலகினேன். இவ் வேளையில் சென்னையில் (1947) ஒருபெரும் வேலைநிறுத்தம் நேர்ந்தது. பழந்தோழன் என்று முறையில் வேலைநிறுத்தத்தை அமைதியுடன் நடத்தும் பொறுப்பு எனக்கு வாய்த்தது. தற்போது காங்கிரஸ் சார்பில் ஏற்பட்டுள்ள ஆட்சி எனது உள்ளத்தை உணரும் அகக்கண்ணை இழக்கலாயிற்று. இழந்து எனக்கு வீட்டுக்காவல் நல்கியது. அக்காவல் எனக்கு ஓய்வு அளித்தது. அந்நிகழ்ச்சி இங்கே குறிக்கப்பெற்றது. முன்னுரை பார்க்க. கண்ணற்ற – அகக்கண்ணற்ற.

49. ஒல்லும்வகை – கூடியவரை. வான் – பெருமையுடைய; விழுமிய. ஈண்டு மலையை என்றது மலைப்பொழிவை (ஆகுபெயர்).

50. வழங்காத மலைப்பொருள். புகல் – புகலிடம்.

*மலைஅருவி மூழ்க மணிகள் கொழிக்க*
*அலையில் சிலஎடுத்தேன் அங்கு.* 52

*எடுக்கும் வகைஅறியேன் எப்படியோ சேர்த்தேன்*
*தொடுக்கும் வகையுமிலை தொட்டு.* 53

*ஐயன் அருள்மொழியை அன்பால் உளறுகின்றேன்*
*வையம் பொறுக்க மறு.* 54

*அளவில் பொருள்மொழியை அன்பால் குழப்பும்*
*உளறல் பொறுக்க உலகு.* 55

❍❍❍

# 1. மலைமொழி

**(1) மத்தேயு : 5**

பேறு

***ஆவி*** *எளிமை அடைந்தவர் வாழிபரம்*
*மேவரசன் னாருடைமை மேல்.* 1

*துயரால் அழுது துடிப்பவர் வாழி*
*அயராத ஆறுதல் ஆம்.* 2

*பொறுமை உறைவோர் புகழ்வாழி அன்னார்*
*பெறுவர் புவிஉரிமைப் பேறு.* 3

*தூய்மைக்குச் சூழ்பசி வேட்கையர் வாழிஅவர்*
*வாய்த்தவர் உள்ளநிறை மாண்பு.* 4

*இரக்க முடையவர் இன்புற வாழி*
*இரக்கம் அடைவர் இனிது.* 5

---

1. 'ஆவி எளிமை' என்பது 'மனத்துக்கண் மாசிலனாதலை' உணர்த்துவது, இந்நிலையை, 'மனத் தரித்திரம்' என்று கிறிஸ்தவ சம்பிரதாயம் கூறும். 'மனத் தரித்திர'மாவது பற்றற்ற ஒருநிலை. மனம் வறுமையுற்றால் ஆவி தெய்வச் செல்வம் பெறுதல் இயல்பு. 'உன் பற்றொழிய ஒருபற்று மில்லேன் உடையவனே' என்பது பட்டினத்தடிகள் திருவாய்மொழி. 'ஆவி' என்ற சொல் 'லூக்கா' வில் இல்லை. அதில் 'தரித்திரர்' என்ற சொல் மட்டும் இருக்கிறது.

   'வாழி'என்று யான் கூறியுள்ளேன். தமிழ்ப் பிரதிகளின் 'பாக்கியவான்கள் – தன்யர்கள்' என்ற சொற்கள் காணப்படுகின்றன. இச்சொற்களின் உள்ளுறை 'வாழி' என்பதில் உண்டு. 'வாழி' அழியாத்திருவிடை வாழ்தலைத் தெரிப்பது.

   வாழி(ஏன்) பரம் மேவு அரசு அன்னாருடைமை ஆதலின், பரம் மேவு அரசு – பரலோக ராஜ்யம்.

2. அயராத – தளராத.

3. பொறுமை உறைவோர் – பொறுமையில் தங்குவோர்(வாழ்வோர்); சாந்த குணமுடையவர். புவி உரிமை உறுதலாவது, வானுலகில் உரிமை பெறுவதோடு பூமியிலும் உரிமையுடன் வாழ்வது. உரிமையாளர்க்குப் பகை வழக்கு முதலியன நேருமோ?

4. 'நீதிக்கு' என்ற பாடமும் உண்டு. நீதியைப் புண்ணிய நெறி என்று கூறுவது பழைய சம்பிரதாயம்.

5. இரக்கமே ஆவர் என்றபடி.

*அகத்திலழுக் கில்லா அறவோர்கள் வாழி*
*இகத்திலுங் காண்பர் இறை.* 6

*நிறைசமா தானம் நிகழ்த்துவோர் வாழி*
*இறைமக்கள் ஆவர் இனிது.* 7

*நீதிக்குத் துன்பில் நெருக்குண்போர் வாழிபரஞ்*
*சோதி அரசவர் சொத்து.* 8

*என்பொருட்டுப் பொய்நிந்தை ஏசல் பழிசுமத்தித்*
*துன்புறுத்த, வாழ்வடைந்தீர் சூழ்ந்து.* 9

*அப்போ தகமகிழ்ந்தே ஆர்ப்பரிமின் ஏராள*
*வைப்பேறி மல்கிடும் வான்.* 10

போதகர்

*உங்கட்கு முன்னர் உதித்த குருமாரைப்*
*பங்கப் படுத்தியதிப் பார்.* 11

*உலகினுக் குப்பாய் ஒளிர்கின் றீர்உப்பின்*
*இலகுசுவை ஓடின் இழிவு.* 12

*கெட்ட சுவைமீண்டுங் கிட்டுமோ? வீதியில்*
*கொட்ட, மிதியுண்ணுங் கோது.* 13

*உலகுக் கொளியாய் ஒளிர்கின்றீர்; ஓரூர்*
*மலைஇலங்கின் ஏது மறைவு?* 14

*மரக்காலால் மூடார் மணிவிளக்கைத் தண்டில்*
*இருத்த ஒளிபொங்கும் இல்.* 15

*மன்பதைமுன் கால்கஒளி; மற்றுங்கள் நற்செயல்கண்*
*டன்பப்பன் மாண்புணர ஆங்கு.* 16

---

9. அபாண்டமான நிந்தை . . துன்புறுத்தும் போதே. சுற்றும் முற்றும் என்றபடி.

10. ஆர்ப்பரிமின் – ஒலிசெய்யுங்கள். வைப்பு – நிதி: அருள் நிதி. மல்கிடும் – அதிகமாகும்.

11. குருமாரை – தீர்க்கதரிசிகளை; நபிகளை. இப்பார் – இவ்வுலகம்.

13. கோது – குப்பை; வேறொன்றுக்கும் பயன்படாது என்றபடி.

14. இலங்கின் – விளங்கினால்.

15. மூடாராய் இருத்த (வைக்க)

16. (விளக்கைப்போல) மன்பதை முன் நீர் கால்க ஒளி. மன்பதை – மக்கள் கூட்டம் ; கால்க – வீசுக; உமிழ்க.

### விதியும் நீதியும்

*முன்னை மொழிவிதிகள் மோதயான் வந்தேனென்*
*றுன்னற்க உன்னற்க உற்று.* 17

*போக்க வரவில்லை போந்தேன் நிறைவேற்ற*
*ஏக்கமுற வேண்டா இனி.* 18

*அறுதி யிடுகின்றேன் அன்றை விதிகள்*
*உறுதிநிறை வேறும் உயர்ந்து.* 19

*நிறைவேறும் எல்லாம் நிலன்வான் படுமுன்*
*உறையாவே புள்ளிஎழுத் தொன்று.* 20

*தெய்வவிதி யொன்றைச் சிறிதொன்றில் ஆனாலும்*
*வையத்தில் மீறல் வதை.* 21

*ஏவனே மீறின் இயம்பின் இறையரசில்*
*ஆவன் சிறியனாய் ஆழ்ந்து.* 22

*விதியினில் நிற்போன் விளம்புவோன் விண்ணில்*
*அதிக பெரியன் அவன்.* 23

*பகர்கின்றேன் கேளும் பரிசேயர் வேதர்*
*செகநீதி மோலொழுகல் சீர்.* 24

*அன்னவர் நீதி அளவின் மேல் நும்நீதி*
*சென்றிலதேல் தேவரசு சேய்த்து.* 25

### கொல்லாமை

*‘கொல்லாதீர் ஒன்றனைக் கொல்லின் செலுந்தீர்ப்பு’த்*
*தொல்லோர்சொல் கேட்டிருப்பீர் சூழ்ந்து.* 26

---

17. முன்னைமொழி – தீர்க்க தரிசனங்களையும்; விதிகள் – நியாயப் பிரமாணங்களையும். உன்னற்க – நினையாதேயுங்கள்.

19. அறுதியிடுகின்றேன் – முடிவுகட்டிக் கூறுகிறேன்.

20. படுமுன் – அழியுமுன்; உள்ளமட்டும் என்றபடி. உறையாவே – இறுகாவே; அழியாவே.

22. மீறினும், மீற இயம்பினும் (சொல்லினும்).

23. நிற்போனும், நிற்குமாறு விளம்புவோனும்.

24. பரிசேயர் – யூதர்களில் கல்வி கேள்வி யுடையவர்; வேத சாஸ்திரங்களில் வல்லவர்; கோயில் ஊழியராகவும் அமர்ந்து நடிப்போர்; தெய்வ பக்தி அற்றவர். வேதர் – வேதபாரகர்; வேதப்பிரமாணங்களை நன்றாகப் பயின்று, அவற்றைப் போதிக்குந் தொழிலை ஏற்றவர்.

26. தீர்ப்புசெலும் – தீர்ப்பு நேரும். ‘தீர்ப்பு (இது)தொல்லோர் சொல். தொல்லோர் சொல் – முன்னோர் மொழி.

*சொல்கின்றேன் உங்கட்குச் சூழ்வன, சோதரனை*
*அல்லற் படுத்தின் அடைந்து.* 27

*சீர்த்துறுத்தல் வீணனெனல் பேதையெனல் சோதரனைத்*
*தீர்ப்பு,மன்றம், தீநரகுச்சேர்வு.* 28

*காணிக்கை ஏந்திக் கடவுள் திருக்கோயில்*
*பேணினுளச் செம்மை பெறு.* 29

*உடன்பிறந்தான் வேற்றுமை உள்ளத் தெழுந்தால்*
*உடன்பலி பீடம் ஒதுங்கு.* 30

*காணிக்கை அங்கருகே காண்பீடம் வைத்தகன்று*
*நாணமறச் சோதரனை நண்ணு.* 31

*ஒப்புரவில் உள்ளளவி ஓங்குபெருங் காணிக்கை*
*அப்பனிடம் போந்தே அளி.* 32

எதிரி

*வழியில் எதிரி வயப்படச்செய் நல்ல*
*மொழியில் மனம்பொருந்து முன்பு.* 33

*இலையேல் ஒருவேளை ஈர்த்துன்னை நீதிக்*
*கலைஞன்முன் சேர்ப்பன் கடிந்து.* 34

*நீதியனென் செய்வன் நிறுத்திடுவன் சேவகன்முன்*
*பேதி சிறையடைவாய் பின்.* 35

*கடைசியாங் காசு கழலுமட்டும் வாராய்*
*நடைவெளியே என்கின்றேன் நாடு.* 36

கற்பு

*அயலவனைச் சேராதே என்பதந்நாள் ஆணை*
*செயலெது செப்புகின்றேன் தேறு.* 37

---

27. சூழ்வன எவை? வரும் பாட்டில் தீர்ப்பு, மன்றம், நரகு என்று போந்துள்ளதை நோக்குக.

28. தீர்ப்பு – நியாயத்தீர்ப்பு. இதற்கென்று ஒரு சிறிய நியாய சபை உண்டு. அச்சபையில் சிறு சிறு குற்றங்கள் விசாரிக்கப்படும். மன்றம் – இங்கே ஆலோசனைச் சங்கம்; எழுபத்திரண்டு பேர் அடங்கப்பெற்றது. அதில் பெருங்குற்றங்கள் விசாரிக்கப்படும்.

இப்பாட்டில் கொல்லாமை நுட்பம் விளக்கப்படுகிறது. சீர்த்து உறுத்தல் – கடுமையாகக் கோபித்தல்; அதிக கோபங்கொள்ளுதல். பேதை – மூடன்; சில பிரதிகளில் பித்தன் என்றிருக்கிறது. சகோதரனைக் கோபித்தல் தீர்ப்புக்குரியது; அவனை வீணனெனல் மன்ற (ஆலோசனைச் சங்க) விசாரணைக்கு உரியது. சகோதரனை மூடனெனல் நரகத்தீயிற் செலுத்துவது. முன் பாட்டையும் இப்பாட்டையும் தொடர்புப்படுத்திப் பார்க்க.

32. உள் அளவி – உட்கலந்து.

37. தேறு – தெளி.

*ஒருத்தியை இச்சையுற ஊன்றியே பார்த்தால்*
*கருத்தினில் கற்பழிவு காண்.* 38

*வலதுகண் பாவம் வழங்க முயன்றால்*
*கலதி பிடுங்கிஎறி காப்பு.* 39

*வலதுகை பாவம் வளர்க்க எழுந்தால்*
*புலையென வெட்டிஅதைப் போடு.* 40

*முழுஉடலம் வெந்நரகில் மூழ்குவதைப் பார்க்கின்*
*பழுதுபடல் ஒருறுப்புப் பாங்கு.* 41

*தள்ளுதற் சீட்டின்றித் தள்ளல் மனைவியைக்*
*கொள்வதன் றென்னுமுது கோள்.* 42

*சொல்கின்றேன் கேளுங்கள்* ***சூதற்ற*** *இல்லாளைத்*
*தொல்லையெனத் தள்ளிவிடல் சூள்.* 43

*காதலியைத் தள்ளுதல் கற்பழிக்க விற்றலே*
*ஆதலன்றி வேறென்ன ஆம்.* 44

*விலக்கிய மாதரை வேறொருவன் கொண்டால்*
*கலக்கினவன் ஆவனே கற்பு.* 45

**ஆணை**

*பொய்யாணை நீக்கிப் புகலுங்கள் ஆணையை*
*மெய்யீசன் முன்னென்றார் முன்பு.* 46

*எண்ணி உரைக்கின்றேன் எப்படியுஞ் சத்தியத்தைப்*
*பண்ணற்க பண்ணற்க பாழ்.* 47

*விண்ணின் பெயரால் விளம்பற்க ஆணையை*
*அண்ணலரி யாசனமாம் அஃது.* 48

*மண்ணின் பெயரால் வழங்கற்க ஆணையை*
*அண்ணலின் பாதபடி அஃது.* 49

---

**39.** கலதி – கேடு; மூதேவியுமாம். காப்பு – உன் உயிருக்கு காப்பு (காவல்) செய்வதாகும்.

**40.** புலை – தீட்டு; இழிவுமாம்; விபசாரம் எனவும்படும்.

**41.** பார்க்கினும்.

**42.** முதுகோள் – பழங்கொள்கை.

**43.** சூள் – சாபம்.

**46.** ‘முன்பு என்றார்’ என்பது முன்னோர் மொழியைக் குறிப்பது.

**48.** அண்ணல் அரியாசனமாம் – இறைவனது சிம்மாசனமாகும்.

*கன்னல் எருசலமேல் கட்டற்க ஆணையை*
*மன்னன் நகரமது மாண்பு.* 50

*தலைமீதும் வேண்டா; தனிமயிரைக் கார்மை*
*அலதுவெண்மை ஆக்கலெளி தன்று.* 51

*உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும்*
*விள்க,விஞ்சின் தீமை விளைவு.* 52

பொறுமை

*பல்லுக்குப் பல்லென்றும் கண்ணுக்குக் கண்ணென்றும்*
*சொல்வதைக் கேட்டிருப்பீர் தும்பு.* 53

*தீமைக் கெதிர்ப்பளித்தல் தீயதே என்பன்யான்*
*தீமைக்குத் தீமையே தீது.* 54

*ஒருவனொரு கன்னத்தில் ஓங்கி அறைந்தால்*
*மறுகன்னங் காட்டி மகிழ்.* 55

*ஒருவனொரு போர்வைக் குழன்று வழக்கிட்டால்*
*தருகஅதை அங்கியுடன் தாழ்ந்து.* 56

*ஒருவனொரு கல்தொடர உன்னையே உந்தின்*
*இருகல் அவனுடன் ஏகு.* 57

*கேட்போர்க்குத் தந்துதவு, கிட்டின் கடனுக்கு*
*வாட்பார்வை யின்றி வழங்கு.* 58

அன்பு

*நேசி அயலவனை நேர்ந்த பகைவனைக்*
*கூசிவெறு என்பதுமுன் கூற்று.* 59

*என்மொழியைக் கேளுங்கள் எங்கு முளஇறைவன்*
*அன்பென் றறிகவே ஆய்ந்து.* 60

*மாற்றாரை நேசியுங்கள் வாழ்த்துங்கள் சூளரைப்*
*போற்றார்க்கும் ஆற்றுங்கள் போற்று.* 61

---

50. கன்னல் – குருவி ; மணற்பாங்கு ; கரும்புமாம்.

51. கார்மை – கருமை. அலது – அல்லது.

52. விஞ்சின் – அதிகமானால்; மேம்பட்டால்.

57. உந்தின் – தள்ளினால் ; செலுத்தினால்.

59. முன்கூற்று – பழைய வாசகம்.

61. மாற்றாரை – பகைவரை, சூளரை – சாபமிடுவோரை, போற்று – போற்றலை.

*மிக்க அபாண்டம் விளம்பி வதைப்போர்க்கும்*
*தக்கசெபஞ் செய்யுங்கள் சார்ந்து.* 62

*அப்பொழுதே மேலுலக அப்பனுக் குண்மைச்சேய்*
*இப்புவியில் ஆவிர் இயைந்து.* 63

*நல்லார்க்கும் பொல்லார்க்கும் ஞாயி றெழஇறைவன்*
*எல்லார்க்குஞ் செய்கின்றான் இன்பு.* 64

*நடுநிலையர் மற்றவர் நன்றுபெற மாரி*
*விடுகின்றான் தேவன் விழைந்து.* 65

*நேயரையே நேசித்தால் நேர்பயன் என்னையோ*
*ஆயரும் செய்வ தது.* 66

*உடன்பிறப்பை மட்டும் உளம்வழுத்தின் என்னாம்*
*அடல்பெருக்கும் ஆயர்கோள் அஃது.* 67

*அப்பன் முழுஅன்பே அவ்வன்பே போலுமதும்*
*ஒப்பில தாதல் ஒழுங்கு* 68

**(2) மத்தேயு : 6**

ஈகை

*மக்கள்கண் காண வழிபாட்டைப் பேர்நாடி*
*மிக்கசெயல் தீததுவே வீண்.* 69

*மக்கள் விழிகாண வண்மையைப் பேர்நாடி*
*மிக்கசெயல் தீததுவே வீண்.* 70

*தீதென்னை? வானப்பன் செய்பரிசில் சேராமல்*
*சேதித் திழக்குஞ் செயல்.* 71

*கோயில் தெருவில் கொடையைப் பிறர்மதிக்க*
*மாயர்முன் தாரை மயக்கு.* 72

63. சேய் – பிள்ளை.

64. ஞாயிறு எழ – சூரியன் உதிக்க.

66. ஆயர் – மக்களைத் தொல்லைக்குட்படுத்தி நெருக்கிப் பறித்துண்ணும் ஒரு கூட்டத்தவர்.

67. அடல் – கொலை; போர்; பகை. கோள் – கொள்கை.

68. உமதும் – உம்முடைய அன்பும். ஒப்பற்ற முழு அன்பாதல்வேண்டும் என்றவாறு.

69–70. சில பிரதிகளில் 'தெய்வபூசை' என்ற கருத்தும், 'கொடை – தர்மம்' என்ற கருத்தும் விளங்குஞ் சொற்களிருக்கின்றன. இங்கே இரண்டும் தழுவப்பட்டுள்ளன.

71. சேதித்து – அழித்து.

72. மாயர் தம்முன்னே தாரை ஒலிக்கச் செல்லுதல் தவறு என்றபடி. மாயர் – மாயக்காரர்.

*அன்னவகை ஈகையை ஆற்றற்க, அவ்வீகை*
*சின்னஞ் சிறுமாயர் சிம்பு.* 73

*அன்னவர் எப்பரிசில் அம்மம்ம பெற்றனரே*
*என்றுண்மை சொல்கின்றேன் இன்று.* 74

*வலக்கை வழங்கல், வயங்குமிடக் கைக்குப்*
*புலப்படா வாறு புரி.* 75

*புறமறியா ஈகைப் புனிதமுணர் அப்பன்*
*உறவுப் பரிசளிப்பன் உற்று.* 76

ஜெபம்

*மாயர் செபத்தை மனங்கொள்ளல் வேண்டாவே*
*தீய நடிப்பேன் திருட்டு.* 77

*கோயில் தெருச்சந்தி கூடுநர் காணவே*
*மாயர் செபநிகழும் மாசு.* 78

*அன்னார் செபப்பரிசில் அந்தோ அடைந்துவிட்டார்*
*என்றே உரைக்கின்றேன் இங்கு.* 79

*தனித்த அறைபுகுந்து தாளிட் டமர்ந்து*
*கனிந்து செபஞ்செய் கசிந்து.* 80

*அப்பனை எண்ணி அகத்தில் செபஞ்செய்யின்*
*ஒப்பிலருள் கூர்வன் உவந்து.* 81

*உள்ளே நிகழ்செபத்தின் உண்மையை வானப்பன்*
*தெள்ளத் தெளிந்தருள்வன் தேர்ந்து.* 82

*உரத்தகுரல் சொல்லடுக்கல் ஊன்றுசெப மாகா*
*பரத்தினுளங் காணார் பகட்டு.* 83

*உரத்தகுரல் சொல்லடுக்கல் ஓங்கிவான் தாளைத்*
*திறக்கு மௌநினைத்தல் தீது.* 84

*தேவை இதுவென்று செம்மொழியால் வேண்டுமுனம்*
*தேவன் உணர்ந்துள்ளான் தேர்.* 85

---

73. சிம்பு – குற்றம்.

74. பெற்றனரே என்பது இகழ்ச்சிக் குறிப்பு. அவர் பெறத்தக்க பரிசிலைப் பெற்றாரில்லை என்பது கருத்து.

75. வயங்கும் – (தன்னை விடுத்துப் பிரிவின்றி மிகமிக அணித்தே) விளங்கும்.

*பகைஇகலை மாற்றும் பரமன் செபத்தை*
*அகமடங்கச் செய்கஇவ் வாறு.* 86

*மேலுலகில் வீற்றருளும் மெய்யப்பா உன்நாமம்*
*சாலவே சார்க ஒளி.* 87

*வருக உனதாட்சி வானிலுன் உள்ளம்*
*அருளல்போ லிங்கும் அருள்.* 88

*எங்கட்குத் தேவையாம் இன்றை உணவினை*
*இங்கே அளிக்க இனிது.* 89

*மற்றவர் மீச்செயல்யாம் மன்னிப் பதுபோல*
*உற்றதெம்பால் மன்னிக்க ஓர்ந்து.* 90

*சோதனைக்குட் பண்ணாமல் சூழ்தீமை வாயினின்றும்*
*பாதுகாப் பீக, பரிந்து.* 91

*மன்னரசு ஆற்றல் மகிமை இவையெலாம்*
*என்றும் உனதேஆ மென்.* 92

மன்னிப்பு

*மன்னித்தால் நீவிர் பிறர்குற்றம், வானப்பன்*
*மன்னிப்பன் நுங்குற்றம் மாய்த்து.* 93

*மன்னிப்பு நும்பால் மருவாதேல் வானப்பன்*
*மன்னியான் நுங்குற்ற மாசு.* 94

நோன்பு

*வாடுமுகங் காட்டுகின்றார் மாயர் வலிந்துமிகப்*
*பீடுநோன் பென்னப் பிறர்.* 95

*அன்னவர் நாடகம் அப்பன் உணரானோ*
*முன்னரே மூண்டது மொய்.* 96

---

**86–92.** ஜெபத்தைப் பற்றி ஏடுகளில் சில சொல்வேற்றுமைகள் (கருத்துவேற்றுமைகளல்ல) காணப்படுகின்றன. எல்லாம் ஒன்றிவருமாறு சில பாக்களால் இங்கே விளக்கஞ் செய்யப் பட்டது.

**87.** தமிழ் பைபில்களில் ‘உன் நாமம் பரிசுத்தப்படுவதாக’ என்றும், ‘உன் நாமம் அர்ச்சிக்கப்படுவதாக’ என்றும் காணப்படுகின்றன. லத்தீன், கிரீக் வல்லார் சிலரை அடைந்து கேட்டதில் என்னுள் உற்ற விளக்கத்தின்படி ‘சார்க ஒளி’ என்று கூறலானேன். (ஒளி – புகழ்.)

**94.** மருவாதேல் – உள்ளத்தில் பதியவில்லையானால்; விளங்கவில்லையானல்.

**95.** பீடு நோன்பு – பெருமை பொருந்திய விரதம்.

**96.** மொய் – நன்கொடை; மகமை ; பரிசில்.

*நெய்யைத் தலைக்கிடுக நீரால் முகம்நனைக்க*
*வையம்நோன் பென்றுணரா வாறு.* 97

*உள்ளில் உணர்ந்துநின்றே உள்ளமுணர் உன்னப்பன்*
*வள்ளல் பரிசளிப்பன் வான்.* 98

வைப்பு

*இங்கு நிதிவைப்பை ஈட்டற்க பூச்சிதுரு*
*சுங்கத் திருடுசெயும் துன்பு.* 99

*வானத்தில் வைப்பை வளர்க்கஅவண் பூச்சிதுரு*
*ஈனத் திருடும் இரா.* 100

*எவ்விடத்தில் வைப்புண்டோ அவ்விடத்தில் சித்தமெலாம்*
*வவ்வல் இயற்கை வழக்கு.* 101

ஒளி

*உடல்விளக்குக் கண்ணே உயர்கண் தெளிவால்*
*உடல்முழுதும் காலும் ஒளி.* 102

*ஊறுகண் ணாயின் உடலிருளே, உள்ளொளி*
*பாறின் இருள்பெருகும் பாய்ந்து.* 103

பணி

*ஒருவன் இருவர்க் கொருபொழுதே ஏவல்*
*மருவிப் புரிதல் மருள்.* 104

*அன்பொருபால் காய்வொருபால் அல்லதொரு பால்சேவை*
*துன்னு மொருபால் துவள்.* 105

*பரத்துக்கோ பேய்க்கோ பணிசெய் இரண்டைப்*
*பொருத்திப் பணிசெய்தல் போர்.* 106

---

99. சுங்கத்திருடு – திருடினுந் திருடு.

101. அளவிறந்த பொருட்பற்று ஆண்டவனையும் மறக்கச் செய்யும் என்றபடி.

102. காலும் – உமிழும்.

103. ஊறு – புண். பாறின் – கெடின்.

105. காய்வு ஒருபால் – வெறுப்பு ஒரு பக்கம். துன்னும் – பொருந்தும். துவள் – சோர்வு; புறக்கணிப்பு.

106. சில மூலநூல்களில் 'பேய்க்கோ' என்றிருக்கிறது; சிலவற்றில் 'பொருட்கோ' என்றிருக்கிறது. 'பொருளும்' பேயின்பாற்பட்டதே.

## உறுதி

*என்னத்தை உண்பேம் எதனைக் குடிப்பமே*
*என்றுயிருக் கேன்கவலை ஏற்பு.* 107

*என்ன உடுப்பேம் எனஉடலை எண்ணியே*
*துன்னலென் ஏக்கம் தொடர்ந்து.* 108

*உணவின் உயிரும் உடையின் உடலும்*
*மணமுடைய அல்லவோ மற்று?* 109

*வானத்தை நோக்கி வளர்சிறகை ஆர்த்தெழும்பும்*
*கானப்புள் காண்மின் கரி.* 110

*அவைகள் விதைத்தல் அறுத்தல் நிரப்பல்*
*எவைகளையுஞ் செய்வதிலை ஏன்?* 111

*அவ்வுயிரும் உண்ண அருள்கின்றான் வானப்பன்*
*அவ்வுயிரில் நீர் இழிவோ?அன்று.* 112

*அயர்கவலை ஏனோதன் ஆயுள் அளவில்*
*உயர்வுமுழங் கூட்டுவோன்எங் குண்டு.* 113

*உடைக்கேன் கவல்கின்றீர் உற்றுழைப்போ நூற்போ*
*எடுப்பதிலை காட்டுமலர் ஏன்?* 114

*ஒப்பிலாச் சாலமனும் ஒள்ளாடை பூண்டதிலை*
*இப்புவிப்பூ ஒன்றனைப்போல் ஈண்டு.* 115

*இன்றிருந்து நாளை அடுப்பில் எறிபட்டுப்*
*பொன்றும்புற் கீசனுடைப் போர்ப்பு!* 116

*புல்லுக் கருளும் புனிதன் உமக்கருள*
*வல்லன்; உறுதிபெறல் மாண்பு.* 117

*அற்றவரே! நம்பிக்கை ஆழ்வீர் கவலையில்*
*நிற்க உறுதி நெறி.* 118

---

109. உணவின் – உணவைப் பார்க்கினும். உடையின் – உடையைப் பார்க்கினும். மணம் உடைமை – மதிப்புடைமை.

110. ஆர்த்து – ஆரவாரித்து; ஒலித்து. கானம் – பாட்டு; இசை. புள் – பறவைகள். கரி – சான்று; சாட்சி.

115. சாலமன் – ஒரு பெரிய மன்னன்.

116. பொன்றும் புற்கு – அழியும் புல்லுக்கு. போர்ப்பு – போர்வை.

118. நம்பிக்கை அற்றவரே (அற்ப விசுவாசிகளே.)

*என்உண்பேம் என்குடிப்பேம் என்உடுப்பேம் என்றென்று*
*கன்றிக் கவலல் கரிசு.* 119

*ஐயத்தால் அல்லலுறும் அஞ்ஞானப் பிண்டங்கள்*
*ஐயனுளன் தேவைக்கேன் அச்சு.* 120

*அப்பன் அரசறத்தில் ஆர்வ முறும்முதலில்*
*இப்புவியில் எல்லாமாம் இன்பு.* 121

*நாளைக் கெனக்கவலை நண்ணாதீர் நாளைக்கு*
*நாளை கவலையுறும் நாள்.* 122

*இன்றைக்கோ இன்றைக் கெழும்பாடு போதுமே*
*என்றைக்கும் அப்பனுளன் ஏத்து.* 123

**(3) மத்தேயு : 7**

தீர்ப்பு

*குற்றநும் மீது குறுக்கிடு மாறுநீர்*
*மற்றவர்க்குத் தீர்ப்பளித்தல் மாறு.* 124

*மற்றவர்க்கு நீர்வழங்கும் தீர்ப்பின் வழிப்படியே*
*பெற்றிடுவீர் தீர்ப்பினைப் பின்பு.* 125

*மற்றவர்க்கு நீரளத்தல் எவ்வளவோ அவ்வளவே*
*உற்றிடும் நுந்தமக் கூர்ந்து.* 126

பிறர் குற்றம்

*கண்தூல உத்திரம் காணாதுன் சோதரன்கண்*
*நுண்தூசு காண்பதென்ன நோன்பு?* 127

*கண்ணிருப்ப உத்திரம், 'சோதரஉன் கண்தூசை*
*மண்ணவிடு' என்னலென் மாண்பு?* 128

*மாயனே! முன்புன்கண் உத்திரத்தை மாற்றமுயல்*
*தூயஒளி கூடுந் துணை.* 129

---

119. கன்றி – நொந்து; உருகி ; வருந்தி. கவலல் – கவலையுறல். கரிசு – குற்றம்.

120. அச்சு – அச்சம்.

121. அப்பன் அரசு அறத்தில் – ஆண்டவனுடைய இராச்சியத்திலும், தர்ம நீதியிலும்.

124. தீர்ப்பு என்பது பிறர்மீது நியாயமின்றிக் குற்றம் நினைத்தலும் சாட்டலும்; இவ்வாட்சி பண்டைக் காலத்தது.

127. பிறர்குற்றம் பாராட்டுவது உலகில் ஒரு விரதமாகியது. அதனால் இங்கே 'நோன்பு' என்னப்பட்டது.

128. உன் கண்ணில் உத்திரம் இருப்ப. மண்ண – கழுவ; துடைக்க; நீக்க. மண்ண(என்னை) விடு.

*அவ்வொளியுன் சோதரன்கண் ஆர்த்தசிறு தூசகற்றச்*
*செவ்வையில் காட்டுந் தெளிவு.* 130

தகுதி

*சொரியாதே நாய்கள்முன் தூயதை, முத்தை*
*எறியாதே பன்றிகள்முன் ஏன்று.* 131

*கல்லா விலங்குகள் கால்களால் தேய்த்தவற்றை*
*நில்லா துமைப்பீறும் நீண்டு.* 132

அப்பன் அருள்

*கேளும் கொடைவரும் தேடுமே கண்டடைவீர்*
*தாளகலும் தட்டுமே சார்ந்து.* 133

*கேட்பவர் பெற்றிடுவர் தேடுவோர் கண்டடைவர்*
*பூட்டகலும் தட்டும் புலர்ந்து.* 134

*அப்பங்கேள் சேய்க்குக்கல் மீனுக் கரவளிக்க*
*ஒப்புவரோ நும்மிலொரு வர்.* 135

*நஞ்சனும் பிள்ளைக்கு நல்லன நல்கவே*
*நெஞ்சில் நினைப்பன் நெறி.* 136

*அப்பனோ அன்பு,நலம் ஆக்கவே ஆர்த்தருள்வன்*
*இப்புவியில் வேண்டுநருக் கென்று.* 137

தன்னுயிர்போல்

*பிறருமக் கென்செய்யப் பேணுகின் றீரோ*
*உறஅவர் செய்கஅதை உற்று.* 138

*இதுவே விதிஆணை ஈதேமுன் வந்தோர்*
*சிதைவில் மொழியாந் திறம்.* 139

---

131. ஏன்று – தாங்கி; சுமந்து.

132. (பீறினும்) பீறும்.

133. தட்டுங்கள் கதவின் தாள் அகலும்(திறக்கப்படும் என்றபடி)

134. புலர்ந்து – தளர்ந்து.

135. சேய்க்கு – பிள்ளைக்கு. மீனுக்கு – மீன் கேட்பவர்க்கு. அரவு – பாம்பு. அப்பங் கேட்பவர்க்குக் கல்லையும், மீன் கேட்பவர்க்குப் பாம்பையும் அளிக்க (கொடுக்க).

136. நஞ்சனும் – விடம் போன்றவனும் ; தீயனும்.

137. (நஞ்சற்ற) அப்பனோ அன்பு. ஆர்த்து அருள்வன் – விரைந்தெழுந்து அருள்வன்.

138. பேணுகின்றீரோ – விரும்புகின்றீரோ. அவர் அதை உற(அடைய) நீர் செய்க.

139. விதிஆணை – வேதப்பிரமாணம். முன்வந்தோர் – தீர்க்க தரிசிகள்.

வழி

*வழிதெளிமின் செல்லுதற்கு வாயில் இடுக்கம்*
*வழிஅந்த வாயில் வழி.* 140

*உண்டகல வாயிலும் உண்டு வழிவிரிவு*
*உண்டழிவு பல்லோர்போக் குண்டு.* 141

*சீவனுக்கு வாயில் சிறிதுவழி யேஇடுக்கம்*
*சீவருள் காண்பர் சிலர்.* 142

கள்ள குரு

*கள்ளகுரு மார்வேடம் கண்டு மயங்காதீர்*
*கள்ளத்துக் கெச்சரிக்கை! காப்பு.* 143

*ஆட்டுத்தோல் போர்த்தணைவர் அந்தோ அவர்நெஞ்சம்*
*வாட்டியுணும் ஓநாய்கள் வாய்.* 144

*அன்னார் அளிகனியால் அன்னார் நிலைமையை*
*நன்றறிய லாகும் நயந்து.* 145

*முட்செடியில் தீராட்சை முள்ளியில் அத்திகொய்ய*
*உட்கொள்ளல் கூடுமோ ஊர்ந்து.* 146

*நல்லமரம் கெட்டமரம் நல்லகனி கெட்டகனி*
*நல்கல் இயற்கை நடை.* 147

*நல்லமரம் கெட்டகனி, நல்லகனி கெட்டமரம்*
*நல்கல் அருமை நடப்பு.* 148

*நல்லகனி ஈனா நலிந்தமரம் வெட்டுண்டும்*
*ஒல்கிஎரி யுண்டும் உகும்.* 149

*அவ்வவர் ஈன்கனியால் அவ்வவர் பண்புகளைச்*
*செவ்வன் உணரலாம் தேர்ந்து.* 150

---

140. வாயில் வழியே வழி.

141. அகலவாயிலும் உண்டு; விரிந்த வழியும் உண்டு; பலர் போதலும் உண்டு; அங்கே அழிவும் உண்டு.

146. தீராட்சை – திராட்சை. அத்தி – அத்திப்பழம்.

147. முறை முறையே நல்கல் (கொடுத்தல்).

149. ஈனா – தாரா. ஒல்கி – வாடி; காய்ந்து. உகும் – கெடும்; சாகும்.

150. ஈன்– ஈனும்; தரும்.

## ஆண்டவன் சித்தம்

*ஆண்டவ ஆண்டவஎன் றென்னை அடைவதால்*
*வேண்டி வளையுமோ விண்.* 151

*வானப்பன் சித்த வழிப்படியே வாழ்வோனை*
*வானம் அடையும் வலிந்து.* 152

*அந்நாளில் ஆண்டவ ஆண்டவ என்றென்னைச்*
*செந்நா முழங்கினுமென் சீர்.* 153

*உன்பெயரால் முன்மொழிந்தோம் ஒட்டினோம் பேய்களை*
*அற்புதஞ்செய் தோமென்பர் ஆர்த்து.* 154

*அறிவேனே உம்மை அகலுங்கள் மாறு*
*பொறியீரே என்பேன்அப் போது.* 155

*இம்மொழியை யான்மொழிந்தேன் எண்ணிவழிநடப்போன்*
*செம்மையைச் சொல்கின்றேன் தேர்ந்து.* 156

*இன்னவன் பாறைமேல் இல்லம் எழுப்பிய*
*மின்னறிஞன் போன்றானே வெற்பு.* 157

*விண்மழை பெய்தது வெள்ளம் புரண்டது*
*மண்புயல் வீசிற்று வாய்ந்து.* 158

*இல்லம் விழவில்லை ஏனதன் காலின்கோள்*
*வல்லது பாறை யடி.* 159

*என்மொழியைச் செய்கையில் ஏலாதான் இல்லமணல்*
*மின்னெடுத்தான் போன்றான் மெலிந்து.* 160

*மாமழையும் வெள்ளமும் மாருதமும் வீழ்த்தின*
*நாமஇலம், ஏன்? மணற்கால் நாற்று.* 161

---

151. விண்– பரலோக ராஜ்யம். தானே வளைந்து வருமோ?

153. என்னை – என்னிடம்; என்னை நோக்கி.

154. ஆர்த்து – ஆரவாரித்து; ஒலித்து.

155. மாறிமாறி மயக்கும் வஞ்ச அறிவுடையவர்களே என்றபடி.

157. மின்அனைய நுண் அறிஞன் என்றவாறு. வெற்பு – மலை; மலைபோன்றவன் என்றபடி.

159. காலின்கோள் – கால்கோள்; கடைக்கால்.

160. மின் – அற்ப.

161. மாருதம் – புயல். நாம இலம் – பெயரளவில் எழுந்த இல்லம்; போதிய வலிமை இல்லாமல் நடுங்கிக்கொண்டிருந்த இல்லம் எனினுமாம். நாமம் – நடுக்கம்.

# 2. மணிமொழி

கடவுள்

*கடவுள் அறிவு கருதித் தொழுக*
*இடமில் ஒருபொருள் என்று.* 1

*கடவுள் அரசுலகம் கண்காண வாரா*
*இடமங்கிங் கென்னலும் இல்.* 2

*கடவுள் அரசுலகம் கால்கொண் டிருக்கும்*
*இடம்உம துள்ளம் இனிது.* 3

*கடவுள்மெய் அன்பு, கசிவால் - உயிரில்*
*திடமன்பு கூர்வால் - தெளி.* 4

*உலகிலோர் அப்பன் உமக்கில்லை இல்லை*
*அலகில்வான் அப்பனேஅப் பன்.* 5

*சோதனை செய்யாதே தூயனை அப்பனையென்*
*றாதி யெழுத்துண் டறி.* 6

*அப்பாற்போ சாத்தானே! அப்பன் ஒருவனையே*
*தப்பாமற் போற்றுமுன் சாற்று.* 7

*ஆக்கையைக் கொல்வோருக் கஞ்சற்க; ஆன்மாவைப்*
*போக்கஅவர்க் குண்டோ புலம்.* 8

---

1. அறிவு – சித். அறிவு ஒரு கட்டுப்பட்ட இடத்தில் அடங்கிக் கிடப்பதன்று. அஃது எல்லையற்றது. அதனால் 'இடமில் ஒருபொருள்' என்னப்பட்டது. இடம் இல் – இடமில்லாத; இடமற்ற ; இடங்கடந்த.
2. கடவுள் அரசு உலகம் – பரலோக ராஜ்யம். இடம் அங்கு இங்கு என்னாதபடி.
4. கூர்வால் – பெருக்கால் (கூர்தல் – உள்ளது சிறத்தல்); கசிவாலும் கூர்வாலும்.
5. அலகு இல் – அளவில்லாத. வான்அப்பன் – பரலோகத்திலுள்ள பிதா.
6. ஆதி எழுத்து – முன்மொழி; மறைமொழி; தீர்க்க தரிசனம்.
7. முன்சாற்று – முன்மொழி.
8. ஆக்கையை – உடலை. புலம் – அறிவு.

*ஆக்கையை ஆன்மாவை ஆழ்நரகில் வீழாமே*
*காக்கவல் லாற்கஞ்சும் காப்பு.* 9

*காசொன் றிருகுருவி கையேறும் ஒன்றாதல்*
*ஈசனருள் இன்றிவிழல் இல்.* 10

*உங்கள் தலைமயிர் ஒவ்வொன்றும் எண்ணிக்கை*
*தங்கி யுளது தக.* 11

*பற்பல் குருவியினும் பன்மடங்கு மேற்பட்டீர்*
*எற்றுக்கோ அஞ்சுகின்றீர் ஈண்டு.* 12

*மக்களால் ஆகாத மாண்பெல்லாம் அப்பனால்*
*சிக்கின்றி ஆகும் சிறந்து.* 13

*கடவுள் மரித்தோர் கடவுளல சீவன்*
*உடையோர் கடவுளென் றோர்.* 14

*மன்ன னுடையதை மன்னற்கும் மற்றப்பன்*
*தன்னதை அன்னவற்குந் தா.* 15

*தவஞ்செய், மனந்திரும்பு, தற்பரன் ஆட்சி*
*அவனி அணித்தே அறி.* 16

*உன்னுடைமை எல்லாம், ஒருவனே! என்னுடைமை,*
*என்னுடைமை உன்னுடைமை ஆம்.* 17

*என்னைச் சிலுவையில் ஏற்றி அறைகின்றார்*
*வன்மைக் கொலையாணி வைத்து.* 18

*‘என்னநாம் செய்கின்றோம்’ என்ப தறியாரே*
*மன்னிக்க அப்பனே மாசு.* 19

*என்னப்பா என்னப்பா என்னைஏன் கைவிட்டாய்*
*உன்கையில் வைத்தேன் உயிர்* 20

9. வல்லாற்கு – வல்லானுக்கு; வான் அப்பனுக்கு. (அது) காப்பு (ஆகும்)

11. எண்ணிக்கை தங்கி உளது – எண்ணப்பட்டுள்ளது.

14. ‘சீவன்’ என்ற சொல் தமிழ் பைபிலின் சம்பிரதாயப்படி ஆளப்பட்டது. பிறாண்டும் இவ்வாறே கொள்க.

16. அவனி அணித்து – உலகுக்குச் சமீபத்திலேயுள்ளதை.

19. ஆணிவைத்து அடிப்போர் அறியாரே. (அவர்தஞ் செயலின்)மாசை மன்னிக்க.

குமரன்

*அப்பனும் யானுமொன்றே அத்துவித மாயுள்ளேம்*
*எப்பொழுதும் வேறா யிலை.* 21

*அப்பனுள் யானுளேன் அப்படியே என்னுளப்பன்*
*ஒப்பஎனை நம்புங்கள் ஓர்ந்து.* 22

*அப்பன்எனக் கென்றே அகிலமும் ஒப்புவித்தான்*
*அப்பனும் யானும்அறி வம்.* 23

*வானில் நிலனில் வளரதி காரமெலாம்*
*தானம்எனக் கப்பன் தயை.* 24

*அய்யன் அனுப்பினன் யானே வரவில்லை*
*மெய்யிது மெய்யிது மெய்.* 25

*அப்பன் அனுப்பினன் அன்பால் ஒருமகனை*
*இப்புவி உய்ந்திடற் கென்று.* 26

*அப்பன் தனதன்பை அம்புவிக்குக் காட்டினான்*
*எப்படி? மைந்தனை ஈந்து.* 27

*அப்பன் மகனை அனுப்பினன் இவ்வுலகை*
*ஒப்புர வாக்க உவந்து.* 28

*வந்த தொளியே வழிநின் றொழுகுங்கள்*
*பந்தஇருள் நீங்கிப் படும்.* 29

*என்னை அனுப்பினவன் என்னோ டிருக்கின்றான்*
*என்னைத் தனிவிடுத்தல் என்று?* 30

*அப்பனை அன்றி அறிவார் உளரேயோ*
*ஒப்புடைய தன்குமரன் உள்.* 31

*அப்பனைச் சேயன், அவற்கொண்டோர் அல்லாமல்*
*எப்புடையுங் காண்போர் எவர்?* 32

---

21. அத்துவிதம் – இரண்டற்றது.

28. ஒப்புரவு ஆக்க – அன்பால் ஒற்றுமைப்படுத்த; சமமாக்க; சமாதானம் பண்ண.

29. அவ்வொளியின் வழி நின்று. படும் – ஒழியும்.

30. என்னைத் தனிவிடுத்தல் என்று (எப்பொழுது)? என்று மில்லை என்றபடி.

31. உள் – உள்ளத்தை.

32. சேயன் – மனித குமரன். அவற் கொண்டோர் – அவனை(மனித குமரனை) ஏற்றவர். சேயனும் அவனை ஏற்றோருமல்லாமல். எப்புடையும் – எவ்விடத்திலும்.

*அகநடுக்கங் கொள்ளாதீர் ஆண்டவனை நம்பும்*
*தகஎனையும் நம்புமே சார்ந்து.* 33

*உயிர்த்தெழலும் சீவனும் உற்றவன் யானே*
*அயர்ச்சிஏன் வேண்டா அறி.* 34

*ஆண்டவன் என்றே அழைக்கின்றீர் என்னையான்*
*வேண்டுவ செய்கநீர் வேட்டு.* 35

*என்னில் உறுதிவைத்தல் என்னை அனுப்பிய*
*என்னப்பன் பால்வைத்த லாம்.* 36

*குமரன்பால் அன்பு குலவுவோர் என்றும்*
*அமர நிலைபெறுவர் அங்கு.* 37

*ஈசன்சேய் நீயானால் இக்கல்செய் அப்பமென*
*நீசப்பேய் சொற்றனை நீ.* 38

*அப்பத்தால் மட்டும் அவனி பிழைப்பதிலை*
*செப்புகின்றேன் மேலுளதைத் தேர்.* 39

*அப்பனுரை ஒவ்வொன்றும் அப்பத்தின் மேம்பட்ட*
*தொப்பில தென்றார்முன் னோர்.* 40

*மக்கள்முன் என்னை மகிழ்ந்தறிக்கை செய்வோனை*
*மிக்க னெனவிள்வேன் விண்.* 41

*மக்கள்முன் என்னை மகிழ்ந்தறிக்கை செய்யானை*
*மிக்க னெனவிள்ளேன் விண்.* 42

*மக்கள்முன் என்னை மறுப்போர்க் கெதிர்ப்புக்கள்*
*மிக்கதிரும் தூதர்முன் மேல்.* 43

*நரிபறவை நண்ணும் வளைகூட்டில், சாய்க்கச்*
*சிரமனிதச் சேய்க்கில்லை சேர்ப்பு.* 44

---

**33.** தக – ஒப்ப.

**37.** அமரநிலை – மரணமிலாப் பெருவாழ்வு.

**38.** கல் – கல்லை.

**39.** அவனி – உலகம்.

**40.** மேம்பட்டது – ஒப்பிலது – என்றார்.

**41.** விண் – விண்ணில்.

**44.** நரி வளையிலும், பறவை கூட்டிலும். மனிதச் சேய்க்கு (குமரனுக்கு)ச் சிரம்(தலை) சாய்க்கச் சேர்ப்பு(இடம்) இல்லை.

*கள்ளக் கிறிஸ்துக்கள் காட்சி அளிப்பார்கள்*
*எள்ளளவும் நம்பற்க இங்கு.* 45

*எருசலேம் போகின்றோம் எங்கும் குழப்பம்*
*குரவரால் வந்திடுங் கூர்த்து.* 46

*குமரனை ஒப்புவிப்பர் கொல்வோ ரிடத்தில்*
*சமரென் றலைப்பர் சரிந்து.* 47

*ஏசுவர் துப்புவர் எள்ளுவர் வாரினால்*
*வீசுவர் கொல்வர் வெகுண்டு.* 48

*மூன்றுநாள் செல்லும் முழங்கி உயிர்த்தெழுவேன்*
*சான்று நிறைவேறும் சார்ந்து* 49

*எருசலெம் பெண்மணிகாள்! என்பொருட்டு நீங்கள்*
*உருகிஅழல் வேண்டா உறைந்து.* 50

*உங்களைப் பற்றியும் உம்மக்கள் பற்றியும்*
*பொங்கி அழுங்கள் புலர்ந்து.* 51

*என்னர சிவ்வுலகிற் கேற்றதன் றேற்றதேல்*
*சின்னவர்பாற் சிக்கேன் சிறை.* 52

*என்னாட்கள் போர்புரிந் தென்னையும் மீட்டிருப்பர்*
*என்னாட்சி இங்கேற்ப தேல்.* 53

*அப்பாலே எல்லாமும் ஆகுமுன் உன்னருளால்*
*இப்பாத் திரமெடுக்க இன்று.* 54

*என்சித்தம் ஒன்றுமிலை ஈசா!உன் சித்தவழி*
*நன்கு நடக்கவே நாள்.* 55

*கள்ளரைப் பற்றல்போல் கைத்தடிவாள் ஏந்திவந்தீர்*
*உள்ளக் கரவை ஒளித்து.* 56

---

46. குரவரால் – குருமாரால் (வேதபாரகர் பரிசேயர் முதலியோரால்).

47. சமர் – போர். சரிந்து – கூடி.

49. சான்று – சாட்சி; இங்கே தீர்க்கதரிசனம்.

50. உறைந்து – கண்ணீர் உகுத்து – சிந்தி – ஒழுக்கி.

51. புலர்ந்து – வாடி.

52. சின்னவர் – சிறியவர்; இங்கே யூதர்.

54. கிறிஸ்துவின் பாத்திரம் (உடல்).

55. நாள் – நாளும்; நாடோறும்.

56. கிறிஸ்து தம்மைப் பிடிக்க வந்தவரை நோக்கி . . .

*கூட்டத்தில் நாடோறும் கோயிலில் பேசினேன்*
*வாட்டஏன் பற்றவிலை வந்து.* 57

*இடியுமிக் கோயில் எழுப்பிடுவன் நல்ல*
*படிவமா மூன்றாநாள் பார்த்து.* 58

*என்சொல் எனதன்றே என்னை அனுப்பிய*
*என்னப்பன் சொல்லாம் இனிது.* 59

*வானும் நிலனும் மறைந்துபோம் என்மொழியோ*
*ஊனமுறல் இல்லை உரம்.* 60

*உலகுக் கொளியானே உற்றால் இருளின்*
*கலக மிராஒளியே காப்பு.* 61

*நான்வழியும் சத்தியமும் சீவனு மாயுள்ளேன்*
*வான்வழி காட்டும் வரன்.* 62

**சீடர்**

*அப்பன் எனைவிடுத்தான் அவ்வாறு சீடருமை*
*ஒப்ப விடுத்தேன் உலகு.* 63

*ஊதுகின்றேன் ஆவியை உங்களிடம் ஊறிநிற்க,*
*ஆதி வழிநடக்க, அன்பு.* 64

*அப்பன் எனதிடம் அன்புகூர்ந் தாற்போல*
*ஒப்பஉம்பால் கூர்கின்றேன் உற்று.* 65

*நானன்பு கூர்வதுபோல் நாளுமே உங்களிடம்*
*வானன்பு கூர்கஉம்முள் வாய்ந்து.* 66

*ஒருவர்க் கொருவர்நீர் ஓங்கன்பு கூர்ந்தால்*
*கருதுவரென் சீடரெனக் கண்டு.* 67

*மிக்கஇம் மக்களெலாம் மேய்ப்பனிலா ஆடுகள்போல்*
*விக்கித் திரிகின்றார் விண்.* 68

*அறுப்பதிகம் ஆள்கொஞ்சம் ஆள்தேவை என்றே*
*அறுப்புமுதல் வற்குணர்த்தும் ஆர்த்து.* 69

---

58. படிவம் – வடிவம்.

60. உரம் – அது உரமுடையது; பலமுடையது.

62. வான்வழி – சிறந்தவழி; தெய்வவழி.

63. சீடர் உமை – சீடர்களே உங்களை. உலகு – உலகில்.

66. வான – மேலான ; உயர்ந்த.

*சீடரே! கேளுநீர் சென்றுநற் செய்தியை*
*வீடுபதி பேசும் வியந்து.* 70

*காணாத ஆடுகள்இல் காணும் இறைஅரசு*
*கோணா தணித்தென்னும் கூர்ந்து.* 71

*நோயர் பிணிபோக்கும் நொந்தார் உயிரெழுப்பும்*
*பேயழுகல் நோய்தீரும் பேர்த்து* 72

*இலவசமாய்ப் பெற்றீர் இலவசமா ஈயும்*
*நிலவளச் செந்நெறியில் நின்று.* 73

*கச்சையிற் பொன்வெள்ளிக் காசுகளைக் கட்டாதீர்*
*பச்சையாய்ச் செல்லும் பரிந்து.* 74

*வழிக்குப்,பை ஈரங்கி வார்செருப் பப்பம்*
*கழிக்கம்பு தாங்காதீர் கை.* 75

*ஓநா யிடைஆட் டை ஓட்டுவது போலும்மை*
*நானே அனுப்புகின்றேன் நன்று* 76

*அறிவு விவேகம் அரவைப்போல், வெண்மை*
*புறவைப்போல், செல்க புகுந்து.* 77

*எச்சரிக்கை மாக்கள்முன் ஈர்ப்பர்மன் றாலயத்தில்*
*பச்சைவா ராலடிப்பர் பார்த்து.* 78

*என்னிமித்தம் உம்மை இழுப்பர் அதிபதிமுன்*
*மன்னர்முன் சான்றா வலிந்து.* 79

*எதைஉரைத்தல் வேண்டும் எனுங்கவலை வேண்டா*
*உதயமங் காகும் உரை.* 80

*உரைப்பவர் நீரல்ல உம்அப்பன் ஆவி*
*உரைக்குமும் வாயில் உவந்து.* 81

*சீடன்தன் ஆரியனில் சேவகன் தன் ஆள்வோனில்*
*பீடிலன் ஈது பிறக்கு.* 82

---

70. நற்செய்தியை – சுவிசேஷத்தை (Gospel). வீட்டிலும் பதியிலும் (ஊரிலும்).

71. இல் – இல்லில்; வீட்டில். காணும் – உண்டாக்குங்கள். என்னும் – சொல்லுங்கள்.

72. நொந்தார் – இறந்தவர். அழுகல் நோய் – குஷ்டம்(முதலியன).

73. அவ்வந் நிலவளத்துக்கேற்ற.

77. அறிவு விவேகத்தில் பாம்பைப்போலவும், கரவின்மையில் புறாவைப்போலவும். வெண்மை – கரவின்மை.

78. மன்று – நீதிமன்றம்.

*சீடன்தன் ஆரியன்போல் சேவகன்தன் ஆள்வோன்போல்*
*ஈடுடைய னாதல் இனிது.* 83

*மரக்காற்கீழ்க் கட்டிற்கீழ் வையார் விளக்கைப்*
*பரக்கவைப்பார் தண்டில் பரிந்து.* 84

*வெளிவரா நுண்மறைவும் மேலறி யாமல்*
*ஒளிஅந்த ரங்கமும்உண் டோ?* 85

*இருளினிற்சொல் கின்றேன் இதைவெளிச் சத்தில்*
*பொருளுறப் பேசுங்கள் போந்து.* 86

*காதுக்குள் கேட்பதைக் காட்சி அரமியத்தில்*
*ஓதி விளக்குங்கள் உற்று.* 87

*உள்ளமிலார், சீடரே! உம்சொல்லை ஏற்றொழுகக்*
*கொள்வரோ என்னைக் குனிந்து.* 88

*இங்கென்னை ஏலாதார் என்னை அனுப்பிய*
*புங்கவனை ஏலார் புறம்பு.* 89

*என்னைநீ பேதுருவே 'ஈசன் மகன்கிறிஸ்து'*
*என்றுவெளி யிட்டாய் இனிது.* 90

*வாழி வெளியீடுன் மாயஊன் செந்நீரோ*
*ஆழிஉனக் கப்பன் அருள்.* 91

*பேதுருவே இந்தப் பெரும்பாறை மீதினில்*
*நீதிசபை கட்டுவன் நின்று.* 92

*நரகத்தின் வாசலதை நாடிமேற் கொள்ளா*
*பரஉலகச் சாவிகளைப் பார்த்து.* 93

*இந்தத் திறவுகளை ஈந்திடுவன் உன்கையில்*
*சந்ததமும் வாழியே சார்பு.* 94

*இங்கேநீ கட்டல் எதுவோ அக் கட்டடம்*
*அங்கேயும் கட்டுவ தாம்.* 95

---

82. ஆரியனில் – குருவைப்பார்க்கிலும். பீடு– பெருமை. பிறக்கு – வெளிச்சம்.

83. ஈடு – ஒப்பு.

87. அரமியத்தில் – அரண்மனையில்.

90. பேதுருவின் வெளியீடாவது, கிறிஸ்துவை ஈசன் மகன் என்றது.

91. செந்நீரோ – இரத்தமோ. செந்நீரன்று என்றபடி. ஆழி – கடல்போன்ற. பேதுருவே உன் வெளியீடு, உன்னுடைய மாயா ஊன் இரத்தத்தினின்றும் பிறக்கவில்லை. அஃது அப்பன் அருளால் பிறந்தது என்றபடி. மாயாநாத ஒலி அருள்நாத ஒலி என்ற ஆட்சிகளைக் கருதுக.

*இங்கேநீ கட்டவிழ்த்தால் இவ்வளவில் நில்லாமல்*
*அங்கே அவிழும் அது.* 96

*சீடரே! கேண்மின் செகத்தில் குமரற்குப்*
*பாடுபல உண்டு பல.* 97

*வேதரும் மூப்பரும் மேய்முதல் ஆசிரியர்*
*ஆதிமக னைக்கொல்வர் ஆழ்ந்து.* 98

*உயிர்த்தெழுவன் மூன்றாநாள் உங்கட்குச் சொன்னேன்*
*அயர்ச்சி தவிர்த்திடுங்கள் அன்று.* 99

*என்னைத் தனி அழைத்தாய் என்சொல் கடிகின்றாய்*
*என்னையோ பேதுருவே இங்கு.* 100

*பிறரையும் நோக்கினேன் பேதுருவைக் காய்ந்தேன்*
*அறவேசாத் தானே அகல்.* 101

*என்னைத் தனிவிடுத்தே ஏகுவீர் சீடர்காள்!*
*கொன்னே! சிதறுண்ணுங் கோடு.* 102

*வந்துவிடும் அக்காலம் வந்தது வந்ததே*
*நைந்துருக வேண்டா நலிந்து.* 103

*இருப்பனோ யான்தனியே என்னோடென் அப்பன்*
*இருப்பன் அவனென் இருப்பு.* 104

*உண்பவன் என்னுடன் உம்மில் ஒருவனவன்*
*எண்ணியே காட்டுவன் இங்கு.* 105

*உம்மை மறவேன் ஒருபோதும் என்றறைந்தாய்*
*செம்மையுள் பேதுருவே சீர்த்து.* 106

*மறப்பாய் மறுப்பாய் வளர்மும் முறையே*
*நிறக்கோழி கூவுதல்முன் நீ.* 107

---

98. முதல் –பிரதான.

100. 'கொல்வர்; சாவேன்; மீண்டும் எழுவேன்' என்று ஏசுபிரான் சொன்னது பேதுருவுக்குப் பிடிக்கவில்லை. அதனால் பேதுரு ஏசுவைத் தனியே அழைத்து, 'இப்படிப் பேசலாமோ' என்று கடிந்தார். அதுபோது கிறிஸ்து அருளியது.

101. பேதுரு தம்மைக் கடிந்தபோது, ஏசுநாதர் ஆங்கிருந்த மற்றவரைத் திருக்கண்ணோக்கஞ் செய்து, பேதுருவைக் காய்ந்து, 'சாத்தானே அப்பாற் போ' என்றருளினார். குமரனைக் கடியுமாறு பேதுருவைத் தூண்டியவன் சாத்தான் என்றபடி.

102. கோடு – கொடுமை.

105. ஒருவன் – யூதாஸ்காரியத். அவன் என்னைக் காட்டிக் கொடுப்பன்.

106. சீர்த்து – கோபித்து.

107. கிறிஸ்து பெருமான் சொன்னபடியே பின்னர் நடந்தது.

*அப்பமெடுக் கின்றேன் அதைப்பிட் டளிக்கின்றேன்*
*ஒப்பும் இது என் உடல்.* 108

*வரிவட்டில் வாங்கும், மடுநீரென் செந்நீர்*
*சொரிவது பல்லோர்க்கா சூழ்ந்து.* 109

*உம்முடைய காலை ஒழுங்காக் கழுவினேன்*
*செம்மையைச் சிந்தியும் சேர்ந்து.* 110

*ஏற்ற இழிவுகள் எண்ணாமல் ஒவ்வொருவர்*
*காற்கழுவும், செம்மைக் கருத்து.* 111

## உறவினர்

*உந்தாயும் சோதரரும் உம்பால் உரையாட*
*வந்தார் புறத்தென்றாய் வந்து.* 112

*என்தாயும் சோதரரும் இச்சீடர் இங்கிருப்போர்*
*என்தாயும் சோதரரும் யார்?* 113

*வானப்பன் சித்த வழிநடப்போர் என்தாயும்*
*மான வுடன்பிறப்பும் மற்று.* 114

*உம்மைச் சுமந்தகரு ஊட்டிய பால்முலைகள்*
*செம்மையே வாழிஎன்றீர் தேர்ந்து.* 115

*நல்ல தெனினுமது நாதனுரை கேட்டோம்ப*
*வல்லுநர் வாழி வழி.* 116

*தந்தையைத் தாயைத் தனிஎன்னின் நேசிப்போன்*
*மைந்தனெனக் காகான் மருள்.* 117

*மகனை மகளை மனததென்னிற் கொள்வோன்*
*மகனெனக் காகான் மறு.* 118

*தனது சிலுவையைத் தாங்கிஎனைப் பற்றான்*
*எனதுரிமை மைந்தனலன் என்பு.* 119

*மரித்தோர் உயிர்த்தெழுங்கால் மண்ணின் உறவில்*
*உரித்தோர் நினைவே உறா.* 120

---

109. வட்டில் – கிண்ணம். மடு – குடிக்கும். செந்நீர் – இரத்தம்.

111. இதுவே எனது செம்மைக் கருத்து.

114. மானம் – பெருமை; வலிமை.

117. என்னின் – என்னைப் பார்க்கிலும். மருள் – அறிவின்றி மயங்குவது.

118. மறு – களங்கம்.

### ஆண் பெண்

*இல்லாளைத் தள்ளல் இசைக்கின் நீர் முன்னோரைக்*
*கல்லாதார் கூற்றுக் கலை.* 121

*ஆணுமாய்ப் பெண்ணுமாய் அய்யன் படைத்துவிட்டான்*
*காணும் மறைச்சொற் கருத்து.* 122

*ஒருவன் ஒருத்தியுடன் ஒரூனாய் வாழ*
*அருளிறைவன் செய்தானே அன்று.* 123

*அய்யன் இணைப்பை அழித்துப் பிரித்தலைத்தல்*
*செய்யற்க செய்யற்க தீது.* 124

*மன்றலெதற் கென்றீர், வரம்பெற்றோர் அண்ணகர்க்கும்*
*அன்றிஒன் றாநும் அரற்று.* 125

*கருவால் பிறரால் கருதுவான் நோக்கால்*
*உருவாகும் அண்ணகர்தம் ஊன்.* 126

*ஆதியில் இல்லை அகற்றும் வழக்கில்லை*
*பாதி இடைவழக்கப் பாழ்.* 127

*தூயமனை யாளைத் தொலைத்து மறுமணம்*
*பாயல் விபசாரப் பாழ்.* 128

*விலக்கிய இல்லாளை வேறொருவன் கொண்டால்*
*அலக்கண் விபசாரம் ஆம்.* 129

*பெண்ணுநன் நாயகனைப் பேர்த்து மறுமணம்*
*பண்ணல் விபசாரப் பாடு.* 130

### குழந்தை

*மறைந்ததை ஞானியர்க்கு வானில அப்பா!*
*திறந்தனை வாழ்கநீ சேய்க்கு.* 131

---

121. கூற்று – மொழியாகிய.

125. மன்றல் – திருமணம். வரம் பெற்றோர்க்கும் அண்ணகர்க்கும் (அலிகட்கும்). அரற்று – ஆரவாரித்தல்; ஒலித்தல். ஒன்றா – பொருந்தாது.

126. வான்நோக்கால் – உயர் நோக்கால்; தெய்வநோக்கால்.

127. இல்லை – இல்லாளை (ஆகுபெயர்).

128. காரணமின்றித் தொலைத்து.

129. அலக்கண் – துக்கம்.

130. பாடு – துன்பம்.

131. சேய்க்கு – குழந்தைக்கு.

*புறக்கணி யாதே புனிதமுறு சேய்கள்*
*துறக்கத்துத் தூதரவர் தூண்.* 132

*வானப்பன் முன்னே வளர்வ தவர்நோக்கு*
*மோனம் பொருளவர் முன்* 133

*பேசுகின் றீர் வானிற் பெரியன் எவனென்றே*
*வாசமிகு சீடர்! வம் மின்.* 134

*நீங்கள் மனந்திரும்பி நின்றிக் குழந்தைமனம்*
*தாங்கினால் கிட்டும்வான் சார்பு.* 135

*தன்னைஇச் சேய்போலத் தாழ்த்துவோன் வானுலகில்*
*மன்னும் பெரியனாம் வாழ்வு.* 136

*ஏற்பவன் என்பெயரால் இத்தகைய சேய்களை*
*ஏற்பவன் என்னையும் ஈங்கு.* 137

*ஏற்பவன் என்றனை என்னை அனுப்பிய*
*மேற்பரனை ஏற்பன் மிக.* 138

*என்னிடம் அன்புகொள் இச்சிறுவர் ஏவர்க்கும்*
*இன்னல் புரிதல் இழிவு.* 139

*இழிஞர் கழுத்தினில் எந்திரக்கற் சூட்டி*
*நமுவக் கடல்விடுதல் நன்று.* 140

*குழந்தைகள் என்பால் குலவ விடுக*
*விழுந்துதடை செய்யற்க வேர்த்து.* 141

*அன்னவரைப் போன்றதே அப்பன் அரசுலகம்*
*என்றுணர்ந்து வாழ்க இனிது.* 142

*குழந்தையாய், ஈசன் குணஉலகை ஏலான்*
*நுழைதல் அரிதாங்கு நோற்று.* 143

**சீவன்**

*தன்னுடைய சீவனையே தான்காக்க முந்துவோன்*
*முன்னம் அதை இழப்பன் முற்று.* 144

---

132. சேய்கள் – சேய்களை; குழந்தைகளை. துறக்கத்து – வானுலகத்திலே ; சுவர்க்கத்திலே.

134. சீடர் – சீடரே.

136. மன்னும் – நிலைபெறும்.

143. ஈசனுடைய குண உலகை. ஆங்கு – அக்குண உலகை.

146. கசடு – குற்றம்.

*என்னிமித்தம் சீவன் இழப்பவனே அன்னதை*
*முன்னமே கண்டடைவன் முற்று.* 145

*உலகை வயப்படுத்தும் ஓராள்தன் சீவன்*
*கலகமுறின் என்னாம் கசடு.* 146

*சீவனுக் கீடாச் செகத்தில் எதைக்கொடுப்பன்*
*பாவ மனிதன் பரிவு!* 147

*இந்நீரால் மீண்டும் எழும்வேட்கை, யான்தரும்*
*நன்னீரால் போகுமே நைந்து.* 148

*நித்தியச் சீவனுக்கு நீரளிக்கும் நல்லூற்றுச்*
*சத்தியம் என்கொடைச் சார்பு.* 149

*அழியா உணவுக் கரும்பாடு பட்டீர்*
*அழியா உணவறிமின் ஆய்ந்து.* 150

*நிலைத்த உணவது நித்திய சீவ*
*நலத்த துழைமினுற நன்று.* 151

*குமரனதை ஈவன் குறியிட் டவனை*
*விமலன் அளித்தான் விருந்து.* 152

*குமரன்பால் நம்பிக்கை கொள்ளல் உழைப்பாம்*
*அமலன் உளக்கோள் அது.* 153

*விண்ணிருந்து வந்ததே மெய்யுணவு தேவனருள்*
*மண்ணில் அழியா மருந்து.* 154

*நானே உயிருணவு நண்ணிஎனை நம்பினோர்க்*
*கீனப் பசிவேட்கை இல்.* 155

*வருந்தி அழைத்து வலிபாரம் ஏற்றோர்*
*வருக, இளைப் பாறல் வரும்.* 156

*சாந்தமும் தாழ்மையும் சார்ந்தவன் என்றனுகம்*
*ஏந்திடக் கற்க எழும்.* 157

*என்றன் நுகமினிதாம் ஏறு சுமைஎளிதாம்*
*குன்றிலகு வாகும் குணம்.* 158

---

147. பரிவு – துன்பம்.

148. – நைந்து – நசுங்கி.

153. கோள் – கருத்து; துணிபு; கொள்கை.

157. நுகம் – கலப்பை.

*மீண்டும் பிறவாதான், விண்ணப்பன் மேலுலகைக்*
*காண்டல் அரிதரிது கல்.* 159

*நீராலோ ஆவியிலோ நேர்பிறப் பெய்திலனேல்*
*வாரா பரலோக வாழ்வு.* 160

*ஊனால் பிறப்பெடுத்தல் ஊனாகும் ஆவியில்*
*தானாப்  பிறத்தலது தான்.* 161

### ஜெப வீடு

*என்னப்பன் வீட்டினை எற்றுக்கோ வாணிபப்*
*பொன்னப்பு வீடாக்கல் போர்.* 162

*என்வீடு மக்கள் எணும்ஜெப வீடென்று*
*முன்னோர் எழுதியது முத்து.* 163

*கள்ளர் குகையாக் கருணை ஜெபவீட்டை*
*உள்ளியே செய்கின் றீர் ஊறு.* 164

### கற்பனை

*முதன்மையாங் கற்பனையை மூதறிஞ!@ கேட்டாய்*
*அதன்விதம் சொல்கின்றேன் ஆறு.* 165

*ஈசன் ஒருவன் இதயம் உயிர்முழுதும்*
*நேசி இதுமுதல் நீ.* 166

*அடுத்ததுன் மாட்டுநீ அன்புகூர் தல்போல்*
*மடுத்துக்கூர் மற்றவர் மாட்டு.* 167

*இந்த இரண்டில் இயங்குமே எல்லாமும்*
*முந்தை மொழிதீர்க்கம் முற்று.* 168

### ஒற்றுமை

*ஒன்றைக் குறித்திருவர் ஒற்றுமையாய் வேண்டிநின்றால்*
*நன்றருள்வன் வானப்பன் நன்று.* 169

---

162. வீடாக்கல் எற்றுக்கு? அது போராக முடியும்.

163. எணும் – எண்ணும்.

165. ஆறு – ஆறுதலடை.

166. ஒருவன் – ஒருவனே.

167. மடுத்து – சேர்ந்து.

168. தீர்க்கம் – தீர்க்கதரிசனம்.

169. நன்று – ஆக்கம்.

*பிணங்கித் தனக்குள் பிரியும் அரசு*
*சுணங்கியே பாழ்படும் சோர்ந்து.* 170

*ஒன்றா திரிந்திடும் ஊர்வீடும் எல்லாமும்*
*நன்றா நிலையா நரகு.* 171

*எங்கிருவர் மூவரோ என்பெயரால் கூடினால்*
*அங்கிருப் பேனடுவில் ஆர்ந்து.* 172

விசுவாசம்

*விசுவாசம் வித்தாய் விரிந்து கனிந்தால்*
*நிசமா விருப்புநிறை வாம்.* 173

*ஒன்றில் உறுதி உளதாயின் அவ்வுறுதி*
*பொன்றலையும் போக்கும் பொருள்.* 174

*கடுகு விசுவாசம் காண்இம் மலையைக்*
*கடுக அப்பாற் போஎன்றாற் போம்.* 175

*பழியில் விசுவாசம் பார்த்திம் மலையை*
*விழுகடல் என்றால் விழும்.* 176.

*சித்தமா னாலுமக்குச் சுத்தமாக் கென்றாயே*
*சித்தம்உன் நோய்தீர்க தேய்ந்து.* 177

*அஞ்சா திருமகனே அன்பினைக் கண்டேன்யான்*
*பஞ்சாப் பறக்கும்உன் பாடு.* 178

*ஒருவரெனைத் தொட்டார் ஒழுகிய தென்னில்*
*ஒருபெரும் மின்னல் ஒளி.* 179

*துதைவிடை அங்கியைத் தொட்டேன் ஓ டிற்று*
*வதைபெரும் பாடென்றாய் வாழ்.* 180

*உன்றன் விசுவாசம் உன்னைப் புரந்தது*
*சென்றமைதி செல்விநீ சேர்.* 181

*கண்ணினை நல்குங் கருத்துரன் உண்டெனக்கென்*
*றெண்ணுகின் றீரோ இயைந்து* 182

171. ஒன்றாது இரிந்திடும் – ஒருமைப்படாமல் பிரிந்து சிதறும்.

174. பொன்றலையும் – அழிவையும்.

180. துதைவிடை – நெருக்கினிடை.

181. புரந்தது – காத்தது; இரட்சித்தது.

182. கருத்து உரன் – மனோசக்தி (Will Power).

*ஆம்ஆம் எனஒலித்தீர் அவ்வுறுதி வண்ணம், கண்*
*ஆம்ஆம் என ஆயிற் றாங்கு.* 183

*கோயில் தலைவ! குணமகள் மாய்ந்தாளோ*
*மாயவிலை தூக்க மயக்கு.* 184

*பக்கத்தி லுள்ளீர் பரிகாசம் பண்ணாதீர்*
*மிக்க விசுவாசம் மேல்.* 185.

*விசுவாசங் கொண்டால் விழிப்பள், தலைவ!*
*விசுவாசம் உள்ளிலே வேண்டு.* 186

*விசுவாசம், பெண்ணே! விழித்தெழு; அன்பீர்*
*இசையுண வூட்டும் இவட்கு.* 187

*காற்றே அமைதி; கடலே அமைதி; ஏன்*
*ஆற்றா தலறினீர்? ஆ!* 188

*சுழல்காற் றலைமோதல் சூழ்ந்தனஎன் றஞ்சி*
*விழல்விசு வாசத்தின் வீவு.* 189

*நம்பிக்கை உள்ளவர்க்கு நண்ணாத தொன்றில்லை*
*அம்புவியில் ஐயம் அழுக்கு.* 190

*இவ்வுலகஞ் சொன்னாலே ஏறவிலை நம்பிக்கை*
*அவ்வுலகஞ் சொன்னாலென் ஆம்!* 191

*விசுவாச மாயிருந்தால் வேண்டுவன எல்லாம்*
*விசுவாசஞ் செய்யுமே வேட்டு.* 192

*எத்தைநீர் கேட்பீரோ ஈர்ஞ்செபத்தில் நம்புங்கள்*
*அத்தை அடைந்தன மென்று.* 193

பாவி

*மருத்துவன் வேண்டும் வருந்துபிணி யர்க்குத்*
*திருத்த நலர்க்கேன் தெளி.* 194

*உங்கள் மனத்தினில் ஓயாமல் பொல்லாமை*
*தங்கிச் சுழல்வதென்? சார்ந்து.* 195

188. புயல்கண்டு சீடர்கள் அலறியபோது ஏசுபிரான் அருளியது.

189. அஞ்சி விழல் – அஞ்சி விழுதல்; அஞ்சிச் சோர்தல். வீவு – அழிவு.

191. இவ்வுலகம் – இவ்வுலகத்துக்கு உரியதை.

192. வேட்டு – விரும்பி.

193. ஈர்ஞ்செபத்தில் – அன்பு செபத்தில்.

194. மருத்துவன் – வைத்தியன். நலர்க்கு – சுகமுள்ளவர்க்கு.

*நீதியரை அல்ல அல்ல நீணிலத்துப் பாவிகளை*
*ஓதி அழைக்கவந்தேன் உற்று.* 196

*வறியர்க்கு நற்செய்தி வாரி வழங்கப்*
*பெறுகிறது எங்கெங்கும் பேறு.* 197

*மரநல மாக்கின் வருங்கனியும் நன்றாம்*
*மரங்கெடின் கெட்டகனி வாய்ப்பு.* 198

*நல்லவன் நல்லதை நன்னிதியி னின்றுமே*
*கல்லி எடுப்பன் கனிந்து.* 199

*கெட்டவன் கெட்டதைக் கெட்டநிதி கைவைத்து*
*முட்டி எடுப்பன் முகந்து.* 200

*அறவனீ யென்றும் அலனென்றும் உன்றன்*
*முறைசெயல் கொள்ளும் முடிவு.* 201

*ஓராடு நூறாட்டில் ஒன்றா தொருவினால்*
*பாரானோ மேய்ப்பன் பரிந்து* 202

*சிதறாத ஆடுகளைச் சேர்த்து மலையில்*
*பதறியே ஓடுகின்றான் பார்த்து.* 203

*கண்டதும் மற்றவற்றிற் காணாத இன்பமவன்*
*உண்டனன் உள்ள உணர்வு* 204

*மற்றவருஞ் சேர்ந்து மகிழ்ச்சியால் ஆடினர்*
*அற்றஒன் றுற்றதில் அன்பு.* 205

*அகந்திருந்தும் ஓர்பாவிக் கானந்தம் விண்ணில்*
*மிகுந்தொண்ணூற் றொன்பதரின் மேல்.* 206

*சேதமாய்ப் போயொழிந்த சீவர்களைக் காத்தருளச்*
*சோதி அணைந்தது சூழ்ந்து.* 207

*காணாத ஆடுகளைக் கண்டு திருத்தவந்தேன்*
*வீணா வரவிலைமண் மீது.* 208

*கொல்லர் விலக்குங்கல் கூடத்து மூலையில்*
*வல்லதூ ணாக வரும்.* 209

---

199. கல்லி – அகழ்ந்து; தோண்டி.

202. ஒன்றாது ஒருவினால் – சேராது விடுத்து நீங்கினால்.

206. தொண்ணூற்றொன்பது பேரினும்.

## மன்னிப்பு

*பாவம் பொறுத்தருளும் பான்மை அதிகாரம்*
*தேவ மகற்குண்டு தேர்.* *210*

*'பரமனே மன்னிக்க பாவிபிழை' என்று*
*வரசெபஞ் செய்கின்றாய் மற்று.* *211*

*மற்றவர் செய்பிழையை மன்னித்தா லன்றிநீ*
*கற்ற செபம்போம் கவிழ்ந்து.* *212*

*மன்னிப்புன் உள்ளம் மருவாதேல் மாதேவன்*
*மன்னியான் உன்பாவ மாசு.* *213*

*திமிர்வாதக் காரஉன் தீயபெரும் பாவம்*
*அமர்ந்தடங்கி ஆழ்ந்த தறி.* *214*

*பாவமன் னிப்புப் பரமன் செயவல்லான்*
*ஏவனிவன் என்றுன்னல் ஏன்?* *215*

*மனத குமரற்கு மன்னிக்கப் பாவம்*
*நனிஉண் டதிகாரம் நன்கு.* *216*

*மன்னிக்கப் பட்டதுன் மாபாவம் என்பதோ*
*அன்றிநட என்பதோ ஆய்.* *217*

*மிக்க அபாண்டம் விரித்து வதைப்போர்க்குந்*
*தக்க செபஞ்செயல் சால்பு.* *218*

*உடன்பிறந்தான் குற்றம் உஞற்றின் கடிக*
*உடன்மன்னி, நொந்தால் உளம்.* *219*

*ஏழு முறையவன் ஏதன் புரிந்துருகின்*
*ஏழுமுறை மன்னி இதம்.* *220*

*வாழஉடன் வந்தான் வழுக்கல் பொறுக்குமுறை*
*ஏழன் றெழுபதென் பேன்.* *221*

*எப்பாவம் எந்நிந்தை ஏற்குமே மன்னிப்பை*
*எப்போதும் ஒன்றேற்றல் இல்.* *222*

*தூஆவி யானவரைத் தூற்றியே நிந்தித்தல்*
*மேவாது மன்னிப்பு மேல்.* *223*

---

210. தேவ மகற்கு – தேவ குமரனுக்கு; கிறிஸ்துவுக்கு.

219. உஞற்றின் – செய்யின்.

223. தூ ஆவி – பரிசுத்த ஆவி.

*மனித குமரற்கு மாறா ஒருசொல்*
*வனையின்மன் னிப்பு வரும்.* 224

*ஆவிக்கு மாறா அறைவோற் கிருமையில்*
*பாவமன் னிப்பிலை பார்.* 225

கண்மூடி வழக்கம்

*ஓய்நாளில் நோயை ஒழித்தல் தவறென் றீர்*
*ஓய்நாள் குமரற் குரித்து.* 226

*ஆழ்ந்த குழியில்தன் ஆடோடி ஓய்வுநாள்*
*வீழ்ந்தால் எடானோ விரைந்து.* 227

*ஆட்டிலும் மைந்தன் அதிமேலன் நோன்போய்வு*
*நாட்களிலும் நல்லசெயல் நன்று.* 228

*ஓய்நாளில் காளை உதைகழுதை நீர்பருகின்*
*காய்வீர்கொல்? என்னே! கருத்து.* 229

*உஞ்சீடர் கைகழுவா துண்கின்றார் தீட்டன்றோ*
*துஞ்சு மரபென்றீர் தூர்ந்து.* 230

*புறவேடங் கொண்டீர் புறக்கணித்தீர் அப்பன்*
*அறமேவு கற்பனை ஆறு.* 231

*பெற்றோரைப் பேணும் பெருமையைக் கைவிட்டீர்*
*கற்றீர் புறத்தீட்டுக் காப்பு!* 232

*புகுவது வாயுள் பொருந்தாது தீட்டை*
*உகுவதில் வாய்தீட் டுளது.* 233

*வாயுள் புகுதல் வயிற்றுள் செரித்துவெளி*
*ஆயிடல் நீர்அறிவீர் ஆய்ந்து.* 234

*வாயின் வழிவருதல் வாழிடம் உள்ளமே*
*பாயும்பல் தீட்டுப் பரவு.* 235

*காரெண்ணம் கொல்லல்பொய் கற்பழிவு கள்ளநிந்தை*
*சேருள்ளம் தீட்டுச் செறிவு.* 236

224. வனையின்– புனைந்தால் ; செய்தால்; சொன்னால்.

229. காய்வீர் கொல் – கோபிப்பீரோ?

230. மரபு தூர்ந்து துஞ்சும் என்றீர். துஞ்சும் – மாண்டுபோம்.

231. ஆறு – வழி.

233. வாய் உகுவது – வாய் சிந்துவது; உள்ளிருந்தே வாய் வழியாக வருவது.

236. கார் – கரிய ;தீய.

*கள்ளர் மொழிகள் கரும்புளித்த மாவொக்கும்*
*கொள்ளற்க எச்சரிக்கை! கோது.* 237

*வேதரிடம் எச்சரிக்கை! வேடம் புறவேடம்*
*தீது பெருமாயைத் தீட்டு.* 238

*மோசேயின் பீடத்தில் மோசரவர் வீற்றிருப்பர்*
*வாசகம் நன்றுநடை மாறு.* 239

*மாச்சுமை ஏற்றுவர் மக்களின் தோளிலவர்*
*நாச்சுமை அன்றிவிரல் இல்.* 240

*நாடாவை நீட்டுவதை நல்லங்கி தீட்டுவதை*
*வீடாக் கருதுகின்றார் வீண்.* 241

*நீளங்கி பூண்டு நெடுவீதி போவருலா*
*தோளர் வணக்கேற்பர் சூது.* 242

*ஆலயத்தில் முன்னமர்வர் ஆர்விருந்தில் முன்னமர்வர்*
*ஓலமுண்டை வீடடைவர் ஓர்ந்து.* 243

*பார்வைக்கு நீண்டசெபம் பண்ணுவர் தீர்ப்பினில்*
*சார்வர் கொடுந்தண்டத் தாக்கு.* 244

*தன்னை உயர்த்துவோன் தாழ்வனே, தாழ்த்துவோன்*
*தன்னை உயர்த்துவோன் தான்.* 245

*வெந்தயம் சீரகம் வோ்துளசி பத்திலொன்று*
*முந்தச் செலுத்துகின் றீர் மொய்த்து.* 246

*கள்ளரே! விட்டீர் கருணையை நீதியை*
*உள்ள உறுதியை ஊறு.* 247

*உண்ணுங் கலனை உலுக்கிப் புறத்தூய்மை*
*பண்ணுகின்றீர் உன்னுமுட் பற்று.* 248

*கொள்ளை அழுக்குக் குடிகொண் டுழல்கின் றீர்*
*உள்ளங் கழுவீரோ ஒத்து.* 249

*வெள்ளை அடித்த வெறுங்கல் லறைபோன்றீர்*
*உள்ளென்ன? என்புபிண ஓடு.* 250

---

240. நா சுமை, வாய்த்தொண்டை உணர்த்துவது, விரல் (கை) ஒன்றுஞ் செய்வதில்லை என்றபடி.

241. வீடா – மோட்சமாக.

242. தோளர் – நெடுந் தோள்களையுடையவர். வணக்கு – வணக்கம்.

248. உள் பற்றை உன்னும் (நினையுங்கள்).

*வெளிக்குப் புலனாம் வெறுநீதி, உள்ளம்*
*களிக்கும் வழுக்கழுக்குக் கள்.* 251

*தூயரைக் கொன்றார், துணைநின்றார், நும்முன்னோர்*
*ஆயபழிக் கென்செய்வீர்! ஆசு.* 252

*புறத்தைப் படைத்த புனிதன் அகத்தை*
*வெறுத்து விடுத்தானோ வேர்த்து!* 253

*உற்றன எல்லாம் உளங்கொண் டறஞ்செய்மின்*
*முற்றுமே தூய்மை முகிழ்ப்பு.* 254

*மக்கள்முன் நீதியாய் வாழ்கின்றீர்! உம்முளத்தை*
*மிக்கறி வான் இறைவன் வேர்.* 255

*மதிப்புறல் மக்கள்முன், வானப்பன் முன்னர்*
*அதிக அருவருப்பே ஆம்.* 256

செல்வம்

*நித்தியச் சீவன் நினை இளைஞ! நல்லனென*
*எற்றுக் கெனைச்சொற்றாய்? இங்கு.* 257

*என்றென்றும் நல்லவன் ஈசன் ஒருவனே*
*அன்றிப் பிறரில்லை ஆய்.* 258

*சீவனில் செல்லஉன் சித்தம் விரும்பினால்*
*மேவிய கற்பனையுள் வேய்.* 259

*கொலைகளவு காமம் கொடும்பொய், குணத்தை*
*அலையவை செய்யாதே அல்.* 260

*மாட்சிமைசெய் ஈன்றோரை, மற்றவர்பால் அன்புகூர்*
*ஆட்சிஉன் பால் கூர்வதுபோல் அன்பு.* 261

*இளைஞ! 'இவைசெய்தேன் என்னகுறை இன்னும்*
*உள'தென்றாய் சொல்கின்றேன் உள்.* 262

*ஒருகுறை உள்ளதவ் வொன்றைக் களைந்தால்*
*பெருகு முழுப்பண்புப் பேறு.* 263

252. ஆசு – குற்றம்.

254. உற்றன எல்லாம் – கிடைத்த எல்லாவற்றையும்.

257. சீவன் – சீவனை.

259. கற்பனையை உள்ளத்தில் வேய் (அணி).

261. உன்பால் அன்பு கூர்வது ஆட்சியாயிருப்பதுபோல.

262. உள் – நினை.

263. களைந்தால் – பிடுங்கி எறிந்தால்; நீங்கினால். பண்பு – இயல்பு; தன்மை.

*முழுப்பண்ப னாகநீ முன்னின், உளதை*
*அழியவிற் றில்லார்க் களி.* 264

*உனக்கவ் வுலகில் உருவாகுஞ் செல்வம்*
*எனக்குப்பின் வாசிலுவை ஏற்று.* 265

*சென்றான் மறுத்திளைஞன் செல்வத்தான், சீடரே!*
*நன்றாகச் சொல்கின்றேன் நான்.* 266

*ஊசியின் காதினில் ஓட்டை நுழையினும்*
*ஈசனிடஞ் செல்வனுறல் இல்.* 267

*ஒருவன் உயிர்நலம் உள்ளஇடம் அன்னான்*
*திருவினில் இல்லை தெளி.* 268

*பகலில் இரவில் பரிந்தே விருந்தை*
*வகையினில் ஓம்புமின் மாண்பு.* 269

*சோதரரை நண்பரைச் சுற்றத்தைச் செல்வரை*
*வீதியரைக் கூப்பிடுதல் வீண்.* 270

*அன்னவர் மீண்டும் அழைப்பர் விருந்துக்குத்*
*துன்னுமே கைம்மாற்றுத் தூறு.* 271

*ஏழை குருடரும் ஈனச்சப் பாணியும்*
*வாழ அழைத்தல் வளம்.* 272

*திரும்ப விருந்திவர் செய்யார் அதனால்*
*அரும்புதல் கைம்மா றரிது.* 273

*நல்லதே உப்பு நகர்ந்துவிடின் சாரமெலாம்*
*செல்லுமோ மீண்டுமவை சேர்ந்து.* 274

*உப்புடைய ராகுங்கள் ஓங்குசமா தானத்தில்*
*ஒப்புரவுக் கேற்க உழைப்பு.* 275

*இன்றமும் நீவிர் இதமுற வாழியே*
*என்றும் நகைப்பீர் இனி.* 276

*செல்வரே! ஐயோ! செறிந்தது கேடுநீர்*
*புல்லிய ஆறுதல் போம்.* 277

*நிறையுடையீர்! அந்தோ! நிகழ்ந்தது கேடு*
*வறுமை பசிவாட்டும் வந்து.* 278

---

264. முன்னின் –ஆழ நினைந்தால். இல்லார்க்கு – வறியர்க்கு.

271. தூறு – தீங்கு; புதருமாம். துன்னுமே – சேருமே.

*நகையுடையீர்! ஐயோ! நளிர்ந்தது கேடு*
*புகையுமே துன்பப் புலம்பு* 279

*மற்றவர் உன்னை மகிழ்ந்து புகழுங்கால்*
*உற்றது கேடென் றுணர்.* 280

*ஏவனே கேட்பினும் ஈக, பறிப்போனை*
*மேவியே கேளற்க மீண்டு.* 281

*கடனைத் திரும்பவும் கைப்பற்ற எண்ணில்*
*கடனளித்தல் பாவம் கடி* 282

## பிறர்குற்றம்

*பாவம் உணர்ந்து பரிதபித்திங் கென்னிடம்*
*மேவினள் இப்பெண் மெலிந்து.* 283

*கற்பழிந்தாள் காண்பளேல் கல்லெறிக என்பதுமுன்*
*கற்பனை என்றீர் கவிழ்ந்து.* 284

*பாவமிலார் ஈங்கிருப்பின் பார்த்துக்கல் வீசுக*
*மேவிய இப்பெண்ணின் மீது.* 285

*ஒவ்வொருவ ராக ஒதுங்கி அகன்றனர்*
*செவ்வையிர்! காண்மின் சிறந்து.* 286

*பெண்ணேஉன் பாவங்கள் பெற்றன மன்னிப்பை*
*எண்ணாதே பாவமினி ஏகு.* 287

## தியாகம்

*என்பின் வரவிரும்பின் ஏந்தியே தன்சிலுவை*
*தன்னை வெறுத்தல் தகவு.* 288

*என்பொருட் டென் செய்திபொருட் டில்லநிலம் சோதரர்கள்*
*தன்பெற்றோர் ஆதிவிடல் சால்பு.* 289

*இம்மையில் நூறாகி எல்லாம் பெருகுமே*
*அம்மையில் வீடுண் டமை.* 290

*பின்பற்றி வாஎன்றேன் பெற்றோனை மண்ணடக்கம்*
*முன்செய்யக் கேட்கின்றாய் மோந்து.* 291

---

279. நளிர்ந்தது – செறிந்தது.

286. செவ்விய சீடரே.

*மரித்தோர் மரித்தோரை மண்ணிற் புதைப்பர்*
*வரித்தென்னைப் பின்பற்றி வா.* *292*

*காசுபலர் இட்டனர் காணிக்கை யாயிங்கே*
*ஆசிஇக் கைம்மைக்கே ஆம்.* *293*

*காசுநிதி இல்லாள் கடைவாழ்வுக் குள்ளதையும்*
*வீசினள் நேசத்தில் வீழ்ந்து.* *294*

*நிதியிருந்து செல்வரெலாம் நீட்டினர் கையைக்*
*கதிஇரு காசளித்தாள் கண்டு.* *295*

மரணம்

*என்சொல் வழிநடப்போன் என்றும் மரணத்தில்*
*துன்னி அதைக்காணான் துச்சு.* *296*

*உயிரோ டிருந்தென்னில் உண்மை உறுதி*
*பயில்வோன் மரணம் படும்.* *297*

*உறுதிஎன் பால்வைப்போன் உற்றிடான் சாவை*
*உறினெழுவன் மீண்டும் உயிர்த்து.* *298*

*மார்த்தாளே மார்த்தாளே மாழ்கிப் பலநினைந்து*
*கூர்த்துக் கவல்கின்றாய் கோது.* *299*

*தேவையை ஆய்ந்தால் சிறிதாம் அலதொன்றாம்*
*ஆவி வதைஏன் அதற்கு?* *300*

*மரியாளோ கண்டாள் மகிழ்தக்க நல்ல*
*மரியாத பங்கை மதி.* *301*

*ஈண்டுநிற்போர் சில்லோர் இறையுலகைக் காணுமுன்*
*மாண்டசுவை பார்ப்பதிலை மாண்பு.* *302*

தொண்டு

*சாப்பிடும் என்கின்றீர் சாப்பா டெனக்கெது?*
*சாப்பிடல் சொல்கின்றேன் சற்று.* *303*

---

**290.** அம்மையில் – மறுமையில். அமை – சித்தமாகு.

**292.** வரித்து – மொய்த்து; தெரிந்து எனினுமாம்.

**295.** வாழ்க்கைக்குக் கதியாயிருந்ததெனக் கண்டும் – உணர்ந்தும் – காசினை அளித்தாள் என்றபடி.

**297.** படும் – ஒழியும்.

**299.** மாழ்கி– மயங்கி.

**301.** மரியாத – அழியாத.

*என்னை அனுப்பினவன் எண்ணம் நிறைவேற*
*உன்னிப் பணிசெய்தல் ஊண்.* 304

*அழியும் உணவேன்? அழியா உயிர்கட்*
*குழையுமது சீவ உணவு.* 305

கலம்பகம்

*பிடிக்கின் றீர் மீனைஎன் பின்வாரும் மக்கட்*
*பிடிப்பவ ராக்குவேன் பேறு.* 306

*ஆவிக்கோ ஊக்கம், அணிந்த புலாலுக்கோ*
*மேவிக் குடையும் மெலிவு.* 307

*இத்தகைய பேயோட்டல் ஏதாலும் ஏலாது*
*சத்திய நோன்புசெபம் சால்பு.* 308

*பட்டயத்தைப் போடுறையில் பட்டயந் தாங்கினவன்*
*பட்டயத்தால் மாண்டிடுவன் பட்டு.* 309

*சிறிதிலே மெய்யன் பெரிதிலும் மெய்யன்*
*சிறுநேர்மை சேர்க்கும் பெரிது* 310

*அல்ல பலியை, அருளை விரும்புகின்றேன்*
*நல்லபொருள் கற்றிடுக நாள்.* 311

*தன்வீட்டில் ஊரில் தவிரஒரு தீர்க்கன்அயல்*
*மன்வீட்டில் ஊரில் மதிப்பு.* 312

*தோமா! என் கையைப்பார் தொட்டு விலாவைப்பார்*
*ஏமாறா நம்பிக்கை ஏல்.* 313

*அய்யனே அப்பனே ஆண்டவ என்கின்றாய்*
*மெய்யினைப் பார்த்தபின் மேல்.* 314

*பார்த்தென்னை நம்பினை, பாராமல் நம்புவோர்*
*ஆர்த்தபெரும் பேறுடையார் அன்பு.* 315

---

306. மக்கட் பிடிப்பவர் – மக்களைப் பிடிப்பவர்.

312. தீர்க்கன் – தீர்க்கனுக்கு.

313. அசையா நம்பிக்கை கொள் என்றபடி.

314. மெய்யினை – உடலை அல்லது சத்தியத்தை.

315. (அவர்) அன்பு.

# இறுவாய்

*பிரான்ஸிஸ் அந் தண்மை பெறச்செய்த ஏசு*
*பிரான் மலைச்சொல் வாழி பெரிது.* 1

*தத்துவ வாழ்வடையத் தால்ஸ்தாயைச் செய்தபெருஞ்*
*சத்தியம் வாழி தழைத்து.* 2

*காந்தி யடிகளைக் காத்த மலைமொழி*
*சாந்தமே வாழியது சத்து.* 3

*முத்தி நெறியறியா மூர்க்கஉல குய்யஅருள்*
*பத்திமொழி வாழி பரம்.* 4

*எங்கும் பொதுமை இயங்க அருள்வளர்க்கும்*
*பொங்கு மலைமொழியைப் போற்று.* 5

*கொலையுலகம் மாய்கொடுங் குண்டாட்சி வீழ்க*
*மலைமொழி வாழ்க மலர்ந்து.* 6

*சேவக ரின்றியும் சேனைக ளின்றியும்*
*ஏவரும் வாழ்க இனிது.* 7

*மக்களின் ஆட்சி மலர்க மலைப்பொழிவால்*
*தக்கஅறம் ஓங்க தழைத்து.* 8

*மலைமொழி வாழி மணிமொழி வாழி*
*நிலைவழி வாழி நிகழ்ந்து.* 9

*ஏசு ஒளிவளர்க இவ்வுலகம் ஒன்றாக*
*நேச வழியால் நிறைந்து.* 10

❍❍❍

1. பிரான்ஸிஸ் முனிவர். அந்தண்மை – எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகல்.

# இருளில் ஒளி

(1950)

## கண்கள்

### (i)

**JOHN MILTON**

*When I consider how my light is spent*
*E're half my days in this dark world and wide,*
*And that one Talent which is death to hide*
*Lodged with me useless, though my soul more bent*

*To serve therewith my Maker, and present*
*My true account, lest He returning chide,*
*"Doth God exact day-labour, light denied?"*
*I fondly ask. But Patience, to prevent*

*That murmur, soon replies. "God doth not need*
*Either man's work or his own gifts. Who best*
*Bear His mild yoke, they serve Him best. His state*

*Is kingly : thousands at His bidding speed,*
*And post o'er land ocean without rest :*
*They also serve who only stand and wait."*

## (ii)

### சுந்தரர்

*'அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்*
*அதுவும் நான்படப் பாலதொன் றானால்*
*பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்*
*பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்*
*வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்*
*மற்று நான்அறி யேன்மறு மாற்றம்*
*ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்*
*ஒற்றி யூரெனும் ஊருறை வானே.'*

*'பிழையுளன பொறுத்திடுவ*
*ரென்றடியேன் பிழைத்தக்கால்*
*பழியதனைப் பாராதே*
*படலமென்கண் மறைப்பித்தாய்*
*குழைவிரவு வடிகாதா*
*கோயில்உளா யேஎன்ன*
*உழையுடையான் உள்ளிருந்(து)*
*உளோம்போகீர் என்றானே.'*

*'ஆலந் தான் உகந்(து) அமுதுசெய் தானை*
*ஆதி யை அம ரர்தொழு தேத்துஞ்*
*சீலந் தான்பெரி தும்முடை யானைச்*
*சிந்திப் பாரவர் சிந்தையு ளானை*
*ஏல வார்குழ லாளுமை நங்கை*
*என்றும் ஏத்தி விழிபடப் பெற்ற*
*கால காலனைக் கம்பனெம் மானைக்*
*காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.*

# முன்னுரை

*'உலகம் போராட்டம்' என்று சொல்லப்படுகிறது. இஃது அநுபவ மொழி. போராட்டம் ஒருவிதமா? பலவிதமா? பல விதம் என்னும் விடையே பிறக்கும். யான் ஒருவிதப் போராட் டத்தை இங்கே குறிக்க விரும்புகிறேன். அது,* **கடவுள் நெறிக்கும் உலக நெறிக்கும் நிகழ்வது.** *அப்போராட்டம் ஒழிந்தால் உலகம் சீர்படும்; அமைதியுறும்; உய்யும்.*

*கடவுளே பொருளென்பர் சிலர்; உலகமே பொருளென்பர் வேறு சிலர்; இரண்டும் பொருளென்பர் மற்றுஞ் சிலர். இவர்க் குள் போராட்டம் நிகழ்ந்தவண்ணம் இருக்கிறது. 'கடவுளும் பொருள் - உலகமும் பொருள்' என்ற கொள்கை, போராட் டத்தை நாளுக்கு நாள் அருகச் செய்யும் என்று நம்புவோருள் யானும் ஒருவன்.*

*'கடவுளும் பொருள் - உலகமும் பொருள்' என்ற கொள்கை* ***சன்மார்க்கம்*** *என்று வழங்கப்படுகிறது. சத் + மார்க்கம் = சன் மார்க்கம். சத் - உண்மை; மாறாத உண்மை; கடவுள். மார்க்கம் - வழி; உலகவழி; இயற்கைவழி. கடவுளை அடைதற்குரிய வழி உலகம் அல்லது இயற்கை என்க. இப்பொருளில் சன்மார்க் கத்தைப் பற்றி யான் பேசியும் எழுதியும் வருவது நேயர்கட்குத் தெரியும். அச்சன்மார்க்கம் இந்நூற்கண்ணும் பெய்யப்பட்டிருக் கிறது.*

*'உலகம் பொய் (பொருளன்று) என்று சில அறிஞர் கூறியதென்னை?' என்று சிலர் கேட்கலாம். இந்நூல் விவகார உலகிலேயே இயற்றப்பெற்றது. இவ்வுலகைப் பொய்யென்று எவ்வறிஞரும் கூறினாரில்லை. விவகார உலகில் உயிர்கள் வாழ்ந்து, கடவுள்நெறி நின்று ஒழுகின், உலகம் பலதிறப் போராட்டங்களினின்றும் விடுதலையடைந்து அமைதியுறும். அமைதி, மேல்நிலைக்குக் கால்கொள்ளும். 'மேல்நிலையில் உலகம் பொய்யா? மெய்யா?' என்னும் ஆராய்ச்சியை ஈண்டு நிகழ்த்தவேண்டுவதில்லை.*

சன்மார்க்க வழிபாட்டுத் துறைகள் பல; பலதிறம். அவற்றுள் ஒன்று **தொண்டு.** தொண்டில் எனது வாழ்க்கை ஈடுபட்டது; படிந்தது; ஒன்றியது. சமயத்தொண்டு, நாட்டுத்தொண்டு, மொழித்தொண்டு, சீர்திருத்தத் தொண்டு, அரசியல்தொண்டு, தொழிலாளர்தொண்டு, பத்திரிகைத் தொண்டு முதலியன என்னைச் சூழ்ந்தன. அச்சூழல் எனது நூற்றொண்டை இரவில் ஆற்றுமாறு என்னை உந்தியது; நெருக்கியது. எனக்கு இரவு, பகலாயிற்று; இயற்கையே மாறியது.

நாளடைவில் உறக்கம் என்னை அணுகா தொழிந்தது. படுக்கையில் கிடந்து கிடந்து பார்ப்பேன். என்னை மறந்து உறங்குவது அற்றுப்போயிற்று. 'அறிதுயில்' மட்டும் ஒவ்வொரு போது வரும்; போகும்.

உறங்காமை, தொடக்கத்தில் எனக்குத் தொல்லை விளைத்ததில்லை; பின்னே விளைத்தது. உறங்காமை, படிப் படியே எனது உடல்வளத்தைக் குலைத்தது; அதனால் உள் ளுறுப்புக்கள் மெலிவுற்றன. அக்குலைவும் இம்மெலிவும் சீறிப் படையெடுத்து என் கண்களைத் தாக்கின. **படலம்** முதல்முதல் வலது கண்ணை மறைத்தது; பின்னே இடது கண்ணையும் மறைத்தது.

யான் உடலின் அருமைப்பாட்டை உணராதவனல்லன்; இளமையில் உடலை ஓம்புவதில் கருத்துச் செலுத்தியவன்; உடலோம்பலைப் பற்றிய நூல்பல ஆய்ந்தவன்; ஒரு நூல் இயற்ற வும் முயன்றவன். எனது நூல்களில் உடலோம்பற் குறிப்புக்கள் ஆங்காங்கே வெள்ளிடை மலையெனத் திகழும். இந்நூலிலும் உடலோம்பலை யான் மறந்தேனில்லை; அதை வலியுறுத்தியே இருக்கிறேன். 'உடலின் பெற்றியை ஓரளவிலாதல் உணர்ந்த ஒருவன், உடல் நலத்துக்குக் கேடு சூழ்ந்து கொண்டது அறி வுடைமையாகுமா?' என்னும் கேள்வி பிறத்தல் இயல்பு. இதற்கு என்ன விடையிறுப்பது? தொண்டுலகமே! விடையிறுக்க. உட லோம்பல் மட்டும் பெரிதா? தொண்டு பெரிதா? இங்கே காந்தியடிகளுக்கும் கோபாலகிருஷ்ண கோகுலர்க்கும் ஒரு போது நடந்த உரையாடல் உள்ளத்தில் உறுகிறது. செல்வக் குடியில் பிறவாத 'செல்வம்' பெற்ற என் வாழ்க்கை, பலதிறத் தொண்டுகளால் நெருக்குண்டது. நெருக்கு இயற்கை வரம்பை யும் மீறச் செய்தது!.....

பொதுமுறையில் சிகிச்சை துவங்கப்பட்டது. படுக்கை என் உடலைத் தன்வயப்படுத்தியது; ஆனால் என் உள்ளத்தைத் தன்

வயப்படுத்தவில்லை. படலமும் எனது புறக்கண்ணை மறைத்தது; அகக்கண்ணை - உள்ளொளியை - மறைக்கவில்லை. இந்நிலையில் **சிந்தனாசக்தி** பெருகுவதை யான் உணரலானேன்.

படுக்கையில் எனது உள்ளம் வாளா கிடப்பதில்லை. உள்ளத்தில் திரளும் பலதிறக் கருத்துக்களில் சிலவற்றையாதல் வெளியிடுதல் நல்லதென்று எண்ணினேன். முதலில் உரைநடை மீது எண்ணம் சென்றது. பின்னே அவ்வெண்ணம் குறள் வெண்பாமீது படர்ந்தது; நிலைத்தது. செய்யுள்யாப்பு, (படுக்கையில்கிடப்பவன்) பொழுதுபோக்குக்கு நற்றுணை செய்யுமென்று குறள் வெண்பா அமைப்பைக் கொள்ளலானேன். யான் எண்ணியவாறே எனது மானத உலகம் நிகழ்த்தியது. அவ்வப்போது சாது அச்சகப் பொறுப்பாளர் திரு. மு. நாராயணசாமியை அழைப்பேன்; உள்ளத்தில் உருக்கொண்ட வெண்பாக்களைச் சொல்வேன். அவற்றை அவர் எழுதுவர். இவ்வாறு படிப்படியே இந்நூல் அமைந்தது. திரு. மு. நாராயணசாமிக்கு எனது நன்றி உரியதாக.

எனது அருமைத் தமையனார் திரு. வி. உலகநாத முதலியார் பேர்த்திமார் - செல்வி கற்பகவல்லிக்கும், செல்வி சிவயோகவல்லிக்கும் பள்ளியில் வேனிற்கால விடுமுறை கிடைத்தது. அவ்விடுமுறை இந்நூலுக்குப் பயன்பட்டது. ஓய்வு நேரத்தில் இரு செல்வியரையும் கையெழுத்துப் பிரதியை மாறி மாறிப் படிக்குமாறு சொன்னேன். அவ்வாறே அவர் ஒவ்வொரு போது பிரதியைப் படிப்பர். வெண்பாக்களை உற்று உற்றுக் கேட்பேன். அக்கேட்டல் எனது காதுகளைக் கண்களாக்கி யிருக்கும் என்றும் நினைந்தேன். சிற்சில இடங்களில் திருத்தல், கூட்டல், மாற்றல், கழித்தல் முதலியன விளம்புவேன். அவை முறைமுறையே செல்விமாரால் ஏட்டில் ஆங்காங்கே குறிக்கப் பெறும். மூலப் பிரதியைச் செவ்விய முறையில் பெயர்த்தெழுதி ஒருபடி எடுக்குமாறு செல்வி சிவயோகவல்லிக்கு விண்ணப்பம் செய்தேன். அப்பணி செல்வியால் சிறப்புற ஆற்றப்பெற்றது. இரு வல்லியர்க்கும் எனது வாழ்த்து உரியதாக.

நூலுக்கு எத்தலைப்பு வேயலாம் என்று சிந்தித்தேன். முதலில், 'முதுமை உளறல்', 'காலக் குறள்', 'கட்டில் காற்று' முதலியன தோன்றின. அவற்றிடை **"இருளில் ஒளி"** என்று ஒன்று ஒலித்தது. அதையே தலைப்பாக வேய்ந்தேன். புற இருளில் அகஒளியால் ஆக்கப்பெற்ற ஒரு நூலுக்கு "இருளில் ஒளி" என்னும் தலைப்புப் பொருந்தியதே; சாலப் பொருந்தியதே.

அவ்வவ் வதிகாரத் தலைப்புக்கேற்ப, ஒல்லும்வகை, முறை முறையே கருத்துக்களை வெளியிட்டுள்ளேன். ஆனாலும் சிற்சில இடங்களில் ஒழுங்கின்மை, தொடர்பின்மை, கூறியது கூறல் முதலியன உற்றுள்ளதை உணரலானேன். அவற்றைச் செம்மை செய்ய என் மனம் எழவில்லை; ஒருப்படவுமில்லை. படுக்கையில் யான் உளறியவாறே நூல் உலவுதல் வேண்டுமென் பது எனது கருத்து.

குறள் வெண்பாக்கள் பெரிதும் உரைநடை போல் அமைந்துள்ளன. அணிபெற வெண்பாக்களை யாத்தேனில்லை. இதைப் புலவர் உலகுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்முதல் எனது வலது கண்ணில் சிறு சிகிச்சை செய்யப்பட்டது; பின்னே பெருஞ் சிகிச்சை செய்யப்பட்டது. எதிர்பார்த்த **ஒளி** வரவில்லை; இன்னும் வரவில்லை. ***மில்டன்*** நினைவும், **சுந்தரர்** நினைவும் அடிக்கடி தோன்றும். 'எல்லாம் ஆண்டவன் செயல்' என்று நெஞ்சம் ஆறுதல் அடையும். 'அவ னன்றி ஓரணுவும் அசையாது' என்ற ஆன்றோர் மொழி, அவ்வப் போது எனக்குத் துணைபுரியும். 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே' என வரும் மணிவாசகத்தில் என் சிந்தை மூழ்கி மூழ்கி எழும்.

நூல்களை இயற்றுவதிலும், பொருள்களை ஊன்றி ஊன்றிப் பார்ப்பதிலும், அவற்றை ஒழுங்கு செய்வதிலும், அச்சுப்பிழை களைவதிலும், இன்ன பிறவற்றிலும் சொல் லொணாக் கவலை செலுத்துவது எனது வழக்கம். இப்பொழுது இப்பிறவியிலேயே அக்கவலை செலுத்தல் இயலாமை நேர்ந்து விட்டது! என்னே உலகம்! என்னே வாழ்க்கை! என்னுடன் கெழுதகை நட்புப்பூண்டு, பழகி, எனது உள்ளக்கிடக்கையை நன்கு உணர்ந்த ஒரு புலவர் பார்வையில் இந்நூல் அச்சாகி வெளிவருதல் வேண்டுமென்று என் நெஞ்சம் விரும்பியது. அவ்விருப்பம் பேராசிரியர் - டாக்டர் மு. வரதராசனாரிடம் அணைந்து நின்றது. அவரும் எனது விருப்பத்துக்கு இணங்கி னர்; இணங்கிப் பலதிற வேலைச்சூழலிடை இந்நூலையும் பார்வையிட்டு உதவினர். அவர்க்கு என்ன கைம்மாறு செலுத்த வல்லேன்? இப்பதிப்பு, ஒரு பெருந் தமிழ்ப்புலவர் பார்வையில் அச்சாகி வெளிவரும் பேற்றைப் பெற்றது என்று சுருங்கச் சொல்லி வாழ்த்துக் கூறுகிறேன்; வரதராசனார் வாழ்க; அவர் என்றும் இளையராய் வாழ்க; அவர்தம் முயற்சியெலாம் வெல்க.

இந்நூல் நன்முறையில் வெளிவருதல் வேண்டுமென்று உழைத்த அனைவர்க்கும் நீண்ட நாளையும், நோயற்ற யாக்கையையும், வேறு பல பேறுகளையும் அருளுமாறு பரம் பொருளை வழுத்துகிறேன்.

நூற்கண் - கடவுளியல், உலகியல், வாழ்க்கைக் கூறுகள், அவற்றின் காப்புக்குரிய அரண்கள், பொதுமை அறம், புதுமைச் செல்வம், **அஹிம்சா தர்மம்,** அருளாட்சியே மக்களாட்சி என்பது, சமயவிளக்கம், வகுப்பு - மொழி - நிறம் - நாடு முதலிய வற்றால் எழுந்த **'அந்நியம்'** என்னும் உணர்வை அறவே போக்குதல், உலகம் போராட்டத்தினின்றும் விடுதலை அடைந்து **அமைதி** பெறும் வழி, காந்திவனம் முதலியன ஓதப்பட்டிருக்கின்றன.

'தேவைக்குமேல் பொருளீட்டாமை' இந்நாளில் எங்கணும் பேசப்படுகிறது. அதைப் பலதிறப் பொருளில் ஆத்திகரும் பேசுகின்றனர்; நாத்திகரும் பேசுகின்றனர். இருவர்க்கும் போராட்டமும் நிகழ்கிறது! தேவைக்குமேல் பொருள் திரட்டாமையை இந்நூலும் பேசாமல் இல்லை. அக்காட்சியை நூலிடைப் பலவிடங்களில் பார்க்கலாம்.

தேவைக்குமேல் பொருள் திரட்டாமையை அஹிம்சை என்றும், அதுவே பரம தர்மம் என்றும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே **விருஷபதேவர்** அருளினர். அத்தர்மத்தை அவ்வப்போது தோன்றிய பெரியோர் பலரும் ஓம்பிச் சென்றனர். இந்நாளில் **காந்தியடிகள்** அதை அரசியலில் நுழைக்க முயன்றனர். இவ்வாறு, அஹிம்சா தர்ம மரபு, சான்றோர் வழிவழியே வளர்ந்து வருகிறது. அம்மரபை வாழ்த்துவது இந்நூல்.

தேவை அளவில் நிற்குமாறு மார்க்ஸியம் அறிவுறுத்து கிறது. அதில் எனக்கு வெறுப்பில்லை. ஆனால் அதனுள்ளே ஊடுருவிப் பாய்ந்திருக்கும் உலகாயதம் எனக்குப் பிடிப்பதில்லை. அதனால் மார்க்ஸிய உடலில் காந்திய உயிர் கலத்தல் வேண்டுமென்று யான் நீண்ட காலமாகச் சொல்லி வருகிறேன். காந்தியம் கலந்த மார்க்ஸியத்தையே எதிர்கால உலகம் ஏற்க முனையும். இந்நூலும் அதை ஏற்றுப் போற்றியுள்ளது.

தேவைக்குமேல் பொருள் சேமியாத நல்வாழ்வுக்கு ஆத்மார்த்தம் என்னும் கடவுள்நெறி வேண்டும். கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. அதனுடன் தொடர்பு கொள்வோர் நெஞ்சம் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்ய நினையாது. பிற உயிர்க்குத் தீங்கு செய்ய நினையாமை தேவைக்குமேல் பொருள் வேண்டா

மைக்கு அடிகோல்வதாகும். பிற உயிரை வருத்தித் தேவைக்கு மேல் பொருள் சேர்ப்பது கடவுள்நெறி நிற்பதாகாது. அது போலியேயாகும். போலியைக் கண்டு உண்மையைக் குறை கூறுவது தவறு. தேவை அளவில் நிற்குமாறு பலவிடங்களில் முழங்கும் இந்நூல், அதற்குரிய ஆத்மார்த்தம் என்னும் கடவுள் நெறியை உயிரெனக் கொண்டுள்ளது.

அஹிம்சா தர்ம வளர்ச்சிக்கு மாறுபடும் கல்வி, அரசு, வழக்கவொழுக்கம், மதம் முதலியன இந்நூலில் மறுக்கப் பட்டிருக்கின்றன. மறுப்பளவில் நூல் நிற்கவில்லை. அஹிம்சையை வளர்க்கவல்ல கல்வி, அரசு, வழக்கவொழுக்கம், சமயம் முதலியவற்றை இந்நூல் கூடியவரை விளக்கிக் காட்டுகிறது.

"இருளில் ஒளி" என்னும் இந்நூல் எந்நிலையில் என்னால் இயற்றப் பெற்றது? விளக்கம் வேண்டுங்கொல்? குற்றங் குறை களைப் பொறுத்தருளுமாறு நேயர்களை வேண்டுகிறேன்.

ஆண்டவனே! முன்னுரை சொல்லி முடித்தேன்; முடித்த தும், "உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக' என்ற **கிறிஸ்து பெருமான்** திருமொழி என் சித்தத்தில் உற்றது. காரணம் தெரியவில்லை. எல்லாம் உன் சித்தத்தின்படியே நடக்கின்றன. இந்நுட்பத்தை உயிர்கள் உணர்ந்து நடப்பதற்கும் உன் அருள் தேவை.

*'இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்*
*படரு நெறிபணியா ரேனுஞ் - சுடருருவில்*
*என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்(கு)*
*அன்பறா தென்நெஞ் சவர்க்கு.'* - காரைக்காலம்மையார்

*'இடரினும் தளரினும் எனதுறுநோய்*
*தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்.'*

*'வாழினும் சாவினும் வருந்தினும்போய்*
*வீழினும் உனகழல் விடுவேனல்லேன்.'* - ஞானசம்பந்தர்

*'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்*
*நினையா தொருபோ தும்இருந் தறியேன்.'*

*'நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்.'* - அப்பர்

*'பாடும் பணியே பணியா அருள்வாய்.'* - அருணகிரிநாதர்

சென்னை,
இராயப்பேட்டை
*30-8-1950.* **திருவாரூர். வி. கலியாணசுந்தரன்**

# 1. பரம்

*எல்லாம் கடந்தெதற்கும் எட்டாத மோனமே*
*நல்லார் உணர்பரம்; நம்பு.* 1

*ஆடா அறிவே அகண்டிதமே பாழ்பாழே*
*வாடாப் பரமென்று வாழ்த்து.* 2

*அண்டபிண்ட கண்டங்கள் அத்தனையும் நின்றியங்க*
*ஒண்டகண்டம் ஒன்றுபரம் : ஓர்.* 3

*கண்டங்கள் இல்லையேல், காணா அகண்டிதம்*
*உண்டென்று சொல்லுதலை ஓட்டு.* 4

*கண்டங்கள் காட்சி, கடந்த அகண்டிதம்*
*உண்டென் றறுதியிட் டோது.* 5

*கண்ட அறிவினால் காணா அகண்டிதத்தைக்*
*கண்டறிதல் கூடுமோ கற்று?* 6

*கண்டங்கள் பற்றிக் கடந்த அகண்டிதத்தைக்*
*கண்டறிதல் கூடும் கலந்து.* 7

*வாக்கு மனங்கடந்து வாழ்பரத்தை எவ்விடத்தில்*
*தேக்கல் இயலும்? தெளி.* 8

---

2. பரமாகிய அறிவு ஒரெல்லைக் குட்பட்டதன்று; எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. நீக்கமறநிறைந்துள்ள ஒன்று அசையாது; ஆடாது. அசையுமேல் – ஆடுமேல் – அது நீக்கமற நிறைந்திருப்பதாகாது. இதுபற்றியே, பரமாகிய அறிவு, ‘ஆடா அறிவு’ என்னப்பட்டது. ‘போக்கும் வரவுமிலாப் புண்ணியனே’ – **திருவாசகம்**. அகண்டிதம் நாம ரூப எல்லையற்றது ஆதலின் அது ‘பாழ் பாழ்’ என்று சொல்லப்பட்டது.

3. ...அத்தனையும் நின்றியங்க, (அவை) ஒண்டுதற்கு நிலைக்களனாக உள்ள அகண்டம் என்றபடி.

4. கண்டங்கள் பல. அகண்டிதம் ஒன்று. இரண்டற்கும் தொடர்பு உண்டு. அவையின்றி இஃதில்லை என்றும், இஃதின்றி அவையில்லை என்றுங் கொள்க. ‘இன்றெனக்கருளி ... ஒன்றுநீ அல்லை அன்றி ஒன்றில்லை’ எனவரும் மணிவாசகனார் திருவாக்கை உன்னுக.

5. காட்சி – பிரத்தியட்சம். அறுதியிட்டு – உறுதிப்படுத்தி; முடிவுகட்டி.

6. கண்ட அறிவினால் – எல்லைக்குட்பட்ட அறிவினால்.

*பரத்துக்குக் கோயில் பலதிறம், மக்கள்*
*கருத்தினில் கண்டார் கனிந்து.* 9

*பரத்தின் திருக்கோயில் பல்வகை ஆன்போல்*
*சுரக்கும்பால் நன்றே சொரிந்து.* 10

*கோயிலின் உள்ளம் குறும்புகளை வீழ்த்துவது*
*ஏயும் குணங்கள் எழுந்து.* 11

*எப்பொருளும் கோயிலே எவ்வுயிரும் கோயிலே*
*ஒப்பில் பரத்துக் குணர்.* 12

*கட்டிடக் கோயிலுளம் காய்ந்தது நாளடைவில்;*
*தட்டில் பரத்துக்கென் தாழ்வு?* 13

*கைக்கோயில் கெட்டால் கருணைப் பரத்துக்கென்?*
*மெய்க்கோயில் உண்டுபல வேறு.* 14

*உள்ளமுரைக் கெட்டா உயர்பரமென் றஞ்சற்க;*
*உள்ளுக* ***சூழியற்கை*** *உற்று.* 15

*தனித்தும், இயற்கைமெய் தாங்கியும், நிற்றல்*
*இனித்த பரத்தின் இயல்.* 16

*நிலம்புனல் தீஉயிர் நீள்வான் சுடர்கள்*
*நலம்பெற, ஓங்குபரம் நாடு.* 17

*மலைபார் வனம்பார் வயல்பார் கடல்பார்*
*கலையார் பரக்கோயில் காண்.* 18

*காவியமும் ஓவியமும் காட்டும் கலைக்கோயில்*
*சாவில் பரத்தினைச் சார்ந்து.* 19

*இயற்கை வழிபா டெடுக்குமுளக் கோயில்;*
*பயிற்சி பரங்கூட்டும்; பண்பு.* 20

---

**10.** பலவகைப் பசுக்கள் ஒரே நிறப் பாலைச் சொரிவது போல...

**11.** ஏயும் – பொருந்தும் ; மேவும்.

**15.** அஞ்சவேண்டா. ஏன்? இயற்கை நம்மைச் சூழ்ந்துள்ளது. அதை உள்ளுக. இயற்கை, பரத்தின் உடல் என்பதைத் தெளிக.

**16.** இயற்கைமெய் – இயற்கை உடலை.

**17.** புனல் – நீர், உயிர் – காற்று. வான் – ஆகாயம். சுடர்கள் – சூரிய சந்திர நட்சத்திரங்கள் முதலியன.

**18.** கலை ஆர் – கலை நிறைந்த.

**19.** சாவில் – அழிவில்லாத; முடிவில்லாத.

*உட்கோயில் சீலத்தை ஓம்பும்; பரநெறிக்கு*
*மட்கோள் அழிக்கும் மருந்து.* 21

*வித்தகச் சீலத்தால் வேண்டாமை வேண்டலறும்,*
*நித்தம் பரம்பயிலும் நெஞ்சு.* 22

*வேண்டும் அளவுநிற்க, வேண்டாமை உற்றுள்ளம்*
*தாண்டிப் பரமடையும் தாழ்ந்து.* 23

*தாழ்மை வளர, நான் சாயும் வழிபாட்டால்*
*வாழ்வுபரம் ஆகும் வளர்ந்து.* 24

*கோயில் வழிபாடு, கோயிலில்லாச் சிற்பரத்தில்*
*போயொன்றல் கூட்டும் பொறுத்து.* 25

---

21. மட்கோள் – மண்ணுலகிலுள்ள குறும்புகளை; தீமைகளை.

25. ஒன்றல் – ஒன்றுபடலை; இரண்டறக் கலத்தலை.

## 2. படைப்பு

*படைப்பென்ப தொன்றில்லை; பாரின் வழக்கம்;*
*இடைப்புகுந்த தென்றோ இவண்!* 1

*இறைமைஎன் றுண்டோ இயற்கையும் அன்றே;*
*இரையும் புதுப்படைப் பேது?* 2

*உள்ளன தோற்றமுறும்; இல்லன தோற்றமுறா;*
*கள்ளக் கதைஅன்று காண்.* 3

*ஒன்றிருந் தொன்றுவரல் உற்பத்தி; காட்சியே*
*பின்னைப் படைப்பென்ற பேச்சு.* 4

*முத்தொழிலும் ஐந்தொழிலும் முன்னோர் உபசாரம்;*
*சத்தியம் அல்ல; பறை சாற்று.* 5

*கூர்தலறத் தத்துவம் கூறும் படைப்புநுட்பம்*
*தேர்தல் அடைதல் திறம்.* 6

*இயற்கை அளித்ததை ஈயும் இனிமேல்*
*பயிற்சிவிஞ் ஞானம் படர்ந்து.* 7

*விஞ்ஞான மூலம் விரிஇயற்கைத் தாய்க்கருவே;*
*இஞ்ஞானம் கற்றல் இனிது.* 8

*அயர்ச்சியில் விஞ்ஞானம் ஆக்கும் பொருள்கள்*
*இயற்கையாம் நாளடைவில் இங்கு.* 9

---

1. இவண் – இங்கு; இவ்விடத்தில்.
2. இரையும் – (படைப்பு படைப்பு என்று) ஒலிக்கும் ; ஆரவாரிக்கும் ; கூக்குரலிடும்.
5. முத்தொழில் : படைத்தல், காத்தல், அழித்தல். ஐந்தொழில் : படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

   'சிவனுரு அருவு மல்லன் சித்தினோ டசித்து மல்லன்
   பவந்தரு தொழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்' – சிவஞான சித்தியார்
6. கூர்தல் அறம் – உள்ளது சிறத்தல் என்னும் தர்மம் (Evolution).
9. விஞ்ஞானம் அளிக்கும் பொருள்கள் செயற்கை என்று இந்நாளில் சொல்லப்படுவது வழக்கம். இனி, நாளேற நாளேற அச்செயற்கை இயற்கையாய்விடும் என்றபடி.

*கவிஞர் கருத்தெழும் கற்பனை, விஞ் ஞானப்*
*புவியில் பொருளாகும் பூத்து.* 10

*கற்பனை வீணோ? கனத்துப் பொருளாகும்;*
*அற்புதம்! அற்புதம்! ஆய்.* 11

*படைப்பினடி ஆய்ந்தால் பகலிரவு செல்லும்;*
*குடையும் தலைநோயின் குத்து.* 12

*உற்பத்திக் கென்றிவ் வுலகம் உதித்ததே*
*அற்பு நெறிவளர ஆங்கு.* 13

*கற்பு வளர்காதல் கால்கொண்ட தென்? இயற்கை*
*உற்பத்திக் கென்றுரைக்கும் ஒத்து.* 14

*உற்பத்திக் கூறுசெய்தல் ஓங்குலகைப் பாழ்படுத்தல்;*
*அற்புநெறி வீழும் அவம்.* 15

*உற்பத்திக் கென்றே உழவும் தொழில்களும்*
*பொற்புவியில் தோன்றியதைப் போற்று.* 16

*உழைப்பு மனித இயல்; உற்பத்தி ஆக்கம்;*
*தழைக்க உலகம் தளிர்த்து.* 17

*உலகைப் பலவிதமாய் உண்டாக்கு வோர்யார்?*
*இலகுயிர்கள் என்னும் இறை.* 18

*ஞெண்டார் வளையெடுத்தார்; நேர்சிதலார் புற்றெடுத்தார்*
*வண்டார் நுழைவெடுத்தார் வார்த்து.* 19

*கூடுகண்டார் புள்ளார்; குகைகண்டார் மாவிலங்கார்*
*மேடுகண்டார் மந்தியார் மேல்.* 20

*குடிசையும் மாடியும் கோபுரமும் மக்கள்*
*படியில் எழுப்பினர் பார்.* 21

---

10. புவியில் – உலகத்தில்.
13. அற்புநெறி – அன்புவழி.
14. காதல் ஏன் அமைந்தது? இதற்குப் பதில் உற்பத்திக்கென்று இயற்கை ஒத்துச் சொல்லும் என்றபடி.
15. ஊறு – துன்பம் ; இடர்.
18. இறை – தெய்வம்.
19. ஞெண்டார் – நண்டார்; நண்டு. சிதலார் – செல்லார் செல்.
20. புள்ளார் – பறவையார் ; பறவை. மந்தியார் – குரங்கார் ; குரங்கு.
21. படியில் – பூமியில்.

*உழுதார், தொழில்புரிந்தார், உற்பத்தி செய்தார்,*
*பழுதின்றிப் பங்கிட்டார் பார்த்து.* 22

*அரசற்ற ஞாலத்தை ஆக்கினர் முன்னாள்*
*அரசுற்ற தாக்கினர்பின் ஆய்ந்து.* 23

*வேந்தரசைச் செய்தனர்; வீழ்த்தினர் பின்னாளில்;*
*மாந்தர் படைப்பின் வகை!* 24

*தனியுடைமை என்றும் பொதுவுடைமை என்றும்*
*மனிதர் படைத்தனர்; மாறு!* 25

*கொல்லா உலகையும் கொல்லும் உலகையும்*
*வல்லார் வகுத்தனர்; வாது!* 26

*நாடு மொழிமதம் நானா விதம்வகுத்தார்;*
*கூடிஒன் றாகஎன்றார்; கூத்து!* 27

*கர்மங்கள் மர்மங்கள் கண்டு விதித்தனர்;*
*தர்மங்கள் ஆக்கினர் சார்ந்து.* 28

*மக்கள் படைப்பினில் மாறுபா டெற்றுக்கு?*
*சிக்கல் வளர்ச்சிக்கே; தேர்.* 29

*நல்லனவும் அல்லனவும் நண்ணிநண்ணி நாளடைவில்*
*அல்லன தேயும் அழிந்து.* 30

*தக்க உலகைத் தரும்பொறுப் பெவ்விடத்தில்?*
*மக்களிடம் என்று மகிழ்.* 31

*மக்களின் தீங்கு மறஉலகை ஆக்கு(ம்); நலம்*
*தக்க உலகளிக்கும் சார்ந்து.* 32

*ஈசன் செயலெல்லாம் என்றுநினை மக்களினம்*
*நேச உலகாக்கும் நீர்த்து.* 33

*தெய்வ அருளையே சிந்திக்கும் மக்களினம்*
*வையம் பெருக வளர்ந்து.* 34

*எப்படைப்பும் செய்வன் இறைமைத் தொழிலாளன்;*
*இப்புதுமை கற்றல் இனிது.* 35

---

32. மக்களின் நலம் தக்க உலகளிக்கும்.

33. நீர்த்து – தன்மைத்து; இயல்புடைத்து.

*உலகினைக் காப்பன் உயர்தொழி லாளன்;*
*அலகில் அவன்பெருமை ஆய்.* 36

*தீங்கை அழிப்பன் திறமைத் தொழிலாளன்;*
*பாங்கவன் பண்பைப் படி.* 37

*ஆக்குவன் காப்பன் அழிப்பன் தொழிலாளன்;*
*பார்க்குள் அவன்செயல்கள் பாடு.* 38

*தொழிலாளன் கையினில் தூயபுது ஞாலம்*
*வழியாய் மலர்ந்துவரும் வாழ்த்து.* 39

*படைப்பு வளர்க; பழமை புதுமை*
*உடுப்பணிக; ஓங்க உலகு.* 40

**36.** அலகுஇல் – அளவு இல்லாத.

**39.** புது ஞாலம் – புது உலகம்.

# 3. கல்வி

*கல்லல் அறியாமை கல்வியே என்றனர்*
*பல்லுலகப் பேரறிஞர் பார்த்து.* 1

*கல்வியெனும் சொற்பொருள் கண்டதெக் கால(ம்)? அந்தச்*
*செல்வம் பரவியதோ செப்பு?* 2

*அறியாமை நீங்கின் அறிவு விளங்கும்;*
*மறியா அமைதிவரும்; மாற்று.* 3

*அறிவமைதி கல்விக் கறிகுறி ஆகும்;*
*அறிகுறி எங்கே அறை?* 4

*கல்வி எழுந்ததோ? கல்லாமை வீழ்ந்ததோ?*
*செல்வ அமைதிஎங்கே? தேடு.* 5

*கல்விக் கெனஆட்சி, கல்லூரி, பல்கழகம்*
*மல்கல்* ***வெறுங்காட்சி*** *மாண்பு!* 6

*கல்லூரிக் கல்வி கழகத்துக் கல்வியெலாம்*
*மல்லூரும் கல்வி மயக்கு!* 7

*ஏட்டெழுத்துக் கல்வியே எங்கெங்கும் ஓரளவில்;*
*பாட்டறக் கல்வியிலை பாடு.* 8

*'கற்றவர்' என்போர் கடலுலகை ஆள்கின்றார்*
*மற்றவரைக் கீழ்ப்படுத்தி மாய்த்து.* 9

---

1. கல்லல் – அகழ்தல் ; தோண்டுதல். இங்கே அறியாமையைக் கல்லல். அறியாமையைக் கல்லி அறிவை விளங்கச்செய்வது கல்வி என்க. இவ்வாறு பன்மொழிப் பேரறிஞர் பலரும் கல்விக்குப் பொருள் கண்டிருத்தல் கருதத் தக்கது.
3. மறியா – தடைப்படாத ; அழியாத. மாற்று – உயர்வு ; பொன்போன்றது என்பது குறிப்பு.
4. (அந்த) அறிகுறி...
5. அமைதிச் செல்வம் சிறந்ததாதலின், அது 'செல்வ அமைதி' என்னப்பட்டது.
6. மல்கல் – நிரம்பி வழிதல்.
7. மல்லூரும் – போர் நடக்கும் ; போராட்டம் நிகழும்.
8. ஓரளவில் எட்டெழுத்துக் கல்வியே எங்கெங்கும் பரவியுள்ளது. பாடு (பாட்டு) – உழைப்பு – தொழில். தொழிலறக் கல்வி என்றபடி.
9. கற்றவர் – இக்காலத்தில் வெறும் ஏடுகளைக் கற்றவர்.

*கற்றவர் மற்றவரைக் காய்ந்தாட்சி செய்மட்டும்*
*செற்றம் பகைமிகும் சேர்ந்து.* 10

*கள்ளமிகு வாணிபம் கற்றவர் கையிலே*
*கொள்ளை; அவர்கையின் கூத்து!* 11

*சட்டங்கள் செய்து சகத்தை அடக்குமுறை*
*கட்டிடக் கல்விநிலை காண்.* 12

*கட்டிடக் கல்வியும் கல்லூரிக் கல்வியும்*
*பட்டத்துக் கல்வியும் பாழ்.* 13

*போலிசுக் கல்வியும் போர்ப்படைக் கல்வியும்*
*வேலியோ சாந்திக்கு? வீண்.* 14

*துப்பாக்கிக் கல்வியும் தூள்குண்டுக் கல்வியும்*
*இப்பாரில் எற்றுக்கோ? எண்.* 15

*காற்றுப்போர்க் கல்வி, கடற்சண்டைக் கல்வி, இவண்*
*ஆற்றல் உடையனவோ? ஆய்.* 16

*சாதிமதப் போர்களும் சார்புநிலப் போர்களும்*
*நீதியில் கல்வினை; நீந்து.* 17

*மக்கள் உழைப்பெல்லாம் மற்போருக் காகுதல்*
*சிக்கல் கலைவிளைவாம்; தேர்.* 18

*விஞ்ஞானக் கல்வி விளையாட்டைக் கண்டதிலே*
*இஞ்ஞாலம் ஆடுகிற தின்று.* 19

*'இம்மின்னில் இவ்வணுவில் எத்தனைபேர் சாவ'ரென*
*விம்முவிடக் கல்வியோ வீறு!* 20

*ஒருகுண்டால் பாரழிவை உன்னுவதோ கல்வி?*
*பெருகுபுயல் வேண்டாவே; பேசு.* 21

*அழிவை மனங்கொண்டே ஆக்கம் விடுத்தல்*
*பழியாம்விஞ் ஞானிக்குப் ; பார்.* 22

*விஞ்ஞானி மூளையை வேறு வழிதிருப்ப*
*மெய்ஞ்ஞானக் கல்வியினை வேண்டு.* 23

10. செற்றம் – தணியாக் கோபம்.

15. இப்பாரில் – இவ்வுலகில்.

17. கல்வி வினை – (இக்காலக்) கல்வியின் செயல்.

19. கல்வியின் விளையாட்டை. அதிலே – அவ்விளையாட்டிலே.

20. விடம் – விஷம்.

*கல்வி கொலையாகும் காலமும் வந்ததே!*
*அல்லல் அகல்வழியை ஆய்.* 24

***பள்ளிப் படிப்பாம்! பதவியாம்! பட்டமாம்!***
*தள்ளஎழு; செம்முறையைத் தாங்கு.* 25

*சோதனையால் மாணாக்கர் சோர்வு பெறுகின்றார்;*
*வேதனை ஏனோ? விலக்கு.* 26

*இளமை கொழிக்கும் இனிய சிறுவர்*
*வளமிழத்தல் நன்றோ வறண்டு?* 27

*கல்விக்கேன் கட்டுவிதி? காணஅதி காரிஏன்?*
*பல்வகுப்பு ஏனோ? பகர்.* 28

*பாடக் குழுவென்றும் பார்க்கும் குழுவென்றும்*
*நாடி அமைத்தலொழி; நன்று.* 29

*கல்வித் துறையெதிலும் காட்டாதே போட்டியினைத்;*
*தொல்லை அருகிவிடும் சோர்ந்து.* 30

*இக்காலக் கல்வி இனிதாகி மாறுக*
*செக்காலை வெம்முறை தேய்ந்து.* 31

***குருகுலக் கல்வி**யைக் கூர்ந்துகூர்ந் தாய்க;*
*பெருகும் அறிவொளிப் பேறு.* 32

*கட்டிடங்கள் வேண்டாவே; காசுகள் வேண்டாவே;*
*சட்டங்கள் வேண்டாவே; தட்டு.* 33

*ஞாயிறு காலும் நலத்தொளியை வாங்கிவிடும்*
*தாயிற் சிறந்தவனம் சார்.* 34

*வால்மீகி எங்குறைந்தார்? வள்ளுவனார் எங்குறைந்தார்?*
*சால்பிளங்கோ எங்குறைந்தார்? சான்று.* 35

*கல்லூரி எல்லாமும் காடுகளுக் கோடுக*
*மல்லூர் துறையெல்லாம் மாய்த்து.* 36

---

26. சோதனையால் – பரீட்சையால்.

31. செக்கும் ஆலையும் ஒத்த கொடிய முறை.

32. குருகுலம் – கல்வி அறிவு ஒழுக்கப் பயிற்சியின் பொருட்டு மாணாக்கர் கூட்டுறவுடன் வாழும் ஆசிரிய நிலையம்.

33. தட்டு : இவை யாவும் தட்டுத் தடைகளா யிருப்பவை.

34. ஞாயிறு காலும் – சூரியன் உமிழும் ; அதாவது பொழியும். தாயின் – தாயைப் பார்க்கிலும்.

*மண்புனல் தீகாற்று வான்சுடர் கற்கலாம்;*
*எண்ணெழுத்துக் கற்கலாம்; ஈண்டு.* 37

*தாவரம் கற்பிக்கும்; சார்புயிர் கற்பிக்கும்;*
*பாவுகதிர் கற்பிக்கும்; பார்.* 38

*தத்துவம் பேசலாம்; தற்பரம் உன்னலாம்;*
*சத்தியம் காணலாம் சார்ந்து.* 39

*வேதங்கள் ஓதலாம்; வேதாந்தம் கேட்கலாம்;*
*நாதம் பயிலலாம் நன்கு.* 40

*மரமச்சம் புள்விலங்கு மக்கள் வளர்ச்சி*
*உரமுற ஆயலாம் ஒத்து.* 41

*தற்கால வாழ்க்கைக்கும் தக்க கலைகளைப்*
*பொற்பாய்ப் படிக்கலாம்; போற்று.* 42

*எக்கலையும் ஏற்கலாம்; எல்லாம் நினைக்கலாம்;*
*பொக்கமின்றி வாழலாம் போந்து.* 43

*உயிர்கள் ஒருமை உணரலாம்; உள்ளே*
*அயர்ந்துறங்கி நோக்கலாம் ஆழ்ந்து.* 44

*ஆடலாம்; பாடலாம்; அங்கங்கே ஓடலாம்;*
*நாடலாம்; நண்ணலாம் நன்று.* 45

*அரவு புலிகண்டும் ஆனந்த மாக*
*விரவிவிளை யாடலாம் வேண்டு.* 46

*பிறர்க்கென வாழும் பெருங்குருமா ராகி*
*அறத்துவழி நிற்கலாம் அங்கு.* 47

*விஞ்ஞானக் கல்வி விடத்தினை மாற்றலாம்;*
*மெய்ஞ்ஞானம் ஆக்கலாம் மீட்டு.* 48

---

37. புனல் – நீர் ; வான் – ஆகாயம் ; சுடர் – சூரியன், சந்திரன் முதலியவற்றை. ஈண்டு – கூடுக ; ஒருங்கு திரள்க.
38. சார்பு உயிர் – பறவை விலங்கு முதலியன. பாவு – பரவும்.
39. உன்னலாம் – தியானிக்கலாம்.
41. புள் – பறவை. உரம் உற – திறம்பட.
43. பொக்கம் – பொய் ; வஞ்சகம்.
44. உள்ளே அயர்ந்து உறங்கி – யோகிருந்து.
46. அரவு – பாம்பு. விரவி – கலந்து.

*சற்குருவின் போதனையும் சாதனையும் பிள்ளைகளைக்*
*கற்பில் நிறுத்தும் கலந்து.* 49

*தன்னலம் அற்ற தனிக்கல்வி சற்குருவின்*
*சந்நிதி போதிக்கும் சார்ந்து.* 50

*சாதிமதம் நாடுமொழிச் சண்டைகளைச் சாய்த்தொழிக்கும்*
*நீதிக் குருகுலம் நின்று.* 51

*உற்பத்திக் கூற்றாம் உழவும் தொழில்களும்*
*கற்பித்தல் காணலாம் காடு.* 52

*உற்பத்திக் கென்றே உதித்தவிஞ் ஞானத்தால்*
*அற்புதஞ் செய்யலாம் அங்கு.* 53

*உலக அமைதிக்கென் றுற்பத்திக் கல்வி*
*பலகற்றல் வேண்டும் பரிந்து.* 54

*உற்பத்திக் கல்வி உலகில் நிரம்பினால்*
*அற்பமைதி எங்கெங்கும் ஆம்.* 55

*ஈசன் அருட்கல்வி எப்போதும் உள்ளது;*
*நேசத்திற் கற்க நினைந்து.* 56

*முப்போதும் உள்ளது மூவாத கல்வியே;*
*தப்பாமல் ஓதுநிதம் தாழ்ந்து.* 57

*தெய்வ அருட்கல்வி சிந்தனையில் கொண்டுறைந்தால்*
*உய்யுமே நல்லுலகம் ஓய்ந்து.* 58

*ஆன்றோர் மொழிகள் அருட்கல்விப் பள்ளிகள்*
*தோன்றாத் துணை; பயில்க சூழ்ந்து.* 59

*சொல்விடும் கல்வியோ சோதனை! கல்லாத*
*கல்வியைக் கற்க கனிந்து.* 60

*குருகுலக் கல்வி குணக்கல்வி யாகும்;*
*அருகிடும் பேதங்கள் அற்று.* 61

---

**52.** உற்பத்திக்கு ஊற்றாம்.

**55.** அற்பு – அன்பு.

**57.** மூவாத – மூப்பு அடையாத ; அழியாத.

**58.** கொண்டு உறைந்தால் – கொண்டு வாழ்ந்தால்.

**60.** சொல் விடும் – வெறும் சொற்களைச் சொரியும். கல்லாத கல்வி – ஓதாதுணரும் கலை.

**63.** சிக்கு ஆடும் நெஞ்சு ஓடும்.

*குருகுலக் கல்வி குவலயம் மல்க*
*ஒருகுலம் ஆகும் உலகு.* 62

***இக்காலக் கல்விநிலை*** *எப்படியும் மாறிவிடும்*
*சிக்காடும் நெஞ்சோடும் தேய்ந்து.* 63

*கூர்தல் அறம்வளரக் கொள்மதியும் தான்வளரும்;*
*சேர்கல்விப் பண்பெழும்பும் சீர்த்து.* 64

*நெற்றிவிழி மூக்குதடு நெஞ்ச நிலைகளைக்*
*கற்பிக்கும் பள்ளி கருது.* 65

*உள்ளக் கலைமுதிர்நாள் ஒருளம்மற் றோருளத்தைத்*
*தெள்ளத் தெளியும் தெரிந்து.* 66

*உள்ளத்தை உள்ளம் உணர்கல்வி மக்களிடைக்*
*கள்ளம்பொய் நீக்கும் கடிது.* 67

*நுண்ணுடற் கல்வி நுணுகிப் பயில்வதில்*
*கண்ணும் கருத்துமுறக் கா.* 68

***இயற்கையில் நேரே*** *இயைந்திறங்கிக் கற்கும்*
*பயிற்சி பெருகுதல் பண்பு.* 69

*ஏட்டுக் கலைஇறுதி என்றிருத்தல் ஏமாற்றம்;*
*வேட்டியற்கை கற்றுப்பார் மேல்.* 70

*இயற்கையில் எல்லா எழிற்கலையும் உண்டு;*
*செயற்கையில் ஆழாதே தீய்ந்து.* 71

*ஆலில் விழுதேன்? அரசுக்கேன் அஃதில்லை?*
*சாலஅவை சாற்றுமிறை; சார்.* 72

*ஆமைக்குண் டோடடியில்; அஃதில்லை பாம்புக்கவ்*
*வூமைக் கலைவிளக்கும்; ஊன்று.* 73

---

64. மதியும் – அறிவும். சீர்த்து – சிறந்து ; செழித்து.

66. உள்ளக்கலை – மனோதத்துவக் கல்வி.

68. நுண்உடல் – சூட்சும சரீரம் ; மனம்.

70. வேட்டு – விரும்பி ; இயற்கைக் கல்வியை வேட்டுக் கற்றுப் பார்.

72. இறை – விடை ; பதில். சால – மிகவும் ; நிரம்ப ; போதிய அளவு.

73. அவ்வூமைக் கலை. ஆமையும் பாம்பும் ஆசிரியர் போல் வாய் திறந்து போதிப்பதில்லை. ஆனால் அவை ஊமையாக நின்று தமது நிலைகளை அறிவுறுத்தும் என்றபடி.

74. கரிக்கு – யானைக்கு. கை – தும்பிக்கை.

75. செயற்கை உரை – செயற்கைச் சொல்லை ; பேச்சை.

*மாட்டுக்குக் கொம்பும் மதகரிக்குக் கையும் ஏன்?*
*கேட்கவிடை கூறும் கிளர்ந்து.* 74

*இயற்கையின் நேரே இருந்துபயில் கல்வி*
***செயற்கை உரை**அகற்றும் சேர்த்து.* 75

*உரைஅகற்றும் கல்வி உணர்த்திவிடும் மெய்யைத்;*
*தரையினில் வெல்க தழைத்து.* 76

*பேசாத பூதி பெறச் செய்யும் மெய்க்கல்வி;*
*ஆசான் அதற்குண்டோ? ஆய்.* 77

*பேசாத மெய்க்கல்வி பெற்றவர், தாவரமா*
*வாசா உணர்ந்திடுவர் வாழ்ந்து.* 78

*தாவரமாப் பேச்சுணர்த்தும் சாந்தநிலை மெய்க்கல்வி*
*மாபரத்தைச் சேர்க்கும் மறைந்து.* 79

*கல்வி பொருளாகுங் கால்மோனம் கூடுமந்தச்*
*செல்வம் பெருக செழித்து.* 80

---

**76.** உரை அகற்றும் கல்வி – பேசாத கல்வி. வெல்க – அக்கல்வி வெல்க.

**77.** பேசாத பூதி – பேசாத செல்வம் ; அநுபூதி.

'தூசா மணியும்....................

பேசா அநுபூ திபிறந் ததுவே' – அருணகிரிநாதர்

**78.** தாவர மா வாசா–தாவரம், பறவை, விலங்கு முதலியவற்றின் வாசகங்களை.

**80.** கால் – காலத்தில்.

# 4. அரசு

*அரசில்லை ஆதியில் ; அல்லலும் இல்லை;*
*முரசொலி பின்னை முழக்கு.* 1

*தலைவன் புகுந்தான்; தரைக்கிழவன் போந்தான்;*
*அலையரசன் வந்தான் அறி.* 2

***ஆட்சி பிறந்ததும்** ஆணவமும் வீறியது;*
*வாட்படை மின்னியது வந்து.* 3

*வீரம் எனும்பெயரால் வெட்டல் கலையாச்சே*
*ஈரமில் நெஞ்சி லிருந்து.* 4

*வெட்டுக் கலையின் விளைவுசாம் ராச்சியம்;*
*ஒட்டுச் செயற்கை உணர்.* 5

*போலிஸ் படைகளுடன் போர்ப்படைகள் ஆட்சிகளின்*
*ஆலப் பெருக்கென் றமு.* 6

*போர்களின் எண்ணமும் போர்களின் சூழ்ச்சியும்*
*பார்முகம் காணுதல் பாழ்.* 7

*மக்கள் உழைப்புகள் மாநிலத்துப் போர்களாய்*
*விக்கல் அழகோ? விளம்பு.* 8

*சட்டங்கள் மன்றங்கள் தண்டனைகள் வெஞ்சிறைகள்*
*மட்டின்றிப் பல்கல் மறம்.* 9

*வரிகள் பிணிகள் வறுமை மடமை*
*செறியும் அரசுகள் தீங்கு.* 10

*வறுமை மடமை வளர்க்கும் அரசு*
*சிறையைப் பெருக்கல் சிரிப்பு!* 11

*உணவும் உடைஇடமும் உற்றால் எளிதில்*
*களவுமுதல் குற்றமுறா; காண்.* 12

2. தரைக்கிழவன் – நில உரிமையாளன்.

5. சாம்ராஜ்யம் இயற்கை அன்று. அதனால் அஃது, 'ஒட்டுச் செயற்கை' என்னப்பட்டது.

6. ஆலம் – விஷம்.

9. மன்றங்கள் – நீதிமன்றங்கள். பல்கல் – பெருகுதல்.

*முதல்தொழில் போராட்டம் மூள்மூலம் எங்கே?*
*எதிர்பகை தோற்றமெங்கே? எண்.* 13

*அரசுகளால் நேர்ந்த அவதிகளை ஆய்ந்து*
*துரிசுகளை நீக்கத் துணி.* 14

*மறப்புரட்சி செய்தெதையும் மாற்றமுய லாதே;*
*அறப்புரட்சி நல்லதே ஆள்.* 15

*கோனாட்சி, நல்ல குடியாட்சி, என்றுசொலல்*
*நானா விதமயக்கு; நஞ்சு.* 16

*ஆட்சிப்பேர் மாற்றத்தால் ஆகாதே ஒன்றுமதில்*
*மாட்சியறம் மல்குதலே வாழ்வு.* 17

*வறுமை பசிநோய் மடமை முதலாம்*
*சிறுமை ஒழிஅரசைத் தேடு.* 18

*உணவும் உடைஇடமும் உற்றுய்ய மக்கள்*
*குணஞ்செய் அரசினைக் கொள்.* 19

*வரிகள் அடக்குமுறை வற்றச்செய் ஆட்சி*
*உரியதென் றோர்ந்துணர் உற்று.* 20

*எல்லாரும் கல்விநலம் ஏற்க இசைந்துமுயல்*
*நல்லார் அரசாட்சி நண்ணு.* 21

*பிறப்பில் சிறப்பில் பெருமைநா டெண்ணம்*
*துறக்கும் அரசமையத் தூண்டு.* 22

*முதல்தொழில் போராட்ட மூலத்தைக் கல்லி*
*இதம்செய் அரசினை ஏந்து.* 23

*தொழில்செய் இடத்தில் சுடுங்கருவி பண்ணாப்*
*பழியில் அரசமைக்கப் பார்.* 24

*தொழிலமர் கூடத்தில் தூயஉற் பத்தி*
*எழிலுறச் செய்யரசை ஏல்.* 25

*உற்பத்தி மக்கள் உளமாக ஊக்கரசில்*
*வற்கடம் இல்லை; வழுத்து.* 26

*கருத்தடைச் செய்கையைக் காயும் அரசு*
*பொருத்தம் உடைத்தென்று போற்று.* 27

---

**14.** துரிசுகளை – குற்றங்களை.

**23.** மூலத்தைக் கல்லி – வேரைத் தோண்டிக் களைந்து.

**26.** வற்கடம் – பஞ்சம்.

*சோம்பல் குழுவைச் சுறுசுறுப்பா மாற்றரசை*
*ஓம்ப முயல்க உழைத்து.* 28

*ஆண்பெண் உரிமையுடன் அன்பாய் உலவிவரப்*
*பேண்பெரிய ஆட்சியே பேறு.* 29

*பொருளில் அறமும் புனிதனிடத் தன்பும்*
*திரளும் அரசினைத் தேடு.* 30

*காட்டுயிர்க்கும் நன்மை கருணைசெய் மக்களை*
*நாட்டில் வளரரசை நாட்டு.* 31

***மக்களின் ஆட்சியே** மாசுகளைப் போக்குதற்குத்*
*தக்க மருந்தென்று சாற்று.* 32

*மக்களின் ஆட்சி எது? மக்களின் நல்லொழுக்கம்*
*தொக்க பரிணாமம்; சொல்.* 33

*மக்களின் அன்பில் மலரும் அருளாட்சி*
*தக்கது தக்கது தான்.* 34

*மக்களின் ஆட்சியில் மாநிலத்தார் பல்வேறு*
*சிக்கல் நுழைத்தனர் சேர்ந்து.* 35

***உலகா யத**ஆட்சி ஒப்புரவைக் கல்லிக்*
*கலகம் விளைக்கும்; கருது.* 36

*உலகம் சடசித்தால் உற்றிருத்தல் உண்மை;*
*இலகிரண்டைக் கொள்ளரசே இன்பு.* 37

*சித்தினை மட்டும், சடத்தினை மட்டும், கொள்*
*சத்திலர சாட்சி சழக்கு.* 38

*பொருளும் அருளும் புகுமக்க ளாட்சி*
*மருளின்றி ஓங்கும் மகிழ்ந்து.* 39

*எவ்வுயிரும் நிற்குமொன்றை எண்மக்க ளாட்சியே*
*தெவ்வின்றி வாழும் சிறந்து.* 40

---

30. பொருளில் – பொருளினிடத்து. புனிதனிடத்து – இறைவனிடத்து.

31. காட்டிலே வாழும் உயிர்கட்கும்.

33. பரிணாமம் – ஒன்று மற்றொன்றாதல் (பால் தயிராவது போல). இங்கே மக்களின் ஒழுக்கம், மக்கள் ஆட்சியால் பரிணமித்தல் சொல்லப்பட்டது.

37. சட சித்தால் – சடத்தாலும் சித்தாலும். (சடம் – அறிவில்லாதது. சித் – அறிவு.)

38. சழக்கு – குற்றம்.

40. ஒன்றை – சித்தினை ; பரத்தை. எண் – நினைக்கும். தெவ்வின்றி – பகையின்றி.

# 5. உடல்

*உடம்பின்றி எந்த உலகமும் இல்லை;*
*திடம்படச் சொல்க திறந்து.* 1

*சரஅசரம் எல்லாமும் தாங்கியே தேகம்*
*பரவழி நிற்கும் பணிந்து.* 2

*உடம்பற்ற தொன்றே; உலகங்க ளெல்லாம்*
*கடந்த **கடவுளது** காண்.* 3

*உடம்புதிருக் கோயில்; உலகில் பெரிது;*
*மடம்படு மெய்ஞ்ஞான வாள்.* 4

*எங்கும் பரமுள்ள தென்றாலும் தேகத்தில்*
*தங்கும் சிறப்புத் தனி.* 5

*தேகத் திறையைத் தெரிந்தபின் எங்குமந்த*
*ஏகத்தைக் காண்டல் எளிது.* 6

*உள்ளக் கமலத் துயிர்நிலவக் கூத்துறலைக்*
*கொள்ளுமுடல் என்றோம்பு கூர்ந்து.* 7

*ஓம்புக யாக்கையை; ஓம்புக கோயிலை;*
*ஓம்புக ஓம்புக ஓர்ந்து.* 8

*புழுவிலங் காதிஉயிர் போற்றும் உடலை*
***வழிஇயற்கைச்** செல்வத்தில் வாழ்ந்து.* 9

---

2. தேகம் தாங்கியே.

4. மடம்படு – அறியாமையை அழிக்கும்.

5. தேகத்தில் – மனித உடலில்.

7. உள்ளக் கமலத்து – இதயத் தாமரையில். 'ஹிருத் புண்டரிக்' என்பது உபநிடதம். கூத்து உறலை – ஆண்டவன் திருக்கூத்து நிகழ்தலை.

8. யாக்கையை – உடலை.

9. புழு விலங்கு முதலிய அஃறிணை உயிர்கள் இயற்கையோடியைந்து வாழ்வது குறிப்பிடப்பட்டது. அவ்வுயிர்கள் இயற்கைச் செல்வத்தோ டியைந்து வாழ்ந்து உடலைப் போற்றி வளர்க்கும் என்க.

*மக்கள் இனமே மறந்தியற்கை நல்வழியைச்*
*சிக்கல் விழுந்தது சேறு.* 10

*சேற்றில் விழுந்தமக்கள் தேகத்தை ஓம்புதற்கென்*
*றேற்ற முறைபல இங்கு.* 11

*நீர்காற் றொளியினில் நித்தலும் மூழ்கிவரின்*
*மார்தோளும் விம்மும் மகிழ்ந்து.* 12

*ஓடுபுனல் ஆடின் உதயத்தில் நாடோறும்*
*பாடும் உடலிசைப் பண்.* 13

*தண்ணீரில் மூழ்கத் தசைகள் இறுகிவிடும்;*
*கண்ணீர்மை யாக்கையில் காண்.* 14

*வெந்நீர் முழுக்கு விரிக்கும் தசைகளைச்;*
*செந்நீர் கொதித்திடும் தீய்ந்து.* 15

*நலியர் பிணியர் நலமில் லவர்க்கே*
*இளவெம் புனல்விடுதல் இயல்பு.* 16

*குட்டையில் தொட்டியில் குள்ளக் குழாய்களில்*
*முட்டி உருளல் முரண்.* 17

***காற்றின்** திறங்கள் கணக்கில் அடங்காவே;*
*ஆற்றல் அளந்தவர் யார்?* 18

*பீமன் அநுமன் பெருங்காற்றுச் சேய்களாய்*
*ஏமுற வாழ்ந்தகதை எண்.* 19

*காற்றின் மகவாகிக் காலம் கழிப்பவரைக்*
*கூற்றம் அணுகாது கூர்த்து.* 20

*காற்றைப் பிடிக்கும் கணக்கறி யாதவர்*
*ஏற்றி இறக்கலிலேன் ஈடு.* 21

---

**10.** ................இயற்கை நல்வழியை மறந்து.

**14.** கண்ணீர்மை – கண்ணின் தன்மையை. உடலின் நலத்தை உணர்த்தும் உறுப்புக்கள் சில; அவற்றுள் சிறந்தது கண் என்க.

**15.** செந்நீர் – இரத்தம்.

**16.** இள வெம் புனல் – இள வெந்நீர் ; இளஞ் சூட்டுநீர்.

**19.** சேய்களாய் – பிள்ளைகளாய். ஏமுற – இன்புற.

**20.** கூர்த்து – கோபித்து.

**21.** (காற்றை) ஏற்றி இறக்கலில் ஏன் ஈடுபடுதல் வேண்டும் என்றபடி.

'ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே' – திருமூலர்

*காற்றில் உலவிவரும் காலத்தில் யோகமுறும்;*
*மாற்றுயரும் யாக்கை மலர்ந்து.* 22

*குறிகுத மத்தி கொடும்புருவ மத்தி*
*செறியொளி உள்ளதைத் தேர்.* 23

*உரவுபெற ஈரொளியும் ஒத்துமுது கென்பில்*
*உறுமின்னல் ஓடும் உயர்ந்து.* 24

*மின்னலின் ஓட்டம் மெலிந்தால் உடம்புநிலை*
*இன்னல் விளைதல் இயல்பு.* 25

***ஞாயிற் றொளி**யினை நன்கு படரவிடு*
*ஆய உடலில் அளந்து.* 26

*காலையிலும் மாலையிலும் காட்சிக் கதிரொளியில்*
*சாலத் திளைத்திடல் சால்பு.* 27

*உடம்பிலுள சக்திகள் ஓடின், ஒளியால்*
*இடம்பட ஈடுசெய் இங்கு.* 28

*ஞாயிற் றொளியால் நலமுற ஈடுசெயும்*
*காயம் நிலைக்கும்; கருது.* 29

*அருக்கன் ஒளியில் அமைந்துள்ள சக்திப்*
*பெருக்கம் பிறிதிலிலை; பேண்.* 30

*கடல்மலை ஓரங்கள் காணும் ஒளியே*
*உடல்வளர்க்கும் தூயஉயிர்ப் போது.* 31

*குத்தரிசிச் சோற்றால் குலவும் உடல்வளம்;*
*சத்துண் டதிலே தனித்து.* 32

*தீட்டரிசி கொள்ளாதே; தேய்க்கும் உடற்செழுமை;*
*கூட்டும் பிணிகளைக் கோத்து.* 33

---

22. நறுங்காற்றில் முறைப்படி உலவி வரும்போது யோகம் நிகழ்வதுண்டு. அதனால் உடலின் மாற்றுயர்தலும் உண்டு. இக்கருத்தை அமெரிக்க உடற்பயிற்சி ஆசிரியன்மாருள் **எமர்சன்** என்பவர் போற்றி ஏற்றுள்ளது இங்கே குறிக்கத்தக்கது.

23. குறி குதம் – 'கருவிடும் வாசல் எருவிடும் வாசல்' (திருமந்திரம் பார்க்க). கொடு – வளைந்த.

24. மின்னல் – மின்சக்தி ; குண்டலினி.

27. திளைத்திடல் – படிதல் ; மூழ்குதல்.

28. ஒளியால் – சூரிய ஒளியால்.

30. அருக்கன் – சூரியன்.

31. உயிர்ப்பு – பிராணன்.

*கீரையும் மோரும் கிளர்குடல் மாசுகளின்*
*வேரைக் களையும் விரைந்து* 34

*வீட்டின் புறத்தே விளைபசுங் காய்கறிகள்*
*நாட்டும் உடலின் நலம்.* 35

*பழஉணவு கொள்ளும் பயிற்சி செழிய*
*அழகுடலைக் காக்கும் அமிழ்து.* 36

*பாலொடு தேனருந்தும் பண்புப் பயிற்சியோ*
*காலனையும் வீழ்த்திவிடும்; காண்.* 37

*கடுக்காயும் நெல்லிக் கனியும் உடற்கு*
*மிடுக்கேற்றும் கற்ப விதை.* 38

*கொலைபுலை வேண்டா குணங்கெடுக்கும் என்றார்*
*நலிவுறா யாக்கையர் நன்று.* 39

*உணவு செரியாமுன் உண்டுண் டடைத்தல்*
*பிணவுடலம் ஆக்கும் பிணித்து.* 40

*கண்டதை உண்டு களிப்பவர் இவ்வுலகில்*
*கொண்டதென் நோயன்றிக்; கூறு.* 41

***ஐயமும் அச்சமும்** யாக்கையைத் தேய்த்தரித்துப்*
*பையவே கொல்லும் பகைத்து.* 42

*சீற்றம் எரிபகை சீறும் மனத்துடன்*
*ஏற்கும் உணவுவிடம்; எண்.* 43

*அன்பிறையை எண்ணி அகந்தூய்மை ஆக்கியபின்*
*இன்புணவு கொள்ள இசை.* 44

*அன்பினில் ஒன்றுபடும் ஆண்பெண்ணின் வாழ்க்கையே*
*இன்ப உடலளிக்கும் ஈண்டு.* 45

*அன்பினில் ஒன்றாகா ஆண்பெண்ணின் வாழ்க்கையோ*
*துன்பஉடல் ஆக்கும் தொடக்கு.* 46

*தனித்த சிறுவாழ்க்கை தாங்கும் இளமை*
*பனிக்கும் உடலாக்கும்; பாழ்.* 47

*குழவி மழலையைக் கூடுவிளை யாட்டைத்*
*தழுவும் மனவுடலைத் தாங்கு.* 48

43. சீற்றம் – கோபம்.

46. தொடக்கு – கட்டு ; பாசம்.

47. பனிக்கும் – (நரப்புக் கட்டுக் குலைந்து) நடுங்குகின்ற.

48. மனமுடைய உடலை.

***பல்லும் விழியும்*** *பகரும் உடல்நிலையைக்*
*கல்; இந்த வித்தையைக் கல்.* 49

*நாக்கில் அழுக்குகள் நண்ணாத வாறென்றும்*
*காக்க; உடல்வளர்க்கும் காப்பு.* 50

*தலையில் மயிர்வளர்த்தல் தக்கதே என்ற*
*கலைஞர் அகத்தைக் கருது.* 51

*மலச்சிக்கல் நோய்வளர்க்கும் மாதாவே என்றார்*
*நலக்குரிய மெய்யரஞ் ஞான்று.* 52

*மூத்திரக் கோளாறு மூளாத வாறென்றும்*
*பாத்திர மெய்யினைப் பார்.* 53

*காலையிலும் மாலையிலும் காலால் நடந்துவர*
*வேலையிலை நோய்க்கு; விளம்பு.* 54

*மூர்க்கப் பயிற்சி முறுக்கும் நரம்புகளைத்;*
*தூர்க்கும் மதிநுட்பம் சூழ்ந்து.* 55

***பாட்டும் இசையும்*** *படியுமனம் எஞ்ஞான்றும்*
*ஊட்டும் கொழுமை உடற்கு.* 56

*பாட்டில் இசையில் படியா மனஉடலில்*
*கூட்டும் பிணியின் குறும்பு.* 57

*சான்றோர் மொழிகளால் சார்புகொள் நெஞ்சுடற்குத்*
*தோன்றாத் துணைவரும் சூழ்ந்து.* 58

*தீயர் பிதற்றலைத் தேடுமனம் வேண்டாவே;*
*காயும் உடலைக் கறுத்து.* 59

***பகலில் உழைத்தே*** *இரவில் படுத்தல்*
*தகஉடலை நல்கிவரும் சார்பு.* 60

---

49. கல்........... கல்–படி......... படி.
51. அகத்தை – உள்ளத்தை.
52. மெய்யர் – உடலினர்.
53. மெய்யினை – உடம்பினை.
55. மதி – அறிவு.
57. மனம் பொருந்திய உடலில்.
58. நெஞ்சையுடைய உடலுக்கு.
59. கறுத்து – கோபித்து.

*இரவு பகலுழைத்தல், எப்பொழுதும் தூங்கல்,*
*விரவும் இறப்பியல்பு மெய்.* 61

*உறக்கம் மிகத்தேவை; ஓய்வுமனம் சேரும்;*
*பறக்கும் உடற்சோர்வு; பார்.* 62

*ஆறுமணி நேரம் அயர்ந்துறங்கல் நல்லது;*
*வீறும் உடல்பெறலாம் வேண்டு.* 63

***மரத்தடியில் வாழ்வோர்** மதிகுடிசை வாழ்வோர்*
*உரத்தைப் பெறுதலை உன்னு.* 64

*பச்சையில் ஓலையில் பாயும் ஒளிஎளிமை*
*விச்சையைக் கற்க விரும்பு.* 65

*வெப்ப மிகுநாட்டில் வேடிக்கைக் கட்டிடங்கள்*
*ஒப்பிலுடல் ஓம்பாவே; ஊறு.* 66

*தட்ப மிகுநாட்டில் தாரகைக் கட்டிடங்கள்*
*பெட்புப் பெறும்போலும் பேச்சு.* 67

*களிமண் சுவரும் கனியோலை வேய்வும்*
*குளிருமிழும் வெப்பத்தில் கூர்ந்து.* 68

*காற்றும் ஒளியும் கலந்து நுழைநிலையம்*
*போற்றியுடல் ஓம்பும்; புகல்.* 69

*காற்றும் ஒளியும் கலந்துநுழை யாமனைகள்*
*போற்றுடலை ஓம்பா; பொதி.* 70

*செயற்கை ஒளி, விசிறி சேரும் இடங்கள்*
*அயர்ச்சி உடம்பளிக்கும்; ஆய்.* 71

---

61. உடலிலே இறப்பியல்பு (சாகுங் கூறுகள்) கலந்து கலந்து நிற்கும் என்றபடி.

63. எட்டுமணி நேரமும் கொள்ளுதல் உண்டு.

64. உரத்தை – பலத்தை.

65. சூரிய ஒளி பசுமை நிறத்திலும் ஓலையிலும் மிக எளிதாகப் பாய்தல் கருதற்பாலது. விச்சையை – வித்தையை.

67. தாரகைக் கட்டிடங்கள் – நட்சத்திர மண்டலங்களை அளாவிய கட்டிடங்கள். அக்கட்டிடங்கள் வெறும் பேச்சில் பெருமையடையும் போலும் என்றவாறு.

68. கனி ஓலை – முதிர்ந்த பச்சை ஓலை.

69. புகல் – புகலிடம் ஆகும்.

70. பொதி – கிடங்கு போன்றவை ஆகும்.

71. ஒளி – விளக்கு. (பொறி அளிக்கும் மின்னல் விளக்கு, விசிறி முதலியன.)

*காடும் மலையும் கடலும் மருதமும்*
*தேடும்சஞ் சீவிகள் சேர்.* 72

*மலைஉச்சி நண்ணி மவுனத்தைச் சாதி;*
*அலைஅடங்கும்; நல்உடலம் ஆம்.* 73

*பரப்பு வெளியினைப் பார்த்திரு; நன்மை*
*சுரக்கும் உடலில் தொடர்ந்து.* 74

***மெய்யுடலைப்*** *பொய்யென்றார் மேன்மை உணராதார்;*
*செய்யுளும் யாத்தனரே சேர்த்து.* 75

*உடம்புபொய் யானால் உலகமும் பொய்யாம்;*
*அடங்குமெல் லாமும்பொய் ஆம்.* 76

*பொய்யுடலம் ஏனிங்குப்; பொய்யுலகம் ஏனிங்குப்;*
*பொய்வாழ்வும் ஏனிங்குப்; பொய்.* 77

*உடம்பிறை கோயிலெனும் உண்மை உணர்ந்தோர்*
*திடம்பட மெய்யென்றார் தேர்ந்து.* 78

*மெய்யுடலைக் கொண்டிங்கு மெய்ப்பொருளைக் காணவே*
*செய்யும் உலகஇயல்; செப்பு.* 79

*பொய்யை ஒழித்தால் புனிதம் மிகுஉடலம்*
*மெய்யாய் விளங்கிவிடும் மேல்.* 80

73. அலை – மன அலை.

# 6. எண்ணம்

*எண்ண இயல்களை எண்ணி எண்ணிப் பார்த்துவிட்டார்*
*உண்ணின்ற யோகர் உவந்து.* 1

*எண்ணத்தின் ஆராய்ச்சி எத்தனையோ! ஆங்கெழுந்த*
*வண்ணஉரை எத்தனையோ! வாழ்த்து.* 2

*எண்ணாத ஆற்றல்கள் எண்ணத்துக் குண்டுண்டு;*
*பண்ணா தனபண்ணும் பாத்து.* 3

*காற்றுபுனல் மின்னல் ககன அலைகளினும்*
*ஆற்றலுடைத் தெண்ண அலை.* 4

*விண்ணிடி சீறுபுயல் வேகஅணு குண்டுகள்*
*எண்ணத்தின் முன்னிலையில் எங்கு!* 5

*அகம், புறம் ஆகும் அமைவினை ஆய்ந்தால்*
***சகம்பிறக்கும்** வேர்விளங்கும்; தேர்.* 6

*எண்ணங்க ளெல்லாம் எழுந்து விழுவதிலை;*
*திண்மை உருவாம் திரண்டு.* 7

*நல்ல நல்ல எண்ணங்கள் நல்லுலகைத் தோற்றுவிக்கும்;*
*அல்லன வேறாம் அறி.* 8

*மூன்று வகைமனத்தில் மூண்டெழும் நல்லெண்ணம்*
*சான்ற உலகாகும் சார்ந்து.* 9

*எப்படியோ நல்ல எளிய உயிர்களிடம்*
***வெப்புவிடம்** பாய்ந்த விதம்!* 10

*அறிவு வளர, அரசு வளர*
*வெறி, மகனுள் சேர்ந்தது வித்து.* 11

---

1. உள் நின்ற – அகத்தில் ஒன்றி நின்ற.
4. காற்றலை, நீரலை, மின்அலை, ஆகாசஅலை முதலியன ககனம் – ஆகாசம்.
6. வேர் – மூலம்.
7. திண்மை – தடிப்புடைய. (எண்ணம் நுண்மை ; உருவம் திண்மை.)
9. மூன்றுவகை மனம் : ஸ்தூல மனம், சூட்சும மனம், காரண மனம் (மேல்மனம், நடுமனம், அடிமனம்). சான்ற – அறிவும் அன்பும் நிறைந்த, அமைதியுடைய.

மக்கள் வெறிவிடம் மற்ற உயிர்களிலும்
புக்கு விளைத்தது போர். 12

புலிகரடி பாம்புள் புகுந்தவிடம், பொல்லார்
நலிவெண்ணம் என்று நவில். 13

கொள்ளை புரட்சி கொலைபோர் அரசெல்லாம்
கள்ள நினைவின் கலக்கு. 14

ஒருவனது தீமை உறுமளவில் நில்லா;
பெருகி உலகெரிக்கும் பேய். 15

தீய நினைவுகள் சேரும் மனிதனவன்
மாயஅழல் கக்கும் மலை. 16

வள்ளல் **பிரான்ஸிஸ்** வரலாறு நெஞ்சத்தின்
உள்ளும் புகுகின்ற துற்று. 17

பறவை விலங்குகள் பார்த்துப் பிரான்ஸிஸ்
உறவுகொள் அன்பில் உருகு. 18

ஊரை அலைஓநாய் உற்ற பிரான்ஸிஸை
நேரணைந்த அன்பை நினை. 19

ஊரிடை நஞ்சுண்டோ? ஓநாயில் நஞ்சுண்டோ?
யாரிடை என்றென்றே ஆய். 20

அன்பருள் பேய் இல்லை; அயலுயிரில் அஃதில்லை;
துன்பவிடம் எங்கே? தொலை. 21

மைந்தன் திருந்தினால் மற்ற உயிர்திருந்தும்;
இந்த நினைவாய் இரு. 22

**திருந்தும் வழி**காணச் செருப்புரட்சி வேண்டா;
மருந்திங் குளப்புரட்சி மற்று. 23

'உள்ளுவ எல்லாம் உயர்வுள்க' என்றெழுந்த
வள்ளுவர் வாய்மை வளம். 24

'உயர்வெண்ண மா!' என் றுறங்குதல் வேண்டா;
அயர்வின்றிச் சிந்தனையில் ஆழ். 25

உயர்வெண்ணம் பல்க ஒளிநெறிகள் உண்டு;
பயில்நூல் சிலஉண்டு; பற்று. 26

---

13. நலிவு எண்ணம் – துன்பம் அல்லது கேடு தரும் எண்ணம்.

16. அழல் கக்கும் மலை – எரிமலை.

23. செருப் புரட்சி – போர்ப் புரட்சி ; இரத்தப் புரட்சி.

25. உயர்வெண்ணம் எப்படிக் கொள்ளுதல் கூடும் என்று அஞ்சி உறங்குதல் வேண்டா.

26. பல்க – பெருக.

*தேவைக்கு மேலெண்ணாச் சிந்தை, உயர்வெண்ணம்*
*மேவிட உந்திவிடும் மேல்.* 27

*தேவைக்கு மேல்நினையாச் சித்தம் செகமானால்*
*யாவும் ஒழுங்குபடும் அன்று.* 28

*தேவைக்கு மேலே திரட்டும் இடங்களில்*
*தாவும் கொலைகளவு சார்ந்து.* 29

*தேவைக்கு மேலுன்னாச் செம்மை ஒழுக்கத்தின்*
*ஆவி; அருளாட்சி ஆம்.* 30

*எண்ண அணுவில் இனிய உயிர்ப்புண்டு;*
*பண்ணும் பசுவைப் பதம்.* 31

*நல்லவர்க்குச் சாவில்லை என்று நவில்வதவர்*
*நல்லெண்ணப் பெற்றியென நாட்டு.* 32

*நல்லெண்ணம், ஓடி நடமாடி விண்ணுழைந்து*
*புல்லுநவ சத்திப் பொருள்.* 33

*வானிழல் மேய்ந்து வளர்எண்ணம், ஞானவிழி*
*மோனருளம் செல்லும் முகர்ந்து.* 34

*எண்ணம் உடலோம்பும்; எண்ணம் உயிரோம்பும்;*
*எண்ணம் உலகோம்பும்; இன்பு.* 35

*எண்ணுக நல்லெண்ணம்; எண்ணுக* ***ஒப்புரவு;***
*எண்ணுக தற்பரம்; எண்.* 36

*தீய நினைவுகளைத் தீண்டும் மனம்வேண்டா;*
*மாய விடுக மறந்து.* 37

*அலெக்ஸாந்தர் நெப்போலி ஆள்கெயிஸர் ஹிட்லர்*
*கலகர் நினைவைக் கடி.* 38

*சனகன்அரிச் சந்திரன் தர்மஅசோ கன்ஆய்*
*நினைக; அமைதிபெறும் நெஞ்சு.* 39

***இயற்கையின் கூறு****களை எண்ணிஎண்ணிப் பார்க்கும்*
*பயிற்சி பெறுக படிந்து.* 40

**30.** உன்னா – நினையாத.

**31.** உயிர்ப்பு – பிராணசக்தி. பசுவை – உயிரை.

**33.** புல்லும் – பற்றும் ; தழுவும். நவசக்தி – புதுச்சத்தி. (நல்ல எண்ணங்கள் ஆகாயத்தில் சென்று படியும் ; ஆங்குள்ள புதுச்சக்திகளைப் பற்றிக்கொள்ளும்.)

**34.** ஞானவிழி உடைய மோனர்.

**39.** ஆய் – தமிழ்நாட்டு வள்ளல்களுள் ஒருவர்.

*இறையை அடியவரை எஞ்ஞான்றும் எண்ணும்*
*முறையைக் கடைப்பிடிக்க முன்.* 41

*கண்ணுதல் பாம்பைக் கழுத்தினில் காட்டுகிறான்;*
*எண்ண அழியும் இகல்.* 42

*அண்ண லரிதூங்கும் அரவணைக் காட்சியை*
*எண்ண அமுதொழுகும்; ஏல்.* 43

*ஆணி அறைந்தவர்பால் அன்புசொரி ஏசுவைப்*
*பேணி நினைத்திடல் பேறு.* 44

*எவ்வுயிர்க்கும் தீங்கெண்ணா எண்ணமே நல்லதந்தச்*
*செவ்வி வளர்த்தல் சிறப்பு.* 45

*உற்பத்தி நாடி உழைக்க எழுமெண்ணம்*
*அற்பொழுக்கம் ஆக்கும் அமைந்து.* 46

*உலகம் செழிக்க உயர்வெண்ணம் ஓங்கக்*
*கலைகள் வழியக் கருது.* 47

***மந்திரம்*** *என்று மதிவண்ணர் கூறுகின்றார்;*
*இந்திர சாலமன்றே இங்கு.* 48

*சிந்தையர் எண்ணங்கள் சேர்ந்துசேர்ந் தாவியுற*
*மந்திர ரூபமாம்; மாண்பு.* 49

*மந்திரம் நாதம்; வரிவடிவம் அற்றது;*
*வந்தனையும் அற்றதே; மாண்பு.* 50

*மாயா ஒலியால் மருவாது மந்திரம்;*
*தாயாம் அருளொலியே தான்.* 51

*மந்திரம் நேர்வழியில் தந்திரமாய் வாழ்வரும்பின்*
*செந்தமி ழாகும் செகம்.* 52

---

41. முன் – நினை ; ஆழ நினை.

46. அற்பு – அன்பு.

49. சிந்தையர் – ஆழ்ந்த சிந்தையர் ; புலன் அடங்கி மனம் விழிக்கப்பெற்ற சிந்தையர் ; அடிமனம் வரையில் செல்லும் சிந்தையை உடையவர் ; முனிவர். ஆவி உற – உயிர் பெற.

50. நாதம் – ஒலி. (ஒலி வடிவம் உடையது.)

51. நாதம் இருவகைத்து. ஒன்று மாயாநாத ஒலியால் அமைவது ; மற்றொன்று அருள்நாத ஒலியால் அமைவது. மாயாநாத ஒலியால் அமைவது மந்திரமாகாது. அருள்நாத ஒலியால் அமைவதே மந்திரமாகும்.

52. மந்திரம் – (நன்மனத்தில் எழும்) நினைவு. தந்திரம் – (அந்நினைவால் ஆகும்) செயல். தமிழ் – இனிமை. சகமெல்லாம் இனிமையுடையதாகும் என்றபடி.

*தக்கவர் மந்திரம் தந்திரம் பன்மொழியில்*
*பக்குவநூ லாயினபின்; பார்.* 53

*'சீலமின்றி நோன்பின்றிச்' செப்பிவரின் மந்திரத்தை*
*ஆலம் உலகாளும் ஆர்த்து.* 54

***வேண்டல்வேண் டாமை விடுநெஞ்சில்*** *மந்திரம்*
*தாண்டவம் செய்யும் தனித்து.* 55

*வேண்டாமை வேண்டலிலா மேலாம் பரநினைக்க*
*வேண்டாமை வேண்டல் விடு.* 56

*வேண்டல் வழிநிற்க, வேண்டாமை கால்கொள்ளும்;*
*வேண்டல்வேண் டாமை விடும்.* 57

*வேண்டும் அளவினில் மெய்ந்நிறை கொள்நெஞ்சம்*
*வேண்டல்வேண் டாமை விளக்கு.* 58

*வேண்டாமை வேண்டலிலா வித்துவளர் மூலநெஞ்சம்*
*தூண்டாத சத்திபெறும் சூழ்ந்து.* 59

*பரம்பொருள் சத்தி படியு(ம்) அடி நெஞ்சம்*
*வரந்தரும் ஆற்றலுறும் ; வாழ்த்து.* 60

*செல்வத்துட் செல்வமெது? தீயெண்ணர் ஆகாமை;*
*கல்வியிற் கல்வியது கல்.* 61

*புலியிற் கொடியர்யார்? பூவில்தீ எண்ணர்,*
*கலியும் நடுங்குமவர்க் கண்டு.* 62

*நல்லெண்ண ராக நடையில் பழகியவர்*
*கல்வியிற் செல்வர்; கருது.* 63

*நற்கல்வி நற்கேள்வி நல்லுணவு நற்சார்பு*
*நற்கருத் தாக்கும் நயந்து.* 64

*நல்லெண்ணத் துக்கொப்பு ஞானப் பரமன்றிச்*
*சொல்லவே றுண்டோ துணிந்து?* 65

---

53. மந்திரநூல் வேதம் ; தந்திரநூல் ஆகமம். (இவ்விரண்டும் உலகுக்குப் பொது.)

54. 'சீலமின்றி நோன்பின்றி' – **திருவாசகம்.** ஆலம் (விடம்) அனைய ஆட்சி, அரசு, படை, கருவி, கல்வி, சபை, சட்டம் முதலியன என்க. ஆர்த்து – ஆரவாரித்து.

56. பரம் – பரத்தை.

58. மெய் நிறை – உண்மையான உள்ள நிறைவு அதாவது திருப்தி.

60. அடிநெஞ்சம் – அடிமனம். (மூவகை மனம் : மேல் மனம், நடுமனம், அடிமனம். விளக்கம் 'உள்ளொளி' என்னும் நூலில் பார்க்க.)

61. கல்வியைப் பார்க்கிலும் சிறந்த கல்வி என்றவாறு.

62. பூவில் – பூமியில். கலியும் – கலி தேவதையும். அவர்க் கண்டு – அவரைக் கண்டு. (கலி தேவதை மிகக் கொடியது. அதுவும் தீய எண்ணத்தவரைக் கண்டு நடுங்கும் என்றபடி.)

# 7. வாழ்க்கை

*சேர்க்கையில் வாழ்க்கை சிறத்தல் வெளிப்படை;*
*யார்க்கும் விளங்கலரி தன்று.* 1

*ஒவ்வொன்றும் சேர்ந்தே உறவுடன் வாழ்தலைச்*
*செவ்விதின் நோக்கல் சிறப்பு.* 2

*சேர்க்கையே வாழ்க்கையாம்; வாழ்க்கையே சேர்க்கையாம்;*
*பார்க்க ஒருநிலையாம் பற்று.* 3

*சேர்க்கையின் வித்தாய்த் திகழ்ந்திடும் காதலே*
*வார்த்த தியற்கை ; வழுத்து.* 4

*அண்ட அணுவில் அமர்ந்துள்ள காதலைக்*
*கண்டனம் செய்தல் கசடு.* 5

*பெண்ணுடன் ஆணுமாய் ஆணுடன் பெண்ணுமாய்*
*நண்ணுவது வாழ்க்கை நடை.* 6

*அகவாழ்க்கை என்றும் புறவாழ்க்கை என்றும்*
*செகவாழ்க்கை செல்லும் திறம்.* 7

*அகவாழ்க்கை இன்பில்; புறவாழ்க்கை பொன்னில்;*
*தகஇரண்டும் தேவையே சார்பு.* 8

***பொருள்கொழிக்கும்** வீட்டில் பொழியுமே இன்பம்;*
*திரண்டெழும் வாழ்க்கை செழித்து.* 9

*பொருண்முடை இல்லில் பொருந்துமோ இன்பம்!*
*உருண்டுடையும் வாழ்க்கை உலுத்து.* 10

*பொருளொருபால் தேங்குதல் மற்றொருபால் தேய்தல்*
*அருளறுக்கும் வாளென் றறி.* 11

---

1. வாழ்க்கை, சேர்க்கையால் அமைதலால், அதைச் 'சிறத்தல்' என்றவாறு.
3. ஒருநிலை – ஒருமைநிலை.
4. காதல், இயற்கையின் வார்ப்பு என்க.
5. அண்டத்திலும் அணுவிலும்............

பொருளருகும் வாழ்க்கையில் பொய்களவு கொள்ளை
இருளரசு செய்யும் எழுந்து. 12

இழுக்கம் பொருளிடை எய்தும் இடத்தில்
ஒழுக்கம் உறங்கிவிடும் ஓய்ந்து. 13

தேவைக்கு மேலெண்ணாச் சீரிய வாழ்க்கையில்
யாவும் சுரத்தல் இயல்பு. 14

தேவைக்கு மேலெண்ணும் தீவாழ்க்கை போர்க்களம்;
ஏவும் அணுகுண் டெடுத்து. 15

வேண்டுதற்கு மேற்செலவு வீணேசெய் வாழ்க்கையைத்
தீண்டிக் கொலும்வறுமைத் தீ. 16

வேண்டும் அளவை விழைந்துநில் வாழ்க்கையில்
ஈண்டும் குணங்களெல்லாம் ஏய்ந்து. 17

முதல்தொழில் வேற்றுமை மூண்டநாள் தொட்டு
அதம்அதம் வாழ்க்கை; அறை. 18

முதல்தொழில் வேற்றுமை மூளாத வாறு
இதம்செய்யும் வாழ்க்கை இனிது. 19

பொருட்செல்வம் வாழ்க்கையில் பூக்கும் உழைப்பில்;
அருட்செல்வத் தேன்பிலிற்றும் அங்கு. 20

**சேர்ந்துழைக்கும்** நல்வாழ்க்கை சீறும் தனிமையை;
ஆர்ந்த அறம்வளர்க்கும் அன்பு. 21

எல்லாரும் சேர்ந்துழைத்தால் எல்லாரும் இன்புறலாம்;
நல்லாராய் வாழலாம் நன்கு. 22

எல்லாரும் சேர்ந்துழைத்தால் எங்கே தனித்தநலம்?
எல்லாம் அறமாகும் இங்கு. 23

உற்பத்தி நாட்டங்கொள் ஒப்புரவாம் வாழ்க்கையால்
கற்பொழுக்கம் ஓங்கும்; கருது. 24

உற்பத்தி செய்ய உழையாத் திமிர்வாழ்க்கை
அற்பத்தில் மாளும் அகன்று. 25

**மக்கள் தொகைபெருகின்** மாநிலத்து வாழ்க்கையில்
சிக்கல் உறாதென்று தேர். 26

மக்கள் தொகைபெருகின் மாநிலத்தில் விஞ்ஞானம்
மிக்கது செய்யும் விருந்து. 27

20. உழைப்பில் பூக்கும்............ தேன் பிலிற்றும். பிலிற்றும் – சிந்தும் ; சொரியும்.

*நிலத்துத் தொழில்கள் நிறைகாற்றுக் கேகும்;*
*கலத்திலும் ஏகும் கடற்கு.* 28

*இரப்பர் விரிவதுபோல் இப்பார் விரியும்;*
*சுரப்பும் பெருகும் துணை.* 29

*வாழ்க்கையைப் பண்படுத்தும் மார்க்கங்கள் எவ்வளவோ*
*ஆழ்ந்தறிஞர் கண்டனர் அன்று.* 30

*மார்க்கங்க ளூடே மதியெனத் தொண்டொன்று*
*பார்க்கும் பொதுவாய்ப் பரிந்து.* 31

*தொண்டில் பழகிய தூயபெரு வாழ்க்கையை*
*எண்டிசையும் பாடும் இரைந்து.* 32

*தெய்வவழி நின்று திருப்பணிசெய் வாழ்க்கையில்*
*மெய்ம்மணமே வீசும் விரிந்து.* 33

*எங்கும் உளஇறையை எண்ணியுழை நல்வாழ்க்கை*
*பொங்கும் உயிர்களிடைப் போந்து.* 34

*தன்னுயிரும் மன்னுயிரும் சார்ந்தமையும் மெய்வாழ்க்கை*
***அன்பின் திரட்சி;** அடை.* 35

*உலகா யதவாழ்க்கை ஒவ்வாது பாரில்;*
*இலகா சகோதரம் இங்கு.* 36

*எல்லாரும் மெய்வாழ்க்கை எய்திவிடின் இவ்வுலகில்*
*அல்லாரைக் காண்டல் அரிது.* 37

*அன்பொழுகும் வாழ்க்கை, அடவியினில் ஓருயிர்*
*துன்புறினும் தானுமுறும் துன்பு.* 38

*நாட்டமரும் மெய்வாழ்க்கை நாட்டளவில் நில்லாது*
*காட்டுயிரைக் காக்கும் கலந்து.* 39

*வாழ்வு தனிமையோ? மாஞால மாவது;*
*வாழ்கவே வாழ்க வளர்ந்து.* 40

*நாகரிகம் என்றன்பை நாசப் படுத்துவது*
*போகச் சிறுவாழ்க்கை; பொய்.* 41

**28.** நிலத்தில் நடைபெறும் தொழில்கள், காற்றிலும் கடலிலும் நடைபெறும் என்றபடி.

**29.** இரப்பர் – ரப்பர் (Rubber).

**31.** மதி என – சந்திரனைப் போல (விளக்கமாக).

**38.** அடவியினில் – காட்டினில்.

**39.** காட்டுயிரையும்.

*கண்ணோட்டம் நாகரிகம் ; கண்டுணர்க வள்ளுவர்சொல் ;*
*மண்ணோட்டும் நல்வாழ்க்கை மாண்பு.* 42

*கண்ணோட்ட வாழ்க்கை கடலுலகம் ஆக, என்றும்*
*எண்ணோட்டித் தெய்வத்தை ஏத்து.* 43

***'ஏழைக் குதவுக'*** *என்றமொழி இந்நாளில்*
*வாழுமோ வாழ்வில் வளர்ந்து?* 44

*செல்வர்தம் வாழ்வுநலம் தெய்வத் திருந்தநாள்*
*அல்லன செய்யார் அறிந்து.* 45

*தஞ்செல்வம் மற்றவரைத் தாங்கற் கெனவாழ்ந்தார்*
*நெஞ்சமதிச் செல்வர் ; நினை.* 46

*வாடுமுகம் கண்டதும் வாடுமே செல்வருளம் ;*
*ஓடும் உதவ உவந்து.* 47

*இந்நாளில் செல்வருளம் எப்படியோ மாறியது;*
*முன்னாள் மொழிபலவும் முட்டு.* 48

*ஏழ்மைக் குதவுக என்றமொழி இந்நாளில்*
*ஏழ்மை வளர்வாழ்வாம் ; எண்.* 49

*ஏழ்மை பெருகா இனியவழி கண்டிடுக ;*
*வாழ்வுநலம் சேரும் வளர்ந்து.* 50

***பிறர்க்கென*** *வாழ்பிறவிப் பேறுடைமை வாழ்க்கை;*
*அறத்து மயமாம் ; அடை.* 51

*உற்றுழி என்பும் உதவும் உளமுடைய*
*நற்றவ வாழ்க்கையை நாடு.* 52

*வாழ்க்கை உடலளவில், வாய்த்த குடியளவில்*
*ஆழ்க்கை பெறுவதே? அன்று.* 53

*உடல்குடியாய் ஊர்உலகாய் ஓங்குயிராய் ஈசன்*
*இடம்செலும் வாழ்க்கை இனிது.* 54

*ஈசனடி சூழ்வாழ்க்கை எவ்வுயிரும் சூழ்வாழ்க்கை;*
*நேசஎன் பீயும் நிறைந்து.* 55

---

42. கண்ணோட்டம் – கருணை ; இரக்கம். (திருக்குறள் : 'கண்ணோட்டம்' பார்க்க.) மண் ஒட்டும் – நிலவுலகைச் செலுத்தும்.

43. எண் ஓட்டி – எண்ணத்தைச் செலுத்தி.

46. நெஞ்ச மதி – நெஞ்சமும் அறிவும் உடைய.

52. உற்றுழி – துன்பம் நேர்ந்த இடத்தில்.
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.' – குறள்

53. ஆழ்ந்துவிடுவதோ அன்று.

55. என்பு ஈயும் : 52–ன் குறிப்பைப் பார்க்க.

# 8. உலகம்

*உலகத்தின் தோற்றம் உயிர்களிற் செம்மை*
*இலகற் பொருட்டென் றிசை.* 1

*வாழ்வுக் குலகம் வளர்ந்து வருகிறது;*
*தாழ்வுக் கெனக்கருதல் தப்பு.* 2

*உலகமில தென்னில் உயிர்களும் இல்லை;*
*பலகலையும் இல்லை; பகர்.* 3

*அவனிஇல தென்றால் அருட்பரமு மெங்கே?*
*தவமுனிவ ருமெங்கே? சார்பு.* 4

*பொன்னுலகைப் பொய்யென்று பூசலிடு கின்றார்கள்;*
*நன்றுண்மை காண்டல் நயம்.* 5

*பொய்யுலகம் என்ற புனிதமொழி ஓராமல்*
*வையத்தை ஏமாற்றல் வம்பு.* 6

*மெய்ப்பொருள் முன்னிலையில் வேறெல்லாம் பொய்யென்றார்*
*மெய்யினைக் கண்டவர் மேல்.* 7

*காலைக் கதிர்ஒளியும் மாலை மதிநிலவும்*
*வேலை மலையுமோ வீண்?* 8

*உலகைப்பொய் என்போர் ஒளிகாற்று நீரில்*
*உலவுதல் இல்லையோ? உன்.* 9

*அறிவை வளர்த்திடும் அன்புலகோ பொய்ம்மை?*
*வெறியர்தம் கூற்றை வெறு.* 10

---

1. இலகல் – இலகுதல் ; விளங்குதல்.
4. அவனி – உலகம்.
5. 'பொன்' – உலகச் சிறப்பைக் குறிக்கும் ஒரு நல்ல அடைமொழி. 'இத்தகைய பொன் னுலகையா பொய்யென்று சொல்வது?' என்பது தொனிப் பொருள். நன்று உண்மை – நல்லது இருத்தலை.
6. வையத்தை – உலகத்தை.
7. 'யாவும் சத்தெதிர் சூந்யம் ஆதலின்' – **சிவஞானபோதம்**
8. வேலை – கடலும்.
10. கூற்றை – சொல்லை.

*மரம்புழு புள்விலங்கு மக்கள் வளர்ச்சி*
*உரம்பெறச் செய்யுலகோ ஊறு?* 11

*இனம்இனம் ஆக இருந்திருந் தோங்க*
*மனம்வளர் மண்ணை மதி.* 12

*பன்மை யினம்பலவும் பாரினில் போரிடல்*
*என்னெனக் கேட்டல் இயல்பு.* 13

*பன்மைப் பகைமைப்போர் பாரில் நிகழ்வது*
*தன்மை ஒருமைக்கே தான்.* 14

*போர்கள் படிப்படியே போக்கு(ம்)நில வேற்றுமையைப்*
*பார்சரிதச் சான்றில் படிந்து.* 15

*போரின் அடியினில் பொங்கிநிற்கும் அன்பினைத்*
*தேரல் அறிவாம் தெளி.* 16

*அன்புநிலைத் தங்கங் கமர்விளைத்து மேலெழுந்து*
*பின்புலக அன்பாகும் பேர்ந்து.* 17

*கட்டன்பு முட்டிக் கரையைத் தகர்த்தெறிந்து*
*நெட்டியுல கன்பாம் நிறைந்து.* 18

*சாதிமதக் கட்டுகள், சாதிமதப் போர்களால்*
*சேதமுறும்; அன்புலகாம் சேர்ந்து.* 19

*நாடுமொழிக் கட்டுகள் நாடுமொழிப் போர்களால்*
*கோடழியும்; அன்புலகாம் கூர்ந்து.* 20

*ஊரன்பும் ஊரன்பும் ஓடிச் சமர்விளைக்கப்*
*பேரன்பு நாடாச்சுப் ; பேறு.* 21

---

11. புள் – பறவை.

12. உயிர்கள் இனம் இனமாக வளர்வது இயல்பு. அவ்வவ்வினத்திற்கேற்ற அளவில் மனமும் வளர்தல் இயற்கை. இவ்வளர்ச்சிக்குக் கருவியா யிருந்து துணை புரிவது மண்ணுலகம். அம் மண்ணுலகை மதி என்றபடி.

14. தன்மை – இயல்பு ; பண்பு. (தன்மை வாய்ந்த ஒருமை.)

15. நில வேற்றுமையை – நிலங்களின் வேற்றுமையை.

16. தேரல் – சிந்தித்து ஆராய்ந்து உண்மை கண்டு தெளிதல்.

17. 'அன்பு அங்கங்கு நிலைத்து' என்பது, கட்டுப்பட்ட அன்பை உணர்த்துவது. கட்டுப்பட்ட அன்பால் போர் விளைவது கண்கூடு. சாதிச் சண்டை, மதச் சண்டை, நிறச் சண்டை, மொழிச் சண்டை, நாட்டுச் சண்டை முதலியவற்றின் அடிப்படையை ஆராய்க.

19. (பின்னே) அன்புலகாம்.......

20. கோடு – எல்லை ; தீமை ; (கட்டுப்பட்ட அன்புடைய) எல்லைகள் ; (அவ்வெல்லைச் சண்டைகளால் விளையும்) தீமைகள்.

*இங்கிலாந்தில் உட்கலகம் எத்தனையோ தோன்றியபின்*
*தங்குமொரு நாடாச்சுச் சார்ந்து.* 22

*ஜெர்மனியில் உட்போர் செறிந்திருந்த காலமுண்டு;*
*கர்மமிகு நாடாச்சுக்; காண்.* 23

*பூசல், உலகைப் புனிதப் படுத்துவது;*
*நேசம் பெருக்குவதாம் நீர்த்து.* 24

*சாதியெலாம் ஒன்றாய்ச் சமயமெலாம் ஒன்றாகும்*
*நீதியுல காகுங்கால் நேர்ந்து.* 25

*நாடுமொழி ஒன்றாகி நானிலத்தை ஓம்பிவரும்;*
*காடெல்லாம் வாழும் கனிந்து.* 26

*போர்க்களம் மக்களின் பொல்லாப் புலன் திருத்தி*
*யார்க்கும் உறவளிக்கும் இங்கு.* 27

*குண்டுகள் மன்பதையின் கோதறுத்துச் சீர்செய்யும்;*
*தொண்டுலகை ஆக்கும் துணை.* 28

*வல்லவர் நூலினும் வன்போர் விரைந்துசெயும்*
*நல்லன என்றே நவில்.* 29

*உலகம் ஒருகுலமாய் ஓங்கிவரும் நாளே*
*கலகமிலா நாளாம் கருது.* 30

*காடும் மலையும் கடலும் பிரிந்ததனால்*
*நாடுகளை வேறெண்ணல் நஞ்சு.* 31

*சீனத்தார் இந்தியர் ஜெர்மனியர் என்றெண்ணும்*
*ஈனம் ஒழிதல் இனிது.* 32

*இத்தலியர் மெக்சிகர் என்றுபுறம் எண்ணாது*
*சத்தகத்தை நோக்கவுறும் சார்பு.* 33

*பசிபிணி சாக்காடு பார்முழுதும் ஒன்றே;*
*வசி, ஒருமை நல்லுலகில் வாழ்ந்து.* 34

*சிற்றுடை ஒன்று,* ***சகஉழைப்பின் கூட்டுறவைப்***
*பெற்றிருத்தல் காண்க பெரிது.* 35

---

24. நீர்த்து – இயல்புடையது.

29. வன்போர் நல்லன விரைந்து செய்யும்.

33. சத்து அகத்தை – சத்துள்ள அகத்தை. சார்பு – தொடர்பு.

34. ஒருமை நல்லுலகில் வாழ்ந்து வசி (வசிப்பாயாக).

35. ஒரு சிறிய உடையை நோக்குக. அதில் உலக உழைப்பு இருத்தலைச் சிந்திக்க. பருத்தி, இராட்டை, தறி முதலியனவும், அவை உற்பத்தியாகும் இடங்களும், அதனதன் மூலப்

*உணவுடை தங்குமிடம் ஒவ்வொன்றும் ஞாலப்*
*பணிஉறவுக் கூட்டுடைமை; பார்.* 36

*சூழ்பொருள்கள் எப்பொழுதும் சொல்லும் உலகுறவைப்*
*பாழ்பிரிவை நீக்கப் பழகு.* 37

*கற்பன கேட்பன காண்பன யாவுமே*
*கற்புலகக் கூட்டுணர்த்தும்; காண்.* 38

*நானா விதப்பொருள்கள் நாடுகளின் கூட்டுரைக்கும்;*
*ஏனோ பிரிவிழுக் கெண்.* 39

*உலகஉழைப் பொன்றா ஒருபொருளும் இல்லை;*
*கலகமேன்? போரேன்? கசப்பு.* 40

*உன்னிஉன்னி வாழ்க உலகுழைப்பின் கூட்டுறவை;*
*அந்நிய நோக்ககற்றும் அன்பு.* 41

*வெண்ணிறம் கார்நிறம் வீண்புறத் தோற்றமே;*
*உண்ணின் றகநோக்க ஒன்று.* 42

*போர்கள் உலகைப் புதுக்கும் பலவழியில்;*
*சீர்களும் செய்யும் சிறந்து.* 43

***புதிய உலகம்*** *புரியும் புதுமை*
*அதிசயம் என்றே அறி.* 44

*மார்க்ஸுடன் எங்கல்ஸும் மாண்புவெல்ஸ் ஐன்ஸ்டனும்*
*பார்க்குப் புதுமைகால் பானு.* 45

*மக்கள் அமைப்பிலும் மாறுதல் செய்புதுமை*
*புக்க விடங்கழிக்கும் போந்து.* 46

---

பொருள்களும், அம்மூலப் பொருள்கள் உண்டாகும் இடங்களும், இன்ன பிறவும் கருதற் பாலன. ஒவ்வொன்றன் உழைப்பையும் நோக்குழி ஒரு சிறிய ஆடையில் உலக உழைப்பு அடங்கியிருத்தல் வெள்ளிடை மலையென விளங்கும். இந்நுட்பம் கீழ்வரும் சில பாக்க ளாலும் தெளிவாகும்.

**36.** ஞாலப் பணி உறவு – உலகத் தொண்டின் தொடர்பு.

**39.** ஏனோ பிரிவு இழுக்கு? எண்.

**40.** ஒன்றா – கலவாத ; சேராத.

**41.** உன்னி உன்னி – எண்ணி எண்ணி. உலகத்தில் 'அந்நியம்' பேசப்படுகிறது. அப்பேச்சு ஒழிதல் வேண்டும். மக்களுக்குள் அந்நியர் எவர்? எல்லாரும் சகோதரரே. உலகம் ஒருகுலமாக முயல்க.

**42.** உள் நின்று அகத்தை நோக்க.

**45.** உலகத்துக்குப் புதுமையைப் பொழியும் பானுக்கள் (சூரியர்கள்).

**46.** புதுமை, இடைக்காலத்தில் புகுந்த விஷத்தைக் கழிக்கும்.

*__பல்லும் குடரும்__ பகரும் வரலாற்றின்*
*கல்வி பயில்க கசிந்து.* 47

*கோரைப்பல் ஆற்றிய கோரக் கொடுமைகளின்*
*பேரைச் சொலநடுங்கும் பேய்.* 48

*நாய்ப்பல் உளதின்றும்; நஞ்சை உமிழ்கிறது;*
*மாய்க்கும் புதுஉலகம் வந்து.* 49

*குடரிற் சினைகள் குலைவிட்ட போது*
*சுடரறிவு மூளையிலை; சொல்.* 50

*குடரிற் புழுச்சினை கொட்டுங் கொடுமை;*
*இடரைக் களைபுதுமை ஏந்து.* 51

*உலக விடுதலை ஊர்கள் உரிமை;*
*கலகமிரா தெங்குமறக் காப்பு.* 52

*__புதிய உலகம்__ பொதுமையின் சேர்க்கை;*
*சதிபகை சேரா சரிந்து.* 53

*துக்கம் புதுஉலகில் தோன்றவே தோன்றாது;*
*பக்கமெலாம் நல்லொழுக்கப் பாங்கு.* 54

*புதிய உலகில் பொருளறம் பொங்கும்;*
*வதிவர் எவரும் மகிழ்ந்து.* 55

*கூட்டுறவால் மக்கள் கொடுந்தனிமைப் பற்றடுக்கும்*
*நாட்டமுறா வாழ்வடைவர் நன்று.* 56

*எல்லாரும் வாழவே எல்லாரும் சேர்ந்துழைப்பர்;*
*கல்லார் இலராவர் காண்.* 57

*பொதுமை உலகிடைப் பொய்களவு சூதுப்*
*பொதியகலும்; நீறாகும்; போற்று.* 58

---

49. நாய்ப்பல் இன்றும் உளது. அது நஞ்சைக் கக்கிக்கொண்டிருக்கிறது. புது உலகில் அப் பல் மாறுதல் அடையும்.

50. ஆதிகால மனிதனுடைய குடரில் சினைஉறுப்புக்கள் குலை விட்டிருந்தன. அந்நாளில் மூளையில் அறிவு விளக்கம், பெரிதும் இல்லை. சினை உறுப்புக்கள் தேயத் தேய, மூளையில் அறிவு விளக்கம் பெற்றதென்க.

51. இன்னும் மனிதன் குடரில் ஒரு கொடிய சினைஉறுப்பு உள்ளது. அது புழு வடிவினதாயிருக்கும். அதில் கொடுமை உண்டு.

52. எங்கும் கலகம் இராது ; எங்கும் அறக்காவல் உண்டு.

55. வதிவர் – வாழ்வர்.

*பசியறியார்; நோயறியார்; பாவமறி யாரே;*
*கசடறியார் எல்லாரும் கற்று.* 59

*உணவும் உடையும் உறைவிடமும் பெற்றுக்*
*குணமடைவர் எல்லாமும் கொண்டு.* 60

*வாழ்வொழுக்கம் சட்டமாய், மன்றம் மனமாயின்,*
*தாழ்வுச் சிறையேன்? சனி.* 61

*நற்கல்வி நல்லறிவு நற்செயல் நற்காட்சி*
*கற்புலகை ஆக்கும் கலந்து.* 62

*உலகமே ஒருடலாய் ஒத்துயிரோர் அன்புக்*
*குலமுகிழ்த்தால் என்னகுறை? கூறு.* 63

*எல்லாரும் இன்புற் றிருக்க நினைந்துவந்த*
*நல்லார் மனம்செயலாம் நன்கு.* 64

*கொல்லா விரதம் குவலயத்தில் ஓங்கநினை*
*வல்லா ருளம்செயலாம் வாழ்.* 65

*எவ்வுயிரும் நீங்கா துறையுமிறை என்றெழுந்த*
*செவ்வை மொழியுலகாம் சேர்ந்து.* 66

*தீய உயிர்த்தோற்றம் சேரா புதுஉலகில்*
*மாயக் கலைமறையும் மாண்டு.* 67

*தீங்கே மலியுலகம் தீர்ந்தது; தீங்குநலம்*
*தேங்குலகம் உண்டழியும் தேய்ந்து.* 68

*நன்மையே சேர்ந்துவரும் ஞாலம் பிறத்தலைக்காண்;*
*தன்மை வளர்ச்சிஇயல்; சாற்று.* 69

*அருகரொடு புத்தர் அருட்கிறிஸ்து முன்னே*
*கருதிய நல்லுலகைக் காண்.* 70

---

**64.** நல்லார் மனத்தில் எண்ணிய எண்ணங்கள் இனி வரும் புது உலகில் செயலாகும் என்றபடி.
'**எல்லாரும்** இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.' – **தாயுமானார்**

**65.** 'கொல்லா விரதம் குவலயமெல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே.' – தாயுமானார்.

**66.** 'எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்
றெவ்வுயிர்க்கும் அன்பா யிரு.' – **சைவசமயநெறி**

**68.** தீங்கும் நலமும் கலந்துள்ள உலகம் இப்பொழுது இருக்கிறது. அஃது அழியும். (உண்டு ; அழியும்.)

*பூங்குன்றர் வள்ளுவனார் புண்ணியர்கள் எண்ணிய*
*பாங்குலகக் காட்சியினைப் பார்.* 71

*மாது பிளவட்ஸ்கி மார்க்ஸ்ராம கிர்ஷ்ணரவர்*
*சோதிவள்ளல் சொல்லுலகாம்; சூழ்.* 72

*வாழ்க உலகம்; வளர்க புதுஉலகம்;*
*வீழ்க பிரிவுகள் வெந்து.* 73

*உலகம் உலகமென ஒன்றை நினைந்த*
*கலைஞருளம் வாழ்க கலந்து.* 74

*உலகம் ஒருகுலமாய் ஓங்க உழைத்த*
*பலரறிவு வெல்க படர்ந்து.* 75

---

71. பூங்குன்றர் – 'யாதும் ஊரே யாவரும் கேளிர்........' என்ற புறப்பாட்டைப் பாடியவர்.

72. சோதி வள்ளல் – இராமலிங்க சுவாமிகள். (இப்பெரியோர்கள்) சொல்லிய உலகு இனி ஆகும்.

# 9. அறம்

*மனத்துக்கண் மாசில னாதலறம் என்றார்*
*மனத்தைப் படியறிஞர் வாழ்ந்து.* 1

*குழந்தை மனம்அறம்; கோதுகள் பின்னே*
*நுழைந்தவிதம் எண்ணிஅழு நொந்து.* 2

*பளிங்கனைய நெஞ்சில் படர்ந்தது பாசி;*
*விளங்கறத்தை மூடியது மீது.* 3

*அறம்விளங்க மாசை அகற்றுவ தென்ன?*
*திறம்விளங்க **வள்ளுவரைத்** தேடு.* 4

*பொருட்பாலோ டின்பப்பால் போந்தஅறப் பாலாம்*
*அருட்பால் அருந்துக ஆர்ந்து.* 5

*பொருளினில் இன்பத்தில் பொன்றுமே மாசு;*
*தெருளறம் பூக்கும் செழித்து.* 6

***பொருளில் இடங்களில்** பொய்களவு மாசு*
*திரளும்; அறம்மலரா; தீட்டு.* 7

*பொருளிலற் கிவ்வுலகம் இல்லையே என்ற*
*அருளமுதை உண்க அடைந்து.* 8

*பொருளில் அறம்வேண்டும்; பூமிஅதை விட்டால்*
*திரளும் இருள்மனத்தில் சேர்ந்து.* 9

---

1. 'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.' – குறள்
அறிஞர் – திருவள்ளுவர்.

5. பொருளிலும் அறமிருத்தல் வேண்டும். இன்பத்திலும் அறமிருத்தல் வேண்டும். இந்நுட்பம், 'பொருட்பாலோ டின்பப்பால் போந்த அறப்பாலாம்' என்று சொல்லப்பட்டது. இதனால் அறத்தின் சிறப்புக் கூறியவாறாம். அருட்பால் – அருளமுது.

6. பொன்றுமே – அழியுமே. தெருள் – தெளிந்த ; தெளிவுடைய.

7. பொருள் இல் – பொருள் இல்லாத.

8. 'அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.' – குறள்

9. பொருளில் – பொருளினிடத்தில்.

*தேவை அளவில் திரட்டும் பொருட்செல்வம்*
*பூவை அறமாக்கும் போக்கு.* 10

*காதல் மனமாசைக் கல்லுமென இன்பப்பால்*
*ஓதலை உன்னிப்பார் ஓய்ந்து.* 11

*ஒருத்தி ஒருவனுறும் உத்தம இன்பம்*
*திருத்தும் மனமாசைத் தீர்த்து.* 12

*ஒருவன் ஒருத்தி உளங்கலந்த அன்பு*
*கரியமன மாற்றும் கடிந்து.* 13

*அறவிதை காதல்; அழியா தெழுந்தால்*
*அறிவை வளர்க்கும் அணைந்து.* 14

*ஈருயிர்க் காதலே ஓருயி ராகிநின்று*
*பாருள் பரப்பு(ம்)அறம் பார்.* 15

*காதல் மணத்துக்குக் கட்டுக்கள் திட்டங்கள்*
*ஓதலும் செய்தலும் ஊறு.* 16

*நாட்டுமதச் சட்டங்கள் நானிலத்தில் காதலை*
*வாட்டமுறச் செய்யும் வதை.* 17

*காதல் உரிமை, கடலுலகக் கட்டுக்கே*
*நீதி விடுதலையாம் நேர்ந்து.* 18

*கட்டுவது காதலைக் காசினியில் நல்லறத்தை*
*வெட்டுவ தாகும் வெறுத்து.* 19

*காதல் வளர்வாழ்வு காரிருளைப் போக்குவது;*
*ஓதுமவ் வாழ்வேற்க உன்.* 20

*குழந்தை பிறந்ததும் கூடும் தியாகம்;*
*அழுந்திய மாசகற்றும் ஆழ்ந்து.* 21

*குழவியுடன் ஆடக் குலவியெழும் அன்பு*
*குழவிமனம் ஆக்கும் குணம்.* 22

*பெண்ஆண் உறவு பெருக்கும் அறத்தினைக்*
*கண்ணறியும் காற்றறியும் கற்று.* 23

---

**10.** பூவை – உலகை.

**11.** கல்லும் – அகழும் ; வேரோடு தோண்டிக் களையும்.

**13.** கரிய மனம் – கருமை மனம் ; மாசுள்ள மனம்.

**19.** காசினியில் – உலகத்தில்.

*பெண்ணை விடுத்தோடும் பித்தர்தம் நெஞ்சமும்*
*உண்ணும் அழுக்கை உவந்து.* 24

*அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நீத்தல்*
*வழுக்காத்* ***துறவாம்*** *வழுத்து.* 25

*வீட்டை விடுத்தோடல் வேடிக்கைப் பொய்த்துறவாம்;*
*காட்டில் திரிதல் கடி.* 26

*மனத்தை அடக்கியே மாசகற்ற மாந்தர்*
*வனத்தினில் யோகிருப்பர் வந்து.* 27

*மனத்தை ஒடுக்கும் மலயோகம் முன்னாள்*
*இனத்திரள் ஆகியதே இங்கு.* 28

*சத்தியம் தர்மம், அஹிம்சையும் தர்மமென்றார்;*
*உத்தமர் செம்மொழிகள் ஊற்று.* 29

*பொய்யாமை ஆற்றின் புகும்அறம் என்றெழுந்த*
*பொய்யா மொழிமணி, பூண்.* 30

*கொல்லாமை நோன்பு கொழிக்கு(ம்)அறம் என்றமொழி*
*கல்லா உலகழிக, காய்ந்து.* 31

*காலத்துக் கேற்றதைக் கண்டொழுகச் சீலஅறம்*
*சால வளரும் தழைத்து.* 32

*பயன்கருதாத்* ***தொண்டு*** *பரப்பும் அறத்தை*
*வயம்பட, ஏற்றொழுக, வாழ்.* 33

*மாசற்ற நெஞ்சில் மலர்வது மெய்த்தொண்டு;*
*நேசஅறம் வேறெதுவோ? நேர்.* 34

*செருக்கு வளைநெஞ்சில் சேர்வது தொண்டு;*
*பெருக்கறம் வேறென்ன? பேசு.* 35

---

24. அழுக்கை – மன மொழி மெய்களால் விளையும் பலதிற மாசுகளை.
25. ‘அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.’ – குறள்
28. மலயோகம் உடல்நலனுக்கென்று செய்யப்படுவது. (ஆன்ம நலனுக்கென்று செய்யப்படுவது அமலயோகம்.) மலயோகம் நாளுக்கு நாள் பலவகையாகப் பிரிந்து பற்பல இனங்களாகத் திரண்டது.
30. ‘பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.’ – குறள்
மணியைப் பூண்.
31. ‘நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.’ – குறள்
35. வளை – வளைந்த ; சாய்ந்த.

*தொண்டர் பெருமையைச் சொல்லுக; கேட்டிடுக;*
*வண்டல் அழியும் வலிந்து.* 36

*தொண்டர் குழாம்மலியத் தூய அறம்செறியும்;*
*அண்டம்அவ் வண்ணமாம்; ஆழ்.* 37

*தொண்டில் அறமும் அறத்தினில் தொண்டுமுறும்;*
*கண்டு பணிசெய் கனிந்து.* 38

***பாதிரிமார்*** *தொண்டினைப் பார்முழுதும் பார்க்க; அதை*
*மாதிரியாக் கொள்ளல் மதி.* 39

*கிறித்துவ நல்லோர் கிளர்ந்துசெய் தொண்டில்*
*அறத்திறம் ஊர்தல் அறி.* 40

*கன்னியர் கூட்டம் கடவுள் திருகூட்டம்;*
*அன்னவர் தொண்டும் அறம்.* 41

*கன்னியர் தெய்வக் கருத்தினர்; அன்னவர்க்கு*
*மன்னறத் தொண்டே மதம்.* 42

*கன்னியர் தொண்டளிக்கும் காட்சியோ தெய்விகம்;*
*உன்னமனம் போதுமோ ஒன்று!* 43

*தன்னலம் இன்றியே தாங்கிப் புரிகின்றார்;*
*கன்னியர் மெய்த்தொண்டைக் காண்.* 44

*எங்கோ பிறந்தனர்! எங்கோ வளர்ந்தனர்!*
*மங்கையர்க்குத் தொண்டற வாழ்வு.* 45

*இந்தியர் சீழ்மலத்தை ஏந்துகிறார் வெண்ணிறத்தில்;*
*வந்தபெருங் கன்னியர்கள்; வாழ்த்து.* 46

*நாடுமொழிச் சார்பெல்லாம் நண்ணாவே, நன்மக்கள்*
*கூடறத் தொண்டினில் கூர்த்து.* 47

*சாதிமதச் சார்புகள் சாராவே, மேன்மக்கள்*
*நீதிஅறத் தொண்டில்; நினை.* 48

*வேடத்தில் பீடத்தில் வீண்வாதத் தர்க்கத்தில்*
*பாடத்தில் இன்றறப் பண்பு.* 49

---

37. அண்டம் – உலகம். உலகம் தொண்டர் கூட்டத்தின் பெருக்கால் அறமயமாகும் என்றபடி.

41. கன்னியர் – ஆண்டவன்தொண்டுக்கெனத் துறவு பூண்டொழுகும் கிறித்துவப் பெண்மணிகள் (Nuns).

43. ஒருமனம் போதுமோ என்றபடி.

*மாடத்தில் பட்டத்தில் மாண்பதவி ஈட்டத்துக்*
*கூடத்தில் இன்றறக் கூட்டு.* 50

*இயற்கைசெய் சீர்திருத்தம் ஏற்கும் வளர்ச்சி;*
*முயற்சிக் குதவலறம் மொய்த்து.* 51

*வளர்ச்சிக்குக் கேடு வழங்கும் திருத்தம்*
*கிளர்ச்சியிலே நின்று கெடும்.* 52

*காலத்துக் கேற்றவணம் கற்றோர் சமுகத்தைக்*
*கோலப் புகுதலறக் கூறு.* 53

*பழமையி னின்றும் புதுமை பிறக்கும்*
*வழிபரி ணாமஅற வாய்ப்பு.* 54

*பழமையை ஏசாதே பண்புதுமை நோக்கி*
*அழைத்தழைத்து வாழ்த்தல் அறம்.* 55

*மூர்க்க விதையில் முளையாது நல்லறம்;*
*பார்க்குள் எரிவனமாம்; பார்.* 56

*சாந்தமாம் வித்தினிடம் சார்ந்துமுளை மெய்அறம்*
*காந்தி வனமாகும்; காண்.* 57

*அறமே கடவுள்; அறமே அடியார்;*
*அறமே சமயம்; அடை.* 58

*அறந்தூய்மை; மாசிலது; ஆருயிர்ச் செல்வம்;*
*மறந்தால் அழியுமண் வாழ்வு.* 59

*அறமரம்; கல்விமெய் அன்பீகை ஆதி*
*உறுகவடு பூஇலைகாய் ஒப்பு.* 60

*அறத்தினும் ஆக்கமிலை; அவ்வறத்தை மக்கள்*
*மறத்தலினும் கேடில்லை மாறு.* 61

*கல்வியில் செல்வத்தில் கைத்தொழிலில் வாணிபத்தில்*
*செல்லஅறம் வாழ்தல் சிறப்பு.* 62

---

50. ஈட்டத்துக் கூடத்தில் – கூட்டத்துத் (தொழிற்)சாலைகளில்.

52. கிளர்ச்சியிலே – கிளர்ச்சி அளவில்.

54. பரிணாமம் – ஒன்று மற்றொன்றாக மாறுதல் (பால் தயிராவது போல).

60. அறம் மரம் போன்றது ; கல்வி, மெய்மை, அன்புடைமை, ஈகை முதலியன கிளை, இலை, பூ, காய் முதலியன போன்றன. கவடு – கிளை.

61. ‘அறத்தினூஉங் காக்கமு மில்லை; அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.’ – குறள்

62. அறம் செல்ல வாழ்தல்.

*வீட்டில் வளரறம் வீதிஊர் நாடுலகைக்*
*கூட்டுறலால் சேர்த்துவிடும் கூர்ந்து.* 63

*அறத்துக்கென் றோரிடம் ஆளமைப்புக் காலம்*
*குறித்துவிடல் தீது; குறை.* 64

*எங்கெங்கும் என்றென்றும் ஏற்றொழுக நல்லறத்தை;*
*மங்கும் மனமாசு மாய்ந்து.* 65

*கற்றலும் கேட்டலும் காண்டலும் எல்லாமும்*
*உற்றறம் ஆக உழை.* 66

*அறம்பொதுச் செல்வமே; யார்க்கும் உரிமை;*
*புறம்பென் றொதுங்கல் புரை.* 67

*உலக நடையாய் உயிர்அறம் ஆக,*
*பலகலை ஆவிபெறும் பார்த்து.* 68

*உலகிடைத் தோன்றிய உத்தமர் வாய்மைக்*
*கலைகள் அறமே; கருது.* 69

*ஆன்றவர் சொல்லில் அறக்கடவுள் வீற்றிருக்கும்;*
*சான்றவழி பாடுசெய் சார்ந்து.* 70

*பொய்யாமை கொல்லாமை பூக்களால் அர்ச்சிக்க;*
*'பொய்யா யின'வெல்லாம் போம்.* 71

*அறவழி பாடுசெய் அன்புலகம் ஆக்க*
*உறவுகொண் டென்றும் உழை.* 72

*அறவழி பாட்டினில் அந்தண்மை ஓங்கும்,*
*உறஉலகு தொண்டுசெய் ஓர்ந்து.* 73

*அறவோர் தொகைபெருக; அன்புலகம் வாழ*
*மறவோர் தொகைஅருக மாய்ந்து.* 74

*அறநெறி வெல்க; அறவுரை மல்க;*
*உறவுயிர் வாழ்க உலகு.* 75

---

**67.** புரை – குற்றம்.

**71.** 'பொய்யா யினவெல்லாம் போயகல........' – சிவபுராணம் : திருவாசகம்

**73.** அந்தண்மை – எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் தன்மை.
'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.' – குறள்
உலகு உற – (அந்தண்மைச் செல்வத்தை) உலகம் அடைய.

# 10. சமயம்

*சமயத்தின் உள்ளே தழைத்தது குப்பை;*
*அமைவு குலைந்ததை ஆய்.* 1

*தாதுப் பொருளுரைத்தார், தர்க்கங்கள் செய்தலுத்தார்,*
*வாதுமத மூர்க்கர் வரிந்து.* 2

*வேந்தரிடம் சென்றதுவும் வேடிக்கை பூண்டதுவும்*
*சாந்தமதம் பேயாச்சே தாழ்ந்து.* 3

*மடங்கள் புகுந்ததும் மடிந்தது கட்டால்;*
*இடங்கள் சமயமோ? எண்.* 4

*கோயில், திருடர் குகையாய் மலிந்தது*
*தாயில் மகவாய்த் தனித்து.* 5

*வேடம் சமயமன்று; வேடிக்கை அஃதன்று;*
*வாடும் விரதமன்று; வம்பு.* 6

*மூக்கைப் பிடித்தலும் மூச்சை ஒடுக்கலும்*
*வாக்கை அடக்கலும் மாறு.* 7

*மண்புனல் மூழ்கி மறையப் புகும்வித்தை*
*கண்கட்டு சாலம் கருது.* 8

*வேற்றுருக் கொள்ளலும் விண்ணில் பறத்தலும்*
*காற்றுச் சமயக் கலை!* 9

*காற்றைப் பிடிக்கும் கணக்குச், சமயமன்று;*
*ஏற்றம் உடம்புக் கினிது.* 10

*பெண்பொன்னை மண்ணைப் பிரிந்து துறந்திடல்*
*கண்பிடுங்க எண்ணுவதாம் கைத்து.* 11

---

2. வரிந்து – வரிந்துகட்டி.

4. (சமயம்) மடங்கள் புகுந்ததும்......... இடங்கள் – மடங்கள் முதலிய இடங்கள்.

9. காற்றுச் சமயம் – காற்றிலே பறக்கும் சமயம். காற்றிலே பறப்பது மெய்ம்மைச் சமயம் அன்று என்றவாறு. அதனால் அதைக் 'காற்றுச் சமயம்' என்று இகழ்ந்தவாறாம். 'காற்றாடிச் சமயம்' என்பது ஆட்சி.

11. கைத்து – கசந்து ; வெறுத்து.

*எங்கெங்கும் உள்ளபரம் இம்மூன்றில் இல்லையோ*
*பங்கம் பரத்துக்குப் ; பார்.* 12

*இல்லற வாழ்வில் இருத்தல் சமயமாம்;*
*பல்லறம் பாலிக்கும் பாங்கு.* 13

*அன்புப் பெருக்கினில் ஆழ்தல் சமயமாம்;*
*இன்னது வாழ்வென் றிரு.* 14

*தன்னைப் பிறர்க்குத் தருதல் அருட்சமயம்;*
*மன்னுமது இல்வாழ்வின் மாட்டு.* 15

*சேர்க்கையில், அன்புச் செறிவினில், சீர்சமயம்*
*ஆர்க்கஇல் வாழ்க்கை அடை.* 16

*தேவைக்கு மேலீட்டாச் செல்வம் சமயமே;*
*ஆவி வளர்க்கும் அரண்.* 17

*தேவைக்கு மேலே திரட்டிச் சமயமென்றும்*
*தேவென்றும் கூவல் திருடு.* 18

*பாவத்துக் கஞ்சுமனம் பார்க்கும் சமயஅறம்;*
*ஆவிக் குரிய அமுது.* 19

*குற்றம் பொறுத்தலில் கூடும் சமயநலம்;*
*மற்றுமதை மன்னித்தல் மாண்பு.* 20

*தன்னுயிராய் மன்னுயிரைத் தாங்கல் சமய(ம்); அது*
*மன்னிப்பின் பொங்கல் ; மதி.* 21

*பகைவரை நேசிக்கும் பான்மை சமயம்;*
*இகலை அழிக்கும்; இசை.* 22

*செபம்செய்யச் செய்யச் சிறக்கும் சமயம்;*
*அபயம் அளிக்கும் அருள்.* 23

*செகஞ்செழிக்கச் செய்யும் செபத்துள் சமயம்*
*அகஇருள் போக்கும் அறம்.* 24

*ஓயா திறையினை உன்னல் சமயமே;*
*காயா மரங்கனிசெய் கார்.* 25

---

**15.** அது – அருட்சமயம் ; (அவ்வருட் சமயம் இல்வாழ்வின் மாட்டு மன்னும்).

**16.** ஆர்க்க – தங்க ; பொருந்த.

**20.** அதை – குற்றத்தை.

**24.** செபத்துள் சமயம் உண்டு என்றபடி.

**25.** கார் – மேகம் ; மழை.

*எல்லாம் பரமாய் இருத்தல் சமயமென*
*வல்லார் வகுத்தார் வழி.* 26

*தொண்டுநெறி நின்றால் தொடரும் சமயஉண்மை;*
*அண்டிப் பிழைக்க அறி.* 27

*தொண்டைப் புரிந்திருத்தல் தூய பரசமயம்;*
*மண்டு புகழேன்? மருள்.* 28

*உற்பத்திக் கென்றுழைத்தல் உண்மைச் சமயமாய்*
*அற்பில் கிடத்தும் அறம்.* 29

*சமய ஒருமையைச் சாந்தமிலார், பன்மைச்*
*சமயங்கள் ஆக்கினர்; சாட்டு.* 30

*பல்சமயத் தீயுணர்வு பற்றி எரித்ததே*
*மல்லல் உலகை மறித்து.* 31

*சமயங்கள் ஒன்றென்றே சார்ந்தறிஞர் சொற்றார்*
*அமயத்தில் அங்கங்கே ஆர்ந்து.* 32

*சமயப் பொதுமையைச் சன்மார்க்கம் என்றும்*
*இமயத் தவர்புகன்றார் இன்பு.* 33

*ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்*
*என்றே எழுந்தமொழி ஏற்பு.* 34

*கோயில் சமயம், குணத்தை அளியாது*
*போயிற்றுப் பிற்காலப் போக்கு.* 35

*கோயில்கள் தோன்றியபின் கோதுகளும் தோன்றினவே;*
*மாயிரு ஞாலத்தின் மாண்பு!* 36

*கோயில் திருத்தம் குலவியே வானளவு*
*போயிற்று; மேலென்ன போக்கு?* 37

*மண்டபம் கொண்டனர் மாண்மதியர்; அங்கேனும்*
*ஒண்டியதோ சீர்திருத்தம் ஓய்ந்து?* 38

*அமைப்பேவேண் டாஎன் றறிந்தசிலர் சொன்னார்;*
*அமைப்புடலில் நின்றே அறி.* 39

---

28. புகழ் நாடித் தொண்டு செய்வது சமயமாகாது. அது மருளே ஆகும். 'வேண்டேன் புகழ்.' – **திருவாசகம்.**

29. அற்பில் – அன்பில்.

33. இமயத்தவர் – இமயம் போன்ற தவமுடையார். (தவத்தில் இமயம் போன்றவர் என்க.)

34. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது திருமூலர் **திருமந்திரம்.**

39. அமைப்பாகிய உடலில் இருந்துகொண்டு, அமைப்பே வேண்டா என்று சொல்வது பொருளுடையதாகா தென்க.

*ஆன்றோர் மொழிகோயில்; அர்ச்சனை ஓதலதை;*
*ஊன்தோல் உளம்உருக ஓது.* 40

*சமயம் விடுத்துச் சமயம் புகுதல்*
*இமையும் பொருந்தாதே; எண்.* 41

*ஒருதெய்வ மார்க்கமே உத்தமச்சன் மார்க்கம்;*
*கருதல்பொய் - மெய்எங்கே? காட்டு.* 42

*நாகரிகம் இல்லாத நாடுகளில் புன்மதப்போர்*
*வேகம் மிகநடக்கும்; வீண்.* 43

*மக்களில் கீழ்கள் மதப்போர் இடுவார்கள்;*
*புக்கஅறி யாமையைப் போக்கு.* 44

*பன்மார்க்கத் தீங்குகளைப் பாரில் ஒழிக்கஎழு;*
*சன்மார்க்க ஒருணர்வே சால்பு.* 45

*சன்மார்க்கம் ஒன்றே சகமார்க்கம் ஆகுமினித்*
*துன்மார்க்கம் போக்குந் துணை.* 46

*சன்மார்க்கத் தொண்டுசெய்; சன்மார்க்கத் தொண்டுசெய்;*
*சன்மார்க்கத் தொண்டே தவம்.* 47

***சித்தர் மரபின்*** *திரட்சியே சன்மார்க்கம்;*
*இத்தரையில் தொன்மையென் றெண்.* 48

*உபநிடத உள்ளம் உணர்த்துமெய்ம் மார்க்கம்*
*அபயம் எவர்க்கும்; அருள்.* 49

*அருகரொடு புத்தர் அருட்கிறிஸ்து வாய்மை*
*பெருகுசன் மார்க்கமெனப் பேசு.* 50

*மகம்மது சொல்மார்க்கம் மாநிலச் சன்மார்க்கம்;*
*அகமணி ; போகும் அழுக்கு.* 51

*திருமூலர் மந்திரம் தெய்வச்சன் மார்க்கக்*
*கருமூலம் என்று கருது.* 52

---

42. இருப்பது ஒரே மார்க்கம். அதிலே, இங்கே பொய் அங்கே மெய் என்று கருதல் எப்படிப் பொருந்தும்?..........

45. ஒழிக்க எழுக.

48. தொன்மை – பழமை.

49. எவர்க்கும் அபயம் அளிக்கும் ஒன்றே அருளாகும்; அருட் சமயமாகும்.

51. அகத்தில் அணி.

*மூலர் மரபை முதுதாயு மானவர்*
*சீல வழிவளர்த்தார் தேர்ந்து.* 53

*இராமலிங்க வள்ளல் எழில்அருட்பா எங்கும்*
*இராமலிரா சன்மார்க்க இன்பு.* 54

***உலகியல் மார்க்கம்*** *உயர்பர மார்க்கம்,*
*கலவைச்சன் மார்க்கத்தில் காண்.* 55

*உலகினைக் கொண்டே உயர்பரத்தைக் காட்டல்*
*இலகுசன் மார்க்க இயல்.* 56

*பிறப்பிறப்பை ஆய்ந்தால் பிறங்குஞ்சன் மார்க்கச்*
*சிறப்புக்; கிடைக்கும் திறப்பு.* 57

*பிறந்தான் வளர்ந்தான் பெரிய மனிதன்;*
*இறந்தானே பாவம்! இழிவு!* 58

*இறப்பைத் தவிர்க்கும் இனியசன் மார்க்கம்;*
*பிறப்புக் கிடமேது? பின்பு.* 59

*மைந்தன் திடீரென மாநிலத்தில் தோன்றவிலை;*
*சிந்திக்க முன்பின்; தெளி.* 60

*முன்பார்க்கப் பின்பார்க்க மூத்தஉயிர் மைந்தனது*
*தொன்மார்க்கம் தோன்றும் தொடர்ந்து.* 61

*முன்பார்க்கப் பின்பார்க்க மூலத்தை மைந்தனுக்குச்*
*சன்மார்க்கம் போதிக்கும்; சார்.* 62

*முன்பார்க்கப் பின்பார்க்க மூல(ம்) உணர்மைந்தன்*
*சன்மார்க்கன் ஆவன் தணிந்து.* 63

*வளர்ச்சியை நோக்க மனிதனது முன்பின்*
*உணர்ச்சியில் தோன்றும் உறைந்து.* 64

*விஞ்ஞானச் சத்திக்கு மேம்பட்ட சன்மார்க்க*
*மெய்ஞ்ஞானச் சத்திபெற வேண்டு.* 65

---

55. உலகமார்க்கமும் பரமார்க்கமும் கலத்தலையுடைய சன்மார்க்கம்.

57. திறப்பு – திறவு ; சாவி.

61. பகுத்தறிவுடைய மனிதப் பிறப்பைக் கொழுகொம்பாகக் கொண்டு, அதன் முன்னிலையையும் பின்னிலையையும் ஆராய்ந்து பார்த்தால், மனிதனது பழைய வரலாற்றுவழி இனிது விளங்கும். மனிதப் பிறவி மற்றப் பிறவிகளிலிருந்து வளர்ந்து வளர்ந்து வந்தமையால், அது, ‘மூத்த உயிர்’ என்னப்பட்டது. **டார்வின்** முதலியோர் ஆராய்ச்சிகளைச் சிந்திக்க.

*மைந்த னிடத்துள்ள மாண்புகளை விஞ்ஞானம்*
*எந்த வழிகாணும் இங்கு!* 66

*விஞ்ஞானம் காணாத வேறுபல சத்திகளை*
*மெய்ஞ்ஞானம் காட்டும் மிகுந்து.* 67

*விஞ்ஞானக் கல்வி விலங்கிட்டு நின்றுகொண்டு*
*மெய்ஞ்ஞானம் என்னஎனல் வீண்.* 68

*மெய்ஞ்ஞானம் தோன்றியதும் மெய்ப்பொருள்முன் அண்டமெலாம்*
*உய்யஇயங் கல்தெரியும் ஒத்து.* 69

*சன்மார்க்கக் கல்வியே சாகாத கல்வியாம்;*
*கொல்மார்க்கம் வீயும் குலைந்து.* 70

*சன்மார்க்கச் சத்தியே சாந்தம் அளித்தருளும்;*
*வன்மார்க்கம் மாயும் மடிந்து.* 71

*சன்மார்க்க ஆட்சி சகத்தில் பரவிவரப்*
*புன்மார்க்க ஆட்சியெலாம் போம்.* 72

*சன்மார்க்க வாழ்க்கை தழைத்துப் பெருகிவரத்*
*துன்மார்க்கம் சாகும் தொலைந்து.* 73

*சன்மார்க்கம் நின்றொழுக; சத்திகளைக் கண்டடைக;*
*பன்மார்க்கம் ஓடும் பறந்து.* 74

*சன்மார்க்க வாழ்வு சமயப் பெருவாழ்வு;*
*மன்மார்க்கம் வெல்க வளர்ந்து.* 75

---

69. எல்லா அண்டபிண்டங்களும் – சராசரங்களும் – மெய்ப்பொருளாகிய பரத்தின் முன் னிலையில் இயங்கி வருதல் உண்மை. இவ்வுண்மை அஞ்ஞானிக்கு விளங்குவதில்லை ; மெய்ஞ்ஞானம் தோன்றியதும் விளங்குமென்க.

70. வீயும் – அழியும்.

# 11. தீர்க்கர்

*தீர்க்கர் வரலாற்றைத் தேடாதே; ஆயாதே;*
*யார்க்கும் தெரிவரிதே அஃது.* 1

*அகண்ட பரம்அடைவே; அத்தைக்கண் காண்டல்*
*விதண்டையாம்; தீர்க்கரடி வேண்டு.* 2

*இயற்கையுள் தீர்க்கருள் ஈசன் இருத்தல்*
*பயிற்சியில் காணப் பழகு.* 3

*யோகிகள் ஞானிகள் தீர்க்கரலர்; யோசிக்க*
*வேகமனம் விடுத்து மேல்.* 4

*யோகிமெய்ஞ் ஞானி இயற்கைநீத் தால்நோய்கள்*
*ஏகியே பீடிக்கும் எய்த்து.* 5

*தீர்க்கரை நோயொன்றும் சேராதே; அன்னவரைப்*
*பார்க்கவும் நில்லா பயந்து.* 6

*தெய்வநிலை பெற்றவர்கள், சீரியற்கை வென்றவர்கள்*
*செய்யவுடல் தீர்க்கர் சிறந்து.* 7

*தீர்க்கர் பலரென்பர் செந்நெறியில் நில்லாதார்;*
*பார்க்க* ***ஒருவரே;*** *பாடு.* 8

*ஒருதெய்வம் நிற்கும் உளமுடைய தீர்க்கர்*
*ஒருவரே என்றுணர்க ஓர்ந்து.* 9

*ஈசன் எனஉலகம் ஏத்துவது தீர்க்கரையே;*
*நேச மிகவிளங்க நேர்.* 10

---

1. தீர்க்கர் – தீர்க்கதரிசிகள் ; குருமார் ; சித்தர் ; நபிகள் ; உலகை நடாத்துவோர். (இவரைச் சிலர் சகுணமூர்த்திகள் என்றும், அவதாரங்கள் என்றும் கூறுவர்.)
2. அகண்ட பரம்பொருள், (உயிர்கள்) அடையும் கதியேயாகும். அதைப் பார்த்தல் இயலாது. வழிபாட்டுக்குரியவர் தீர்க்கர் என்பது அறியத்தக்கது. விதண்டையாம் – விதண்டாவாதமாகும்.
3. 11–ம் பாட்டின் குறிப்பைப் பார்க்க.
4. சாந்த மனத்தால் யோசிக்க என்றவாறு.
5. எய்த்து – நன்கு அறிந்து.
7. செய்ய உடல் : அழியாத உடலை உணர்த்துவது.
10. நேர் – (இவ்வுண்மையைக்) காண்பாய் ; சந்திப்பாய்.

*நபிஇயற்கை ஏசுபுத்தர் நாதர்சேய் கண்ணன்*
*சுபமவுனன் தீர்க்கரெனச் சொல்.* 11

*விரும்பும் ஒருவரை வேண்டுதல் செய்க;*
*அரும்பும் ஒருமையுணர் வாழ்ந்து.* 12

*தீர்க்கருள் தாழ்வுயர்வு சிந்தனையில் கொள்ளாதே;*
*ஆர்க்கும்பொய்ப் பேய்கள் அணைந்து.* 13

*ஒருதெய்வ உள்ளத்தார் ஒன்றாவர் உள்ளின்;*
*மருவலெங்கே தாழ்வுயர்வு மாசு?* 14

*தீர்க்கருள்* **பேதங்கள்** *சேர்ந்துவிட்ட காலத்தில்*
*பார்க்குள் பிணக்கதிகம்; பார்.* 15

*ஞாலம் அமைதியுற நாதாந்த தீர்க்கரிடம்*
*சால அபேதங்கொள் சார்ந்து.* 16

*சிந்திக்கத் தீர்க்கரைச் செப்பிய போதனையாய்ச்*
*சந்தமிக மாறிடுவர்; சத்து.* 17

*போதனைகள் ஒன்றாய்ப் பொருந்திய நல்லுயிரில்*
*நாதம் இசைக்கும் நயந்து.* 18

*நாதம், அகண்டத்தில் நல்லுயிரைச் சேர்த்துவிடும்;*
*பேதமறும்; ஒன்றாகும் பேறு.* 19

*செடிமரம் கால்நடைக்குச் செய்பணி; நெஞ்சில்*
*படியுமே தீர்க்கநெறிப் பண்பு.* 20

*பன்றிக்குப் பால்கொடுத்தல் முல்லைக்குத் தேர்அளித்தல்*
*நன்றுடைய தீர்க்கநெறி; நாடு.* 21

---

11. நபி – மகமது நபி. இயற்கை – இயற்கை அன்னை. நாதர் – ஆதிநாதர் ; அருகர். சேய் – குமரன். மவுனன் – தட்சிணாமூர்த்தி. இயற்கை அன்னையும் தீர்க்கருள் சேர்ந்திருத்தல் கருதத்தக்கது. தீர்க்கர் பலர். அவருள் எண்மர் இங்கே குறிக்கப்பெற்றனர். தீர்க்கர் அனைவரும் ஒருவரே. விளக்கம் 'சன்மார்க்க போத'த்தில் காண்க.

12. உணர்வு ஆழ்ந்து.

13. (சிந்தனையில் கொள்ளின்) ஆர்க்கும் பொய்ப் பேய்கள் அணைந்து. ஆர்க்கும் – ஆரவாரிக்கும். பொய் – பொய்யாகிய.

16. நாதத்துக்கு மேல் தத்துவம் கிடையாது. நாதத்தைக் கடந்து நிற்பது பரம். நாதமுடிவில் பரத்துடன் பரமாக விளங்குவோர் தீர்க்கரென்க.

17. செப்பிய – தீர்க்கர் அருளிய. தீர்க்கரைச் சிந்திக்கச் சிந்திக்க அவர் உலகத்துக்கு அருளிய போதனையாய் மாறிடுவர். அம்மாற்றம் சத்தாகும். இஃது அநுபவத்தில் உணரத்தக்கது.

18. (தீர்க்கருடைய) போதனைகள்.

20. பணி செய் ; செய்தால் தீர்க்கநெறிப் பண்பு நெஞ்சில் படியும். தீர்க்க நெறி – தீர்க்கர் நெறி ; சித்தமார்க்கம் ; சன்மார்க்கம்.

*மக்களின் துன்பமும், மற்றஉயிர்த் துன்பமும்*
*ஒக்கநினை தீர்க்கம் உயர்வு.* 22

*தெய்வம் அகண்டிதம்; சிந்திக்க ஒண்ணாதே;*
*உய்யஅருள் தீர்க்கரை உன்.* 23

*தீர்க்கரை எண்ணுக; தீர்க்கரை வாழ்த்துக;*
*தீர்க்கரைப் போற்றுக சேர்ந்து.* 24

*தீர்க்கரைச் சேர்க்கும் திருப்படிகள் தத்துவங்கள்;*
*ஆர்க்கு(ம்)இழி தர்க்கநிலை அன்று.* 25

*அத்துவிதம் பேச்சன் றடைவே; அதைஎய்தச்*
*சத்தியத் தீர்க்கரைச் சார்.* 26

*கலையெலாம் கற்பனையே; கற்பனையின் நுண்மை*
*அலைவிலாத் தீர்க்கர்; அறி.* 27

*கற்பனையின் நுண்மையைக் காணாதே ஏசுதல்*
*அற்ப மதிக்குறும் பாம்.* 28

*பாடியும் ஆடியும் பக்திசெய் தீர்க்கரைக்*
*கூடும் பரகதி கூர்ந்து.* 29

*'சன்மார்க்க போத' நூல் சாற்றும் விளக்கவுரை*
*தொன்மார்க்கம் வாழ்க தொடர்ந்து.* 30

---

21. பன்றிக்கு – பன்றிக் குட்டிகளுக்கு ; திருவிளையாடற் புராணம் : 'பன்றிக் குட்டிகட்குப் பால் கொடுத்த படலம்' பார்க்க. முல்லைக்குத் தேர் அளித்தல் : பாரி வள்ளல் வரலாற்றை நோக்குக. தீர்க்கநெறி ஆட்சியில் காட்டில் வாழும் பன்றி மரம் செடி முதலியனவும் பசியால் வாட்டமுறாதவாறு காப்புச் செய்யப்படும். இதுவே சமதர்மமாகும். இதுபற்றி நாட்டில் எழுந்த கதைகள் பல உண்டு. கதைகளின் நுட்பத்தைச் சிந்தித்தல் அறிவுக்கழகு.

22. தீர்க்கம் – தீர்க்க நெறி.

25. தத்துவங்கள் படிகளே. அவற்றைப் பொருளாக் கொண்டு தர்க்க வாதம் செய்தல் தவறு என்றபடி. ஆர்க்கும் – வீண் ஆரவாரம் செய்யும்.

28. கற்பனை பருமை. அதற்கு நுண்மை உண்டு. அந்நுண்மையைத் தெளிவதற்கென்று பருமைக் கற்பனை ஏற்பட்டது. அத்தகைய நுண்மையை ஆராய்ந்து சிந்தித்துத் தெளியாது (கற்பனையை) ஏசுதல் அறியாமை. 'கலைஉரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக' என்பது **இராமலிங்க சுவாமிகள்** திருவாக்கு. கலை உரைக்கும் பருமைக் கற்பனையையே நிலைபேறாகக் கொண்டாடுதல் கண்மூடி வழக்கமென்பதும், அவ்வழக்கம் மண்மூடிப் போதல் சுவாமிகள் உள்ளக்கிடக்கை. கற்பனையை உள்ளவாறே கொள்ளாமல், அதன் நுண்மையை உணர்ந்து நடத்தல் வேண்டுமென்பது கருத்து.

# 12. வாழ்த்து

*பெற்றோர்கள் வாழ்க; பெரியோர்கள் வாழ்கவே;*
*கற்றோர்கள் வாழ்க கலித்து.* 1

*உடல்வாழ்க; ஊர்வாழ்க; ஒங்குலகம் வாழ்க;*
*கடந்தபரம் வாழ்க கலந்து.* 2

*வாழ்க இயற்கைத்தாய்; வாழ்க மழைவளம்;*
*வாழ்க பசுக்கள் மலிந்து.* 3

*இல்லறம் வாழ்க; இனியபெண் வாழ்கவே;*
*நல்லமகார் வாழ்க நயந்து.* 4

*கூட்டுறவு வாழ்கவே; கூர்தலறம் வாழ்கவே;*
*பாட்டிசையும் வாழ்கவே பார்.* 5

*வாழ்கநன் னூலெலாம்; வாழ்க குருகுலம்;*
*வாழ்க இளைஞர் மகிழ்ந்து.* 6

*தொழிற்கல்வி வாழ்க; தொழிற்சாலை வாழ்க;*
*தொழிலரசு வாழ்க தொடர்ந்து.* 7

*வாழ்கபொருள்; வாழ்கஅருள்; வாழ்கமெய்; வாழ்கபணி;*
*வாழ்கஅறம் வாழ்க மலர்ந்து.* 8

*பழமைத்தாய் வாழ்க; புதுமைச்சேய் வாழ்க;*
*கிழமைக்கால் வாழ்க கிளர்ந்து.* 9

*தீர்க்கர் வழிவாழ்க; தீம்போ தனைவாழ்க;*
*பார்க்குள் சபைவாழ்க பற்று.* 10

---

1. கலித்து – ஒலித்து ; செழித்து ; மகிழ்ந்து.
4. மகார் – குழந்தைகள்.
8. அறம் : அறம் தொகை ; பொருள், அருள், மெய், பணி முதலியன வகை.
9. கிழமை – உரிமை. உரிமைக் கால்வழி வாழ்க என்றபடி,
10. தீம் போதனை – (அவர்களுடைய) இனிய போதனைகள். சபை – தீர்க்கர் சபை ; திருச் சபை ; திருக்கூட்டம் ; சன்மார்க்க சங்கம்.

*நற்கருத்து வாழ்கவே; நன்மொழி வாழ்கவே;*
*நற்செயல் வாழ்கவே நாடு.* 11

*சன்மார்க்கம் வாழ்கவே; சன்மார்க்கம் வாழ்கவே;*
*சன்மார்க்கம் வாழ்க தழைத்து.* 12

❍❍❍

# இருமையும் ஒருமையும்

(1950)

# முன்னுரை

*உலகை நோக்குக. அஃது எக்காட்சி வழங்குகிறது? இந்நாளில் 'கலகக் காட்சி' என்னும் விடையே பிறக்கும். உலகம், உயிர் நலத்தின் பொருட்டு ஆண்டவன் அருளால் அமைந்தது. அதனுள் எப்படிக் கலகம் புகும்? பின்னைக் கலகம் பிறக்கும் இடம் எங்கே? கற்பனை கற்றுக் கேட்பன கேட்டுச் சிந்தனையில் ஆழ ஆழத் தெளிவு உண் டாகும். தெளிவு நிட்டையைக் கூட்டும். நிட்டையில், கலகத்துக்குப் பிறப்பிடம் உலகம் அன்று என்பதும், உள்ளமே என்பதும் நன்கு விளங்கும். இது பற்றி, 'உலகம் பொல்லா தென்கின்றார்* ***உளமே பொல்லா தென்றுணர்ந்தேன், கலக உளத்தைக்*** *கடந்துநின்றால் கருணை வடிவே உலக மெலாம், இலகும் உயிர்கள் நின்வடிவே எங்கே குற்றம் இறை யோனே, அலகில் அழகே அன்பருளே அறிவே கழுகு மலை யானே' என்று 'முருகன் அருள் வேட்டல்' என்னும் நூலில் பாடி யுள்ளேன்.*

*விவகார உலகில், நன்மை தீமை -அறிவு அறியாமை - கொலை கொல்லாமை - பிறப்பு இறப்பு - முதலிய* ***இரட்டைகள்*** *இருக்கின்றன. இவ்விரட்டைத் தோற்றம் மறைந்தாலன்றி, உலகில் அமைதி நிலைபெறுதல் அரிது. அமைதிக்கு என் செய்வது? கடவுளை அடைதல் வேண்டும். வேறு வழியில்லை.*

*கடவுள் ஒன்று - ஒருமை. ஒருமைக் கடவுள் உலகப் பன்மை யில் கலந்திருக்கிறது. அவ்வொருமை புலனாயின்,* ***இரட்டைகள்*** *மறையும்; அமைதி நிலைபெறும். இன்னோரன்ன பொருள் களைக் கொண்டது இந்நூல்.*

*.இந்நூலைப் படிப்பதற்கு முன்னர் 'இருளில் ஒளி' என்னும் நூலின் முன்னுரையைப் படிக்குமாறு நேயர்களை வேண்டுகிறேன். அதில் எனது உடல்நிலை, படலம் என் கண் களை மறைத்த வரலாறு, சிகித்சையால் இன்னும் ஒளி வாராமை, என் உள்ளத்தில் திரளும் கருத்துக்களை வாயால் சொல்லிவரல் முதலியன விளக்கப் பட்டுள்ளன. ஆதலின் எனது கண்களின் நிலையைப்பற்றி இங்கே விரித்துக் கூறவேண்டுவதில்லை.*

இந்நூலும் என்னால் சொல்லப்பட்டதே. என் சொற்களை எழுத்தில் பெரிதும் பொறித்தவர் தமிழ்ப்பேராசிரியர் க.பெருமாள், எம். ஏ. அவர், அச்சுத்தாள்களையும் பார்வையிட்டு உதவினார். தமிழினிடத்திலும் என்னிடத்திலும் கொண்ட அன்பால், பயன் கருதாத் தொண்டாற்றிய அவர்க்கு, என்ன கைம்மாறு செலுத்த வல்லேன்? புதிய தமிழகத்தை அமைத்து வரும் இளைஞருள் அறிஞர் பெருமாளும் ஒருவராதல் வேண்டுமென்று இறைவனை வழுத்திய வண்ணமிருக்கிறேன். பெருமாள் வாழ்க; வாழ்க; நீடுவாழ்க.

அச்சுப்பிழை திருத்துவதில் டாக்டர். மு. வரதராசனார் புரிந்த உதவி மறக்கற்பாலதன்று. அவர்க்கும் எனது வாழ்த்து உரியதாக.

இச் சிறு நூலில் பல பொருள்கள் செறிந்து கிடக்கின்றன. அவற்றுள் சிறப்பாகச் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று இருமை; மற்றொன்று ஒருமை. இரண்டும் ஒருங்கே சேர்ந்து வரும் முறையில் **'இருமையும் ஒருமையும்?'** என்னுந் தலைப்பு நூலுக்குச் சூட்டப் பட்டது.

நூற்கண் - கடவுள் ஒருமை, இயற்கை இருமை, ஆக்கமும் அழிவும், மண்ணுள் நிலையம், 'நான்' எனும் முனைப்பு, ஆசைப் பேய், ஆசை அறுத்தல், ஆசைச் சேய்கள், உடல்களின் வகை, மரணத்தின் பின் அவற்றின் நிலைகள், உயிருண்மை, மிகு பொருள் விரும்பாமை, ஒருமைக் காட்சி, அக்காட்சி கண்டவர் மாண்புகள், சன்மார்க்கம், அஹிம்சா தர்ம ஆட்சி முதலியன ஓதப்பட்டுள்ளன.

முதுமையில், கண்ணொளி குன்றியுள்ள இவ்வேளையில், இந்நூல் என்னால் உளறப் பெற்றது. உளறலுக்கு முறைமை உண்டோ? ஒழுங்கு உண்டோ? வரம்பு உண்டோ? பிழை பொறுக்க.

கடவுளே! 'கண்ணளி கடவுளே' என்று உன்னை இந் நூலில் விளிக்கலானேன். அருட் பெருங்கடலே! முதுமையில் எனது கண்களைப் படலத்தால் மறைப்பித்துச் சிந்தனா சக்தியைப் பெருக்கி, என் மனத்தில் எழும் கருத்துக்களை உளறுமாறு செய்துள்ளனை! நீ வாழ்க!

இராயப்பேட்டை
7-11-1950 **திருவாரூர்.வி. கலியாணசுந்தரன்**

# இருமையும் ஒருமையும்?

*கடவுளே! கடவுளே! கண்ணளி கடவுளே!*
*உலகம் வளரவோ பலதிறத் தோற்றம்!*
*அமைந்த தெங்கே? அமைதிநின் னிடத்திலோ?*
*இயற்கையி னிடத்திலோ? பயிற்சியில் விளங்குமோ?*
*நிலையுனக் கிரண்டெனக் கலைகள் கழறும்*
*இயற்கையைக் கடந்தும் கலந்தும் நிற்றலோ?*
*கடந்த நிலையில் கருணை இலையெனக்*
*கலந்த நிலையைக் கருதினை போலும்!*
*உண்மை உணரநின் தண்ணருள் தேவை*
*ஒழுக்கமும் ஊக்கமும் உழைப்பும் தேவை -*

## இரட்டைகள்

*எங்குங் கடவுளே தங்குகின் றாயே*
*எப்படிப் பொய்ம்மையும் ஒப்புர வின்மையும்*
*புறஞ்சொலும் அச்சமும் புறம்பும் ஐயமும்*
*திரிபும் மயக்கமும் கரவும் வஞ்சமும்*
*சூதும் சூழ்ச்சியும் வாதும் பிழையும்*
*பழியும் பாவமும் வழுவும் பிழையும்*

---

3. அமைதி – அமைதிக்கடவுள் அமைதிக்கடவுளாகிய. ('சாந்தம் சாந்தம் சிவம்' – உபநிடதம்.)

5. கழறும் – சொல்லும்.

5–6. கடவுளின் நிலை இரண்டு. ஒன்று எல்லாவற்றையுங் கடந்தது; மற்றொன்று எல்லாவற்றிலும் கலந்தது. கடந்தநிலை சொரூபம் என்றும், கலந்த நிலை தடஸ்தம் என்றும் வழங்கப் படுகின்றன. சொரூபத்தை நிர்க்குணமென்றும், தடஸ்தத்தைச் சகுணமென்றும் சொல்வோரும் உளர். சொரூபம், உருவம் (சகளம்) – அருவம் (நிஷ்களம்) – அருவுருவம் (நிஷ்களசகளம்) அற்றது; தடஸ்தம், உருவம் – அருவம் – அருவுருவம் உடையது.

12. ஒப்புரவு – உபகாரம்; ஒற்றுமை ; சமம் ; சமாதானம். ஒப்புரவு என்னும் சொல் ஆழ்ந்த பொருளுடையது. 'தன்னுயிர் மண்ணுயிர்' – 'மன்னுயிர் தன்னுயிர்' என்னும் உணர்வுடன் ஒருவரோடொருவர் உட்கலந்து கூட்டுறவால் உதவி புரிந்து கொள்வது ஒப்புரவாகும் என்று சுருங்கச் சொல்லலாம். இதுவே 'சோஷலிஸம்' என்பது. உபநிடதம், பகவத் கீதை, திருக்குறள், பைபில், திருக்குரான் முதலிய பெருநூல்களின் உள்ளமும் ஒப்புரவே என்பது கருதத் தக்கது. ஒப்புரவை நன்கு தெளிந்து நடந்தால் உலகம் ஒருகுலமாதல் ஒருதலை. இங்கே விரிவுரை வேண்டுவதில்லை.

13. புறஞ்சொலும் – புறங்கூறலும், புறம்பும் – கழிவும்.

*பிணக்கும் பூசலும் கணக்கில் போரும்*
*பிணியும் பிறவும் அணுகின? அந்தோ!*
*தீங்கும் நலமும் தேங்கித் தியங்கலென்?*
*அழிவும் ஆக்கமும் வழிவழிப் பெருகலென்?*
*மறப்பும் நினைப்பும் உறப்புகுந் தாழ்தலென்?*
*இருளும் ஒளியும் பொருளாப் பொருந்தலென்?*
*அறிவறி யாமை அணைந்து செறிதலென்?*
*பகையும் நட்பும் வகைவகைப் படிதலென்?*
*துன்பமும் இன்பமும் துன்னித் துதைதலென்?*
*மருளும் அருளும் மருவி மன்னலென்?*
*கொலைகொல் லாமை நிலையாய் நிகழ்தலென்?*
*விதியும் விலக்கும் உதித்து நடத்தலென்?*
*தாழ்வும் உயர்வும் வாழ்வு பெறுதலேன்?*
*ஆத்திக நாத்திக ஆத்திரம் மோதலென்?*
*இறப்பும் பிறப்பும் சுரப்புறத் தொடர்தலென்?*

**வன்மைக் கொடுமை**

*ஒன்றை ஒன்று கொன்று தின்னலும்*
*வலியன கண்டு மெலியன அஞ்சலும்*
*பூடுகள் மரநிழல் வாடி வதங்கலும்*
*கொடி செடி பின்னி மடிந்து காய்தலும்*
*தூறுள் ஊறுகள் சீறி உமிழ்தலும்*
*பசும்புல் தடிந்து பசுக்கள் விழுங்கலும்*
*ஆவைப் புலிபாய்ந் தாவி அகற்றலும்*
*புலிஅரி பார்த்துப் புலன்கள் துடித்தலும்*
*பெருமீன் சிறியதை வருந்தா தருந்தலும்*
*சுறவினுள் பெருமீன் உறவுகொண் டுறங்கலும்*
*திமிங்கல வாயில் திரண்டெலாம் அலைதலும்*
*மக்களைத் தந்த மந்திப் படைகள்*

---

**23.** செறிதல் – கலத்தல்; நெருங்குதல்..

**25.** துன்னித் துதைதல் – பொருந்திச் செறிதல்.

**26.** மருவி மன்னல் – கலந்து தங்குதல்.

**34.** பூடுகள் – புல்பூடுகள்.

**36.** தூறுள் – புதருள். ஊறுனள் – (நச்சுப்பூச்சிகளின்) துன்பங்கள்.

**37.** தடிந்து – அழிந்து; கடித்து மேய்ந்து.

**38.** ஆவை – பசுவை.

**39.** அரி – சிங்கத்தை.

**41.** சுறவு – சுறாமீன்.

*பாய்ந்து பாய்ந்து பழங்களைப் பிடுங்கி*
*வதியும் பொழிலை வதைத்துச் சிதைத்தலும்*
*கறிகாய் மீன்கள் மறிமான் பன்றிகள்*
*கோழி ஆடுகள் ஏழை உயிர்கள்*
*மக்கள் குடரில் தொக்காய்ச் செரித்தலும்*
*விலங்கை விடுத்து விலகி உயர்ந்த*
*மக்கள் தங்களுள் சிக்கல் வளைத்து*
*வாய்ப்போர் கைப்போர் வாட்போர் நீர்ப்போர்*
*வான்போர் அணுப்போர் மேன்மேல் புரிதலும்*
*பூனையும் எலியும் கீரியும் பாம்பும்*
*நாயும் நரியுமா நானிலம் இருத்தலும்*
*ஆதி நியதியோ? சோதியங் கடவுளே! -*

நன்மையில் தீமை

*ஞாயிற் றொளியால் ஞாலம் உய்யும்*
*வெடிப்பதில் உறுமெனல் நடுக்கம் கொடுப்பதே;*
*அங்கண் விசும்பில் திங்கள் இனிதே*
*தேய்தலும் மாய்தலும் வளர்தலும் தெளிவோ?*
*நீல வானக் கோல வனப்பை*
*முகில்பாய்ந் தோடி மூடல் முறையோ?*
*நொடிநொடி மின்னல் இடிஇடி முழங்கல்*
*கண்ணுக் கினிமையோ? காதுக் கினிமையோ?*
*மழைப்பால் உலகைச் செழிப்பாய் ஓம்பும்*
*அதிகம் பெய்தால் சதியா காதோ?*
*காற்றுயிர்ப் பன்றோ? ஆற்றாப் புயலாய்ச்*
*சீறிச் சாடின் மாறும் நிலைமையே;*
*வானை நோக்கும் மோன மலைகள்*
*வளங்கொழி சுரங்கம்; துளங்கின் என்ஆம்?*

43. மந்தி – குரங்கு. குரங்கினின்றும் மக்கள் தோன்றினமையான், இங்கே மந்தி, 'மக்களைத் தந்த மந்தி' என்று சொல்லப்பட்டது.

45. வதியும் – தாம் வாழும்.

56–57. ஞாயிற்றொளி – சூரிய ஒளி. உலகுக்கு ஒளிவழங்கும் சூரியனிடத்தில் என்றேனும் ஒருபோது வெடிப்பு நிகழுமென்று விஞ்ஞானியர் கூறுகின்றனர். இது நல்லதோ?

58. அம் கண் விசும்பில் – அழகிய இடமகன்ற விண்ணில்.

60. வனப்பை – அழகை.

64. மழைப் பால் – மழை அமுதம்.

66. உயிர்ப்பு – பிராணன்.

69. துளங்கின் – அசையின்; நிலைகலங்கின்.

*நாடுகள் நாடுறும் காடுகள் கோடையில்*
*பொரிதலும் எரிதலும் கரிதலும் இயல்போ?*
*பச்சைப் பயிரை நச்சு வண்டுகள்*
*அரித்தும் அலைத்தும் கொறித்தல் நன்றோ?*
*நிரம்பிய ஆறுகள் வரம்பு மீறியே*
*வெள்ளம் புரளல் கொள்ளைச் சூறையே;*
*உயிர்கள் வாழ உதவும் ஊருணி*
*பிணியரும் கவலரும் பித்தரும் வீழ்ந்து*
*சாகும் குட்டை ஆகலும் உண்டே;*
*தரங்கம் பாடும் அரங்கம் கடலே*
*புயலின் ஏவலால் வயமிழந் தாணவம்*
*எழுந்தலை மலைகளாய் விழுங்கால் விழுங்கால்*
*விரைந்தும் பரந்தும் விரிந்தும் ஒல்லையில்*
*அழிவும் செய்யும்; பழியும் தாங்கும்;*
*பொறைநிலத் துள்ளே சிறைநெருப் பாழி*
*உருமிக் குமுறி அலறி வெளிவர,*
*முட்டியும் மோதியும் கட்டைத் தகர்த்து*
*வரையைப் பிளக்கும்; தரையைப் பிளக்கும்;*
*எழுநா அலைகள் வழுவா தொலிக்கும்;*
*பொங்கித் தீநீர் எங்கும் குதிக்கும்!*
*எங்கும் கலக்கம்! எங்கும் குழப்பம்!*
*எங்கும் கோரம்! எங்கும் கோரம்!*
*எங்கே குன்றுகள்! எங்கே ஆறுகள்!*
*எங்கே புலங்கள்! எங்கே வளங்கள்!*
*எங்கே உயிர்கள்! எங்கே வாழ்க்கை!*
*எல்லாம் போயின! எல்லாம் போயின!*
*நிலம்நீர் ஆச்சே! நீர்நிலம் ஆச்சே!*

---

**76.** ஊருணி – (ஊர் நீர் அருந்தும்) நல்ல குளம்.

**77.** கவலரும் – கவலையுடையவரும்.

**79.** தரங்கம் – அலை . அரங்கம் – சபை ; இசைக்கழகம்.

**80.** (தன்)வயம் இழந்து ஆணவம் . . .

**82.** ஒல்லையில் – உடனே.

**84.** பொறை – பொறுமையுடைய. சிறை நெருப்பு ஆழி – கட்டுப்பட்டுக் கிடக்கும் நெருப்புக் கடல்.

**87.** வரையை – மலையை.

**88.** எழுநா – நெருப்பு.

**89.** தீநீர் – நெருப்புக் குழம்பு.

**93.** புலங்கள் – நிலபுலங்கள்.

*இயற்கை விளையாட் டென்பர் கவிகள்!*
*கருணைக் கடவுளே! கருணைக் கடவுளே! -*

### மண்ணுள் நிலையம்

*சிறுகுடில் அமைந்தது தீயிடல் நுழைந்தது*
*கல்வீ டெழுந்தது கன்னம் பெருத்தது*
*கோபுரம் உயர்ந்தது குண்டை அழைத்தது;*
*கூட கோபுரம் மாட மாளிகை*
*குண்டால் நுறுங்கலைக் கண்டான் மைந்தன்,*
*மண்ணில் மறைந்தே எண்ணிய நிலையம்*
*கோலினன் ; கோலும் காலமும் வந்ததே;*
*மண்ணைக் குடைந்துபாய் கண்ணில் கருவிகள்*
*வனையும் நாள்வரின், இனிய மைந்தன்*
*எங்கே போவன்? எங்கே தங்குவன்?*
*அங்கும் இங்கும் அலைந்து திரிவன்;*
*வளர்விஞ் ஞானம் வாளா கிடக்குமோ?*
*பலவும் செய்யும்; அலையும் மைந்தன்*
*சிறையை அணிந்து பறவையாய்ப் பறப்பனோ?*
*ஆழியை அணைந்து தாழப் புகுவனோ?*
*மற்றவர் காணாச் சித்தில் நிற்பனோ?*
*எத்தனை வித்தை சித்தில் பிறக்குமோ?*
*அத்தனை வித்தையை நித்தம் பயில்வனோ?*
*அப்பால் - அப்பால் - அப்பால் என்னே!*
*அறிவுக் கடவுளே! அறிவுக்கடவுளே! -*

### ஆசைப் பேய்

*காரணம் இன்றிக் காரியம் இல்லை*
*வித்தில் லாமல் விளைவும் இல்லை;*
*அலையும் மனிதன் சிலநொடி அமைதியில்*
*நின்று மூலம் என்னஎன் றெண்ணில்*
*மூலம் விளங்கும்; ஆலம் அதுவே;*
*மூலம் எதுவோ? சாலவே ஆய்க;*

99. குடில் – குடிசை.

104–105. – நிலையம் கோலினன் – வீடு கட்டினன்.

106. கண்ணில் – கண்ணற்ற; கண்ணோட்டமற்ற ; இரக்கமற்ற.

107. வனையும் – செய்யும்.

112. சிறையை – சிறகை.

113. ஆழியை – கடலை.

123. ஆலம் – விஷம்.

*பலபல கூறின் மலைவே தோன்றும்*
*ஒன்று கூறல் நன்று நன்றே*
*ஆசை - ஆசை - ஆசை அதுவே;*
*ஆசைப் படுதல் அறிவே என்றும்*
*ஆசை விடுதல் அறிவன் றென்றும்*
*ஆசை விதையை விதைப்போர் உளரே;*
*'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்*
*ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்*
*ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்*
*ஆசை விடவிட ஆனந்த மாமே'*
*என்னும்* ***மந்திரம்*** *உன்னி நோக்க;*
*ஆசை, உலகை அரித்தல் காட்சியே*
*வேண்டுமோ சான்று? வேண்டுவ தில்லை;*
*'எங்கே எங்கே தங்கல்' என்னும்*
*ஓலச் சான்று சாலும் ஒன்றே;*
*ஒருவன் உலகை ஆள எண்ணுவன்*
*மற்றவன் அதையே கற்று நினைப்பன்*
*எவரும் ஆசையில் இவர்ந்து செல்லின்*
*உலகம் பிணங்கிக் கலகம் இடுமே;*
*ஆசைப் பேயை அதட்டிய* ***கிறிஸ்துவின்***
*உள்ளம் காண உலகம் உழைக்க;*

### ஆசைச் சேய்கள்

*ஆசைப் பேயின் நேசச் சேய்கள்*
*மூர்க்கம் முதலாப் பார்க்க லாமே;*
*அடங்கின் ஆசை ஒடுங்கும் மூர்க்கம்;*
*ஆசை, கல்லாய் வீசும் தடியாய்*
*வில்வாள் வேட்டாய்ப் பல்வீ ரங்கியாய்*
*வெடிகுண் டாகி இடிகுண் டாகி*
*அணுகுண் டாகி அணிஅணிப் படையாய்ப்*
*போரைப் பெருக்கிப் பாரை அழிக்கும்;*

---

135. மந்திரம் – (திருமூலர் அருளிய) திருமந்திரத்தை.

139. சாலும் – போதும்.

142. இவர்ந்து செல்லின் – மேலே மேலே ஏறிச்செல்லின்.

146. சேய்கள் – பிள்ளைகள்.

147. மூர்க்கம் முதலியவற்றை.

150. வில்லாய் வாளாய் வேட்டாய் .. வேட்டாய் – துப்பாக்கி முதலியனவாய். பல்வீரங்கியாய் – பலவகைப் பீரங்கிகளாய்.

## ஆசையை ஓட்டல்

*பொல்லா ஆசையை நில்லா தோட்டுக;*
*ஓட்ட முன்னோர் காட்டிய வழிபல;*
*கல்வி கேள்வி நல்ல பணிகள்*
*யோக வகைகள் ஆக வகுத்தனர்;*
*காலக் கண்கொடு சீல வழிகளை*
*உள்ளத் துலங்கும் கொள்ளல் தள்ளல்;*
*வளர அறிவு வளரும் சமுகம்*
*வளரும் உலகம்; வளர்ச்சி தனிமையைப்*
*பையவே வீழ்த்தும் ; வையம் இனிமேல்*
*தனிநலம் பெருகக் கனிவுகொள் ளாதே;*
*மிகுபொருள் வேட்கும் மிலேச்சம் விடுக*
*ஆசை அருகும் ; நேசம் பெருகும்*
*உணவும் உடையும் உறையு மிடமும்*
*எவரும் அடைவர்; எளிதில் அடைவர்;*
*'எங்கே எங்கே தங்கல்' என்று*
*தங்கி மண்ணுள் தொங்கல் நீங்கும்;*
*மூர்க்கப் போர்கள் மூளவே மூளா;*
*கலகம் இன்றி உலகம் வளரும் -*

## இருமை வீழ்ச்சி

*எதிர்ப்பெதிர்ப் பியற்கையில் மதர்த்து நிற்றலும்*
*ஒன்றென் றுடனே உறவுகொள் ளாமையும்*
*ஒன்றை ஒன்று கொன்று வாழலும்*
*இன்ன பிறவும் அன்பை ஆக்குமோ?*
*இருமை இயற்கையில் இருப்பது உண்மையே*
*இருமை தனிமையோ? ஒருமையின் கிளையோ?*

---

158. கொடு – கொண்டு.

159. உள்ள – சிந்திக்க. வழிகளைச் சிந்திக்கச் சிந்திக்கக் கொள்ளுதல் இன்னதென்பதும் தள்ளுதல் இன்னதென்பதும் விளங்கும் என்றபடி.

162. பையவே – மெல்ல மெல்லவே.

164. 311 –வது அடிக்குறிப்பை நோக்குக.

165. ஆசை என்பது பேய்; நேசம் என்பது தெய்வம். அஃது அருகலும் இது பெருகலும் வேண்டும்.

166. உறையும் இடமும் – தங்கும் இடமும்.

169. மண்ணுள் தங்கித் தொங்கல்.

172. இயற்கை, நன்மை தீமை முதலியவற்றை இரண்டு இரண்டாய் எதிர்ப்புப் பெற்றிருத்தல் கண்கூடு. இயற்கையில் உள்ள நன்மை தீமை முதலிய இரட்டைகளை இந்நூல், இருமை –இருமை என்று சொல்லிவரும். இது கருத்தில் இருத்தத்தக்கது. மதர்த்து – கொழுத்து.

176. இருமை – இயற்கையில் உள்ள நன்மை தீமை முதலியன.

*தத்துவ உலகம் சத்தியம் சொல்லுமோ?*
*அத்தை ஆயச் சத்தியும் இல்லை;*
*இயற்கையின் உயிராய் இயங்கும் கடவுள்*
*ஒருமையே; அந்த ஒருமையைப் பற்றி*
*உன்னிப் பழகின் முன்னிப் பழகின்*
*ஒருமையே எல்லாம்; ஒருமையே எங்கும்;*
*ஒருமைக் கடவுள், உலகுயிர் எங்கும்*
*நிற்றல் அன்பதைக் கற்க கசடற;*
*'அன்பே கடவுள் அன்பே கடவுள்'*
*என்ற பொன்மொழி என்றோ எழுந்தது;*
*ஒருமையால் அன்பும் அன்பால் ஒருமையும்*
*எழுதல் உணர்ந்தே ஒழுகல் வாழ்வாம்;*
*இயற்கை இருமை அயர்ந்தே இரியும்*
*ஒருமை முன்னே, ஒருமைக் கடவுளே!-*

## ஒருமைப் பேறு

*ஒருபால் விலங்கியல் மறுபால் தேவியல்*
*நடுவண் கருவாய் வடிவம் கொள்மகன்*
*விலங்கி னின்றும் விலகி வந்தவன்*
*தெய்வம் நோக்கி உய்ய உற்றவன்*
*இடையில் பிழைகள் நடையில் நிகழ்த்துவன்*
*எப்படி உய்வன் தப்பி னின்றும்?*
*விலங்கியல் சார்பை விடுத்து விடுத்துத்*
*தேவியல் சார்பைச் சேரச் சேர*
*இருமை மடியும் ஒருமை படியும்;*

182. உன்னி – நினைந்து. முன்னி – ஆழ நினைந்து.

185. நிற்றல் அன்பு. அதைக் கற்க.

186. 'அன்பே கடவுள்' –கிறிஸ்து. 'மாறிநின்று . . . . இன்பமே என்னுடைய அன்பே' – மாணிக்கவாசகர். 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவ தாரும் அறிகிலார், அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே' – திருமூலர்.

190 –191 . கடவுள் ஒன்று; அஃது ஒருமை. ஒருமைக்கடவுள் இயற்கையில் கலந்துள்ளது. அவ்வொருமை புலனாகுங்கால், இயற்கையில் உள்ள இருமை ஒடி மறையும். நன்மை தீமை முதலிய இருமை இயற்கையில் இருத்தல் ஏன் ஏன் என்று ஆராய ஆராய உண்மை விளங்கல் அரிது. ஒருமைக் கடவுளின் கலப்பை உணர்தற்கு அக்கடவுளை நினைந்து நினைந்து, கசிந்து கசிந்து உருகுதல் வேண்டும். உருகினால் கடவுளின் ஒருமையை உணர்தல் கூடும். அந்நிலையில் இயற்கையின் இருமை தானே இரியும்.

192. ஒருபால் – ஒருபக்கம். விலங்கு இயல் – மிருக சுபாவம்.

193. நடுவண் – இடையில்.

*தக்க கல்வி தக்க கேள்வி*
*தக்க குருகுலம் தக்க ஒழுக்கம்*
*தக்க வாழ்க்கை தக்க தொண்டு*
*முதலிய செல்வம் உதவியும் புரியும்;*
*ஒருமைப் பேறே உயர்ந்த அடைவு,*
*பிறப்பை அறுக்கும் இறப்பை மறுக்கும்*
*இரண்டும் மயக்கெனும் புரட்சி உண்மையை*
*மனிதர் உணர இனிது விளக்கும்;*

## உடல்களின் வரவு செலவு

*ஒருமைத் திருவை அடையா மக்களின்*
*நுண்உடல், இந்த மண்ணில் திரியும்*
*தண்மை மண்டிலம் நண்ணினும் நண்ணும்*
*பிறக்கும் மீண்டும் சிறக்கத் தூய்மை;*
*ஒருமைத் திருவை அடைந்த மக்களின்*
*நுண்உடல் நெருப்பு மண்டிலம் ஏகும்*

---

200. இருமை – நன்மை தீமை முதலிய இரட்டைகள்.

202. குருகுலம் – கல்வி அறிவு ஒழுக்கம் பெறுதற் பொருட்டு மாணாக்கர் கூட்டுறவுடன் வதியும் ஆசிரிய நிலையம்.

205. உயர்ந்த அடைவு – வீடுபேறு.

207. 'கரணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன், சரணங்களே சான்று சார்தலுமே தான்எனக்கு, மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த, கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ' – திருவாசகம்.

209. திருவை – செல்வத்தை.

210 – 234. உடல் மூவகை. அவை : பருவுடல் (ஸ்தூலசரீரம்), நுண்ணுடல் (சூட்சும சரீரம்), முதலுடல் (காரண சரீரம்). பருவுடல் கண்கூடாக விளங்குவது. அதைப்பற்றிய ஐயம் நிகழ்வதில்லை. நுண்ணுடலைப் பற்றிய ஐயம் நிகழ்வதுண்டு. அதனால் ஆராய்ச்சி தேவையாகிறது. நுண்ணுடல் உண்மை நம்முன்னோர்களால் அநுபவ முறையால் நிறவப்பெற்றது. மேலைநாட்டறிஞரும் நுண்ணுடலை ஆராய்ந்து வருகின்றனர். **ஸர் ஓலிவர் லாட்ஜ், லாப், லெட் பீட்டர்** முதலியோர் நுண்ணுடல் உண்மையை இக்கால முறையில் ஆராய்ந்து உறுதி செய்துள்ளது ஈண்டுக் கருதத்தக்கது. முதலுடல், ஆராய்ச்சிக்கு எட்டாதது; அநுபூதியில் விளங்குவது. அது நாதமயமாயுள்ள பிரணவ சரீரம்.

பருவுடல்களை விடுத்து நுண்ணுடல்கள் வெளிவருகின்றன. நுண்ணுடல்கள் பருவுடல்களின் வாழ்க்கையை ஒட்டி ஒவ்வொரு வித நிலையை அடையும். சில மண்ணுலகிலேயே திரியும்; சில நீர் மண்டிலம் செல்லும்; சில நெருப்புமண்டிலம் புகும். மண்ணுலகிலும் நீர்மண்டிலத்திலும் திரிந்து உலவிய நுண்ணுடல்கள் மீண்டும் பிறக்கும். இப்பிறப்புத், தூய்மையின் பொருட்டு நிகழ்வது. நெருப்பு மண்டிலம் புகுந்த நுண்ணுடல், மீண்டும் மண்ணுலகம் நோக்காமல் நீறாகும்(சாம்பராகும்). அங்கே முதலுடல் விளங்கி மறையும். ஆவி,. அகண்ட பரத்தில் ஒன்றும்.

211. தண்மை மண்டிலம் – குளிர்ந்த மண்டிலம்; நீர்மண்டிலம்.

*அங்கே அவ்வுடல் துங்கநீ றாகும்;*
*ஒளிமுதல் உடலம் ஒளிர்ந்து திகழும்*
*அந்த உடலமும் அந்தம் எய்தும்;*
*ஆவி அகண்டம் மேவியொன் றாகும்;*
*உடலுடன் ஆவிவாழ் உலக நிலையிலும்*
*மண்டில வகையைக் கண்டு மகிழலாம்;*
*புறமண் டிலங்கள் உறவே அகத்தில்*
*ஒவ்வோ ருடலையும் ஒவ்வொரு மனத்தையும்*
*படிப்படி கடந்து திரும்பும் பயிற்சி*
*மண்டிலம் காட்டும்; கண்டு மகிழலாம்;*
*மூவுடல் மும்மனம் ஆவி கடந்தால்*
*அகமும் புறமும் அனைத்தும் ஒன்றாய்*
*இரண்டறக் கலந்தே இன்பினில் ஒன்றும்;*
*ஓருடல் உணர்வால் உழல்வோர் உளரே*
*ஈருடல் உணர்வால் இருப்போர் உளரே*
*மூவுடல் உணர்வால் முயல்வோர் உளரே*
*மூவுடல் மேவி ஆவி நீந்தினால்*
*ஒன்று மில்லா அகண்டம் ஒன்றும்;*
*'கலந்தபின் பிரிதல் இல்லை' என்னும்*
*முன்மொழி இங்கே முன்னற் பாலதே -*

## உடலும் உயிரும்

*ஆவியில் ஐயம் தாவலும் உண்டே;*
*'ஐந்து பூதம் உந்திய தாவி'*

215. துங்க – பரிசுத்த; உயர்ந்த.

217. அந்தம் – முடிவு.

218. ஆவி – உயிர்.

219–227. நுண்ணுடல் பருவுடல்களை விடுத்து நீங்கியதும் வானமண்டிலங்களுக்குச் செல்வது மேலே சொல்லப்பட்டது. அம்மண்டிலங்களை இவ்வுலகத்தில் வாழ்ந்துகொண்டே அகத்திலும் காணுதல் கூடும். இதற்கு யோகப்பயிற்சி – சிறப்பாகத் தியான யோகப்பயிற்சி தேவை. யோகத்தால் பருவுடலைக் கடந்து நுண்ணுடலுக்கும், நுண்ணுடலைக் கடந்து முதலுடலுக்கும், சென்று சென்று, மீண்டும் அவ்வவ்வழியே திரும்பும் பயிற்சிவேண்டும். இப்பயிற்சியால் வானமண்டிலங்களை உள்ளே கண்டு மகிழலாம். இந்நிலை பெற்று உலகில் வாழ்வோரும் உளர்.

230. மும்மனம் : புறமணம்(ஸ்தூலமனம்), நடுமனம்(சூட்சுமமனம்),. அடிமனம் (காரணமணம்). விளக்கம் 'உள்ளொளி' என்னும் நூலில் பார்க்க.

231–232. ஆவி அகண்டத்தில் ஒன்றும்.

233. 'கலந்தபின் பிரிவதில்லை' என்பது அப்பர் திருமொழி.

235. ஆவியில் – உயிர் உண்மையில்.

236. ஐந்து பூதத்தின் சேர்க்கையால் ஆவி பிறக்கிறது என்ற கொள்கை மிகப் பழையது.ஷ

*என்ற கொள்கை என்றோ ஒதுங்கி*
*ஓய்வு பெற்றது; மாய்ந்தும் போகும்;*
*காலம் வளர்க்கும் சீலவிஞ் ஞானம்*
*ஆவி உண்மையில் ஐயங் கொளவிலை;*
*ஆவி உண்மையை அளந்து காண*
*மண்டையை உடைத்து மாள வேண்டா;*
*குழந்தை பிறந்ததும் கூவு கின்றது*
*வளர்ந்து மகனாய் வாழ்ந்து தளர்ந்து*
*பிணமா கியபின் பேசு கின்றதோ?*
***தியான யோகம்*** *திறக்கும் வழியை*
*மூவுடல் மேவின் ஆவி உணரலாம்;*
*ஆவி சடமன் றறிவே ஆகும்;*
*சடம்புரி கேட்டின் மடம்படத் தொண்டை*
*அறிவே செய்யும் அழகைக் காண்கிறோம்;*
*ஆவியில் ஐயம் மேவல் ஏனோ?*

**வீரன்**

*ஆவியின் உண்மை அறிந்தவன் வீரன்*
*ஈர நெஞ்சனாய்ப் பாரப் பணிகளைப்*
*பயன்கரு தாது முயன்றே ஆற்றுவன்;*
*அவனே நற்றவன்; அவனே மனிதன்;*
*மற்றவன் உடலைக் கற்றதை 'நான்' என்*
*றாவியை மறந்து பாவியாய்ப் பெருத்தவன்*
*தன்குறை மறைக்கப் பிறர்குறை பேசுவன்*
*தன்புகழ் நாடிப் பிறர்தமை இகழ்வன்*
*தன்னலம் கருதிப் பிறரை வதைப்பன்*
*பருத்த உடலைத் திருத்தவே முயல்வன்*
*உள்ளம் திருத்த உள்ளவே மாட்டான்;*

---

**239–240.** இக்கால விஞ்ஞான உலகில் சிறந்து விளங்கும் **ஐன்ஸ்டன்** கண்ட உண்மைகளைச் சிந்திக்க.

**248.** ஆவி, சடம்(Matter) அன்று; அஃது அறிவு.

**249–250.** மடம்பட – அறியாமை அழிய. சடம் அறிவன்று. சடம் கேடு செய்யும். அக்கேட்டை அறிவு போக்கி நலஞ்செய்யும்.

**253.** 'ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே, பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார், ஈர அன்பினர் யாதுங் குறைவிலார், வீரம் என்னால் விளம்புந் தகையதோ' – பெரியபுராணம்.

**256.** உடலைக் கற்று, அதை (அவ்வுடலை) 'நான்' என்று . . .

**262.** உள்ளவே – நினைக்கவே.

*இவனால் கலகம் இவனால் கொள்ளை*
*இவனால் கொலைகள் இவனால் போர்கள்*
*இவனால் கொடுமைகள் எல்லாம் நிகழும்;*
*தற்பயன் கருதி அற்பப் பணியைச்*
*செய்து நடிப்பன்; கைதவன் இவனே;*

எடுத்துக்காட்டு

*சிலுவையில் தம்மைச் செலுத்தி ஆணி*
*அறைந்தவ ரிடத்தும் நிறைந்த அன்பால்*
*இரக்கம் காட்டிய ஏசுவை எண்ணுக;*
*வணங்கிய தம்மை வாளால் ஓச்சிக்*
*குத்திய கொலைஞன் முத்த நாதனைக்*
*காத்த மெய்ப்பொருள் கருணையை நினைக்க;*
*உடலைக் கடந்தே உயிருள் நிற்பவர்*
*அற்றவர் பகையை; மற்ற உயிர்களைத்*
*தம்முயிர் என்னும் செம்மையில் உறைவோர்;*
*உடலைத் தாமெனும் மடமையில் வீழ்வோர்*
*இகலை வளர்த்துப் பகைமைப் பெருக்குவர்*
*பிழைக்கத் தீமை இழைப்பர் பிறர்க்கே;*
*நற்றவம் வாழ்க! மற்றவம் வீழ்க!*
*வாழ்வும் வீழ்வும் வளர்க்கும் உலகை;*

ஒருகுலம்

*புதுமை உலகம் பொதுமையில் பூக்க*
*அருணெறி மல்க பொருணெறி பல்க*
*வானம் சுரக்க ஆனினம் சிறக்க*
*விளைவு செழிக்க வளமை கொழிக்க*
*திரு, விளை யாடுக திருமணம் பாடுக*

---

**267.** கைதவன் – கபடன்; வஞ்சன்.

**273.** மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றைப் பெரியபுராணத்திற் காண்க.

**274.** சடவுடலை உயிர்எனக் கருதாது, அதைக் கடந்து நிற்கும் உயிரைப் பொருளாக் கொள்வோர்.

**275.** பகையை அற்றவர்.

**278.** இகலை – மாறுபாட்டை.

**279.** (தாம்) பிழைக்க.

**280.** மற்று அவம் (கைதவம்).

**283.** மல்க – நிறைக. பல்க – பெருக.

**284.** ஆன் இனம் – பசுக் கூட்டம்.

*பெண்ணும் ஆணும் நண்ணுக வாழ்க்கை*
*குழலும் யாழும் மழலையாய்ப் பொழிக*
*இளமை பொலிக இனிமை மலிக*
*கலைகள் வழிக கவலை கழிக*
*உலகம் ஒருகுலம் ஆகி உயர்க -*

**'நான்'**

*'நான்' எனும் கருமை நண்ணியே உள்ளது*
*நண்ணிய தென்றோ? எண்ணல் வேண்டா?*
*ஆதியே ஆக அனாதியே ஆக*
*கவலை செலுத்திச் சவலை உறாதே;*
*'கருமை கழிக்கும் கருவி உலகம்'*
*என்றே ஆன்றோர் அன்றே மொழிந்தனர்;*
*கருமை மூலம், இருமை அதன்முளை*
*முளைபட் டழியின் மூலம் அழியும்*
*மூலம் படினோ முளையும் படுமே;*
*இருமை அரசுசெய் இருக்கை எங்கே?*
*உலகமோ உள்ளமோ உற்றுப் பார்க்க;*
*கருமை கழிக்கும் கருவியாம் உலகம்*
*இருமை இருக்க இடம்தா ராதே;*
*உள்ளம் இருக்கை; உலகம் அன்றே;*
*உள்ளம் திருந்தின் கள்ளம் போமே*
*உள்ளம் திருந்த உழைத்தல் வேண்டும்;*

**வழி**

*கற்க கலைகளை நிற்க அவைவழி*
*கடவுள் உண்மையில் திடமே கொள்க*

---

**292.** கருமை – ஆணவம்.

**292–297.** 'காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவி யைப்போல் கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாங் காப்பிட் டதற்கி சைந்த, பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல் பெலக்கவினை யமுத மூட்டிப் பெரியபுவ னத்தினிடைப் போக்குவர வுறுகின்ற பெரியவிளையாட்ட மைத்திட், டேரிட்ட தன்சுருதி மொழிதப்பில் நமனைவிட்டிடருற ஒறுக்கி இடர்தீர்த் திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில் இசைந்து துயில்கொள்மின் என்று, சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே சித்தாந்த முத்தி முதலே சிரகிரி விளங்கவருதக்ஷிணா மூர்த்தியே சின்மயா னந்த குருவே' – தாயுமானார்.

**296.** உயிரைப் பற்றியுள்ள கரிய ஆணவத்தைப் போக்க மாயாகாரியமாகிய உலகைக் கருவியாக அருள்வது ஆண்டவன் ஆணை.

**298.** இருமை – இயற்கையிலுள்ள நன்மை தீமை முதலிய இரட்டைகள். விளக்கம் மேலே உள்ளது.

**301.** இருக்கை – இருப்பிடம்.

*நல்லறம் மாகும் இல்லறம் ஏற்க*
***தேவை அளவை** ஆவியாக் கொள்க;*
*அந்நல் வாழ்வை மனபதை பெறவே*
*புறத்தும் அகத்தும் அறத்தொண் டாற்றுக;*
*இருமை குலையும், ஒருமை பொலியும்;*
*கருமை கழிக்கக் கருவியாய் உலகைப்*
*பயன்படுத் தாது மயல்வழிப் படுத்தல்*
*உலகா யதமாய் அலகை வாழ்வாம்;*
*முடிசார் மன்னரும் பிடிசாம்ப ரானார்*
*முடியர சகற்றிக் குடியர சாக்கிய*
*வேகரும், போகரும் யோகரும் மாண்டனர்*
*களஞ்சியச் செல்வரும் கலைஞரும் செத்தனர்;*
*சுடலை மண்தீ உடலைத் தின்னலைக்*
*காண்கின் றோமே! காண்கின் றோமே!*
*[1]'தோற்ற முண்டேல் மரணமுண்' டென்றும்*
*[2]'நெருநல் உள்ளவன் இன்றிலை என்னும்*
*பெருமை உடைத்திவ் வுலகம்' என்றும்*
*[3]'இன்றுளேன் நாளை இல்லேன்' என்றும்*
*முதியோர் அருளிய முன்மொழி துணைசெய்யும்;*
*துறவா துலகைக் கருவியாய்ப் பற்றி*
*நன்னெறி நின்றால் இன்னல் தொலையும் -*

### கடவுள் காட்சி

*கடந்த கடவுளே! கலந்த கடவுளே!*
*கடந்த நிலையைக் கருதல் அரிதே;*
*இருமை மறைந்ததும் பெருமைக் கலப்புப்*
*பொருளாய்ப் புலனாய்ப் பொருந்திய விருந்தாம்;*

---

**311.** உலகில் பலதிறப் போராட்டங்கள் நிகழ்கின்றன. காரணம் என்னை? காரணம் பலபடக் கூறலாம். ஈண்டு ஒன்றைச் சிறப்பாகக் கூறுதல் நலம். அது, மிகுபொருள் விரும்புதல். அதை நீத்துத் , தேவை அளவில், உள்ளநிறைவு கொள்வது அஹிம்சையாகும். தேவை அளவில் நிற்கும் சீலம் பலதிறப் போராட்டங்களை ஒழிக்கவல்லது. அச்சீலத்தை உயிராகக் கொள்வது சிறப்பு. இதுபற்றியே ஈண்டுத் 'தேவை அளவை ஆவியாக் கொள்க' என்னுங் கருத்துச் சொல்லப்பட்டது.

**317.** அலகை – பேய்.

**320.** வேகரும், மற்றப் போகரும் யோகரும். வேகரும் – வேகியரும்; புரட்சிக்காரரும். 'போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார், யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார், வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்டலோரார், ஊகியா மூட ரெல்லாம் உம்பரின் ஒருவனென்பார்' – சிவஞானசித்தியார்.

**325.** நெருநல் – நேற்று.

1. சுந்தரர். 2. திருவள்ளுவர். 3. அப்பர்.

*காலைக் கதிராய் மாலை நிலவாய்*
*நீல விண்ணாய்க் கோலச் சுடராய்க்*
*காராய் மழையாய்க் கலிக்கும் அருவியாய்*
*மலையாய்க் கடலாய் வயலாய்ப் பயிராய்*
*மண்ணாய் ஆணாய்ப் பெண்ணாய்க் குழவியாய்*
*ஒலியாய் ஒளியாய்க் கலையாய் நிலையாய்*
*வழியாய்ப் பிறவாய் வழங்கும் காட்சி,*
*அழகுக் காட்சி அழியாக் காட்சி*
*அருட்பெருங் காட்சி அமுதக் காட்சி;*
*பழமைக்குப் பழமையாம்; புதுமைக்குப் புதுமையாம்;*

## மெய்கண்டவர் நிலை

*அப்பெருங் காட்சி மெய்ப்பொருள் பள்ளி;*
*அதிலே பயில்வோர் விதியால் மாளார்*
*நாளும் கோளும் வாளும் தோளும்*
*வணங்கி இணங்கி வழிபட வாழ்வர்*
*பூமி வெடிப்பினும் புணரி கொதிப்பினும்*
*சுழன்றனல் சூழ்ந்து சுழன்றே எரிப்பினும்*
*காற்றுச் சீறினும் கடும்புயல் வீசினும்*
*வான்கலக் கெய்தினும் மீன்சுடர் வீழினும்*
*ஊனமொன் றின்றியே மோனத் திருப்பர்*
*ஈன நடுக்கம் இன்றியும் நிற்பர்;*
*இயற்கை இருமை முயற்சியால் வென்றார்*
*இயற்கை தம்வழி இயங்கப் பணிப்பவர்*
*செயற்கை கடந்த சித்தம் படைத்தவர்*
*விலங்கியல் நீத்து விலகிய துறவோர்*

---

**337.** காராய் – மேகமாய். கலிக்கும் – ஒலிக்கும்.

**341.** வழியாய் – சமய நெறியாய்.

**349.** புணரி – கடல்.

**349–354.** 'மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும், விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே, திண்பால் நமக்கொன்று கண்டோந் திருப்பா திரிப்புலியூர்க், கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே', 'வானந் துளங்கிலேன் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந்துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரி சுடர் வீழிலென் வேலைநஞ்சுண், டூனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே' –அப்பர். 'வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென், கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென், தானொன்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென், நானொன்றி நாதனை நாடுவன் நானே' – திருமூலர்.

**352.** கலக்கு – நிலைகலங்கல். மீன்சுடர் – நட்சத்திரங்களும் சூரிய சந்திரர்களும்.

**355.** இருமைக்கு விளக்கம் மேலே பார்க்க.

*தேவியல் நின்று திகழும் அறவோர்*
*கோணல் மலிந்த ஆணவம் அற்றவர்*
*இகலைத் தாண்டி இனிமை அடைந்தவர்*
*புகழை நீந்திப் புனிதம் உற்றவர்*
*தெய்வச் சேய்களாம் சிறப்புப் பெற்றவர்*
*தண்மைத் தெய்வப் பெண்மை உடையவர்*
*பொய்ம்மை அறியார் புறஞ்சொல் தெரியார்*
*தீய ரிடத்திலும் நோய ரிடத்திலும்*
*பாவ ரிடத்திலும் பணிகள் செய்வர்*
*வழுக்கி வீழ்ந்தவர் வாழ்க்கை பண்பட*
*ஒழுக்கத் தொண்டுகள் பழுக்க ஆற்றுவர்;*
*அவரே அந்தணர் அவரே முனிவர்*
*அவரே சித்தர் அவரே புத்தர்*
*அவரே பெரியர் அவரே தொண்டர்*
*அவரே இனியர் அவரே மனிதர்;*

**சன்மார்க்க விளைவு**

*அன்னவர் நினைவும் அருள்மொழி செயலும்*
*அழியா என்றும் வழியே காட்டும்;*
*அவ்வழி செவ்வழி அறவழி பொதுவழி*
*பற்பல நெறியாய்ப் பரந்த பெருவழி*
*சோதி மார்க்கம் ஆதிசன் மார்க்கம்;*
*நின்று நடக்க ஒன்றி நடக்கப்*
*புலன்கள் குறும்பில் கலங்கல் மாய்ந்து*
*பழமை நீத்துப் புதுமை பெறுமே*
*தோற்ற மெல்லாம் மாற்றம் உறுமே*
*ஏற்றத் தாழ்வின் ஊற்றே வற்றும்*
*ஏட்டுக் கல்வி ஊட்டும் இயற்கையை;*
*ஒருத்தியும் ஒருவனும் கருத்தில் ஒன்றாய்க்*
*காதலில் மூழ்கி நீதி மகாரை*

---

**361.** இகலை – மாறுபாட்டை.

**363.** சேய்களாம் – பிள்ளைகளாகும்.

**371.** புத்தர் – அஞ்ஞான உறக்கத்தினின்றும் மெய்ஞ்ஞானத்தில் விழித்து எழுந்தவர்.

**374.** மொழி – மொழியும். (மன மொழி செயல்கள்)

**377–378.** பெருவழி சன்மார்க்கம் என்க.

**379.** அப் பெருவழியில் – அச் சன்மார்க்கத்தில் – நின்று நடக்க. . .

**384.** ஏட்டுக் கல்வி இயற்கையை ஊட்டும் என்க.

**386.** மகாரை – பிள்ளைகளை.

*அளித்தளித் தன்பால் வளர்த்து வாழ்வர்;*
*சினக்கனல் ஆறும் மனக்கண் திறக்கும்*
*அகத்தின் நோக்குச் செகத்தில் பெருகும்*
*ஒருமை, பன்மையில் மருவித் திகழும்*
*மதநிற மொழி இடம் விதவித மான*
*வெறிக்கும் போர்க்கும் பறித்தல் பாறும்*
*அந்நிய எண்ணப் புன்மை நீங்கும்;*
*மக்க ளெல்லாம் ஒக்க லாவர்*
*மற்ற உயிர்களும் சுற்ற மாகும்*
*உலகம் ஒருமைக் குலமா யிலங்கும்;*
*திங்கள் மும்மழை எங்கும் பொழியும்*
*எவ்வித விளையும் செவ்விதில் ஓங்கும்*
*அறத்தியல் வாணிபம் திறத்துடன் நடக்கும்*
*கற்பும் மெய்யும் பொற்புவி நிலைக்கும்;*
*அமைதி அன்புச் சமயம் பொருளாம்*
***அஹிம்சா தர்மம்*** *ஆட்சி புரியும்*
*எதற்கும் உன்றன் இன்னருள் வேண்டும்;*
*அருளைப் பொழிக! அருளைப் பொழிக!*
*கடவுளே! கடவுளே! கண்ணளி கடவுளே!*

○○○

---

**391.** இடம் – ஊர் நாடு முதலியவற்றை.

**391–392.** பறித்தல் – பிடுங்கல்; வலிந்து கவர்தல்; இரையாக்குதல். பாறும் – சிதறி அழியும். மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றை விதவிதமான வெறிகளுக்கும் போர்களுக்கும் (பறித்தல்) இரையாக்குதல் கூடாது. சன்மார்க்க உலகில் மதம் நிறம் மொழி நாடு முதலியன வெறிகளுக்கோ போர்களுக்கோ பறி ஆதல் – இரையாதல் – அழியும். 'சாதிமதம் மரபுமதம் சார்புமதம் சாகச் சமயமதம் வழக்குமதம் சழக்குமதம் சாய, வாதமதம் பேதமதம் வட்டிமதம் வீழ மடங்கள் மதம் கோயில்மதம் மாயமதம் மாயச், சூதுமதம் வேடமதம் சூழ்ச்சிமதம் குலையத்தொன்மை அறம் அன்பழிக்குந் துயர்மதங்கள் தொலைய, ஆதிமுடிவில்லாத அருட்சோதி தேவே அகிலமெலாஞ் சன்மார்க்கம் ஆர்த்தெழச்செய் யரசே' என்றும், 'மொழியாலும் நிறத்தாலும் நாட்டாலும் மற்ற முறையாலும் பிரிஉலகை முழுஒருமைப் படுத்தும், வழியாதென் றறிஞர்பலர் வகைவகையே ஆய்ந்து வகுத்தணர்பல் சட்டதிட்டம் வாழ்வுபெற வில்லை. பழியேதும் அறியாத சன்மார்க்கம் ஒன்றே பாழ்பிரிவு நினைவறுத்துப் பரிந்தொருமை கூட்டும், அழியாத அன்புடைய அப்பாஅம் மார்க்கம் அவனியெலாம் பரவிநிற்க அருள்புரிவா யின்னே' என்றும் பொதுமை வேட்டல் என்னும் நூலில் பாடியுள்ளேன்.

**394.** ஒக்கல் – சுற்றத்தார்.

# அருகன் அருகே
# அல்லது
# விடுதலை வழி

(1951)

# முகவுரை

**விருஷபதேவர்** முதல் தீர்த்தங்கரர்; அருகர் முதலிய பெயர்களையுடையவர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், 'அஹிம்சா பரமோ தர்ம:' என்ற கொள்கையை உலகில் முதல் முதல் விதைத்த பெருமை அவருக்கு உண்டு. அத்தரும வளர்ச் சிக்கு, அரணாகச் சில சீலங்கள் அவரால் அருளப்பெற்றன. அவற்றுள் ஒன்று - சிறந்த ஒன்று - 'மிகுபொருள் உவவாமை' என்பது. இது விருஷபதேவரது அஹிம்சா தர்மப் பொதுமை.

இந்நாளில் பொதுமை யாண்டும் பேசப்படுகிறது. அப் பொதுமை பெரிதும் மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்டது. அதனடியில் அஹிம்சையும் இல்லை; ஆன்மார்த் தமும் இல்லை. இவ்விரண்டையும் கொண்ட பொதுமையே இக்காலத்துக்கு வேண்டற்பாலது. இதற்குக் காந்தியம் கலந்த மார்க்சியம் தேவை. காந்திய மார்க்சியத்திற்குத் தாயகம் விருஷப தேவர் போதனை என்பதை மறத்தலாகாது.

அஹிம்சா தர்மப் பொதுமையைப் பொதுவாக நாட்டி லும், சிறப்பாகத் தொழிலாளர் இயக்கத்திலும் பரப்பும் வாய்ப்பு எனக்கு இப்பிறவியில் கிடைத்தது. இக்காலப் பொதுமை நூல்களை யான் படிக்கும்போதெல்லாம் விருஷபதேவர் போதனை என் நெஞ்சை விட்டு அகல்வதில்லை. அவர்மீது கொண்ட அன்பே, **'அருகன் அருகே அல்லது விடுதலை வழி'** என்னும் இந்நூலை இயற்றுமாறு என்னை உந்தியது.

யான் எம்மதச் சார்புடையவனும் அல்லன்; மதவெறி யனும் அல்லன். எவ்வித வெறியும் என்னை அலைப்பதில்லை. சமயங்களிலுள்ள ஒருமையை வலியுறுத்துவது எனது வழக்கம். அவ்வொருமை, 'சன்மார்க்கம்' என்று வழங்கப்படுகிறது. உலகமும் ஆன்மார்த்தமும் கலந்த ஒன்றே சன்மார்க்கம் என்பது. இச் சன்மார்க்கத்தைப் பொதுமை என்றோ சமரசம் என்றோ கூறலாம். **சன்மார்க்கம், சாதி மத நிற மொழி நாடு முதலிய வற்றைக் கடந்தது.** அஃது உலகுக்கு உரியது; உலகை ஒரு குல மாக்க வல்லது. அதை அறிவுறுத்திய குருமார் அனைவரையும் பொதுமுறையில் போற்றவேண்டு மென்பது எனது வேட்கை.

அவ்வேட்கையினின்றும் பிறந்த நூல்களுள் இந்நூலும் ஒன்று. சன்மார்க்கத்தைப் பற்றி என் உள்ளத்தில் அரும்பிய கருத்துக்களைச் 'சன்மார்க்க போதமும் திறவும்', 'கிறிஸ்துவின் அருள்வேட்டல்', 'பொதுமை வேட்டல்', 'புதுமை வேட்டல்' முதலிய நூல்களில் வெளியிட்டுள்ளேன்.

செல்வச் சிறுமை, தவப் பெருமை, விருஷபர் வரலாறு, அவர்தம் போதனை - சாதனைகள், அஹிம்சா தர்மம், மிகு பொருள் உவவாமை, பொதுமை அறம், நிர்வாணம், அறிவுறுத்தல், போற்றல் முதலிய பொருள்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இந்நூற்கண் ஓரிடத்தில் கூறப்பெற்ற பொருள், வேறு பல விடங்களிலும் விளக்கப்பெற்றிருக்கும். அது கூறியது கூறல் அன்று; அநுவாதம்.

எனது கட்புலன்களைப் **படலம்** மறைத்தநாள் தொட்டு, என் கருத்துக்களை வாய்மொழியால் சொல்லி வருகிறேன். அச்சொற்கள் பிறரால் எழுத்தில் பொறிக்கப்படும். இந்நூலை யான் சொல்லிவந்தபோது, எனது சொல்லொலியை, வரிவடிவாக்கியவர் சாது அச்சகப் பொறுப்பாளர் - திரு. மு. நாராயணசாமி. அவர்க்கு எனது நன்றி உரியதாக.

அச்சுத் தாள்களைப் பார்வையிட்டுத் துணை புரிந்தவர் இருவர். ஒருவர் டாக்டர் - மு. வரதராசனார்; மற்றொருவர் ஜீவ பந்து ஸ்ரீபால். இவ்விருவருக்கும் எனது வாழ்த்து உரியதாக.

அன்புடன் அணிந்துரை வரைந்து தந்தவர், பல ஆண்டு அரசாங்கக் கல்லூரிகளில் தத்துவப் பேராசிரியராகவும் தலைவராகவும் அமர்ந்து சேவைசெய்த பேரறிஞர் அ. சக்கரவர்த்தி நயினார். அவர்க்கு எனது வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

யான் மனிதன்; குறையுடையவன். முதுமை என்னை அடர்ந்துள்ளது. **படலம் என் கண்களை மறைத்துவிட்டது.** இந்நிலையில் என்னால் இயற்றப்பெற்ற இந்நூற்கண் போந்துள்ள பிழைகளைப் பொறுக்குமாறு நேயர்களை வேண்டுகிறேன்.

*இராயப்பேட்டை*
*5-1-1951.* **திருவாரூர் – வி. கலியாணசுந்தரன்**

# அருகன் அருகே அல்லது விடுதலை வழி

*பெருமன் என்னும் திருவன் ஒருவனும்*
*அவனொடு பயின்ற தவனன் ஒருவனும்*
*தண்கடல் மணலில் கண்டனர் தழுவினர்,*
*“நன்னாள் இந்நாள் பன்னாள் பிரிந்தனம்*
*ஓதம் உலவும் ஓரம் செல்வம்*
*பேசுவம் பழைய நேசச் செயல்களை*
*வருக” என்று பெருமித மாக*
*நடந்தனன் தவனன் தொடர்ந்து பெருமனும்*
*பெயர்ந்து பின்னே அயர்ந்து நடந்தனன்*
*ஓதம் ஓடிப் பாதம் வருட*
*ஒதுங்கி அமர்ந்தனர் உயர்ந்த மணலில்;*

## இயற்கை

*மணல்விரி வெண்மையும் அணிஅணி அலைகளின்*
*ஆடலும் பாடலும் அலவன் ஓடலும்*
*மாலை மதியக் கோல உதயமும்*
*தென்றல் தவழ்வும் இன்பம் ஊட்டத்*
*தவமிகு சீலன் தவனன், “நண்ப!*
*வானம் வளைந்து வாரியைத் தீண்டி*
*உவத்தலை நோக்குக உற்று நோக்குக*
*மீன்கள் நகைக்கும் பான்மையை நோக்குக”*

---

1. திருவன் – செல்வம் உடையவன்.

5. ஓதம் – அலை; கடை அலை. ‘ஓங்கு மாகடல் **ஓதம்**வந் துலவும் ஒற்றி யூரெனும் ஊருறை வானே’; ‘**ஓதம்** வந்துல வுங்கரை தன்மேல் ஒற்றி யூருறை செல்வனை’ – **சுந்தரர்.**

10. வருட – தைவர; தடவ.

13. அலவன் – நண்டு.

14. மாலைச் சந்திரனது அழகிய உதயம்.

17. வாரியை – கடலை.

18. உவத்தலை – மகிழ்ச்சி அடைதலை.

19. மீன்கள் – விண்மீன்களும் (நட்சத்திரங்களும்) கடல் மீன்களும்.

**உளநூல்**

*என்றதும், நோக்கா திருக்கும் இன்னுயிர்த்*
*தோழனைப் பார்த்தனன் ஆழ நினைந்தனன்*
*முகத்தைக் கொண்டே அகத்தை அளந்தனன்;*
*"என்ன நண்ப! உன்றன் கவலை*
*இன்னல்" என்னக், குன்றிய பெருமன்,*
*"என்னிலை எப்படி இன்றிங் குணர்ந்தாய்?*
*எங்கே உளநூல் என்றோ கற்றாய்?"*
*என்று கேட்டனன் ஒன்றிய கவலையால்;*
*"தழுவிய போதுன் நழுவிய கையும்*
*தொடர்ந்த போதுன் நடந்த காலும்*
*இயற்கையைக் கேட்க இசையாக் காதும்*
*உன்றன் நிலையை உணர்த்தின" என்றனன்;*

**கவலை**

*பெருமன் கண்ணீர் பெருக மண்ணில்*
*சாய்ந்தனன்; அவனை ஆய்ந்த தவனன்,*
*எடுத்து மடியில் கிடத்தி அன்பால்*
*தேறுதல் கூறி ஆறுதல் செய்து,*
*"கவலையுறாதே கவலை யுறாதே*
*கவலை கொடிதே சவலை யுறுத்தும்*
*நரப்புக் கட்டின் உரத்தைத் தளர்த்தும்*
*உடம்பைக் குலைக்கும் இடும்பை புகுத்தும்*
*கொடிய கவலை விடுக விடுக*
*தவநெறி நின்றால் கவலைப் பேயின்*
*அச்சம் நீங்கும் நிச்சயம்" என்ன,*

**களியாட்டயர்தல்**

*விழுந்த பெருமன் எழுந்தே இருந்தனன்;*
*"என்னிலை சொல்வன் இனிய! கேட்க:*

26. உளநூல் – மனோதத்துவ சாத்திரம்; அகத்திணை நூல்.
27. ஒன்றிய – பொருந்திய.
29. (அயர்ந்து) நடந்த காலும்.
30. இயற்கையை – (மேற்போந்த) இயற்கைக் காட்சிகளை.
31. என்றனன் (தவனன்.)
33. ஆய்ந்த (அவனது உள்நிலையை) ஆராய்ந்து கண்ட.
37. சவலை – மெலிவு.
38. உரத்தை – பலத்தை.
39. இடும்பை – துன்பம்.

*பள்ளி விடுத்தபின் பணந்தலைக் கொண்டேன்*
*கள்ள வாணிபக் கொள்ளையில் வீழ்ந்தேன்*
*களிகளும் மடிகளும் காமக் குழுக்களும்*
*என்னைப் பிடுங்கித் தின்று வதைத்தன*
*களியாட் டெல்லையில் விளையாட் டயர்ந்தேன்*
*களவுபொய் காமம் கள்கொலை வரம்பைக்*
*கண்டனன் பாவி அண்ட இடமிலை;*

அரசியலும் கவலையும்

*அரசியல்  நுழைந்து புரளிகள் செய்தேன்*
*சட்ட மன்றிலும் நெட்டிப் பார்த்தேன்*
*ஆட்சிப் பெயரால் கோட்செய் இடமது;*
*செய்தித் தாளில் பொய்க்கலை கற்றேன்;*
*கல்வியின் பயனைச் செல்வம் அழித்தது*
*செல்வம் அற்றது நல்குர வுற்றது*
*பிணிகள் புண்கள் மணிகல னாயின*
*பெருகக் கவலை உருகு கின்றேன்;*
*என்னுயிர் கவலை என்னுளம் கவலை*
*என்னூன் கவலை என்னுடல் கவலை*
*வாழ்வும் கவலை சூழ்வும் கவலை*
*வாழ்வும் கவலை சூழ்வும் கவலை*
*எல்லாம் கவலை இனிய தோழ!*
*கவலை யாயினன்; கலைகள் உணர்ந்தோய்!*

தற்கால நிலை

*எங்கும் சூது எங்கும் வாது*
*எங்கும் கரவு எங்கும் சூழ்ச்சி*
*எங்கும் கொலைகள் எங்கும் போர்கள்*
*உணவும் இல்லை உடையும் இல்லை*
*தங்கும் இடமோ எங்கும் இல்லை*
*என்ன செயலென் றெண்ணி யெண்ணி*
*முடிவு காணக் கடலை அடைந்தனன்*
*உன்னைக் கண்டது முன்னை வினை" எனப்,*

**47.** களிகளும் – கட்குடியர்களும். மடிகளும் – சோம்பர்களும். காமக்குழுக்களும் – காமக் கூட்டங்களும்.

**53.** சட்டமன்றிலும் – சட்டசபையிலும்.

**54.** கோள் – குறும்பு; கோணல்.

**55.** செய்தித் தாளில் – வர்த்தமான பத்திரிகைகளில்.

**57.** நல்குரவு உற்றது – தரித்திரம் அடைந்தது.

**58.** மணிகலன் – இரத்தினாபரணங்கள்.

விடுதலை

புலன்களை வென்று நலஞ்செய் தவனன்,
"முடிவை மாற்றிக் கடிக தீயதை
மாண்டு பிறக்கவோ ஈண்டுத் தோன்றினம்
பிறவி அறுக்கவே பிறந்தனம் அப்பா!
உடலைச் சடமெனத் திடமாக் கொள்க
உயிரின் உண்மையில் உறுதி பெறுக
**விடுதலை** அடையவே உடலைத் தாங்கினம்
விடுதலை இன்றிப் படுதல் துயரம்
உடல்வழி உயிரை ஓம்பும் **தவமே**
கவலை, தவத்தைக் கல்லி வீழ்த்தும்
கவலை விடுக! கவலை விடுக!

கவலை தீர்வழி

கவலை தீர்வழி புவியில் சிலவுள;
**வள்ளுவன்** வாய்மையை உள்ளித் தெளிந்து
நடையில் கொண்டே அடைவு பெற்றவர்
பகர்ந்த திங்கே புகல்வன் அதுவோ
'தனக்கோர் உவமை இல்லான் தாள்சேர்
மனத்தே கவலை மாறும்' என்பது,
பற்றுக அதனைப் பற்றுக" என்றலும்,
"அவன்யார்! அவன்யார்! அருள்க" என்று
பெருமன் கேட்கத் தருமத் தவனனும்,

நாடும் நகரமும்

"குன்றும் மலையும் குலவும் நாடு
காடும் பொழிலும் பாடும் நாடு
ஆறும் கிளையும் அணிசெய் நாடு
செழிக்க விளைவு கொழிக்கும் நாடு
பசியை அறியாப் பசுமை நாடு

---

77. சடம் – அறிவற்ற பொருள் (Matter).

78. உண்மையில் – இருப்பில் (Existence).

80. படுதல் – விழுதல்; சாதல்.

82. கல்லி – தோண்டி; வேரோடு களைந்து.

85. உள்ளி – சிந்தித்து.

86. நடையில் – செயலில். அடைவு – அநுபவம்.

88–89. 'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் – மனக்கவலை மாற்ற லரிது'
– திருக்குறள்.

98. சேவை – தொண்டு.

*தேவரும் நாடும் சேவை நாடு*
*தேசரை இறக்கும்* ***கோசல நாடு,***
*அத்திரு நாட்டில்,* ***சத்தியம் சாந்தம்***
*ஆட்சி புரிந்த மாட்சி* ***அயோத்தியில்,***

அவதாரம்

*உலகில் அருளை அலகில் ஒளியால்*
*பொழிந்து வளர்க்க எழுந்த ஞாயிறு*
*கறைமதி போற்றும் நிறைவெண் மாமதி*
*நடுங்கினும் மண்ணிலம் ஒடுங்கா மால்வரை*
*எல்லையும் அலையும் இல்லா ஆழி*
*ஏடார் மலரிசை வாடா மதிமலர்;*
*யாழும் குழலும் வாழத் தொழுது*
*குழைய மிழற்றும் மழலைக்* ***குழவி***
*பெற்றவர் போற்றும் நற்றவக் குழவி*
*மண்ணும் விண்ணும் எண்ணும் குழவி*
*மெய்க்கதிர் விரிக்கும் தெய்வக் குழவி*
*மருட்பால் அருந்தா அருட்பாற் குழவி;*
*வளர்ந்தது வளர்ந்தது கிளர்ந்த* ***திளமை***
*சூழினும் வறுமை சுரக்கும் வண்மை*
*வற்றினும் மேகம் வறளாச் சாரல்*
*சூறா வளியால் சுழலாப் பூங்கா*
*கள்ளி எரியினும் கலங்காப் பைங்கூழ்;*
***பள்ளிக்*** *கேகத் துள்ளாக் கன்று*

---

99. தேசரை – ஒளியுடைய பெரியவரை. (தேசு – ஒளி). இறக்கும் – தன்னிடத்தில் இறங்குமாறு செய்யும்.

102. அலகில் – அளவில்லாத.

103. ஞாயிறு – சூரியன்.

104. கறைமதி – களங்கமுடைய சந்திரன். மாமதி – பூரண சந்திரன்; முழு நிலா. (இந்நிலா கறையற்றது; குறையற்றது; என்றும் தேயாதது.)

105. மண்ணிலம் (பூமி) நடுங்கினும்..... மால்வரை – பெரியமலை.

106. ஆழி – கடல்.

107. ஏடு ஆர் – இதழ்கள் நிறைந்த. மதி – அறிவு.

109. மிழற்றும் – பண் பாடும்.

112. மெய் – உடலில்; உண்மையாகிய எனினுமாம்.

113. மருள்பால் – மயக்கந் தரும் மாயப் பால்.

114. கிளர்ந்தது – எழுந்தது.

115. வறுமை உலகைச் சூழினும். வண்மை – வரையாது கொடுத்தல்.

117. சூறாவளியால் – சுழற் காற்றால். கா – இளம்பொழில்.

118. பைங்கூழ் – பசும்பயிர்.

*படியில் ஏடு படியாப் புலமை*
*கலையை ஆய அலையாக் கழகம்*
*ஓதா துணர்ந்த ஓத்தின் வைப்பு*
*தெய்வக் கலையாய்த் திரண்ட அண்ணல்;*

ஆட்சித் திறன்

***நாவலந்*** *தீவைக் காவல் புரிந்தவன்*
*நல்லறம் என்னும் இல்லறம் ஏற்றவன்*
*மைந்தரைத் தந்து தந்தை யானவன்*
***பரதன்*** *என்ற வரதனை ஈன்றவன்;*
*தழைக்க உலகம் குழப்ப மின்றி*
*அமைதி பெறுநெறி அமைதற் பொருட்டுத்*
*தருமம் நிலைக்கக் கரும வகையை*
*ஒட்டித் திட்ட வட்டம் இட்டவன்*
*வழிவழி வாழ மரபுகள் கண்டவன்*
*நிலம்புல வரம்பை நலம்பெற வகுத்தவன்*
*நீர்நிலை பயன்பட நேர்முறை அமைத்தவன்*
*தொழில்கள் இயங்க வழிதுறை தொகுத்தவன்*
*எண்ணெழுத் தின்மொழிக் கண்களைத் திறந்தவன்*
*இன்ன பிறவும் மன்ன வைத்தவன்;*
*அகிம்சை மேலாம் அறமென முதல்முதல்*
*அகிலம் உணர அருளிச் செய்தவன்*
*பாவம் தவிர்க்கச் சீலம் சொன்னவன்*
*ஒழுக்க விழுப்பம் தழைக்க மொழிந்தவன்*
*பொருளொரு பாலே பெருகி, மறுபால்*
*அருகின் குழப்பம் ஆர்க்கும் என்பதை*
*என்றோ! என்றோ! என்றோ! உணர்ந்து*
*மிகுபொருள் வேட்டலை விடுக என்றவன்;*
*பொதுமை பழமையோ? புதுமையோ? ஓர்க;*

120. படியில் – பூமியில்.

121. கழகம் – பல்கலைக் கழகம்.

122. ஓத்தின் வைப்பு – வேதப் புதையல். (களஞ்சியம்.)

143. ஆர்க்கும் – ஆரவாரிக்கும்.

138–145. ‘விரையார் மலர்மிசை வருவார் திருவறம் விழைவார் கொலையினை விழையார்பொய், யுரையார் களவினை யொழுகார் பிறர்மனை யுவவார் மிகுபொருள் உவவார்வெஞ், சுரையால் உணர்வினை யழியார் அழிதசை துவ்வார் விடமென வெவ்வாறும், புரையார் நறவினை நுகரார் இரவுணல் புகழார் குரவரை யிகழாரே’ – **திருக்கலம்பகம்.**

145. வேட்டலை – விரும்பலை.

146. ஓர்க – யோசிக்க; சிந்திக்க.

*‘தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாபோல்*
*மன்னுயிர் வைகலும் ஓம்பி’ வாழ்ந்தவன்*
*எல்லா உயிரிலும் இருக்கை பெற்றவன்*
*எல்லாம் தன்னுள் இருத்தலைப் பார்த்தவன்*
*‘தன்னுயிர் மன்னுயிர்’ - ‘மன்னுயிர் தன்னுயிர்’*
*என்ற உண்மையில் நின்ற மன்னவன்;*
*என்னே அவன்மொழி! என்னே அவன்செயல்!*
*போற்றுக போற்றுக போற்றி உய்க;*

துறவு

*நல்ல பெரும! சொல்வன் மேலும்*
*அவனது மாண்பை அவனது நிலையைத்*
*துறத்தற் கரிய முடியைத் துறந்து*
*கானம் நடந்த வான முனிவன்*
*ஆட்டி அலைத்து வாட்டும் பொறியின்*
*கொடும்புயல் ஒடுக்கிய கடுந்தவ வைரம்*
*‘சுவைஒளி ஊறே ஓசை நாற்றம்’*
*ஐந்து வகைதெரிந் துந்திய புலவன்*
*பொறிபுலப் படையால் வெறிமறப் போர்செய்*
*அரசை அடக்கிய ஆண்டகை வீரன்*
*பொல்லாப் பொய்மை நில்லா தோட*
*மெய்ஒளி கண்ட வையத் தப்பன்*
*பரந்த ஆலடி இருந்த செம்மல்*
*அழலவி அசோகின் நிழலமர் சீலன்*

---

148. வைகலும் – நாடோறும்.
சிந்தாமணி : 3107.

157. மனிதன் எதைத் துறந்தாலும் துறப்பன். ஆனால் அவன் முடியைத் துறக்க ஒருப்படுதல் அரிது. முடி இன்பம் பெண்ணின்பத்தினும் சிறந்தது என்று தொனிக்கும் முறையில் அப்பர் சுவாமிகள் ஒரு பாடல் அருளியுள்ளனர். அது வருமாறு: ‘கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும், பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும், தனிமு டிகவித் தாளும் அரசினும், இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே.’ இதுபற்றி, ‘முடியா காதலா சீர்திருத்தமா?’ என்னும் நூலில் விளக்கம் செய்துள்ளேன்.

159. பொறி ஐந்து. அவை: மெய், வாய், கண், மூக்கு, செவி.

161–62.புலன் ஐந்து. அவை: சுவை (ரசம்), ஒளி (ரூபம்), ஊறு (ஸ்பரிசம்), ஓசை (சப்தம்), நாற்றம் (கந்தம்). ‘சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் – வகைதெரிவான் கட்டே யுலகு’ – **திருக்குறள்.** உந்திய – நல்வழியில் செலுத்திய. (விளக்கம் பின்னரும் செய்யப்படும்.)

164. அரசை – (இங்கே) மனத்தை.

167–68.ஆலடி – முதல் தீர்த்தங்கரராகிய விருஷபதேவர் ஞானம் பெற்ற இடம். அசோகு எல்லா தீர்த்தங்கரர்களுக்கும் உரியது. விளக்கம் ஜைன நூல்களிற் பார்க்க. (காமத் தீயைக் குலைக்கும் பண்பு அசோகுக்கு உண்டு. அதனால் அசோகு, ‘அழலவி அசோகு’ என்று சொல்லப்பட்டது.)

*முப்புரம் எரித்த ஒப்புர வாளன்*
*முக்குடை ஞான முக்கண் மூர்த்தி*
*பூவிற் பொலிந்த சேவடிக் குரிசில்*
*விருப்பு வெறுப்பின் இருப்பழி வள்ளல்*
*பின்நிகழ் செயல்களை முன்னுரை முதல்வன்*
*பிறர்க்கென வளர்ந்த அறத்து நேயன்;*
*பிணிமூப் பறியான் குணமாண் புடையான்*
*நரைதிரை இல்லான் புரையில் புங்கவன்*
*காமனைக் காய்ந்தவன் காலனை மாய்த்தவன்*
*அன்பன் அருளன் இன்பன் இறைவன்*
*அறவன் அந்தணன் அறிவன் துறவன்;*

நிர்வாணம்

*பொழில்கள், கதிரின் பொழிவைத் தாங்கி*
*வெப்பந் திரித்துத் தட்பம் பெய்யவும்*
*வெண்மை நீலம் செம்மை மஞ்சள்*

---

**169.** 'அப்பணி செஞ்சடை ஆதி புராதனன், முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள், முப்புர மாவது மும்மல காரியம், அப்புரம் எய்தமை யாரறி வாறே' – **திருமந்திரம்.** ஒப்புரவு – உபகாரம்; ஒற்றுமை; சமம்; சமாதானம். (உட்கலந்த அன்பால் உறவு கொண்டு தொண்டு செய்தல்.)

**167–171.** 'மூவிலையொரு நெடுவேலின் – மேவாதவினையவுணர், குன்றுபட நூழிலாட்டி – வென்றட்ட விறல்வெகுளியை, மூவெயிலின் **முரண்முருக்கி** – மூவர்சர ணடையநின்றனை, கருப்பு நாண் வில்லிபட – நெருப்புமிழ் நெடுநோக்கினை, கோள்வலிய கொடுங் கூற்றைத் – தாள்வலியின் விழவுதைத்தனை, பரிவில்கே வலக்கிழத்தி – பிரிவில்லா ஒருபாகனை, ஆன்றமெய் அறம்வளர்க்கும் – மூன்றுகண் முனித்தலைவனை, ஆலநெடு நிழல் அமர்ந்தனை – காலமூன்றுமுடன் அளந்தனை, தாழ்சடைமுடிச் சென்னிக் – காசறு பொன்னெயிற்கடவுளை, மன்னியபேருலகனைத்தும் – நின்னுள்ளே நீயொடுக்கினை, நின்னின்று நீவிரித்தனை – நின்னருளின் நீகாத்தனை, என வாங், காதி பகவனை அருகனை, மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே' – **திருக்கலம்பகம்.**

**170.** முக்குடை, மூவுலகத் தலைமையைக் குறிப்பது (திரிலோக நாயகன்). முக்கண்; இயற்கைக் கண் இரண்டு; மூன்றாவது ஞானக் கண்.

**171.** 'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் – நிலமிசை நீடுவாழ் வார்' – **திருக்குறள்.**

**172.** இருப்பு அழித்தலாவது வேரோடு களைதல் என்க.

**173.** விருஷபர், கயிலையின் பாங்கர், தம்மைக் காணவந்த தம் புதல்வனாகிய பரதனுக்கு அறிவுறுத்திய பொருள்களில் பின் நிகழ் செய்திகளை முன்னுரைத்தது நனிவிளங்கும். தேவர், அந்நாளில் எடுத்துரைத்த நிகழ்ச்சிகளிற் சில முன்னே நடைபெற்றன; இப்பொழுதும் சில நடைபெற்றுவருகின்றன. விரிவு **மஹாபுராணத்திற்** காண்க.

**176.** புரையில் – குற்றமில்லாத.

**177.** காமனைக் காய்தலாவது எல்லாப் பெண்களையும் தாய்மாராகக் கருதுவது. காலனை மாய்த்தலாவது மரணத்தை வெல்வது.

**180.** கதிரின் பொழிவை – சூரிய கிரணத்தின் வெயிலை.

*பன்னிறப் பூக்கள் பன்னி ஏற்கவும்*
*மயிலும் கிளியும் குயிலும் பூவையும்*
*பாடியும் ஆந்தையும் பாம்பும் கீரியும்*
*அணிலும் முயலும் அன்பாய் அணையவும்*
*நரியும் நாயும் பரியும் பன்றியும்*
*கரியும் புலியும் அரியும் ஆனும்*
*மானும் மந்தியும் மயங்கிப் பார்க்கவும்*
*வில்லும் வாளும் வேலும் வீழக்*
*குறவரும் வேடரும் குண்டரும் கொலைஞரும்*
*கலைஞரும் முனிவரும் கலந்து குழையவும்*
*வெம்மை உமிழ்ந்து விரியும் பாலையில்*
*கழுகும் காக்கையும் கண்டபே ரண்டமும்*
*செம்புளும் வாகமும் சிம்புளும் புறவும்*
*பரிந்தே அந்தரப் பந்த ரிடவும்;*
*மலைமலை கடந்து வனம்வனம் கடந்து*
*வயல்வயல் கடந்து மணல்மணல் கடந்து*
*சுரம்பரல் கடந்து சுழலழல் கடந்து*
*மழைகுளிர் கடந்து மடுகயம் கடந்து*
*நதிநதம் கடந்து 'நான்நான்' கடந்து,*
*உடையை நீத்தும் உணவை நீத்தும்*
*உரையை நீத்தும் உறக்கை நீத்தும்*

183. பன்னி – அர்ச்சித்து.

184. பூவையும் – நாகணவாய்ப் பறவையும்.

185. பாடியும் – வானம்பாடியும்.

187. பரியும் – குதிரையும்.

188. கரியும் – யானையும். அரியும் – சிங்கமும். ஆனும் – பசுவும்.

189. மந்தியும் – குரங்கும். மயங்கி – மருவி; கலந்து.

194. கண்டபேரண்டம் – இருதலைப் பறவை; யானையையும் தூக்கும் வல்லமையுடையது.

195. செம்புள் – கருடன். வாகம் – சக்கரவாகப் புள். சிம்புள் – சரபம்; சிங்கத்தைத் தாக்கும் ஆற்றல் வாய்ந்தது.

199. சுரம் – அருநெறி; கஷ்டமான வழி; கோடையில் கொதிப்பது. பரல் – பருக்கைக் கல்.

200. குளிர் – பனிக்குளிர். கயம் – நீர்நிலை. (மண்டைக் குளம் முதலியன.)

201. நதி : மேற்கிருந்து கிழக்கு நோக்கி ஓடுவது. நதம் : கிழக்கிருந்து மேற்கு நோக்கி ஓடுவது.

180–201. இந்நூற்கண் மிகச் சில இடங்களில் வருணனைகள் வருகின்றன. அவை உட்பொருள்களை உடையன. ஒன்றோடொன்று பகைத்துப் போரிடும் உயிர்கள், தத்தம் பகைமையை நீத்து, அன்பாகிப், பெரியவரைப் பார்ப்பது வருணனை வாயிலாக விளக்கப்பட்டுள்ளது. பகைமையற்ற இடத்திலேயே 'நான் நான்' என்னும் முனைப்பு அறும். இங்கே 'நான் நான்' என்பதை வருணனைகளின் உட்பொருள் வாயிலாகத் தெளிவு செய்து கொள்வது நலம். மற்ற இடங்களில் வரும் வருணனைகளையும் இவ்வாறே கொள்க.

203. உறக்கை – உறக்கத்தை; தூக்கத்தை.

*உயிரின் திடத்தால் ஊக்கம் பெற்றே,*
*அடியைச் சார்ந்தனன் முடியைப் பார்த்தனன்*
*காற்றில் முடியைக் கருத்தால் நோக்கி,*
*ஏறினன் ஏறினன் ஏறென ஏறினன்*
*ஏறினன் பாறைகள் ஏறினன் படிகள்*
*ஏறினன் அடுக்குகள் ஏறினன் எடுப்புகள்*
*ஏறினன் குண்டுகள் ஏறினன் குன்றுகள்*
*ஏறினன் கோடுகள் ஏறினன் மேடுகள்*
*ஏறினன் நிமிர்ந்தே ஏறினன் இவர்ந்தே;*
*கலைகள் சுரக்க உலகிற் பெரிதாய்*
*ஞானம் வளர்க்கும் மோனக் களனாய்க்*
*கங்கை சிந்து பங்கயன் சேயும்*
*கருணை வெள்ளம் பெருகி ஓடப்,*
*பசும்பனி போர்த்து விசும்பை முட்டும்*
*பொன்மலை நடுவண் மின்னித் திகழும்*
*புண்ணியம் திரண்ட வெண்மலர்**க் கயிலை***
*நண்ணினன்; நண்ணி நாட்டம் வைத்துத்*
***தவத்தில்** அமர்ந்தனன் தவத்தின் நிலையை*
*உள்ளல் அரிதே விள்ளல் அரிதே*
*ஒளிகள் எல்லாம் உருண்டு திரண்டே*
*ஓடி ஓடி நாடித் தேடியும்*
*ஒதுங்கி ஒளித்துப் பதுங்கித் தேடியும்*
*காண ஒண்ணாக் கரையில் ஒளியாய்*
*எண்ணில் அடங்கா இணையில் ஒளியாய்*

---

205. அடியை – இமயமலையின் அடியை.

206. காற்று இல் – காற்று இல்லாத.

207. ஏறு – சிங்கம்; எருதுமாம்.

211. கோடுகள் – உச்சிகள்.

214. மோனக்களனாய் – மோனத்துக்கு நிலைக்களனாய் – இருப்பிடமாய்.

215. பங்கயன் சேயும் – பிரமபுத்திர நதியும். (பங்கயன் – பிரமன் ; சேய் – புத்திரன்) கங்கையும் சிந்துவும் பிரமபுத்திராவும் என்றபடி.

217. விசும்பை – ஆகாயத்தை.

218. பொன்மலை – இமயமலையின். நடுவண் – மத்தியில்.

219. 'அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின், நண்ணுமூன்றுல குந்நான் மறைகளும், எண்ணில் மாதவஞ் செய்யவந்தெய்திய, புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது'', 'நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி, இலகு தண்தளிர் ஆகவெ ழுந்ததோர், உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல், **மலரும் வெண்மலர்** போல்வதம் மால்வரை' – **பெரியபுராணம் : திருமலைச் சிறப்பு.**

226. கரையில் – எல்லையில்லாத ; அகண்ட.

*அறிய முயலினும் அடங்கா ஒளியாய்*
***பரிநிர் வாணம் - பரகதி - சிவகதி***
*அடைந்தனன் அப்பா! அடைந்த நாளினைச்*
*சிவநிசி நோன்பாய் அவனி கொண்டது*
*அழியாக் கதியை அடைந்தவன் எவனோ?*
*ஆதி பகவன் சோதி நாதன்*
*விருஷப தேவன் புருஷ நாயகன்*
*அவனே இறைவன் அவனே ஈசன்*
*அவனே மாயன் அவனே நான்முகன்*
*அவனே சித்தன் அவனே அருட்சினன்*
*அவனே தர்மம் அவனே அகிம்சை*
***அவனே அருகன்** அருகே அணைந்தால்*
*விடுதலை வழியைக் கடிதில் பெறலாம்*
*அவனை எண்ணுவம் அவனை வாழ்த்துவம்*
*அவன்பணி ஆற்றுவம் அவன்நெறி ஓம்புவம்;*

ஜைனம் எது?

*அந்நெறி எதுவோ? செந்தண் ஜைனம்*
*ஜைனம் ஒருமதச் சார்பின தன்று*
*ஜைனம் எதுவெனச் சாற்றுவன் இங்கே;*

---

229. பரிநிர்வாணம் – பர (மேலான) கதி. இது சிவகதி எனப்படும். (நரககதி, விலங்குகதி, மனித கதி, தேவகதி ஆகிய நான்கு கதிகளையும் கடந்தது சிவகதி என்க. சிந்தாமணி : 2762–2811 பார்க்க.) 'சினவரன் தேவன் சிவகதி நாயகன்' – சிலப்பதிகாரம் : 10. நாடுகாண் 180.; 'இன்பமற் றென்னும் பேரான் எழுந்தபுற் கற்றை தீற்றித், துன்பத்தைச் சுரக்கு நான்கு கதியெனுந் தொழுவிற் சேர்ந்து, நின்றபற் றார்வ நீக்கி நிருமலன் பாதஞ் சேரின், அன்பு விற்றுண்டு போகிச் சிவகதி அடையலாமே' – சிந்தாமணி : 3105 ; 'மணிமலிந்த ஒளியெனவும் மலர்நிறைந்த விரையெனவும் மல்குசந்தின், துணியுமிழ்ந்த தண்மையினுந் தோன்றியஅப் பேரின்பத் துள்ளே தோன்றி, இணைபிறிதும் இலராகி இமையவரும் மாதவரும் இறைஞ்சி ஏத்தப், பணிவரிய சிவகதியின் அமர்ந்திருந்தார் அறஅமிர்தம் உண்டா ரன்றே' – **மேருமந்திர புராணம்: 1400 ; 'மெய்ம்மை யாம்** உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப், பொய்மை யாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித், தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச், செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே' – அப்பர்.

231. சிவநிசி நோன்பாய் – சிவராத்திரி விரதமாய்.

232. கதியை – வீடுபேற்றை.

237. சினன் – ஜினன்.

239. அருகன் – பூச்சியன்; பூஜ்யன்; பூசிக்கத் தக்கவன். (சிலப்பதிகாரம் – 10 : நாடுகாண் காதை : 176–189; அடியார்க்கு நல்லார் உரை பார்க்க. இம்மூலமும் உரையும் இந்நூற்கண் போந்துள்ள அருகன் பெயர்களின் பொருள்விளக்கத்துக்குத் துணை புரியும்.)

240. கடிதில் – விரைவில்

243. செந்தண் – (செந்தண்மை) செவ்விய அருளுடைய.

ஐம்புலன் வெல்லும் செம்மை ஜைனம்
ஒழுக்கம் காக்கும் விழுப்பம் ஜைனம்
கொலைகள வொழிக்கும் நிலைபெறல் ஜைனம்
கள்பொய் காமம் தள்ளல் ஜைனம்
ஊனுண் ணாத மேனிலை ஜைனம்
வெறிஆ வேசம் முறியிடம் ஜைனம்
சாந்த அமுதம் மாந்தல் ஜைனம்
நல்லெணம் நன்மொழி நற்பணி ஜைனம்
பிறர்க்கென வாழும் திறத்துறை ஜைனம்
தேவை அளவை மேவல் ஜைனம்
**அகிம்சா தர்மம்** அனைத்தும் ஜைனம்;
இந்த ஜைனம் எந்த மதமோ?
மக்கட் குரிய தக்க **பொதுமை;**

அறவோர்

அகிம்சை அருளா அறவோர் இல்லை
புத்தர் சோக்ரதர் உத்தமக் கிறிஸ்து
வள்ளுவர் வசுவர் தெள்ளியல் மூலர்
தாயு மானவர் நேயச் சாந்த
லிங்கர் இராம லிங்க அடிகள்
தால்ஸ்தாய் காந்தி சால்பின ரெல்லாம்
அகிம்சா தர்மம் அருளியே சென்றனர்;
அன்னவர் போதனை பின்னை நாளில்
விதவித மான மதமத மாயது!
என்னே பிளவு! என்னே உலகம்!
அகிம்சா ஜைனம் அகன்ற ஜைனம்
அகண்ட ஜைனம் அகில மாக
வேண்டுவம் என்றும் வேண்டுவம் நாமே;

அரசும் அறமும்

உலகை நோக்குக கலகக் காட்சியே!
அறத்து நினைப்பும் பிறத்தல் இல்லை
அறத்தை வளர்த்தல் அரசின் பொறுப்பாம்
அரசு கோணின் துரிசு பெருகும்

---

252. மாந்தல் – உண்ணல்.

261. வசுவர் – பசுவர் ; வீரசைவ முதல்வர்.

262–63. சாந்தலிங்கர் – கொலை மறுத்தல் முதலிய நூல்களைச் செய்தவர்.

264. சால்பினர் – அகிம்சையால் அமைதி பெற்றவர்.

275. துரிசு – குற்றம்.

*துரிசு, கொடும்போர் முரசே கொட்டும்
பார்நிலை என்னாம்? போர்மய மாகும்;
திருந்தின் அரசு திருந்தும் எல்லாம்
'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்'
அருகன் அகிம்சா தருமமும், கூறாம்
மிகுபொருள் விரும்பாத் தகைமைச் சீலமும்
ஒன்றின் அரசில் பொன்றும் போர்கள்;
உலகம் வழங்கா கலகக் காட்சியே;
எங்கும் அமைதி தங்கி வழியும்;
அகிம்சை பரவி அகிலம் ஆகத்
தரும சபைகள் பெருகல் வேண்டும்
அறப்பணி வேண்டும் அறப்பணி வேண்டும்"
என்று விரித்து நன்று கூறினன்;*

### மனந் திருந்தல்

*"என்னவோ நினைந்து இங்கே வந்தேன்
என்னை ஆள இங்கே குருவாய்
எழுந்தனை" என்றே எழுந்த பெருமனை
எழுந்து தவனன் அழுந்தப் பற்றி,
"நண்பர் நாம்வே றெண்ணல் தவறு
உன்னுவம் அருகனை உன்னுவம் அகிம்சையை
உன்னுவம் பணியை" என்னப், பெருமன்
விழிநீர் ததும்ப, "விழுமிய குருவே!
உன்வழி நிற்பன்" என்று நவின்றனன்;
கவலை பிணிநோய் சவலை உதிர்ந்தன
புதிய பண்புகள் விதைகொண் டரும்பின;
இருவரும் ஏகினர் பருகினர் பழநீர்*

### அருகனைப் போற்றல்

*தங்க சாலையில் தரும சபையினில்
தங்கினர் கழிந்தது கங்குல் பொழுது
காலைக் கடன்களைச் சால முடித்தே*

---

277. பார்நிலை – உலக நிலை

280. கூறாம் – அத்தருமத்தின் ஒரு கூறாகிய.

280–81. எல்லாச் சீலங்களும் அகிம்சையில் அடங்கும். சீலக்கூறுகள் எல்லாம் சேர்ந்த ஒன்றே அகிம்சை. இங்கே அகிம்சையின் ஒரு கூறு சொல்லப்பட்டது. அது, 'மிகுபொருள் விரும்பாமை' என்பது. அகிம்சா தர்மமும் அதன் கூறாகிய மிகுபொருள் விரும்பாமை என்னும் சீலமும் இங்கே குறிக்கப்பெற்றன.

282. ஒன்றின் – சேரின் ; கலந்தால். பொன்றும் – அழியும்.

302. கங்குல் – இரவு.

*அறவெளி யொளியை அறிவுச் சுடரை*
*அன்பின் ஒழுக்கை அருளின் பெருக்கை*
*அருகன் உருவைப் பெருகும் அழகைக்*
*கண்டு கண்டு கண்ணீர் மல்கப்*
*புலனால் அருந்திப் புந்தியால் நுகர்ந்தே*
*அன்பில் மூழ்கி இன்பில் திளைத்து,*
*"விண்ணின் றிறங்கிய விளக்கே போற்றி*
*மண்ணினை ஆண்ட மன்னா போற்றி*
*பரதனைத் தந்த பரிவே போற்றி*
*விரதம் ஆகிய விமலா போற்றி*
*வழிகளை வகுத்த வள்ளால் போற்றி*
*தொழில்முறை தொகுத்த தோழா போற்றி*
*முற்றத் துறந்த முனிவா போற்றி*
*கற்றவர் மற்றவர் கண்ணே போற்றி*
*அரிய கயிலை அடைந்தோய் போற்றி*
*பரிநிர் வாணப் பரனே போற்றி*
*போற்றி போற்றி போற்றி சயசய*
*போற்றி சயசய போற்றி போற்றி*
*போற்றி போற்றி புராண போற்றி*
*போற்றி போற்றி புனிதா போற்றி*
*போற்றி போற்றி புகலே போற்றி*
*போற்றி போற்றி போற்றி சிவமே -*
*சிவமே போற்றி சினனே போற்றி*
*தவமே போற்றி தமிழே போற்றி*
*தேவே போற்றி தெளிவே போற்றி*
*மூவா போற்றி முதல்வா போற்றி*
*சித்தா போற்றி முத்தா போற்றி*
*அத்தா போற்றி அமுதா போற்றி*
*தாயே போற்றி தயவே போற்றி*
*நேயா போற்றி நிமலா போற்றி*
*குணமே போற்றி கொடையே போற்றி*

---

308. புலனால் – ஐம்புலனால். புந்தியால் – மனத்தால்.

314. வாழ்வுக்குரிய வழிகளை.

322. புராண – பழையவனே. 'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' – **மாணிக்கவாசகர்.**

324. புகலே – புகலிடமே ; எல்லா உயிர்களும் தஞ்சம் புகும் இடமே.

327. தமிழே – இனிமையே.

329. மூவா – மூவாதவனே ; முதுமை அடையாதவனே ; மரணமற்றவனே.

*உணவே போற்றி உயிரே போற்றி*
*நல்லார் பொல்லார் நடுவே போற்றி*
*எல்லாம் வாழ இருப்போய் போற்றி*
*உருகும் அடியர் உளமே போற்றி*
*அருக போற்றி அகிம்சை போற்றி*
*போற்றி போற்றி போற்றி" என்று*
*தொழுது வணங்கி எழுந்து நின்றே,*
*"அறப்பணி யாற்றப் புறப்படு கின்றோம்*
*அறவா உன்றன் அருட்டுணை வேண்டும்"*
*என்று வேண்டிச் சென்றனர் அன்றே;*

அறிவுறுத்தல்

*இருவரும் ஒருவராய் மருவிக் கருத்தால்,*
*உண்மைஅஞ் சாமையும் உணர்ச்சியும் கிளர்ச்சியும்*
*உந்த நடப்பர் முந்த நடப்பர்*
*பேசி நடப்பர் வீசி நடப்பர்*
*விரைந்து நடப்பர் வேர்க்க நடப்பர்*
*காற்றொளி மரநீர் காக்க நடப்பர்*
*ஆடும் மாடும் அணைய நடப்பர்*
*நாய்கள் சூழ நயந்து நடப்பர்*
*நடந்து நடந்து படர்ந்த ஊர்தொறும்*
*புகுந்து தங்குவர் தகுந்த முறையில்*
*அன்புசெய் விருந்தை அன்புடன் உண்பர்*
*அதைஇதைப் பேசி அருள்விதை விதைப்பர்*
*மன்றில் மக்களை ஒன்று திரட்டுவர்*
*கையால் தொழுவர் வாயால் வாழ்த்துவர்*
*கலந்த மனத்தால் கனிய நோக்குவர்*
*மேடையில் பூப்பர் பாடல் முழங்கும்*

---

**335.** 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே' – புறநானூறு – **18** ; மணிமேகலை – **11 ;96.**

**336–37.** நடுவே – நடுநிலையே. 'கல்லார்க்கும் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே – காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே, வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே – மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே, நல்லார்க்கும் பொல்லாக்கும் நடுநின்ற நடுவே – நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே, எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே – என்னரசே யான்புகலும் இசையுமணிந் தருளே' – இராமலிங்க சுவாமிகள்.

**347.** உந்த – செலுத்த. முந்த – முற்பட.

**355.** அன்பு – ஊரவருடைய அன்பு.

**357.** மன்றில் – மரத்தடியில்.

**360.** பூப்பர் – பொலிவர்.

*அலைகள் அடங்கும் அமைதி நிலவும்*
*இருவரில் ஒருவர் எழுந்து நின்று, -*
*மனிதப் பிறவி இனிய தென்றும்*
*வீட்டுப் பேற்றைக் கூட்டுவ தென்றும்*
*கடலைக் கடக்க உடல்புணை என்றும்*
*புணையூ றடைந்தால் துணைபோம் என்றும்*
*இறந்தும் மீண்டும் பிறந்தும் உழலல்*
*துக்கச் சேற்றில் சிக்குதல் என்றும்*
*இந்தப் பிறவியில் பந்தம் அறுக்கும்*
*நெறியைத் தேடுதல் அறிவே என்றும்*
*பழியும் பாவமும் வழியும் பிறவியில்*
*வழுக்கும் இழுக்கும் கொழுக்கும் என்றும்,*
*பற்றுகள் யாவும் பற்றா திருக்கப்*
*பற்றிலான் தாளைப் பற்று மாறும்*
*அகிம்சை அறத்தை அகங்கொளு மாறும்*
*பொருந்திய உணவை அருந்து மாறும்*
*குணம்வளர் நோன்புக் கிணங்கு மாறும்*
*உயிர்க்கொலை வகையை ஒழிக்கு மாறும்*
*ஐந்தவித் தைந்தை அரிக்கு மாறும்*
*உடம்பிலும் அறிவிலும் திடம்பெறு மாறும்*
*ஒழுக்கம் ஓம்ப உழைக்கு மாறும்*
***மிகுபொருள் வேட்டல்** வெகுபேர் நலங்களைக்*
*கெடுத்த லுணர்ந்து விடுக்கு மாறும்,*
*குருகுலக் கல்வி பெருகப் பயிலவும்*

365. கடலை – பிறவிக்கடலை. புணை – தெப்பம்; தோணி.

370. நெறியை – சன்மார்க்கத்தை.

373 – 74. 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் – பற்றுக பற்று விடற்கு' – **திருக்குறள்.**

377. நோன்பு – விரதம்.

378. வகையை – தூண்டிலிடல், வலைவீசல், பலியிடல், ஆடு – மாடு – பன்றி – தொட்டிகள் முதலிய வகைகளை.

379. ஐந்து அவித்து – ஐம்புலன்களை அவித்து. (ஐந்தவித்தல் என்றது; பொறி புலன்களை அறவே நிர்மூலப் படுத்துவதன்று; அவற்றை நல்வழியில் இயங்கச் செய்வது. 'அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார், அஞ்சு மடக்கும் அமரரும் அங்கிலை, அஞ்சு மடக்கில் அசேதன மாமென்றிட், டஞ்சு மடக்கா அறிவறிந் தேனே' எனவரூஉம் திருமூலர் திருவாக்கு உன்னற் பாலது. இதுபற்றி, 'முருகன் அல்லது அழகு', 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை', 'திருக்குறள் விரிவுரை' முதலிய நூல்களில் ஒல்லும்வகை விளக்கம் செய்துள்ளேன். இங்கே விரிவுரை வேண்டுவதில்லை.) ஐந்தை அரித்தல்–ஐம்பெரும் பாவங்களைச் சிதைத்து அழித்தல்.

384. குருகுலம் – கல்வி, அறிவு, ஒழுக்கம் பெறுதற்பொருட்டுக் கூட்டுறவுடன் மாணாக்கர் வதியும் ஆசிரிய நிலையம்.

*இரண்டும் நாலும் இல்ல மாகவும்*
*இளங்கோ உயிர்ப்பு விளங்கிச் சிலம்பவும்*
*தேவர் மணியொளி மேவிக் காலவும்*
*தமிழ்நூல் மணத்தைக் கமழச் செய்யவும்*
*பன்மொழிப் புலமை பரவி விரவவும்*
*தொன்மைக் கலைகளின் நன்மை காணவும்*
*புதிய கலைகளை மதியுடன் ஆயவும்*
*ஊரே கலையாய்ச் சீரே வழங்கவும்*
*கலைகளை வாழ்க்கையில் நிலைக்க வைக்கவும்*
*உழவை மற்றத் தொழிலைப் பெருக்கவும்*
*கோணுதல் இல்லா வாணிபம் வளர்க்கவும்*
***அருளைப் பெருக்கப் பொருளை ஈட்டவும்***
*மூர்க்கம் அற்ற ஆட்சி முகிழ்க்கவும்*
*இயற்கையோ டியைந்த முயற்சியில் செல்லவும்*
*தீயரைத் திருத்தும் நேயம் பொங்கவும்*
*வாழ்தல் பிறர்க்கெனும் வாழ்வே நடக்கவும்*
*அறம்வளர் மன்றம் ஆங்காங் கமைக்கவும்*
*ஆடிப் பாடிக் கூடிக் குலவவும்*
*வீடும் ஊரும் நாடும் உலகும்*
*ஒருகுடி என்னும் உறவைத் தெளியவும்*
*தெளிய வல்ல சேய்களை அளிக்கப்*
*பெண்ணும் ஆணும் எண்ணி வாழவும்*

---

**385.** இரண்டும் நாலும் – இரண்டடியுடைய திருக்குறளும் நாலடி கொண்ட நாலடியாரும். 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி – நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்பது பழமொழி. இல்லமாகவும் – குடும்பமாகவும்.

**386.** இளங்கோ சிலப்பதிகாரத்தை அருளியவர். உயிர்ப்பு – பிராணன். சிலம்பவும் – ஒலிக்கவும். 'சிலம்பு' என்பது சிலப்பதிகாரத்தை உணர்த்தும் தொனி.

**387.** தேவர் மணியொளி – திருத்தக்கதேவர் அருளிய சிந்தாமணி ஒளி. காலவும் – உமிழவும் ; வீசவும்.

**389.** விரவவும் – கலக்கவும்.

**391.** மதியுடன் ஆயவும் – அறிவுடன் ஆராயவும்.

**396.** வாழ்க்கைக்கு அருளும் தேவை ; பொருளும் தேவை. 'அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு – இவ்வுலகம் இல்லாகி யாங்கு' என வரும் திருவள்ளுவர் உள்ளக்கிடக்கையை உன்னுக. பொருள் ஒருபால் பெருகி, மற்றொருபால் அருகின், அருள் விளங்குதல் அரிதென்பதை விளக்கவேண்டுவதில்லை. ஆதலின் **மிகுபொருள் விரும்பாமை** வலியுறுத்தப்பெற்றது. மிகுபொருள் விரும்பாமையிலே அருள் எளிதில் விளங்கும். திருக்குறள் : 'வெஃகாமை' பார்க்க.

**397.** முகிழ்க்கவும் – அரும்பவும்.

**401.** மன்றம் – சபை.

*அய்யன் அப்பன் மெய்யன் அருளிய*
*சீலம் எல்லாம் சேர்ந்த ஒன்றாம்*
***திருவறம்** ஓங்கிச் செகமே சிறக்கவும் -*
*பேசினர் ; மற்ற நேசரும் தோன்றி*
*நின்று தழுவி நன்று பேசினர்;*
*அமிழ்தம் விழையும் அமிழ்தம் என்னப்*
*பாடும் பாடல்; கூடும் கூட்டம்*
*வாழ்த்தி வாழ்த்தி வழியே செல்லும்;*
*இந்தப் படியே இருவரும் இணைந்து*
*போதனை செய்தும் சாதனை செய்தும்*
*ஆற்றுவர் பணியே ஆற்றுவர் வாழி;*

வாழி

*வாழி நற்பணி வாழிமெய்த் தொண்டர்*
*வாழி கலைகள் வாழி தொழில்கள்*
*வாழி அரசு வாழி பொதுமை*
*வாழி ஒழுக்கம் வாழி அகிம்சை*
*வாழி தருமம் வாழி சங்கம்*
*வாழி தீர்த்தர் வாழி அறவோர்*
*வாழி அருகன் வாழி ஜைனம்*
*வாழி உலகம் வாழி வாழியே!*

○○○

---

**407–409.** வேர், தண்டு, கவடு, கோடு, தளிர், இலை, அரும்பு, மலர், காய், கனி முதலியன கொண்ட ஒன்று மரம்; மரங்கள் எல்லாம் சேர்ந்த ஒன்று பொழில். இவ்வாறே அருகன் அருளிய சீலங்கள் எல்லாம் சேர்ந்த ஒன்று (தர்மம் – அறம்) **திருஅறம்** எனப்படுவது. 'திங்கள்மும் மாரிபெய்க திருவறம் வளர்க'...சிந்தாமணி வாழ்த்து; 'திருவற மெய்துதல் சித்தமென் றுணர்நீ' – மணிமேகலை – 10 ; 85; 'திருமலை மேவிய சிவனே போற்றி, சித்தை மாநகர் நற்றவா போற்றி, வளந்திக ழார்ந்த வானவர் வணங்குங், களந்தையிற் றிருவறங் கண்டாய் போற்றி' – **திருப்பாமாலை; அருகசரண அகவல் : 70–73.**

**413.** பாடல் தானே பாடும் என்றபடி.

**423.** தீர்த்தர் – தீர்த்தங்கரர் (இருபத்து நால்வர்).

# பொருளும் அருளும்

## அல்லது

# மார்க்ஸியமும் காந்தியமும்

(1951)

# முன்னுரை

*மார்க்ஸியத்தின் உயிர்நாடி பொருள்; காந்தியத்தின் உயிர் நாடி அருள். இரண்டும் சேர்ந்த ஒன்று, வருங்காலப் புது உல கத்தை நல்வழியில் அமைக்கவல்லதென்பது எனது கருத்து. அக் கருத்தை உரைநடையில் விரிந்த ஒரு நூலாக்க யான் எண்ணிய துண்டு. அவ்வெண்ணம் ஈடேறவில்லை. ஏன்? என் கண்களைப்* **படலம்** *மறைத்தமை ஒரு சிறந்த காரணம். வேறு சில காரணமும் உண்டு. ஆகவே, இந் நூலைச் சுருங்கிய முறையில் அகவற்பாவால் இயற்றலானேன்.*

*கண்கள் படலத்தால் மறைக்கப்பெற்ற நாள்தொட்டுக் கருத்தொளியில் விளங்கும் பொருள்களைப் பெரிதும் அகவற் பாவால் வாய்மொழி வாயிலாக வெளியிட்டு வருகிறேன். அவ் வெளியீடு எனக்கு எளிமையாகிவிட்டது. அகவற்பா, பழந்தமி ழர் கொண்ட ஒருவித உரைநடை.*

*இந் நூலை யான் வாய்மொழியாகச் சொல்லிவந்தபோது, அச்சொற்களை எழுத்தில் வரைந்தவர் சாது அச்சகப் பொறுப் பாளர் - திரு. மு. நாராயணசாமி. அவர்க்கு எனது நன்றி உரியதாக.*

*அச்சுத்தாள்களைப் பார்வையிட்டுத் துணைபுரிந்தவர் மூவர். ஒருவர் டாக்டர் - மு. வரதராசனார்; மற்றொருவர் தமிழ்ப் பேராசிரியர் - வித்துவான் - அன்புகணபதி; இன்னொருவர் ஜீவ பந்து - ஸ்ரீபால். இம்மூவரும் என் கண்ணொளியாய்ப் புரிந்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று. மூவரும் நீடு வாழ்க; வாழ்க.*

*இந்நூற்கண் மார்க்ஸியச் சாரம் பிழியப்பட்டிருக்கிறது. அதனுடன் காந்தியத் தேனும் கலந்துள்ளது. நூலின் உள் ளுறைக் கேற்பப் 'பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்' என்னும் தலைப்புச் சூட்டப்பட்டது.*

*எனது உடல்நிலையையும் கண்நிலையையும் விரித்துக் கூற வேண்டுவதில்லை. இந்நிலையில் என்னால் இயற்றப் பெற்ற இந் நூற்கண் போந்துள்ள பிழைகளைப் பொறுத்தருளுமாறு நேயர் களை வேண்டுகிறேன்.*

*இராயப்பேட்டை*
*15.08.1951* **திருவாரூர் – வி. கலியாணசுந்தரன்**

# 1. வாழ்த்து

*தெய்வம் வாழ்க! வையம் வாழ்க!*
*திருவறம் வளர்க அருளறம் வளர்க*
*திங்கள் மும்மழை எங்கும் பெய்க*
*ஆறுகள் பெருக ஏரிகள் நிறைக*
*பொழிலும் பயிரும் பொழிக பசுமை*
*மயில்கள் ஆடுக குயில்கள் கூவுக*
*வண்டுகள் பாடுக நண்டுகள் கேட்க*
*ஆனிரை கன்றுகள் மேனிலை பெறுக*
*உழவுந் தொழிலும் கொழிக்க விளைவே*
*பொருளும் அருளும் மருவி ஒன்றுக*
*கொலைபுலை அற்ற நிலைகள் அமைக*
*மிகுபொருள் விரும்பாத் தகுதி சூழ்க*
*நல்லார் இல்லாக் காட்சி பொலிக*
*இன்மை தோன்றாத் தன்மை செறிக*
*எல்லா உயிரும் இன்புற் றியங்க*
*நிலைபெற நெஞ்சில் கலைகள் உலவுக*
*உலகம் ஒருமையில் இலகி ஓங்குக*
*அறத்தொண் டாற்றும் அருட்குழு மலிக*

---

2. எல்லாச் சீலங்களும் சேர்ந்த ஒன்று அறம். அதன் மாண்பை நோக்கித் 'திரு அறம்' என்றனர் சான்றோர்; 'மறவியின் மயங்கி வையத் துயிர்களை வருத்தஞ் செய்யா, தறவியன் மனத்தை யாகி யாருயிர்க் கருள் பரப்பிச், சிறையன பிறவி போக்குந் **திருவற** மருவிச் சென்று, நிறைபுகழுலகங் காத்து நீடுவாழ்கென்று நின்றார்' – **யசோதர காவியம்.**
   அருள் அறம் – அகிம்சா தர்மம்.
3. திங்கள் – மாதம்.
5. பொழிலும் – சோலைகளும்.
8. ஆன் நிரை – பசுக்கூட்டம்.
10. மருவி – கலந்து.
11. நிலைகள் – அமைப்புக்கள்.
13. இன்மை – இல்லாமை; வறுமை.
17. இலகி – விளங்கி.
18. அருள் குழு – அருள் நிறைந்த திருக்கூட்டம்.

*அகிம்சை முதலருள் அருகன் வாழ்க*
*தெள்ளு தமிழுயிர் வள்ளுவம் வாழ்க*
*மார்க்கிஸ் காந்தி மார்க்கம் வெல்க*
*திருவறம் வளர்க அருளறம் வளர்க*
*தெய்வம் வாழ்க! வையம் வாழ்க!*

---

**19.** முதல் அருள் – முதல் முதல் அருளிய.

**20.** தெள்ளு – தெளிந்த. வள்ளுவர் கொள்கை, 'வள்ளுவம்' என்று சொல்லப்பட்டது.

**21.** மார்க்ஸ் என்னும் பெயர் செய்யுளின் பொருட்டு ஈண்டு மார்க்கிஸ் என்னப்பட்டது.

# 2. குருகுலம்

கடல்

*கடல்கள் காணாக் கடலொன் றுளது*
*காட்சிக் கடங்கா மாட்சி யுடையது*
*கலைக்கு விருந்தாம் நிலைமை கொண்டது;*
***வானே உருகித்** தானே நீராய்*
*இந்தக் கடலென வந்தது கொல்லோ!*
***உடுக்கள் உதிர்ந்து** படுக்கை கொள்ளத்*
*தீவுகள் ஆகி மேவின கொல்லோ!*
*அங்கும் இங்கும் எங்கும் ஒளிசெய்*
*நித்திலம் பவளம் நீலம் மரகதம்*
*வயிரம் கோமளம் மாமணி **மலைகள்;***
*தாக்கித் தகர்த்துத் தூக்கிச் செல்லும்*
*படைகள் மோதி உடைந்தா லென்னத்*
*தரங்கம் மோதித் தளர்ந்து வீழ்ந்தே*
*எழுந்து பாடி விழுந்து வணங்கும்;*
*ஒருபால் கருமை ஒருபால் பசுமை*
*ஒருபால் வெள்ளை ஒருபால் மஞ்சள்*
*ஒருபால் நீலம் ஒருபால் சிவப்பாய்ப்*

---

2. மாட்சி – பெருமை. 3. விருந்தாகும்.

6. உடுக்கள் – நட்சத்திரங்கள்.

9. நித்திலம் – முத்து.

9–10. நித்திலமலை, பவளமலை, நீலமலை, மரகதமலை...

10. மணி – மாணிக்கம்; இரத்தினம். மலைகள் – மலைகள் (உண்டு).

12. படைகள் – சேனைகள்.

13. தரங்கம் – அலைகள்

11–14. எதிரிகளைத் தாக்கி, அவர்களையும் அவர்கள் பொருள்களையும் தூக்கிச் செல்லும் இயல்புடைய சேனைகள் மோதி உடைந்தாற் (தோல்வியுற்றுப் பணிந்தாற்) போல, அலைகள் மலைகளை மோதித் தளர்ந்து, தோல்வியுற்றுப், பின்னே எழுந்து தோத்திரம் செய்து விழுந்து வணங்கும் என்றபடி.

15. ஒருபால் – ஒருபக்கம்.

*பன்னிறம் வேய்ந்தது; தொன்மை வாய்ந்தது;*
*கட்டு மரமும் திட்டத் தெப்பமும்*
*படகும் தோணியும் நடுபாய்க் கப்பலும்*
*விட்டும் தொட்டும் முட்டியும் கலந்தும்*
***மிதவைத் தீவென** அசைந்து நிற்கும்;*
*சண்டைக் கப்பல் அண்டுவ தில்லை;*
*அடியில் உயிர்கள் குடிகொண் டுள்ளன*
*அவற்றின் பெயர்பல அவற்றின் செயல்பல*
*உயிர்நூல் இன்னும் பயில வில்லை;*
*வலைகள் அலையில் அலைவ தில்லை;*
*அமைதி தவழும் சுமதி **யாறும்***
*அலைகள் பாடும் புலமை யாறும்*
*அடிக்கடி சுழலும் இடக்கி யாறும்*
*ஆழம் அறியாச் சூழி யாறும்,*
*வான்மலைப் பொருளையும் கான்விடு பொருளையும்*
*வாங்கி அன்பால் தாங்கிச் சுமந்து,*
*பாடுகள் நிறைந்த நாடுகள் ஈரம்*
*பெற்று வாழ உற்றுற் றொதுக்கி*
*ஓடி ஓடி நாடிப் பாய்ந்தே,*
***அத்து விதக்கலைச்** சத்தியம் காட்டக்*
*கலந்தே ஒன்றும் நலத்தை யுடையது;*
*கல்விக் கடலைக் கடந்த பெரியோர்*
***கருணைக் கடலென** அருளினர் பெயரே;*
***கருணை** மொய்த்த பெருமைத் தீவுகள்*
*பலவற் றுள்ளும் நிலவு பொழியும்*
***பளிங்குத் தீவில்** விளங்கிரு நாடு;*
***வடலை** ஒன்று; **திடலை**மற் றொன்று;*

**வடலை**

*தோழமை விரும்பி வாழும் நாடு*
*விண்ணவர் விழையும் வண்ண நாடு*

---

18. வேய்ந்தது – அணிந்தது. தொன்மை – பழமை.

22. மிதவைத் தீவு என – மிதத்தலையுடைய தீவுகளைப் போல.

32. வான் – உயர்ந்த. கான் – காடு.

34. பாடுகள் – உழைப்புகள்.

37. அத்துவிதம் – இரண்டற்றது; பரமாத்மா என்னும் ஆனந்தக் கடலில், ஜீவாத்மா கலந்து ஒன்றுபடுவதை அறிவுறுத்துவது அத்துவிதக் கலை.

41. கருணை – கருணைக் கடலில்.

46. விழையும் – விரும்பும். வண்ணம் – அழகிய.

*நோன்பிகள் போற்றும் பான்மை நாடு*
*மலையரண் காட்டரண் நிலையாய் நிற்கவும்*
*கலையரண் அறவரண் தலையாய் நிற்கவும்*
*மற்ற அரண்களும் சுற்றி நிற்கவும்*
*ஓங்கும் நாடு பாங்குள நாடு;*
*வானம் பொய்ப்பினும் ஈனம் உறாதே;*
*என்றும் ஊற்றுக் குன்றுதல் இல்லை;*
*தண்ணீர் நிலைகள் கண்ணைக் கவரும்*
*வாய்க்கால் பாய்ச்சல் ஓய்வெண் ணாது;*
*பொழில்கள் நிழலை வழிவழி பொழியும்*
*பழங்கள் வலிந்து வழங்கும் பரிந்து;*
*விசிறும் கதிர்கள் வேனிற் கோடையில்*
*பசும்புல் உயர்ந்து பசுக்களை அழைக்கும்*
*உழவும் தொழிலும் விழவா நடக்கும்*
*நூற்றலும் நெய்தலும் காற்றிலும் நடக்கும்;*
*உணவுடை உறைவிடம் உளம்நினை யாதே*
*இல்லார் இல்லை கல்லார் இல்லை*
*எங்கும் மகிழ்ச்சி பொங்கும் பொங்கும்;*
*மீனின் அழகில் நாரை மூழ்கும்*
*'கிள்ளை பாடும் பூவை கேட்கும்'*
*மயில்கள் ஆடலைக் குயில்கள் காணும்*
*பண்கள் ஆண்களைப் பெண்மையாக்கும்;*
*எங்கும் பங்கயம் எங்கும் வண்டுகள்*
*எங்கும் நல்வினை எங்கும் திருமணம்*
*எங்கும் திருவறம் எங்கும் அருளறம்*
*அன்பே நாடும் இன்ப நாடு*
*நடலை அற்ற வடலை நாடே;*

---

**47.** நோன்பிகள் – நோன்பு கொண்டவர்கள்; விரதிகள்.

**48.** அரண் – காவல்.

**49.** அறம் – தர்மம்.

**53.** ஊற்று – ஊற்றுக்கள்; ஊற்றுக் கண்கள்.

**60.** விழவா – திருவிழாவாக.

**62.** உறைவிடம் – தங்குமிடம்.

**66.** பூவை – நாகணவாய்ப் பறவை.

**68.** பெண்மை, ஈண்டு அமைதியை உணர்த்துவது.

**69.** பங்கயம் – தாமரை.

**70.** நல்வினை – மங்கல வினைகள்; 'மங்கல வினைகளெங்கும் மணஞ்செய்கம் பலைக ளெங்கும் – பங்கய வதனமெங்கும் பண்களின் மழலை யெங்கும்...' – பெரியபுராணம்.

**73.** நடலை – துன்பம்.

## திடலை

*மண்ணின் றெழுந்து விண்ணினை நோக்கி*
*'வருக'என் றழைக்கும் விருந்துக் காட்சி;*
*பெரும்பெரும் பதிகள் நெருங்கி நிரைந்து*
*செறிந்தா லென்னச் சிறக்கும் காட்சி;*
*கணக்கில் மலைக்குலம் இணங்கி நீண்டு*
*தொடர்ந்து மிடைந்து படர்ந்த காட்சி*
*வழங்கும் இனிய பழந்திரு நாடு -*
*செயற்கை சேரா இயற்கை நோக்கும்*
*இயற்கை வாழ்வும் இயற்கைச் செயலும்*
*இயற்கைத் தானமும் இயற்கைத் தவமும்*
*இயற்கை ஞானமும் இயற்கை மோனமும்*
*வழிவழி வளரும் எழில்மிகு நாடு -*
*நாடுகள் பதிகள் காடுகள் காக்கள்*
*உளங்கவர் நீர்நிலை வளங்கொழி புலங்கள்*
*காவிய ஓவிய பாவிசைக் கலைகள்*
*அழகு நிலையம் பழகும் பண்புகள்*
*வளர்ச்சிக் குதவும் வாழ்வுக் கூறுகள்*
*எடுத்துக் காட்டாய்ப் படிப்பருள் நாடு -*
*திங்கள் தயவைக் கங்குல் நாடா*
*ஒளிமரம் காலும் உயர்ந்த நிலவை;*
*எல்லா ருழைப்பின் ஈகையே உணவுடை;*
*மாந்தர் கைகள் ஏந்தி நில்லா*
*மாவின் கிளையவ் வேலை செய்யும்;*

---

75. விருந்து – புதுமை.
76. நிரைந்து – வரிசையாக நின்று.
77. செறிந்து – நிறைந்து; நெருங்கி. செறிந்தாலென்ன – செறிந்தாற்போல.
79. மிடைந்து – நெருங்கி; நிறைந்து.
85. எழில் – அழகு; எழுச்சியுமாம்.
86. நாடுகள் – மற்ற நாடுகள். காக்கள் – இளம் பொழிகள்.
87. புலங்கள் – வயல்கள்.
89. அழகு நிலையம் – அழகுப் பெண்கள் (ஆகுபெயர்).
91. எடுத்துக்காட்டாய் – உதாரணமாய்.
92. திங்கள் – சந்திரன். கங்குல் – இரவு.
93. ஒளிமரம் – ஜோதி விருட்சம். காலும் – உமிழும்.
94. ஈகை – கொடை.
96. மாவின் கிளை – மாமரத்தின் கிளைகள். அவ்வேலை – அந்த ஏந்தும் வேலையை; கை நீட்டிப் பிச்சை எடுப்பதை; 'வேத வேதியர் வேள்வியே தீயன – மாத ரோதி மலரே பிணியன

*களிறும் பிடியும் காதல் இலக்கியம்*
*சராசர மெல்லாம் சாற்றும் அறிவியல்*
*மக்கள் உறுதி தக்க அரணே*
*அருளின் ஆட்சி அரசியற் பள்ளி*
*அருளறம், வாழ்க்கைக் குறிக்கோள் ஆகும்;*
*அண்டை ஊர்பறித் துண்ணல் அற்றது*
*சீரைப் பெருக்கும் சிறப்பு வாய்ந்தது*
*பொதுமை பரப்பும் புதுமை உடையது;*
*புடவி போற்றும் திடலை நாடே;*

காடு

*வடலை வரம்பையும் திடலை வரம்பையும்*
*இடைநின் றெழுந்து தடவுங் காடு;*
*பசுங்கடல் பெயர்ந்து விசும்பில் கலக்கப்*
*பொங்கினா லென்னப் பொலியுங் காடு;*
*நாடி மேகம் ஓடல் மறந்து*
*தவழ்ந்து தவழ்ந்து தவஞ்செய் காடு;*
*கதிரின் ஒளியை எதிர்கொண் டேற்றுத்*
*தாங்கி உமிழும் பாங்குறு காடு;*
*பல்லுயிர் வாழ்ந்து பல்க நாளும்*
*மல்லல் கொழிக்கும் செல்வக் காடு*
*நாடு மகிழப் பாடுங் காடு;*

நிலையம்

*நாடு வளர நடுவண் நடுவண்*
*இடந்தரத் தவமே வடிந்த நிலையம்;*
*பொறுமை நிலத்தில் அறிவுக் கலைகள்*
*கால்கொள, அன்பு சுவராய் எழும்ப,*

---

– காதல் வீதிவி லக்கே கவலைய – சூத மாதவியேபுறஞ் சூழ்வன' – **பெரிய புராணம் – திருக்குறிப்புத்தொண்ட நாயனார்.**

97. களிறும் பிடியும் – ஆண்யானையும் பெண்யானையும்.

98. அறிவியல் – விஞ்ஞானம்.

105. புடவி – உலகம்

சூதம் – மாமரம்; மாமரக் கிளை.

108. விசும்பில் – ஆகாயத்தில்; விண்ணில்.

112. கதிரின் ஒளியை – சூரியனுடைய ஒளியை.

115. மல்லல் – வளம்.

117. நடுவண் நடுவண் – (காட்டில்) இடை இடையே.

118. இடந்தர – (காடு) இடந்தர.

*அருளே கூரையாய் அமையும் நிலையம்;*
*உலகை அமைதியில் நிலைபெறச் செய்யும்*
*அருட்கலை வளர்க்கும் பொருட்கலை முதலாம்*
*கலைகளின் கருத்தே குலவும் நிலையம்;*
*வாய்மை ஒழுக்கம் தூய்மை அடக்கம்*
*தொண்டு தியாகம் தொழில்கள் பயிற்சி*
*ஊக்கம் உறுதி ஆக்கும் நிலையம்;*

முனிவர்

*அத்திரு நிலையம், சத்தியம் சாந்தம்*
*சுத்தம் உடைய உத்தம முனிவரைக் -*
*கல்வி கேள்வி இல்லற அடைவு*
*பிறர்க்கென வாழும் அறத்துச் செல்வம்*
*பெற்றுக் கனிந்த நற்றவ முனிவரை -*
*மின்னார் முடியும் பொன்னார் மேனியும்*
*கருணை நோக்கும் கலைச்சொல் நாவும்*
*வெள்ளைத் துகிலும் விளங்கும் முனிவரை -*
*உலக நலமே இலகும் நெஞ்சும்*
*அந்நலம் பொழியும் அழகிய வாயும்*
*அதைச்செய் வாழ்வும் அடைந்த முனிவரைக் -*
*குருமா ராகப் பெறுமா றெண்ணும்;*

கூட்டு வாழ்வு

*தூய நடக்கை, நேய வளர்ச்சி,*
*கூட்டு வாழ்வு, நாட்டல் குருகுலம்;*
*உலகம் ஒருகுலம் என்னும் உணர்வு*
*பலபல கலையால் பலபல வகையாய்ப்*
*பிறக்கும் பீடம் சிறப்புக் குருகுலம்;*
*வளமைக் கொழுமையும் இளமைச் செழுமையும்*
*கெழுமிய இளைஞர் குழுமிக் குருவுடன்*
*வாழ்ந்து பயிலிடம் வானக் குருகுலம்;*

---

**123.** விளக்கம் 'பொருள்' என்னும் அதிகாரத்திற் பார்க்க.

**128–139.** அத்திருநிலையம்... முனிவரை.... எண்ணும்.

**130.** அடைவு – அனுபவம்; பேறு.

**134.** கலைச்சொல் – கலையாகிய சொல்லையுடைய

**146.** கெழுமிய – பொருந்திய; நிறைந்த. குழுமி – கூடி.

**147.** வான – உயர்ந்த.

**கடமைகள்**

*வைகறை எழுவர் 'வையம் வாழ்க'*
*என்றே எழுவர் இரவிலும் அந்த*
*வாழ்த்துச் சொல்லித் தாழ்த்துவர் தலையைக்*
*காலை மாலைக் கடன்களை முடிப்பர்*
*காற்றொளி மூழ்கி ஆற்றில் நீந்துவர்*
*சேர்ந்து வழிபா டார்ந்தே ஆற்றுவர்*
*தனியே சென்றும் இனிய தியானம்*
*செய்ய முயல்வர் உய்ய நாளும்;*

**தன்னல ஊற்று?**

*சேர்ந்தே உண்பர் சேர்ந்தே பயில்வர்*
*சேர்ந்தே ஆடுவர் சேர்ந்தே பாடுவர்*
*சேர்க்கை, தன்னல ஊற்றைத் தூர்க்கும்;*
*கூட்டறம், தன்னலம் ஓட்டல் இயற்கை;*
*'தன்னுயிர் மன்னுயிர்' 'மன்னுயிர் தன்னுயிர்'*
*என்னும் உண்மை மன்னும் வாழ்வில்;*
*எங்கும் நட்பாய் எதுவும் நட்பாய்*
*இலங்கும் நுட்பம் துலங்கி விளங்கும்;*
*குருகுல விளைவு குறிக்கற் பாலதே;*

**ஒருமை மார்க்கம்**

*இயற்கைக் கலைகளைச் செயற்கைக் கலைகளை*
*இறைமைக் கலைகளை முறைமுறை ஆய்வர்;*
*திருக்குரா னோடு தெய்வப் பைபில்*
*திரிபிட கத்துடன் பரம ஆகமம்*
*தொல்லுப நிடதம் நல்ல திருக்குறள்*
*போதம் தமிழ்மறை ஆதி நூல்களை,*
*வழியே பிறந்த பழியில் நூல்களை,*
*விரிவுரை நூல்களைத் தெரியக் கற்பர்;*

---

148. வைகறை – விடியற்காலையில்
152. காற்றிலும் ஒளியிலும் (சூரிய ஒளியிலும்) மூழ்குவர்.
161. மன்னும் – நிலைபெறும்
163. இலங்கும் – ஒளிரும்.
168. திரிபிடகம் – பௌத்த வேதம். பரம ஆகமம் – ஜைன வேதம்.
170. போதம் – சிவஞான போதம்.
171. வழியே பிறந்த – ஆதி நூல்களின் வழிவழி வந்த.
172. விரிவுரை நூல்களை – பாடியங்களை.

*வேற்றுமை உணர்வின் வேரே அழியும்;*
*ஒருபுது மார்க்கம் மருவும் நெஞ்சில்*
*அதசன் மார்க்கம் அதுவே மார்க்கம்*
*அகில மார்க்கம் அகிம்சை மார்க்கம்*
*தேவை அளவில் செலுத்தும் மார்க்கம்*
*பாவந் தேய்க்கும் சேவை மார்க்கம்*
*வழிவழிப் பெரியரை வழங்கும் மார்க்கம்*
*குருகுலம் வழங்கும் ஒருமை மார்க்கம்;*

மலைகள் - கடல்கள்

*குருகுலக் கல்வியின் பெருமை என்னே!*
*குருகுல நலத்தை 'இருளில் ஒளி' யெனும்*
*நூலிலும் சிறிது நுவன்றே உள்ளேன்;*
*அக்குரு குலத்தில் தக்க முறையில்*
*கலைகள் பயின்ற மலைகள் கடல்கள்*
*வழியே தொழில்கள் வாணிபம் அரசுத்*
*தொண்டு நிகழின் அண்டம் உய்யும்;*

சோதனை - வேதனை

*கலைகள் பெயரால் உலகில் நிற்கும்*
*பற்பல கழகப் 'பொறப்பு'க் கட்டிட*
*விளைவென் னேயோ! அவைகளெல்லாம்,*
*சோதனைத் திட்ட வேதனை நீங்கவும்*
*கலைகள் விடுதலை உலகில் பெறவும்*
*கோரப் போர்கள் நேரா தொழியவும்*
*குருகுல மாகிப் பெருகல் நன்றே;*

கொலையால் கோடி!

*இந்திரக் கடலும் சந்திரக் கடலும்*
*மந்திரக் கடலும் தந்திரக் கடலும்*
*சுற்றி வளைத்துப் பற்றிய நாடு;*
*மற்ற நாடுகள் பெற்ற பொருள்களைப்*
*பறித்துக் கொழுத்துப் பெருத்த நாடு;*
*கனக நாடணி 'கனலி' நகரில்*
*ஆடுகள் ஆயிரம் மாடுகள் ஆயிரம்*
*கன்றுகள் ஆயிரம் பன்றிகள் ஆயிரம்*

---

174. மருவும் – கலக்கும்.

185–6. மலைகள் கடல்கள் வழியே – மலைகள் போன்றவர்கள் கடல்கள் போன்றவர்கள் வழியே.

187. அண்டம் – உலகம்.

188–190. உலகில் உள்ள பல்கலைக் கழகக் கட்டிடங்களின் விளைவு என்ன?

*நொடிநொடிப் பொழுதில் மடியச் சாய்க்கும்*
*கொலைத்தொழிற் சாலைகள் பலப்பல உடையவன்;*
*நானிலம் எங்கும் ஊனை அனுப்பி*
*வாணிபஞ் செய்து நாணயம் நிதியில்*
*கோடி கோடி தேடி வைத்தவன்*

திருத்தி

*மரபில் வந்தவள் சுரபி அன்னவள்*
*பன்மொழி பயின்றவள் நன்மொழி கேட்பவள்*
*கருத்தை வளர்ப்பவள்* ***திருத்திப்*** *பெயரினள்;*
*ஒருநாள் ஒருவன் திருமா மன்றில்*
*‘கொல்லான் புலாலை மறுத்தான் ஒருவனை*
*எல்லா உயிரும் தொழு’மெனும் குறளின்*
*பொருளை விரித்தனன்; பருகினள் அமிழ்தென;*
*உருகி உருகி அருகே அணுகினள்;*
*‘ஐயா’ என்று மெய்யாய் மெய்யாய்த்*
*தன்வர லாற்றைத் தன்மர பொழுக்கைச்*
*சொல்லி வணங்கினள்; நல்ல முனிவனும்,*
*‘குருகுல வாழ்வைப் பெறுக’ என்று*
*சென்றனன்; திருத்தி கன்றெனக் கலங்கினள்;*

குருகுல வாசம்

*தேர்ந்து பின்னே சேர்ந்தனள் குருகுலம்*
*கற்றனள் அங்கே உற்றனள் மாறுதல்;*
*பலபல குருகுலம் உலகில் அமைத்தனள்*
*அருளறப் பணிக்குப் பொருளை எல்லாம்*
*தந்து விட்டனள் சிந்தை ஆர;*
*மரபின் இழுக்கைத் தரையில் கழித்தனள்*
*அறப்பணி நாளும் சிறப்புறச் செய்தனள்;*
*அறப்பணி மூலம் அருட்குரு குலமே*
*வாழ்க குருகுலம்! வாழ்க குருகுலம்!*

காலத்தொண்டு

*குருகுலக் கல்வி பெருகிய காலம்*
*அளித்த உலகம் உலுத்து விட்டது;*
*‘கருணை - மெய்ம்மை - களவா டாமை -*

207–208. ...வைத்தவனுடைய மரபில் வந்தவள்.

208. சுரபி – பசு; காமதேனு.

211. மன்றில் – சபையில்

212–213. ‘கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி – எல்லா உயிரும் தொழும்’ – குறள்.

*மிகுபொருள் விரும்பா மேன்மை' என்ற
ஆதி போதனைச் சாதனை குலைந்தது
மிகுபொருள் விரும்பும் மிலேச்சம் நுழைந்தது
உலகம் எங்கும் கலகம் சூழ்ந்தது
கலகம் போக்க நலமிகு பொருளற
மார்க்கிஸ் முனிவன் மார்க்கம் பிறந்தது;
மூர்க்கம் தொலைக்க முதன்மை அருளற
வழியும் காந்தி வாயில் விழித்தது;*

*இந்த வேளையில் சிந்தை மாந்தர்
பழைய குருகுல முறையைப் புதுக்க
முன்வரல் வேண்டும் முன்வரல் வேண்டும்
காலத் தொண்டிது சாலவும் நன்றே;
இயற்கை ஏவும்; செயற்கை மறிக்கும்;
முயற்சி எழுந்தால் இயற்கை துணைசெயும்;
முயற்சி எழுக! முயற்சி எழுக!
குருகுலக் கல்வி பெருகி நின்றால்
அமைதி நெஞ்சம் அமையும் அமையும்;
அமைதி உலகம் அரும்பும் இனிதே.*

234. ஆதி – ஆதி அருகன்.

# 3. மனிதன்

(ஆதி)

*‘**ஆ**தி மனிதன் நீதியில் வாழ்ந்தனன்’*
*என்றே உலகம் இன்றும் கூறும்;*
*என்ன காரணம்? உன்னிப் பார்க்க*
*இந்நாள் அறிஞர் அந்நாள் நிலையின்*
*அடிவரை ஆய்ந்து முடிவு கண்டனர்;*

வழி

***பழையன்*** *கொண்ட வழியை ஓர்க;*
*உழுவன் நெய்வன் தொழில்பல புரிவன்*
*தானே உழைப்பன் தானே பிழைப்பன்;*
*தரையும் அவனதே விதையும் அவனதே*
*ஏரும் அவனதே ஏறும் அவனதே*
*பருத்தி அவனதே மரத்தறி அவனதே*
*சேரி அவனதே ஏரி அவனதே*
*காடும் அவனதே நாடும் அவனதே;*
*எந்த வேலையும் சொந்தக் கருவியை*
*ஊற்றாக் கொண்டே ஆற்றி வருவன்;*

வர்க்கம் இன்மை

*தொழில் - முதல் வேற்றுமை நுழைவே இல்லை;*
*சரக்கைத் தருவன் சரக்கைப் பெறுவன்*
*சரக்கை விற்பன் சரக்கை வாங்குவன்*
*உண்பன் உடுப்பன் நண்பைப் பரப்புவன்*

---

3. உன்னி – ஆழ நினைந்து.

6. ஓர்க – சிந்திக்க.

10. ஏறும் – எருதும்; காளையும்.

12. சேரி – மக்கள் சேருமிடம்; ஊர்; பதி.

7–19. ...ஆதி மனிதன் காலத்தில், முதல் – தொழில் வேற்றுமை இல்லை. முதல் – தொழில் அவனே. ஒருவன் வேறொருவனிடத்தில் வேலை செய்து கூலி பெறும் இழிவு இல்லை. நாடு காடு முதலியன எல்லாம் மக்கட்குப் பொதுவாகவே பயன்பட்டன. சரக்கை விற்றுச் சரக்கைப் பெறும் பழக்கமே அந்நாளில் உண்டு. அதிகப் பொருள் சேர்க்கை கிடையாது.

*பொருளொரு பாலே திரள்வதும் இல்லை*
*மிகுபொருள் சேர்க்கை புகுவதும் இல்லை;*
*சுரண்டல் எங்கே? சுரண்டல் எங்கே?*
*றட்சி எங்கே? புரட்சி எங்கே?*
*கள்ள வாணிபக் கொள்ளை எங்கே?*
*அலையும் உண்டோ? கொலையும் உண்டோ?*
*கரவும் உண்டோ? களவும் உண்டோ?*
*இரவும் உண்டோ? ஈதலும் உண்டோ?*
*வரியும் ஏது? மறியலும் ஏது?*
*தண்டனை ஏது? கண்டனம் ஏது?*
*அடக்கலும் ஏது? ஒடுக்கலும் ஏது?*
*செயற்கைச் சட்ட முயற்சி ஏது?*

ஆதி நீதி!

*இயற்கைக் கல்விப் பயிற்சி எங்கணும்*
*பொய்ம்மை இடம்பெறா மெய்ம்மை எங்கணும்*
*ஒழுக்கம் உயரும் விழுப்பம் எங்கணும்*
*நோன்பு வளரும் வான்புகழ் எங்கணும்;*
*வேட்டும் இல்லை வேட்டையும் இல்லை*
*தூண்டில் தொட்டிகள் யாண்டும் இல்லை*
*ஊனூண் இல்லை ஊனம் இல்லை*
*அகால மரண அவதியும் இல்லை*
*கூட்டில் உயிர்களை வாட்டுவ தில்லை;*
*ஆதி மனிதன் நீதி என்னே!*

இயற்கை இன்பம்

*மூங்கில் ஓசையில் தேங்கி இருப்பன்*
*வண்டின் யாழை உண்டு கிடப்பன்*
*அரவின் ஆடலில் விரவி நிற்பன்*

---

இகல் பகை எங்கிருந்து வரும்? எல்லாரும் நண்பராகவே – தோழராகவே வாழ்ந்தனர் என்க.

27. இரவும் – ஏற்றலும்; பிச்சையெடுத்தலும்.

36. வேட்டும் – சுடுதலும்.

37. அந்நாளில் தூண்டில் செய்தல் தெரியாது. தொட்டிகள் – ஆடு மாடு பன்றி முதலிய உயிர்களைக் கொலை செய்யும் தொட்டிகள்.

38. ஆதிநாளில் மனிதன் ஊன் உண்டதில்லை. ஊனுண்ணும் பழக்கம் பின்னே நுழைந்தது.

40. கிளி முதலிய பறவைகளைக் கூட்டில் அடைப்பதில்லை.

44. அரவின் – பாம்பின். விரவி – கலந்து; 'ஒன்றுபட்டு'.

*அருவி முழவோ உருகச் செய்யும்*
*பறவைத் துழனி உறவுப் பாட்டாம்*
*குழவி மழலை குழலே ஆகும்*
*பெண்மைத் தாய்மை மண்ணிலம் பெருகும்*
*அன்பும் அமைதியும் இன்பம் ஊட்டும்*
*மாட்சி அருளே ஆட்சி புரியும்;*
*இந்நிலை எய்திச் செம்மை வளர்த்த*
*ஆதி மனிதன் நீதி வெல்க!*

(இடை)

ஆசைப் பேய்

*ஆதி மனிதன் நீதியும் உடைந்ததே!*
*அந்தோ கொடுமை! அந்தோ வெட்கம்!*
*கட்டும் இன்றிச் சட்டமும் இன்றிக்*
*காலைப் போலவும் காரைப் போலவும்*
*உரிமையில் பிறந்தும் உரிமையில் வளர்ந்தும்*
*உரிமையில் உழைத்தும் உரிமையில் உண்டும்*
*உரிமையில் ஆடியும் உரிமையில் பாடியும்*
*உரிமையில் ஓடியும் உரிமையில் கூடியும்*
*உரிமையில் வாழ்ந்த* ***பெருமை மனிதன்,***
*இயற்கையி னின்றும் இழிந்து வீழ்ந்தான்*
*செயற்கைச் சேற்றில் செத்தே போனான்;*
*உரிமை திரிந்தது அடிமைத் தளையால்*
*‘உரிமை மனிதன்’ அடிமை ஆனான்*
*ஆசைப் பேயால் மோசம் போனான்;*

சாம்ராச்சியம்

*தலைமை எழுந்ததும் அலையர சார்த்தது;*
*வேந்தர் வேந்தன் ஏந்தினன் ஆட்சி!*
*வலிசாம் ராச்சியம் வளர்ந்தது மலையெனக்;*
*கரந்தது பொதுநலம் சுரந்தது தன்னலம்*

---

**45.** முழவோ – மத்தளமோ.

**46.** துழனி – ஒலி (பறவை ஒலி).

**56.** காலை – காற்றை. காரை – மேகத்தை.

**64.** தளையால் – கட்டால்; விலங்கால்.

**67.** ஆர்த்தது – ஆரவாரம் செய்தது.

**68.** வேந்தர் வேந்தன் – சக்கரவர்த்தி.

**69.** வலி – வலிமை வாய்ந்த.

**70.** கரந்தது – மறைந்தது.

*முதல் - தொழில் போரின் அதமே எங்கும்;*
*இப்போர் முழக்கம் எப்போ தடங்கும்?*
*இப்போர் அடங்கின் இப்பார் வாழும்;*
*பொருளொரு பாலே பெருகல் முறையோ?*
*வாட்டி மிகுபொருள் ஈட்டல் முறையோ?*
*வட்டித் தேள்கள் கொட்டல் முறையோ?*
*அழுக்கா றெளியரைப் புழுங்கவே செய்யும்*
*இன்மை உடைமை என்னும் வேற்றுமை*
*நல்காப் பொருளே நல்லருள் வளர்க்கும்;*

பொருளும் அருளும்

*அருளை வளர்த்தல் பொருளுக் கழகே*
*அருளை அழிக்கும் பொருளால் தீமையே*
*ஆவி அருளால் மேவும் ஆக்கம்;*
*இரக்கமற்றவன் இறந்த பிணமே*
*'அயிரும் இரக்கமும் ஒன்றே' என்றார்*
*'ஒருவின் இரக்கம் உயிர்போம்' என்றார்*
*வள்ளற் பெருமான் உள்ளம் தேர்க;*

சரண்டலும் விளைவும்

*பொருளின் கோணலில் இருளே சூழும்*
*சுரண்டுங் கொள்ளையால் திரண்டது கொடுமை*
*களவும் சூதும் அளவை மீறின*
*கள்ளும் காமமும் எள்ளல் இழந்தன*
*கொல்லலும் தின்னலும் எல்லை கடந்தன*
*மெய்ம்மைத் தெய்வச் செய்கை சென்றது*
*பொய்ம்மை அரக்கன் புனைந்தனன் வாகை;*
*உரிமை பெற்றன உயிரின் வதைகள்*

---

**73.** இப் பார் – இந்த உலகம்.

**78.** இன்மை– பொருளின்மை. உடைமை – பொருள் உடைமை.

**82.** ஆவி – உயிர்.

**84–85.** 'வருமுயி ரிரக்கம் பற்றியே யுலக வழக்கிலென் மனஞ்சென்ற தோறும் – வெருவிநின் னடிக்கே விண்ணபித் திருந்தேன் விண்ணப்பஞ் செய்கின்றே னின்றும் – உருவளன் னுயிர்தா னுயிரிரக் கந்தான் ஒன்றதே யிரண்டிலை யிரக்கம் – ஒருவிலென் னுயிரு மொருவுமென் னுள்ளத் தொருவனே நின்பதத் தாணை' – திருவருட்பா.

**85.** ஒருவின் – நீங்கின்.

**90.** எள்ளல் – இகழ்ந்து நகையாடுதலை.

**92.** சென்றது – ஓடியது.

**93.** வாகை – வெற்றிமாலை.

*வரியின் சுமையால் இரிந்தது வாழ்வே*
*அண்ட பிண்டமும் தண்டனை மயமே*
*அடக்குச் சட்டம் முடக்கு நோயே;*
*பட்டினி மரணம் எட்டிப் பார்த்துக்*
*குழப்பக் காளியை அழைக்க முனைந்தன*
*காவல் படைகள் தாவிப் பாயும்*
*போர்ப்படை வேகம் சீர்த்தே உருமும்*
*கொல்படை யாக்கும் பல்தொழில் நிலையம்;*
*மனிதன் எங்கே? மனிதன் எங்கே?*
*ஆதி மனிதன் நீதி எங்கே?*

(இக்காலம்)

**அணு!**

*இந்நாள் முயற்சியை நெஞ்சால் நினைக்க;*
*கனிவு பிறக்குமோ? முனிவு பிறக்குமோ?*
*செவ்வாய் மண்டிலம் சேரும் முயற்சி*
*திங்கள் மண்டிலம் செல்லும் முயற்சி*
*உயிரின் உண்மை உணரும் முயற்சி*
*பாரில் ஒருமை பார்க்கும் முயற்சி*
*ஒருபால் நடக்க, மறுபால் என்ன?*
*அணுஅணு என்றே அணுவும் சொல்லும்;*
*அல்லும் பகலும் அழிவே செய்ய*
*வல்ல அணுவின் வகைவகை ஆயும்*
*ஒன்றை என்னென் றுரைப்பது? அதிலே,*

---

95. இரிந்தது – குலைந்தது; விலகியது.

98. பட்டினி மரணம் – பட்டினியும் அகாலமரணமும்.

99. காளி புரட்சிக்கு அறிகுறி.

101. சீர்த்தே – கோபித்தே.

102. உற்பத்திக்கென்று ஏற்பட்ட பல தொழிற்சாலைகள், போரில் கொலை செய்யும் ஆயுதங்களை உண்டாக்கும் நிலையைப் பெற்றன என்க.

106. முனிவு – கோபம்.

108. திங்கள் மண்டிலம் – சந்திர மண்டிலம்.

109. உயிரின் உண்மை – (விஞ்ஞான முறையில்) ஆன்மாவின் இருப்பை.

110. பாரில் – உலகில்.

113. அல்லும் – இரவும்

113 – 18. அழிவுக்கென்று காணப்படும் அணுவின் ஆராய்ச்சியிலே இரக்கம் உண்டோ? மண், மரம், விலங்கு முதலிய அஃறிணை உயிர்களிடத்தில் உள்ள இரக்கமும் இல்லை என்றபடி. இரக்கம் மனித இயல்பு. அவ்வியல்பு, அழிவு ஆராய்ச்சியில் ஈடுபடும் மனிதனிடத்தில் மறைந்துவிடுகிறது.

*மண்ணுக் குள்ள தண்மையும் உண்டோ?*
*விலங்குக் குள்ள நலமும் உண்டோ?*

நெஞ்சு

*பளிங்கு போன்று விளங்கும் நெஞ்சம்*
*சார்ந்த வண்ணம் ஆர்தல் அதனியல்;*
*பிள்ளை அமுதம்; பள்ளி நஞ்சு*
*காலம் நஞ்சு கோலம் நஞ்சு*
*கல்வி நஞ்சு செல்வம் நஞ்சு;*
*நஞ்சு மேடையில் நஞ்சு தாளில்*
*நஞ்சு மன்றில் நஞ்சு கோலில்;*
*காண்டல் கேட்டல் வேண்டல் எல்லாம்*
*நஞ்சுநஞ் சானால் நெஞ்சமும் நஞ்சாம்;*
*அந்த நெஞ்சால் அணுவை ஆய்தலில்*
*என்ன வியப்போ? ஒன்று மில்லை;*
*உலகம் நஞ்சாய்க் கலகம் இடுநாள்*
*அணுகுண் டணுகல் அற்புதம் அன்றே;*
*அஞ்சல் வேண்டா அஞ்சல் வேண்டா*
*ஆண்டவன் உலகம் மாண்டு விடாது!*

விஞ்ஞானம்

*விஞ்ஞா னத்தை வெறுத்தல் தவறே*
*அவ்விஞ் ஞானம் அகிலம் வளர்க்கும்;*
*இயற்கை மதலை இனியவிஞ் ஞானம்;*
*இயற்கை வழியே இறைபணி நிகழ்ந்தது*
*இனிவிஞ் ஞான வழியே நிகழும்;*
*அணுவால் அழிவே அணுகல் கண்டு*
*விஞ்ஞா னத்தை விடுதல் கேடே;*
*அணுகுண் டாய்வின் பணியோ நல்லது;*
*அழிவுக் கதனை இழுத்தவன் மனிதன்*
*அணுவின் ஆற்றல் ஆக்கப் பணிக்குப்*
*பயன்படா வாறு பார்ப்பவன் மனிதன்;*
*முதல் - தொழில் போர்விதை விதைத்தவன் மனிதன்*

---

**119–20.** மனித நெஞ்சம் பளிங்கு போலச் சார்ந்ததன் வண்ணமாகுந் தன்மையுடையது.

**120.** ஆர்தல் – பொருந்தல்; ஆகுதல்.

**121.** பள்ளி – இக்காலப் பள்ளி.

**124.** தாளில் – செய்தித்தாளில்

**125.** மன்றில் – பாராளுமன்றில். கோவில் – ஆட்சியில்.

**136.** இயற்கை மதலை – இயற்கையின் பிள்ளையே.

*அதனை வளர்த்த 'மதியனும்' அவனே;*
*போர்கள் பொன்றின், வேர்கொள் ளாமல்*
*அணுவின் அழிவு தணிந்தே போகும்;*
*அணுவின் ஆற்றல் ஆக்கப் பணிக்குப்*
*பயன்படும் நாளே வையம் பண்படும்;*
*அந்நாள், அணுவைப் பொன்னாப் போற்றும்;*
*அந்நிலை, நஞ்சை அமுத மாக்கும்;*
*பிள்ளையின் நஞ்சும் பள்ளியின் நஞ்சும்*
*மற்றுள நஞ்சும் அற்றே போகும்;*
*வளர உலகம் அளவில் துணையை*
*நல்கும் அணுவால் பல்கும் ஆக்கம்;*
*விஞ்ஞா னத்தால் விளைவு மலியும்*
*காலம் அணித்தே; சீலம் சிறக்கும்;*

கற்றவனா?

*கற்றவன் செல்வன் ஒன்றித் தந்நல*
*வித்திட் டோம்பினர்; கொத்து விளைவை*
*அறுக்கும் நாளிது பொறுக்க, சிறிதே;*
*'யாதும் ஊரே யாவரும் கேளிர்'*
*'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'*
*என்று சான்றோர் அன்றே கூறினர்;*
*அந்நற் கொள்கையைக் கொந்திக் கொந்திக்*
*கூறிட் டலைத்து வேறுபடுத்தினர்;*
*சாதி வெறியைச் சமய வெறியை*
*நிறத்தில் வெறியை மொழியில் வெறியை*
*நாட்டு வெறியை நாட்டி நாட்டிக்*
*கிளப்பி விட்டனர் கிளர்ச்சி மூட்டினர்;*

விடுதலை எது?

*விடுதலை விடுதலை என்று விளம்புவோர்*
*நாடு நாடுகள் என்று நவில்வோர்*
*பிறரிடம் போந்து வெறியை ஏற்றி*
*அறிவை மயக்கி அமைதியை அகற்றி*
*நடுநிலை மனமும் கெடுதல் நண்ண*

---

**147.** பொன்றின் – குறைந்தால்; அழிந்தால்.

**156.** நல்கும் – அளிக்கும். பல்கும் – பெருகும்.

**158.** காலம் அணித்தே (சமீபத்திலே) நெருங்குகிறது.

**160.** ஓம்பினர் – காத்து வளர்த்தனர்.

*மேடையில் பேசுவர் ஆடுவர் பாடுவர்*
*எழுநா கக்க எழுதி விடுவர்*
*இவையெலாம் நடிப்பாய் அவியும் இந்நாள்;*
*ஒருநாட் டுரிமை மறுநாட் டடிமை;*
*எங்கே விடுதலை? அங்கும் கிளர்ச்சியே;*
*அடைவைக் கேட்க அடைக சரிதம்*
*வெள்ளிடை மலையென விளங்கும் மெய்ம்மை;*

வெறி

*நாட்டு வெறியும் நாட்டுப் பித்தும்*
*நாட்டின் பெயரால் மூட்டின போர்கள்;*
*பெற்ற தென்னை? உற்று நோக்குக;*
*மீண்டும் போரே யாண்டும் யாண்டும்;*
*ஒருநாட் டுரிமை மருவா நாளிது;*
*உலக விடுதலை உண்மை விடுதலை*
*கலகம் எழுப்பாக் கருணை விடுதலை*
*நாடெலாம் விடுதலை கூடுதல் ஒருதலை*
*அப்பே றடைய இப்போ தெழுக*
*உழைக்க அதற்கே உழைக்க உணர்ந்தே;*

வீரம் எது?

*வீரம் வீரம் என்று வீறுவோர்*
*தியாகம் தியாகம் என்று செப்புவோர்*
*உணர்ச்சி ததும்பும் கிளர்ச்சிப் பாக்களை*
*முழக்கி, அழகிய ஒழுக்க இளைஞரை,*
*'நாட்டின் அடிமை ஓட்டும் போர்க்கு*
*வாரும்' என்று சேர அழைப்பர்;*
*வெறிஆ வேச அறிவால் இளைஞர்*
*இணங்கினர் ஈண்டினர் கணங்களெனவே;*
*பெற்றவர் வாழ்த்தினர் பெரியவர் வாழ்த்தினர்*
*உற்றவர் வாழ்த்தினர் உறவினர் வாழ்த்தினர்*
*பதியினர் வாழ்த்தினர் மதியினர் வாழ்த்தினர்*
*ஊக்கம் இளைஞரைத் தூக்கிச் சென்றது;*
*சென்றமர்க் களனில் நின்றுபீ ரங்கி*
*வெடிஇடி யிடையே கடிது புகுந்து*
*சுட்டுச் சுட்டுச் சுட்டுக் கொன்றனர்*

177. எழுநா – நெருப்பு.

181. அடைவை – அநுபவத்தை; இதுகாறும் அடைந்த பயனை.

*வென்றி கண்டனர் அன்றே மயங்கினர்;*
*தம்மைக் கொன்றதை அம்ம! அறிவரோ!*
*தன்னைக் காத்தல் தன்னல மன்றோ?*
*எங்கே வீரம்? எங்கே தியாகம்?*

**அச்சம்!**

*கோழையின் அச்சம் குண்டை ஏந்தும்*
*அச்சம் தன்னலப் பச்சைச் சேயே;*
*பொருந்திய முறையில் அருந்தவம் புரிந்து*
*மெய்யைக் கண்ட அய்யன், தன்னைப்*
*பிறர்க்குக் கொடுப்பன் பிறர்க்கென வாழ்வன்*
*தன்னைக் காக்கும் தன்னல மில்லான்*
*அச்சம் அவனை நச்ச அஞ்சும்*
*துன்னா அவனிடம் சின்ன குண்டே;*
*அஞ்சா நெஞ்சம் அறியா மூர்க்கம்;*
*ஈர நெஞ்சில்* ***வீரமும் தியாகமும்***
*தெளிக இளைஞர் தெளிந்து நடக்க;*

(மீண்டும் ஆதி)

எப்படி?

*உலகம் வளர்ச்சியால் ஒருகுலமாகும்*
*காலம் அருகே; மேலாம் நிலையுறும்;*
*ஆதி மனிதன் நீதி உயிர்பெறும்*
*முதல் - தொழில் ஒன்றி இதமே செய்யும்*
*மற்றக் குறைகளும் அற்றுப் போகும்;*
*'எத்துணை யாண்டுகள் இடையின் கழிந்தன!*
*எப்படி ஆதி நீதி உயிர்பெறும்!'*
*என்று கேட்போர் இன்றும் உளரே!*

வித்து வித்தாதல்

*வித்து, முளைசெடி சத்து மரமாய்க்*
*கவடு விடுத்தும் கோடு விடுத்தும்*
*வானுற ஓங்கிப் பானல் மாமதி*

---

213. சேயே – பிள்ளையே.

220. அஞ்சாநெஞ்சம், மூர்க்கத்தை அறியாது என்றபடி.

221. ஈர – அன்பு.

231. வித்து, முளையாய்ச் செடியாய்ச் சத்து மரமாய்.

232. கவடு – கிளைகள். கோடு – கொம்புகள்.

233. பால் நல் மாமதி – வெண்மையுடைய நல்ல பூரண சந்திரன்.

*ஆவ துண்டோ? ஆய்ந்து பார்க்கின்,*
*அரும்பு மலர்காய் விரும்பு கனியாய்ப்*
*பழைய விதையைப் புதுமையில் அளிக்கும்;*
*அளித்தல் இயற்கை களிக்கதை அன்றே;*
*பழமையில் இல்லாப் பண்புச் சத்திகள்*
*புதுமையில் புகுதரும் புதுமை ஒன்றே;*
*ஆதி மனிதன் நீதி உயிர்பெறல்*
*இயற்கைச் சுழலே வியப்பென் னேயோ!*

**231 – 41.** விதை, முளையாய்ச் செடியாய் மரமாய்க் கவடு கோடு விடுத்து, அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிந்து சந்திரன் ஆகிறதோ? இல்லை. பின்னை என்னஆகிறது? விதையே ஆகிறது. இது வெளிப்படை. ஆனால் பழைய விதைக்கும் புதிய விதைக்கும் ஒருவித வேற்றுமை உண்டு. பழைய விதையில் இல்லாத புதுமைச் சத்திகள் புதிய விதையில் நுழைகின்றன. இது வளர்ச்சித் தத்துவத்தின் மாண்பு. அவ்வாறே வர்க்கமற்ற ஆதி மனிதன் இடையில் பலவித வர்க்கம் உடையவனாய் வளர்ந்து, மீண்டும் வர்க்கம் அற்ற மனிதனாகிறான். இஃது இயற்கை. பழைய மனிதனுக்கும் புதிய மனிதனுக்கும் ஏதேனும் வேற்றுமை உண்டா? சிறப்பாக ஒன்றில் உண்டு. அஃது எது? அது, பழைய மனிதன் வாழ்வில் விஞ்ஞானம் இன்மையும் புதிய மனிதன் வாழ்வில் அவ்விஞ்ஞானம் உண்மையும் ஆகும். இப்புதுமை கருதற்பாலது.

## 4. வளர்ச்சியும் விஞ்ஞானமும்

பிறப்பும் இறப்பும்

*பிறப்பும் காட்சி! இறப்பும் காட்சி!*
*பிறப்பிறப் பிடையே வளர்ச்சி யுறுவது*
*வளர்ச்சி இலையேல் பிறப்பிறப் பில்லை*
*பிறப்பிறப் பிலையேல் வளர்ச்சி இல்லை*
*பிறப்பும் இறப்பும் வளர்ச்சித் துணைகள்;*
*வளர்ச்சியில் பலப்பல வகைகள் உண்டு*
*புறத்தும் வளர்ச்சி அகத்தும் வளர்ச்சி*
*நிகழ்தல் காண்க; திகழ்தல் காண்க;*

வளர்ச்சித் தத்துவம்

*மனிதன் கண்ட தத்துவம் பலவே*
*வளர்ச்சித் தத்துவக் கிளர்ச்சி பெரிதே*
*அதன்வர லாறோ விதவிதக் கூத்து!*
*வளர்ச்சி உண்மை நிகழ்ச்சி அப்பா!*
*ஐயந் திரிபு மயக்கம் வேண்டா*
*அறிவியல், வளர்ச்சியை உறுதி செய்தது;*
*அறிவும் அன்பும் செறியும் வளர்ச்சிப்*
*பண்பு சகத்தில் நண்பைப் பெருக்கும்;*

வளர்ச்சிப் படிகள்

*நிற்பன வளர்ந்தே ஊர்வன ஆகி*
*ஊர்வன வளர்ந்து பறப்பன ஆகிப்*
*பறப்பன வளர்ந்து நடப்பன ஆகும்;*
***மந்தியி** னின்றும் வந்தவன் **மனிதன்***
*மனித வளர்ச்சி இனிதே இனிதே;*
*சிறுசிறு குழுவாய்ச் சிதறிச் சிதறிக்*
*காட்டில் வளர்ந்து கூட்டுப் பெற்றுச்*
*சிறிய ஊரனாய்ப் பெரிய ஊரனாய்*

---

14. அறிவியல் – விஞ்ஞானம்

20. மந்தியினின்றும் – குரங்கினின்றும்.

*வட்ட வட்ட வரம்பில் வளர்ந்து*
*நாட்டவன் ஆகி நாட்டம் வளர*
*உலகவன் ஆகும் நிலைமையில் உள்ளனன்;*
*மேலும் வளர்வன்! மேலும் வளர்வன்!*
*என்னே வளர்ச்சி! என்னே அதன் திறம்!*
*வளர்ச்சித் திறத்தை வளர்ச்சியே அறியும்;*

### இருவிதம்

*வளர்ச்சி இயற்கை; வளரும் இருவிதம்;*
*தடுப்பே இன்றி எடுப்பால் வளர்தல்*
*தடுப்புட் பட்டுத் தயங்கி வளர்தல்;*
*இயற்கை இறப்பால் இயங்கும் முன்னது*
*செயற்கைச் சாவால் சேரும் பின்னது;*
*தடுப்புக் காரணம் அடுக்கி விடலாம்*
*அடிப்படை கண்டால் அடுக்கல் ஏனோ?*

### வளர்ச்சியும் அகிம்சையும்

*கொலைபுலை அடிப்படை குலுக்கும் வளர்ச்சியை*
*அகிம்சை வளர்ச்சிக் கரணே செய்யும்;*
*இயற்கை அகிம்சை; செயற்கை இம்சை;*
*அகிம்சை உணர்ந்தவன் அறிவு மனிதனே*
*இம்சையில் நெளியும் அம்சமும் மனிதனே;*
*அகிம்சையின் மாண்பினி அகிலம் விளங்கும்;*
*அணிஅணிப் படையும் அணுகுண் டதிர்ச்சியும்*
*போரும் புரட்சியும் சீறும் இம்சையை;*
*அகில வளர்ச்சிக் ககிம்சை தேவை;*
*தேவை தெரிந்து ஆவியில் வளர்க;*

---

32. இயற்கை வழி எடுப்பால் வளர்தல்; இது தடுப்பின்றி வளர்தலாகும்.

34. இயற்கை இறப்பால் – கால மரணத்தால். (இம் மரணம் தடுப்பில்லா வளர்ச்சிக்குத் துணை புரிவதாகும்.)

35. செயற்கைச் சாவால் – அகால மரணத்தால். (இம் மரணமும் வளர்ச்சிக்குத் துணைபுரிவது; ஆனால், இடையிடையே தடை செய்து தடைசெய்து வளர்ச்சிக்குத் துணைபுரியும் என்க,

40. இரண்டு ஆடுகள் வளர்கின்றன. ஒன்று, நேரே வளர்ந்து காலத்தில் தானே மரணமாகிறது. இஃது இயற்கை மரணம்; அகிம்சையின்பாற்பட்டது. மற்றொன்று, கொலையுண்டு மரணமாகிறது. இஃது அகால மரணம்; இம்சையின்பாற்பட்டது.

43. மாண்பு இனி.

45. போர்களின் பெருக்கும், புரட்சிகளின் பெருக்கும் மக்களுக்கு வெறுப்புண்டாக்கும்; அவ்வெறுப்பு இம்சையைச் சீறத்தூண்டும்.

47. ஆவியில் – உயிரில்; அகத்தில் என்றவாறாம்.

### ஆறாம் அறிவு

*ஓரறி வுயிரே ஈரறி வுயிராய்*
*ஈரறி வுயிரே மூவறி வுயிராய்*
*மூவறி வுயிரே நாலறி வுயிராய்*
*நாலறி வுயிரே ஐயறி வுயிராய்*
*வளர்தலை முன்னோர் அளந்தளந் துரைத்தனர்;*
*'மாவும் மாக்களும் ஐயறி வினவே'*
*ஆறாம் அறிவுக் கூறே மனிதன்*
*ஐந்தில் கிடக்கும் விந்தை என்னோ!*
*கொலைபுலை தவிர்த்தால் குலவும் ஆறே;*
*ஆறாம் அறிவுப் பேறு, புவியை*
*அகிம்சையில் வளர்க்கும் மகிமை உடையது;*

### கருத்து வேற்றுமை

*வளர்ச்சிக் குரிய வளங்களுள் ஒன்று*
*கருத்து வேற்றுமை, பொருத்தும் வளர்ச்சியை;*
*வேற்றுமை இயற்கை ஊற்றுச் சுரப்பே*
*தடுப்ப ததனை ஒடுக்குவ தறிவை;*
*கருத்து வேற்றுமை தருக்க முறையில்*
*நிகழ விடுக்கும் புகழுறும் இடங்களில்*
*உண்மை வளரும் உரிமை வளரும்*
*பெண்மை வளரும் தண்மை வளரும்*
*புதுமை வளரும் பொதுமை வளரும்*
*பொருட்கலை வளரும் அருட்கலை வளரும்;*
*மன்ற நிலைகள் தொன்றுதொட் டமைவன*
*நோக்கம் என்ன? பார்க்கும் காட்சியோ?*
*கருத்து வேற்றுமை காரணமாக*
*அறிவுப் போரே அரங்கில் நடக்கும்*
*எதிர்ப்பில் மதியொளி உதிரும் ஆங்கே*
*மூடப் பழக்க வழக்க ஒழுக்கம்*
*ஓடி ஓடி வாடிப் போகும்;*

---

53. மாவும் – விலங்குகளும். மாக்களும் – விலங்கு குணமுடைய மனிதர்களும் ... (மக்கள் ஆறறிவுடையவர்). தொல்காப்பியம்.

61. வேற்றுமை – கருத்து வேற்றுமை

69. மன்றநிலைகள் – சபைகளின் அமைப்புக்கள். தொன்றுதொட்டு – பழைய காலம் தொட்டு

72. அரங்கில் மன்றங்களில்.

73. மதி – அறிவு.

74. மூடப்பழக்கம், மூடவழக்கம், மூடஒழுக்கம் என்றபடி.

*மனிதர் வளர, இனிதாங் கருத்தை*
*வளர விடுக வளர விடுக;*

**தத்துவம்**

*தத்துவக் கலையைப் பித்தம் என்றும்*
*மனத்தலை தாங்காக் கனச்சுமை என்றும்*
*பேசி வீசும் நேசரும் உளரே!*

*விகடம், களிக்கதை, வெற்றுரை, வருணனை*
*புகழ்வோர் தத்துவம் இகழ்தல் இயல்பே*
*வளர்ச்சியைக் காண வளரும் தத்துவம்;*

**பூனைக்குட்டி?**

*சித்தம் திருந்திய தத்துவன் ஒருவன்*
*மேனியில் குட்டிப் பூனை வீழ்ந்தது;*
*ஐயன், குட்டியின் மெய்யைப் பற்றி,*
*எதுவோ பூனையென் றிதயங் கொள்க;*
*காலோ வாலோ காதோ மூக்கோ*
*மயிரோ மீசையோ முயன்று பார்க்க;*
*எல்லாம் சேர்ந்த ஒன்றென் றாலோ*

*பூனை எங்கோ? பொய்யோ மெய்யோ?*
*ஐயம் பிறக்கும்; ஆய்ந்து தெளிக;*
*புறத்து வளர்ச்சி கருத்தில் வேண்டா*
*அகத்து வளர்ச்சி அரும்பல் அறிக;*
*பூனை வளர்ச்சி மாள வில்லை*
*இன்னும் முடிவு துன்ன வில்லை'*
*என்ற மொழியில் ஒன்றித் தேர்க;*

**வளர்ச்சி**

*ஏதோ ஒன்று வளர்ச்சியாய் மலரும்*
*சத்தியங் காணத் தத்துவர் முயல்கிறார்*
*வளர்ச்சிச் சத்தி கிளரா இடமிலை;*

*மலையில் மரத்தில் புழுவில் புள்ளில்*
*மாவில் மக்களில் மதியில் கதிரில் -*

---

79. மனத்தலை – மனமாகிய தலை.

86. மெய்யை – உடலை.

92. ஐயம் – சந்தேகம்.

97. ஒன்றி – ஒன்றுபட்டு; பொருந்தி.

100. கிளரா – எழாத.

101. புள்ளில் – பறவையில்.

102. மாவில் – விலங்கில். மதியில் – சந்திரனில். கதிரில் – சூரியனில்.

*எங்கும் வளர்ச்சி எதிலும் வளர்ச்சி!*
*மலர்தலை உலகம் வளர்ச்சி யுடையது*
*உலகம் ஒருகுல மாக வளர்ச்சி*
*மலர்தலைக் காண்க; கண்டு மகிழ்க;*
*உண்மை குறிக்கொளும் பெண்மைத் தத்துவர்*
*அறிவா லலைந்தே அறிவில் உழன்று*
*தேடிய பொருள்கள் கூடின கலையாய்;*
*அக்கலை வளர்ச்சி தக்கது செய்யும்;*

*உடலை ஆய்ந்தே உளத்தை அணையும்*
*உளத்தைத் தெளிந்தே உணர்வை அடையும்*
*உணர்வை அறிந்தே உயிரை நண்ணும்*
*உயிர்க்கு மேலும் முயற்சி செல்லும்;*
*வளர்ச்சி வாழ்க! வளர்ச்சி வாழ்க!*
*வளர்ச்சி காணும் தத்துவம் வாழ்க!*

கொலை புலை

*இயற்கையில் வளர்ச்சி இருத்தல் உண்மை;*
*நேரே வளர்ச்சி சேரல் நன்றே;*
*கொலைபுலை, வளர்ச்சியைத் தொலைக்கும் இடையே;*
*ஒருகடா சாக ஒருபத் தாண்டாம்;*

*அதனை இடையில் சிதைத்தல் முறையோ?*
*உடைந்த செடியின் ஒட்டல் போன்றது*
*இடையே மாயும் இன்னுயிர் வளர்ச்சி;*
*கொல்லும் உயிரும் கொலப்படும் உயிரும்*
*தளர்ந்து தளர்ந்தே வளர்ச்சியில் தவழும்;*

புலால் உணவு

*புலையினாலும் கொலைநிகழ் கின்றது*
*வளர்ச்சிப் போக்கும் தளர்வுறு கின்றது;*
*புலையை விடுத்துக் கொலையைத் தடுக்க*
*வளர்ச்சி தளர்வுறா வகையிற் காக்க;*
*விலைகொடுத் தூனை மிசைதலும் குற்றம்*

---

107. ஈண்டுப் பெண்மை என்பது அமைதியைக் குறிப்பதாம். (கரடு முரடுகள் நீங்கியது பெண்மை என்க.)

120. ஒருகடா – ஓர் ஆட்டுக்கடா.

126. புலையினாலும் – புலால் உணவாலும்.

130. மிசைதலும் – உண்ணலும்.

*விலையால் மேலும் கொலையே பெருகும்*
*ஊனுண வுடலை ஓம்பும் என்று*
*கானம் செய்தல் ஞானம் அன்று;*
*பொருந்திய ஒன்று புலாலுண வன்றெனக்*
*கலைவிஞ் ஞானம் நிலைநாட் டிற்றே;*
*ஊனைப் போர்ப்படைக் கூட்டல் நிறுத்திடின்*
*ஈனப் போரே தானாய்ச் சாகும்;*

மரக்கறி உணவு

*மரக்கறி உணவால் இரக்கம் சுரக்கும்;*
*வயது வளரும்; வாரா நோய்கள்;*
*வரினும் விரைவில் விடைபெற் றேகும்;*
*நித்தியம் அடையச் சத்தியம் தேவை*
*சத்தியம் அமையச் சத்துவம் வேண்டும்*
*சத்துவம் சாரும் சுத்த உணவால்;*
*எத்தனைக் கேட்டைச்* ***சுத்த உணவு***
*போக்கி, ஆக்கும் தக்க குணங்கள்*
*மிகுபொருள் விரும்பாத் தகுதியும் நல்கும்;*
*செவிலியாய் வளர்க்கும் சிறந்த குணங்களை;*
*மார்க்கிஸ் காந்தி மனத்துள் ஒன்றுவர்;*
*அருளற ஆட்சி அமையுந் தானே;*

அறிவியல்

*அறிவியற் கலையை அறிதல் வேண்டும்*
*அறிந்தால் வளர்ச்சிக் கிளர்ச்சி தெரியும்;*
*அணுவின் சக்தியைத் தெளிதல் வேண்டும்;*
*ஆற்றல் மிகுந்தவர் நூற்றுக் கணக்கில்*
*கூடி அணுவை நாடு கின்றனர்*
*'ஓரணு வாலே ஒரூ ரழியுமோ?*

132. ஊனுணவுடலை : ஊன் உணவு உடலை...

133. கானம் செய்தல் – பாட்டுப் பாடுதல்.

136. ஊனைப் போர்ப்படைக் கூட்டல் : ஊனைப் போர்ப்படைக்கு ஊட்டுதல்.

141. நித்தியம் – நித்தியானந்தம்; சாகாமை; மரணமிலாப் பெருவாழ்வு.

142. சத்துவம் – சத்துவ குணம்; சாந்தம்.

147. செவிலியாய் – வளர்க்கும் தாயாய். (மிகுபொருள் விரும்பாமை, செவிலியாய் நின்று, சிறந்த குணங்களை வளர்க்கும் என்க.)

148. மானத சரீரத்தில் ஒன்றுவர் என்றபடி.

149. அஹிம்சா தர்ம ஆட்சி.

150. அறிவியல் கலையை – விஞ்ஞானக் கலையை.

*ஒருபதி அழியுமோ? ஒருநா டழியுமோ?*
*உலகே அழியுமோ? உம்பரும் அழியுமோ?'*
*என்றே அணுவை ஆய்தல் நன்றோ?*
*கொலையை நினைப்பவர் கலைஞர் ஆவரோ?*
*உலகா யதக்கலை கலகம் செய்வதே;*
*என்ன செய்வது? என்ன செய்வது?*

அணுவின் ஆக்கம்

*மக்கள் பெருக்கம் மிக்க இந் நாளில்*
*ஊக்க அணுத்திறம் ஆக்கப் பணிக்குப்*
*பயன்பட உழைத்தல் இயற்கைக் கரணாம்;*
*அணுவால் ஆகாப் பணிகள் உண்டோ?*
*அணுவால் எல்லாம் ஆகும் ஆகும்;*
*இயற்கை மழையை எதிர்பா ராமல்*
*செயற்கை மழையைச் சிறக்க வழங்கும்*
*நீர்நிலை வற்றா நேர்முறை கோலும்*
*ஆறுகள் பலவும் வேறுபா டின்றி*
*உறவு கொள்ள ஒன்று படுத்தும்;*
***சிந்து கங்கை** சேரச் செய்யும்*
*புத்திரம் கங்கை புணரச் செய்யும்*
*கோதா வரியுடன் குலவிக் கங்கை*
*காவிரி யோடு கலக்கச் செய்யும்;*
*கடலில் உப்பைக் கடத்தி நீக்கும்*
*காற்றில் கடலில் நாற்றை நாட்டும்*
*தானியம் காய்கனி ஆன பொருள்களை*
*மெய்யாய்க் காணக் கையால் இயற்றும்;*
*இரும்பிலா இடத்தில் இரும்பை எடுக்கும்*
*செம்பிலா இடத்தில் செம்பைச் சமைக்கும்*
*பொன்னிலா இடத்தில் பொன்னைப் புகுத்தும்*
*இன்ன பிறவும் எளிதில் ஆக்கும்;*
*காற்றிலா இடத்திலும் மாற்றும் வாழ்வை;*
*வானக் கோள்களில் தானம் வகுக்கும்;*

157. உம்பரும் – தேவலோகமும்.

160. உலகாயதக்கலை – வெறுஞ்சடக்கலை; வெறும் பூதபௌதிகக் கலை (ஆன்மார்த்தம் அற்ற கலை.)

173. புத்திர – பிரமபுத்திர நதி.

184. காற்று இல்லாத இடத்தில் வாழ்வு நடைபெறுதல் அரிது. விஞ்ஞானம் அங்கே வாழ்வு நடைபெற ஏதேனும் ஒருவிதப் புதுமையைக் காணும் என்றபடி.

185. வானக் கோள்களில் – ஆகாய மண்டலங்களிலும், தானம் – ஸ்தானம்; வாழும் இடம்.

**அணுவின் வளர்ச்சி**

*அறிவியல் ஆற்றலை அறியாச் சில்லோர்*
*மக்கள் பெருக்கை மறிக்க வேண்டிக்*
***கருத்தடை** செய்தல் பொருத்தம் ஆகுமோ?*
*மக்கள் பெருக்கை மனத்தில் கருதியே*
*அணுவின் சக்தியை அளித்த தியற்கை;*
*அணுவின் சக்தியோர் அளவில் நிற்குமோ?*
*இன்னும் வளர்ந்து மின்னும் மேலும்;*

**வாழ்க**

*வளர்ச்சி நுட்பம் அளந்து காண்க*
*அறிவியல் கருவிபெரிதும் கொண்டே*
*அறிவியல் வளர்ச்சி அறிதற் பாற்றோ?*
*நியூட்டன் எங்கே? ஈன்ஸ்டைன் எங்கே?*
*இடையில் வளர்ந்த அடைவை ஆய்க;*
*அறிவியற் கல்வி அழிவுக் கென்று*
*பயன்பட நாளும் முயன்று வரினே,*
*கலையும் மாயும் கருத்தும் காயும்;*
*ஆக்கப் பணிக்கதை ஊக்கி விடினே,*
*கலையும் வளரும் கருத்தும் வளரும்*
*உலகும் வளரும் அலகில் வழியே;*
*வளர்ச்சி வாழ்க! வளர்ச்சி வாழ்க!*

# 5. பொருள்

பொருள் நூல்

*__வையம்__ வேண்டும் தெய்வம் வேண்டும்*
*தெய்வம் வேண்டும் வையம் வேண்டும்;*
*இரண்டும் ஒன்றென இயம்பு வோருளர்*
*வேறு வேறாக் கூறு வோருளர்*
*கலப்புக் கலப்பெனக் கழறு வோருளர்*
*மற்றுஞ் சொல்லிச் சுற்று வோருளர்;*
*வையம் பொருளே தெய்வம் அருளே*
*பொருளுந் தேவை அருளுந் தேவை;*
*இரண்டும் வாழ்வை இயக்கும் ஈரல்*
*பொருள்நூல் மலையாய்ச் சுருள்மறி கடலாய்*
*ஓங்கிப் பரவுதல் பாங்கே விளைக்கும்;*

காவியப் பொருள்

*பழைய கால அழகுப் புலவோர்*
*வையப் பொருளும் தெய்வ அருளும்*
*விரவி ஒன்றி வரவே எண்ணிக்*
*காவிய மாக ஓவியந் தீட்டினர்;*
*மழையின் பொழிவை - மலையின் வளத்தை -*
*ஆற்றின் பெருக்கை - ஊற்றிய தென்னோ?*
*காட்டின் பொருளைக் காவின் பொருளைப்*
*பாட்டில் கொட்டிக் காட்டிய தென்னோ?*
*ஆலர சத்தி நாகை மாவிளா*
*கூவிளம் பாவாய்த் தாவிய தென்னோ?*
*தெங்கும் பனையும் தங்கக் கமுகும்*

---

9. ஈரல் – நுரைஈரல்கள்.

14. விரவி ஒன்றி – கலந்து ஒன்றுபட்டு.

17. ஊற்றிய தென்னோ – பாட்டாக ஊற்றியதென்னோ?

18. காவின் – இளம் பொழிலின்.

20. ஆல் அரசு அத்தி

21. கூவிளம் – வில்வமரம்.

*கரும்பும் பலவும் விரும்பி மகிழ்ந்து*
*கவியாய் இறங்கிக் குவிந்து குலவலென்?*
*ஏற்றப் பாட்டும் ஏற்று நடையும்*
*உழவின் ஒலியும் மழவர் குரலும்*
*கவிதை யாகிக் கவரும் கருத்தென்?*
*கதிர்கள் அசைவும் முதிர்நெல் விளைவும்*
*கிள்ளை வருகையும் பள்ளர் அறுவையும்*
*நெற்போர்க் குன்றும் வைக்கோல் வரையும்*
*அணிஅணி யாகிப் புனைவு பெறுதலென்?*
*தரங்க முழக்கும் அரங்கப் புணர்வும்*
*படகுகள் உழுது கடலிற் செல்லலும்*
*இப்பி திரட்டலும் உப்பு விளைதலும்*
*திரவியம் தேடத் திரைகடல் ஓடலும்*
*சித்திர மாகி நித்தம் விளித்தலென்?*
*சாரல் முழவும் தவளைத் தாளமும்*
*அறுபதப் பாடலும் அணிமயில் ஆடலும்*
*கடுக்கைப் பொன்னும் காந்தள் ஏந்தலும்*
*செந்நெல் நிழலில் அன்னம் உறங்கலும்*
*அரும்பின் அருகே சுரும்பின் அருவலும்*
*குவளைத் துயிலைக் கமலம் காணலும்*
*வாழைக் குலையை யானை தழுவலும்*
*செய்யு ளாகிய மெய்யைக் காண்க;*
*இன்ன பிறவும் என்ன காட்டும்?*
*எண்ணுக கால நிலையையும் எண்ணுக;*
*இயற்கைப் புலவோர் வையப் பொருளை*

---

25. ஏற்றுநடை – எருது நடை.
26. மழவர் – இளைஞர்.
29. பள்ளர் – வயலில் தொழில் புரிவோர்.
31. புனைவு – பாட்டுப் புனைவு.
32. தரங்கம் – அலை. அரங்கம் – கழிமுகம்.
34. இப்பி – சிப்பி.
36. விளித்தல் – அழைத்தல்.
37–43. இவை முன்னோர் மொழிகளை (பெரிதுந் தமிழ் மறைகளை)த் தழுவியன.
37. சாரல் – அருவி.
38. அறுபதம் – வண்டுகள்.
39. கடுக்கை – கொன்றைப்பூ. காந்தள் – செங்காந்தள். (கொன்றைப்பூவாகிய பொன் சொரிதலைக் காந்தள் கையேந்தி ஏற்கிறதென்க.)
41. சுரும்பின் – வண்டின்.

*மறந்தா ரில்லை சுரந்தே பாடினர்;*
*காவியம் பொருளின் ஆவி அன்றோ?*

## பொருளும் சீலமும்

*வாழ்வு வளரச் சூழ்பொருள் தேவை*
*பொருளை வெறுத்தல் மருளின் மயக்காம்*
*பொருட்கலைப் பயிற்சி பொதுள எங்கும்;*
*முதல்-தொழில் வேற்றுமை உதய மாகாக்*
*காலம் பொருளால் சீலம் நிலைத்தது;*
*முதல்-தொழில் வேற்றுமை மோதுமிக் காலம்*
*பொருளால் சீலம் சுருளு கின்றது;*
*ஒருபால் பெருகி மறுபால் அருகும்*
*பொருள்தரும் அல்லலில் பொரியும் சீலமும்;*
***சீலம்*** *வாழ்வின் சீவ நாடி*
*நாடி விழுந்தால் வாடும் வாழ்வே;*
*உடைமையும் அல்லல் இன்மையும் அல்லல்*
*இரண்டும் சீலம்* ***சுரண்டும் யமனாம்;***
*உடைமையும் வேண்டா இன்மையும் வேண்டா*
*வேறு வழியென்? தேறுதல் வேண்டும்;*

## மார்க்கிஸ் - காந்தி - அருகன்

*மார்க்கிஸ் முனிவன் மார்க்கம் கண்டனன்*
*அந்த மார்க்கம் யாக்கை போன்றது;*
*ஆவி நல்க மேவினன் காந்தி;*
*மார்க்கிஸ் காந்தி மார்க்க மூலம்*
*யாதென் றுலகம் ஓது கின்றது?*
*ஆதி அருகன் ஓதினன் மூலம்;*
*அகிம்சை மேலாம் அறமென முதல்முதல்*
*அருளிய பெருமை அருகனுக் குண்டே;*
*அகிம்சை உயிர்ப்பை அளித்த ஐயன்,*

---

**52.** பொதுள – நிறைய; செறிய.

**54.** காலம் – காலத்தில்.

**56.** சுருளுகின்றது – சுருண்டு மடிகின்றது.

**57.** ஒருபால் – ஒருபக்கம்.

**58.** பொரியும் – பொரிந்து போகும்.

**61.** செல்வமும், வறுமையும் அல்லல் என்றபடி.

**67.** ஆவி – உயிர். (மார்க்ஸியம் என்னும் உடலுக்கு உயிர் வழங்க வந்தவர் காந்தியடிகள் என்றவாறு.)

**73.** அகிம்சையாகிய உயிர்ப்பை (பிராணனை). ஐயன் அருகன்.

*சீலப் போர்வையும் சால அமைத்தனன்*
*சீலம் வளர்வழி கோலினன்; அதுவே*
*மிகுபொருள் விரும்பா மேன்மை ஒழுக்கம்;*

### பொருளும் அகிம்சையும்

*மிகுபொருள் விரும்பாத் தகுதி இடத்தில்*
*அகிம்சா தர்மம் ஆடல் புரியும்;*
*மிகுபொருள் விரும்பும் விலங்குள இடத்தில்*
*அகிம்சை அகலும்; புகுங்கொலை களவு;*
*மிகுபொருள் விரும்பாத் தகுதி, அகிம்சை -*
*உண்மை - சீலம் - ஒழுக்கம் - காக்கும்;*
*பொருளின் நிலைக்கும் அருளின் நிலைக்கும்*
*உற்றுள தொடர்பை உற்று நோக்குக;*
*பொருளொரு பாலே பெருகிச் செல்லின்*
*கொலைபுலை களவு குலைக்கும் உயிரைப்;*
*பொதுமை பொதுமை பொதுமை' என்றே*
*பட்டினி பசியும் நெட்டிக் கூவும்;*
*அருகன் மொழிந்த அருளற வழியே*
*புதுமை முயற்சியால் பொதுமை மலர்க;*

### கிறிஸ்துவின் போதனை

*மூர்க்கப் புரட்சியால் முளைக்கும் பொதுமை*
*மூர்க்கத் தாலே முடிவும் எய்தும்;*
*'வாளை எடுப்பவன் வாளால் மடிவன்'*
*என்றே கிறிஸ்து நன்றே கூறினர்;*
***மார்க்ஸியம் காந்தியம்** தொடக்கம் மாறே*
*இரண்டும் முடிவில் இணையும் ஒன்றாய்;*
*அகிம்சையை இம்சையால் இணைப்பது மார்க்ஸியம்;*
*அகிம்சையை அகிம்சையால் அணைப்பது காந்தியம்*
*இரண்டு மார்க்கமும் திரண்ட மூலம்*
***ஆதி பகவன்** போதனை என்க;*

---

75. அதுவே – அவ்வழியே.

81–2. மிகுபொருள் விரும்பாத் தகுதி, அகிம்சையையும் உண்மையையும் சீலத்தையும் ஒழுக்கத்தையும் காக்கும் என்றபடி.

95–100. மார்க்ஸிய முடிவும் காந்திய முடிவும் ஒன்றே. ஆனால், தொடக்கத்தில் இரண்டுக்கும் மாறுபாடு உண்டு. மார்க்ஸியம் இம்சையால் அகிம்சையை நிலைபெறச் செய்வது. காந்தியம் அகிம்சையாலேயே அகிம்சையை நிலைபெறுத்துவது. மார்க்ஸியம் வெற்றி பெற்று நிலைக்கும் இடங்களில் போர்க்கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள் இரா. ஆதலின், மார்க்ஸிய முடிவு அகிம்சை என்றபடி. அருளறம் என்னும் அகிம்சா தர்மம் முதன்முதல் ஆதி அருகனால் போதனை செய்யப்பட்டதென்க.

**ஒன்ற உழைக்க**

*பொருளின் ஆணவம் அருளையும் ஓட்டிக்*
*கொலைபுலை காமம் களவுபொய் கள்ளே*
*முதலிய பாவம் நிதம்செயத் தூண்டும்;*
*பொருளில் ஆணவம் பொருத்தா வாறு*
*பொருளைத் தேடுக போருளைத் தேடுக*
*அறவழி நின்று பொருளைத் தேடுக;*
*வையம் பொருளே தெய்வம் அருளே*
***மார்க்கிஸ் பொருளே காந்தி** அருளே*
*ஒன்ற இரண்டும் உழைத்தல் நன்றே.*

104. பொருளில் – பொருளிலே.

109. ஒன்ற – பொருந்த; ஒன்றுபட

# 6. உரிமை

வாழ்வில்

*உரிமை, உயிரின் இயற்கை உடைமை;*
*இறைமை உரிமை - இயற்கை உரிமை*
*ஞாயிறு உரிமை, மாயிருங் கோள்கள்*
*சுற்றி வருவதில் உற்றது உரிமை*
*ஐந்து பூதம் உந்தும் உரிமை*
*ஒலியில் ஒளியில் மலியும் உரிமை*
*எண்ணில் எழுத்தில் இருக்கும் உரிமை*
*பண்ணில் பாட்டில் நண்ணும் உரிமை*
*காதல் அன்பில் ஓதும் உரிமை*
*இருதிணை உயிர்களில் இயங்கும் உரிமை*
*யாண்டும் உரிமை பூண்டு நின்றால்*
*வாழ்வில் உரிமை சூழ்தல் வேண்டும்;*

வளர்ப்பும் கேடும்

*உரிமை திரிந்தால் புரட்சி புகுமே;*
*விழுமிய பிறவி கெழுமிய மனிதன்*
*பகுத்தறி வுடைய பரம்பரை மனிதன்*
*உரிமை வளர்த்தனன்; உரிமை கெடுத்தனன்;*
*இரண்டும் உலகில் புரளு கின்றன;*
*முறை முறை செய்ய அரசுகள் அமைத்தனன்*
*பலதிற ஆட்சிகள் உலவ வைத்தனன்;*
*அரசுகள் அமைப்பும் ஆட்சிகள் வைப்பும்*

---

3. ஞாயிறு – சூரியன். மாயிருங் கோள்கள் – பெரிய பெரிய கிரகங்கள்.

4. ஞாயிற்றைச் சுற்றி வருவதில்.

10. இருதிணை – உயர்திணை, அஃறிணை.

11–12. சராசரமெல்லாம்–எங்கும்–உரிமை மயமாயிருந்தால், வாழ்வும் உரிமை மயமாயிருத்தல் வேண்டுமன்றோ? வாழ்வு உரிமை மயமாயிருத்தல் வேண்டும் என்றவாறு. உரிமையற்ற வாழ்வு வாழ்வாகாது என்பது கருதற்பாலது.

14. விழுமிய – மேலான; சிறந்த. கெழுமிய – பொருந்திய.

*கற்றவர் செல்வர் கையில் சிக்கின;*
*சட்டம் தண்டனை கட்டுச் சிறைகள்*
*படைகள் போர்கள் குடைகின் றனவே;*
*மக்களென் செய்வர்? துக்கம் கண்டனர்;*
*சுரண்டல் போர்கள் தொலையா வரையில்*
*புடவி விடுதலை அடையுங் கொல்லே!*

விடுதலை எது?

*இந்த நாளினில் எந்த நாடு*
*விடுதலை பெற்றது? நடுநிலை! சொல்க;*
*ஞாலம் விடுதலை நாளைப் பெறினோ*
*நாடெலாம் விடுதலை பாடும் தாமே;*

*அருகன் அருளிய அருளறம் பொருளறம்*
*அடிமைப் பிணியொழி உரிமை மருந்தாம்;*
*உலகதை உண்டால் கலகம் ஒழியும்*
*சுரண்டல் போர்கள் வறண்டு போகும்*
*அகிம்சை, உரிமை அகிலம் பெறுமே.*

---

**26.** புடவி – உலகம்.

**28.** நடுநிலை – நடுநிலையே!

**29.** ஞாலம் – உலகம்.

**33.** அதை – அம்மருந்தை.

**35.** அகிம்சை, உரிமையை அகிலத்தில் பெறும் என்றபடி.

# 7. அறப் புரட்சி

மூர்க்கம்

*__நரம்பி__ நாட்டை __விரும்பி__ நகரில்*
*ஆட்சி புரிந்த மாட்சி மன்னன்,*
*புதல்வர் கவலையால் இதயம் வெந்து*
*பித்தம் அலைக்கச் செத்தே போனான்;*
*__கொள்ளி__ என்னும் பிள்ளை ஒருவன்*
*உடன்பிறந் தோரை ஒதுக்கி, வலிந்தே*
*அரசைப் பற்றினன்; அரியில் அமர்ந்தனன்;*
*அமைச்சுக் கூட்டம் அமைதியில் நின்றது*
*படைகள் எல்லாம் நடையில் நின்றன*
*குடிகள் உணர்ச்சி துடிக்க வில்லை*
*குழப்பக் கூளிக் கழைப்பே இல்லை*
*தொன்மை நினைவுகள் சூழ்ந்து காத்தன;*

கொடுங்கோன்மை

*மஞ்சள் வர்ணம் வஞ்சநெஞ்சம்*
*இருண்ட குஞ்சி சுருண்ட மீசை*
*சிறுகிய நெற்றி குறுகிய காது*
*விழுந்த தீக்கண் எழுந்த புருவம்*
*கறுத்த உதடு பருத்த நாக்குக்*
*கோரக் கூர்ம்பல் பார ஈறு*
*படிந்த முகவாய் மடிந்த கழுத்துத்*
*திரண்ட பெருந்தோள் உருண்ட மார்பே*

---

1. விரும்பி என்னும் நகரிலிருந்து.

5–11. கொள்ளி என்பவன் தன்னுடன் பிறந்தார்களைத் தள்ளித் தானே வலிந்து அரசைப் பற்றினன். அதைக் குறித்து மந்திரிகளோ, படைகளோ ஆத்திரப்படவில்லை. அவர்கள் உள்ளத்தில் அரசின் பழமை தோன்றி ஆத்திரத்தைத் தடுத்ததென்க.

7. அரியில் – சிம்மாசனத்தில்.

11. காளி, பெருங் குழப்பத்துக்கு அறிகுறி. சிறு குழப்பத்துக்கு அறிகுறி கூளி. காளியின் பிள்ளை கூளி என்பது மரபு. கூளிக்கு அழைப்பு இல்லை என்றபடி.

14. குஞ்சி. தலைமயிர்.

18. கூர்ம்பல் – கூரிய பல்.

*உலக்கை மரக்கை விலங்கு வயிறே*
*ஏணி நெடுங்கால் கோணிய பாதம்*
*சேர்ந்த **உருவம்,** வேய்ந்த மணிமுடி*
*பழமை மேய்கோல் இழைபொன் ஆடை*
*பன்மணித் தொங்கல் மின்னல் மோதிரம்*
*இன்ன பணிகள் துன்னப் பூண்டு,*
*சூது வாது சூழ்ச்சி கரவு*
*பொறாமை பொய்ம்மை உறாமை கயமை*
*இகல்பகை சீற்றம் **மிகுபொருள் வெஃகல்***
*ஆசை மோசம் நாசம் நீசம்*
*முதலிய 'அகமணி' பதிந்து கிடக்க,*
*அண்டம் அதிரும் தொண்டைவெங் குரலால்*
*மாண்ட அரசினை ஆண்ட தன்றே;*

இயற்கை நடுக்கம்

*அடக்கு முறையால் அடக்கி ஆண்டனன்*
*அலைகள் ஒடுங்கும் மலைகள் நடுங்கும்*
*மரங்கள் அசையா மலர்கள் நகையா*
*காற்று விசைத்துக் கலித்து வீசா*
*மேகம் முழங்கி வேகி ஆகா*

---

23. வேய்ந்த – அணிந்த

23–33. உருவம்... ஆண்டதன்றே; ... உருவம்... பூண்டு... கிடக்க... ஆண்டது.

24. நரம்பிநாட்டு மன்னராட்சி செங்கோன்மை வாய்ந்தது. அக்கோன்மை இப்பொழுது மூர்க்கக் கொள்ளியினிடத்தில் சேர்ந்தது. அதைச் செங்கோன்மை என்று சொல்வதா? கொடுங்கோன்மை என்று சொல்வதா? பழமையின் பெருமையைக் காக்கவேண்டி, அக்கோன்மை 'பழைமை மேய் கோல்' என்று சொல்லப்பட்டது. பழைய செங்கோல் வாசனை தவழும் கொடுங்கோல் என்றபடி.

25. தொங்கல் – மாலை.

26. பணிகள் – ஆபரணங்கள். துன்ன – பொருந்த.

28. உறாமை – உதாசினம்; இகழ்வு; 'திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென்றெண்ணி, ஒருவரை மதியாது **உறாமைகள்** செய்தும் ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்...' – **சுந்தரர்.** கயமை – கீழ்மை.

29. இகல் – மாறுபாடு. சீற்றம் – கோபம். வெஃகல் – (மிகுபொருள்) விரும்பல்.

31. அகமணி – மேலே புறமணிகள் கூறப்பட்டன. இங்கே சூது வாது... நீசம் முதலிய அகமணிகள் குறிக்கப் பெற்றன. 'அகமணி' இங்கே இழிவுசிறப்பாகப் பொறிக்கப்பட்டது.

33. மாண்ட அரசினை – முற்காலத்தில் மாட்சிமை பெற்ற அரசை; இக்காலத்தில் அம்மாட்சி 'மாண்ட' (இறந்த) அரசை.

37. காற்று – காற்று வகைகள்.

38. மேகம் – மேக இனங்கள். வேகி – வேகமாக ஓடுகிறவன்.

*பறவைகள் கூடிப் பாடி ஆடா*
*இன்னும் என்ன பன்னுதல் வேண்டும்?*

### தீயன் போதனை

*காவலன் கொள்ளி ஆவல் கொண்டனன்*
*கலைகள் பயில அலையும் மனத்தால்;*
*வெளியில் உள்ள **களியன்** ஒருவன்*
*அழைக்க வந்தனன் பிழைக்க இணங்கி;*
*களியன் பலகலை தெளிய ஆய்ந்தவன்*
***களிக்கலை** மீது தனிப்பற் றுடையவன்;*
*அரசியல் கலையை அறிவியல் கலையைப்*
*பொருளியல் கலையைப் புகல்வன் நாளும்;*
*ஆக்கம் வாழ்வில் தேக்கும் முயற்சியை*
*ஊக்கும் கலைகள் உயர்ந்தன என்பன்;*
*கண்ணுக் கெட்டாக் கருத்துக் கெட்டா*
*'வண்ணக்' கலைகள் வாழ்விலை என்பன்;*
*சுரண்டும் வாழ்வில் திரளும் பொருளினம்*
*பொதுமையில் அவ்வினம் துதையா தென்பன்;*
*கொலைபுலை வாழ்வில் நிலைக்கும் கொழுமை*
*இழிவு சொல்வோர் இளைப்பவர் என்பன்;*
*மற்றும் உள்ள மயக்கக் கலைகளைக்*
*கற்றுக் கொடுத்தனன் வெற்றி கண்டனன்;*

### நாட்டில் குழப்பம்

*கொள்ளி இயல்பு, தள்ள வில்லை*
*கள்ளன் மொழியை உள்ளம் கொண்டது;*

---

**40.** பன்னுதல் – பன்முறை விரித்துச் சொல்லுதல்.

**43.** களியன் – களியாடல்களிலும் களிக்கலைகளிலும் வல்லவன்.

**47.** அறிவியல் கலையை – விஞ்ஞானக் கலையை.

**48.** பொருளியல் கலையை – பொருளாதாரக் கலையை.

**50.** வெறும் இலௌகிகக் கலைகளை.

**52.** வெறும் அழகுக் கலைகள் வாழ்வுக்கு நலஞ்செய்யா என்பன்.

**53–54.** சுரண்டிப் பொருள் ஈட்டுவதைப் போற்றியும், சுரண்டலற்ற பொதுமையை இழித்தும் கூறினன் என்றபடி.

**54.** துதையாது – அதிகம் சேராது; செறியாது.

**55–56.** உயிர்களைக் கொன்று ஊனை உண்டால் உடல் கொழுமை உறும் என்றும், அதை இழித்துக் கூறுவோர் உடல் நலம் இழந்து இளைத்துப்போவர் என்றும் கூறினன் என்றவாறு.

**59–60.** கொள்ளியின் இயல்பு, கள்ளன் மொழியைத் தள்ளவில்லை. கொள்ளியின் உள்ளம் அம்மொழியைக் கொண்டதென்க.

*போதனை எல்லாம் சாதனை செய்தனன்;*
*நாட்டில் பரப்ப மூட்டினன்* ***கொள்ளியை;***
*மக்கள் இடையே சிக்கல் விளைந்தது*
*கருத்து வேற்றுமை திருத்த வில்லை*
*அறிவுப் போர்க்கங் காதர வில்லை*
*வாய்ப்போர் கைப்போர் வாய்ப்புப் பெற்றன;*
*யாண்டும் பேதம் யாண்டும் வாதம்,*
*யாண்டும் கூக்குரல் யாண்டும் குழப்பம்;*
*இறைவன் உண்டோ இலையோ என்னும்*
*முறையில் மூர்க்கம் மூண்டது சமராய்;*
*தனிமையும் பொதுமையும் முனைந்தன போராய்க்*
*கொலைகொல் லாமை அலைந்தன அமராய்;*
*மக்கள் வாழ்வு தர்க்கமாய் மாண்டது;*
***நாட்டையும் மறந்து*** *பூட்டினர் பாணம்;*
*அரக்க நீர்மை இரக்கம் கொன்றது*
*ஒப்புர வற்றது; தப்பு மலிந்தது;*
*உழவும் தொழிலும் உழைப்பும் உறங்கின*
*மழைத்துளி எங்கும் விழவும் இல்லை;*
*நரம்பி நாடு* ***நரம்பா கியதே;***
*பசியின் அனலும் பட்டினிக் கனலும்*
*நோயாய்ச் சாவாய் ஓயா தெரிக்கும்;*
*உணவும் இன்றி உடையும் இன்றிப்*
*பாடும் இன்றி வாடும் கூட்டம்,*
*எச்சில் இலையை நச்சிப் பற்றப்*
*பூனை குக்கல் ஏனம் காக்கை*
*பாகம் பெறாது வேகும்; சாகும்;*
*நெட்டி நகரும் பட்டினிப் படையை*

---

61. கள்ளன் போதனைகளெல்லாம் கொள்ளி சாதனை செய்தனன் என்றபடி.

65. அறிவுப் போர்க்கு அங்கு ஆதரவு இல்லை.

70. முறை இல் – முறை இல்லாத; முறை அற்ற. சமராய் – சண்டையாய்.

71. சுரண்டல் கட்சியும், பொதுமைக் கட்சியும் போர் விளைத்துக்கொண்டன.

73. கொல்லாமைக் கட்சியும், கொல்லும் கட்சியும் போரிட்டுக்கொண்டன.

75. அரக்க நீர்மை – இராட்சத குணம். இரக்கம் – இரக்கத்தை.

76. ஒப்புரவு – உபகாரம்; சமம்; ஒற்றுமை.

83. பாடும் – உழைப்பும்; தொழிலும்.

85. குக்கல் – நாய். ஏனம் – பன்றி.

87. படையை – பட்டாளத்தை.

*வழிமறி என்று பழியைச் சுமத்திச்*
*சட்டப் பெயரால் சுட்டுக் கொல்லும்*
*செயல்புரி கின்றோம்! வயிற்றுக் கொடுமை!*
*மார்க்கிஸ் காந்தி மார்க்கம் வேண்டும்'*
*என்றுதுப் பாக்கி ஏந்துநர் பேசுவர்;*
*வற்றாச் சுரபி* ***நற்றாய்*** *இல்லை;*

கொள்ளியிடல்

*இந்த வேளையில் மந்திரி சபையைக்*
*கொள்ளி கூட்டினன் கள்ளனும் வந்தனன்;*
*மந்திரி மாரெலாம் சிந்தை செய்தனர்*
*மூலக் கள்ளன் தாலை நீட்டி,*
*இந்த வேளையில் இந்த நாட்டினில்*
*எந்தக் காரியம் செய்தல் இயலும்?*
*மற்ற நாட்டைக் கொள்ளை யிட்டே*
*உற்ற துயரை ஒதுக்கல் வேண்டும்'*
*என்றதும், மன்னன் 'நன்'றென் றெழுந்து*
*படைகள் திரட்டிப் படைகள் எடுத்தனன்;*
*கொள்ளைப் பொருள்களை உள்ளே தள்ளினன்;*
*சூழ்ந்த நாட்டுச் சூர மன்னவர்*
*ஒன்று சேர்ந்தே உன்னினர் நிலையை;*
*'நரம்பி நாடு புறம்போ நமக்குக்*
*கருணை யற்ற கயவர் நாமலோம்*
*கொள்ளை முறையைக் கொள்ளி கொண்டதென்?*
*என்ன செய்யலாம்' என்று பேசினர்;*

நரம்புத் தளர்ச்சி

*இறையின் அருளோ! இயற்கையின் விதியோ!*
*அற்புதம் அற்புதம் அற்புதம் நிகழ்ந்தது!*
*நரம்பி நாட்டவன் நரம்பு தளர்ந்தது;*
*மலையென வீழ்ந்தனன்; உலவும் ஏவலர்*
*பிடித்தே எடுத்தனர் படுக்கையில் கிடத்தினர்;*
*மருத்துவர் வந்தனர் மருந்து கொடுத்தனர்*

---

**93.** நற்றாய் – மணிமேகலை (விளக்கம் 'மணிமேகலை' என்னும் நூலிற் பார்க்க).

**97.** தாலை – நாக்கை.

**104.** உள்ளே – தனது நரம்பி நாட்டினுள்ளே.

**106.** உன்னினர் – ஆழச் சிந்தனை செய்தனர்.

**108.** கயவர் – கீழ்மக்கள். நாமலோம் – நாமல்ல.

*சோதனை செய்கிறார்; வேதனை படுகிறான்;*
*‘களியன்’ மறைந்து வெளியே ஓடினன்;*

மரண எண்ணம்

*மரண எண்ணம் அரையனைத் தொடர்ந்தது;*
*தருணச் செய்கை அருளும் ஆகும்;*
*அழலெரி கவலை சுழலு கின்றதே*
*ஆட்டி அலைத்து வாட்டுகின்றதே;*
*‘பூட்டன் போயினன் பாட்டன் போயினன்*
*தந்தை போயினன் தாயும் போயினள்*
*என்னுடன் பிறந்த பொன்னரும் போயினர்*
*யானும் போவன்; மேலும் என்ன?*
*தீய வினைகள் தோய வளர்ந்தேன்*
*என்னோ என்னிலை! என்னோ என்னிலை!’*
*என்று நினைந்து குன்றிக் குமுறி*
*அலறி அலறி உளறும் சமயம்;*

புங்கவன் வருகை

*பொன்னவிர் செஞ்சடை மின்னும் முடியன்*
*பரந்த நெற்றிச் சுரந்த நோக்கன்*
*மலர்ந்த முகத்தன் குளிர்ந்த மொழியன்*
*பொய்யைக் கடிந்த மெய்ம்மை முனிவன்*
*உள்ளொளி வடிந்த வெள்ளை உடையன்*
*தங்க மேனிப் **புங்கவன்** என்பவன்*
*அரசன் நிலைகேட் டரண்மனை புகுந்தனன்*
*படிகள் கடந்து நொடியில் வந்தனன்;*
*வேந்தன் கைகள் சேர்ந்து குவிந்தன;*
*வந்தவன் வாழ்த்தினன் **தந்தையின் பெயரால்;***
*கள்ளியை ஒத்த கொள்ளியின் நிலையை*
*நேரே கேட்டனன்; நேரே கண்டனன்;*
*‘உய்யும் வழியும் உண்டோ?’ என்று*
*மன்னன் வினவினன் மெல்லிய குரலால்*
*உடலில் தைலம் தடவித் தேய்க்க*
*நொடிநொடிப் பொழுது படிப்படி யாக*

---

119. அரையனை – அரசனை.

120. தருணச்செய்கை – சிற்சில சமயத்தில் நேரும் செய்கை. அருளும் – ஆண்டவன் அருளும்.

123. பூட்டன் – பாட்டன் தந்தை.

140. தந்தையின் – குருவின்.

145. (மன்னன்) உடலில் (புங்கவன்) தைலம் தடவித் தேய்க்க.

நரம்புத் தளர்ச்சி இறங்கிய தன்றே;
தளர்ச்சி இறந்தது கிளர்ச்சி பிறந்தது
வேந்தன் நெஞ்சம் தோய்ந்தது மகிழ்ச்சியில்;
அந்நிலை கண்ட பொன்னுருப் புங்கவன்
'அரசே! அரசே! அருகன் மாண்பை
வேட்கை யோடு கேட்க' என்றே,
அவனது சரிதம் அவனது போதனை
கூறினன் விளக்கித் தேறினன் வேந்தன் -
சீறினன் கொடுங்கோல்; ஆறுதல் அடைந்தனன்;
மாறிய உள்ளம் ஏறிய மன்னன் -
அமைச்சரை அழைத்து, '**நுமது** நாட்டில்
பொதுமைப் புதுமை பொதுளு மாறும்
அருளறம் என்றும் புரளு மாறும்
மிகுபொருள் விருப்பு விலகு மாறும்
தேவை அளவில் திருந்து மாறும்
ஒழுக்கம் உண்மை விழிக்கு மாறும்
அருளே ஆட்சி புரியு மாறும்
புரட்சி செய்க புரட்சி செய்க!
அரக்கப் புரட்சி அணுக விடாதீர்
இரத்தம் சிந்தா இரக்கப் புரட்சி
செய்க அன்பால்; செய்க அறிவால்;
குருவும் யானும் திருப்பணி செய்யச்
செல்லுவம்' என்று செப்பிய உடனே,
அமைச்சர் மகிழ்ச்சி அளவைக் கடந்தது;
'எண்ணிய வாறே புண்ணியத் தொண்டை
ஆற்றுவம்' என்று போற்றி வணங்கி
விடைபெற் றகன்றனர் திடமனங் கொண்டே;
மன்னவன் சொன்ன செந்நெறி நின்று
போதனை செய்தனர் சாதனை செய்தனர்;
புரட்சி நிகழ்ந்தது புரட்சி நிகழ்ந்தது
இரத்தம் சிந்தாப் புரட்சி நிகழ்ந்தது;

---

155. கொடுங்கோலைச் சீறினன்; செங்கோலைத் தாங்கினன் என்றபடி.

158. பொதுளுமாறும் – செறியுமாறும்; நெருங்கி நிறையுமாறும்.

159. அருளறம் – அஹிம்சா தர்மம்.

171. (மன்னன்)எண்ணியவாறே.

உயிர்ப்பெழல்

*நாட்டின் நிலைகள் மாற்றம் அடைந்தன;*
*வானம் மகிழ்ந்து தானம் செய்தது*
*வெம்மை மறைந்தது செம்மை பிறந்தது*
*மக்க ளிடையே சிக்கல் தீர்ந்தது*
*பூசல் பிணக்குகள் நாச மாயின*
*கள்ளம் மறைந்தது - கொள்ளை நின்றது*
*மற்ற நாடுகள் சுற்றம் ஆயின*
*ஒப்புர வெங்கும் உயிர்பெற் றெழுந்தது*
*உழவுந் தொழிலும் உழைப்பும் எழுந்தன*
*இடையில் படர்ந்த களைகள் தீய்ந்தன*
*பண்புகள் நுழைந்தன விண்ணும் வியப்ப;*
*எங்கணும் அமைதி எங்கணும் அருளறம்*
*எங்கணும் திருவறம் எங்கணும் சாந்தம்*
*மக்கள் ஆட்சி மிக்கு நின்றதே*
*வீழ்ந்தது மறமே - வாழ்ந்த தறமே;*

புனை வன்று

*அறவழிப் புரட்சி உறலரி தென்றும்*
*புனைந்துரை யென்றும் நினைந்த உலகம்,*
*சாந்த மூர்த்தி காந்தி யடிகள்*
*அறத்துப் புரட்சி திறத்தினில் ஆற்றி*
*வெற்றி பெற்றதை விழியால் கண்டது;*
*மெய்ம்மை உணர்ந்தபின் ஐயம் ஏனோ?*
*மறவழிப் புரட்சியை மறந்துவிடுக*
*அறத்துப் புரட்சியைக் கருத்துட் கொள்க*
*அகமும் திருந்தும் சகமும் திருந்தும்;*
*காந்திப் புரட்சி காந்தி பெறுக*
*சாந்தி! சாந்தி! சாந்தி! சாந்தி!*

---

**202.** காந்தி – ஒளி.

# 8. அறம்

தன்னலம்

*‘மனத்து மாசிலன் ஆதல் அனைத்தறம்’*
*என்று* ***வள்ளுவர்*** *அன்றே அருளினர்;*
*மனத்து மாசினை நிலைக்க வைப்பது*
*தன்னலம் என்று பன்னும் உலகம்;*
*தன்னலத் தாலே இன்னல் விளைதல்*
*வெளிப்படை அதனை விளக்கல் வேண்டுமோ?*
*மன்னுயிர் ஓம்பலைத் தன்னலம் தடுக்கும்*
*விலங்கியல் தன்னலம் கலங்கவே செய்யும்;*
*தனித்தனி இடத்திலும் இனஇன இடத்திலும்*
*தன்னலம் சூழ்ந்து மன்பதை வதைக்கும்;*
*பாவம் செய்ய ஏவும் தன்னலம்*
*சீலம் அரிக்கும் ஆலம் தன்னலம்*
*ஒழுக்க எழுச்சியை அழிக்கும் தன்னலம்*
*வகுப்பு மொழிநிற தேச மதப்போர்*
*எழுப்பும் மூலம் இழிவுத் தன்னலம்;*

ஒரு வழி

*மனத்து மாசினைத் தொலைக்கத், தன்னல*
*ஆக்க வேரை நீக்கல் எப்படி?*
*வழிகள் சொல்லும் மொழிகள் பலவே;*
*உலகம் கொள்ளும் ஒருவழி உண்டெனில்*
*அவ்வழி நிற்றல் அறிவே ஆகும்;*
*இயற்கையை நோக்குக இயம்பும் அவ்வழி;*
*இயற்கையில் ஆண்பெண் இருத்தல் உண்மை*
*இயற்கை ஆணையே ஈனுவ தில்லை*
*பெண்ணையே நல்கும் எண்ணமும் இல்லை;*

1. ‘மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம் – ஆகுல நீர பிற’ – **குறள்.**

8. விலங்கியல் – மிருக சுபாவமுடைய.

9. இன இன இடத்திலும் – இனத்தின் இனத்தின் இடத்திலும்; தனித்தனி இனங்களின் இடத்திலும்.

*இருதிணை உலகில் இரண்டும் இருத்தல்*
*வெள்ளிடை மலையென விளங்கும் ஒன்றே;*

சேர்க்கை

*ஆண்பெண் சேர்க்கையால் தன்னலம் அகற்றக்*
***காதலை** இயற்கை கருவியாக் கொண்டது;*
*சேர்க்கைக் கூட்டறம் போக்கும் தன்னலம்;*
*கூட்டறத் தொடக்கம் வீட்டில் என்பர்;*
*வீடு பதியாய் நாடாய் உலகாம்;*
*தன்னல ஒருத்தி தன்னல ஒருவன்*
*காதல் சேர்க்கை ஈதல் பிள்ளை;*
*பெற்றோ ரிடத்தில் உற்றால் தன்னலம்*
*பிள்ளை வளருமோ? உள்ளுக **தியாகம்***
*தன்னலம் அருகும் அன்பு பெருகும்;*

அன்பு வளர்ச்சி

*அன்பு, விருந்தை இன்புடன் ஓம்பும்*
*விருந்தால் மன்னுயிர் பொருந்தும் அன்பில்*
*தன்னுயிர் மன்னுயிர் ஆக்கும் அன்பே*
*தன்னலம் அற்ற அன்பு நிலையில்*
*அழுக்கா றுண்டோ? ஆசை உண்டோ?*
*வெகுளி உண்டோ? வெறுப்பும் உண்டோ?*
*மாசில் மனத்தில் நேசம் நிலைக்கும்*
*அந்த நேசமே **அந்தணச் செல்வம்***
***வள்ளுவன்** வழியிது கொள்ளுக வாழ்வில்*

அன்பே துறவு

***ஆதி பகவன்** அருக நாயகன்*
*இல்லம் இருந்து நல்ல சேய்களைத்*
*தந்துல காண்டு தயாபர னாகி*
*அந்தணச் செல்வம் சிந்தையில் அடைந்து*
*துறவு பூண்டே அறவோ னாயினன்;*
*போதி அமர்ந்து நீதி அருளிய*
*ஐயன் அப்பன் செய்ய புத்தனும்*
*மனையில் வாழ்ந்து மகவை ஈன்று*

35. உள்ளுக – உன்னுக. (தியாக வழியில் நின்று ஒழுகுக என்றவாறாம்.)

41. அழுக்காறு – பொறாமை.

42. வெகுளி – கோபம்.

51. போதி – அரசமரத்தடியில்

*வையம் ஆண்டு மெய்யுணர் வடைந்து*
*துறவு பூண்டதை அறவுல கறியும்;*
*தன்னுயிர் மன்னுயிர் ஆகிய அன்பே*
*துறவு துறவு உண்மைத் துறவே;*
*அறமெது அறமெது துருவி ஆய்க;*
*'மனத்து மாசிலன் ஆதல் ஆறமே';*

### பொன்னனும் வள்ளலும்

***அன்புப்*** *பதியில் தொன்மை மரபில்*
*ஒருமணி வயிற்றில் ஒருமை வேளையில்*
*இருவர் பிறந்தனர் பெருமையில் வளர்ந்தனர்;*
*'பொன்னன்' 'வள்ளல்' என்னும் பெயரை*
*முறையே சூட்டினர் நிறைமொழி மாந்தர்;*
*பொன்னனும் வள்ளலும் நன்னயம் உடைய*
*கலைகள் கற்பர் மலைமலை யாக*
*அருளற நூல்களைப் பொருளெனப் பயில்வர்*
*ஈருடல் ஓருயிர் என்ன உலவுவர்;*
*'இருவரில் எவரே பொறுப்பர் அர' சென*
*நாடும் நகரும் காடும் பேசின;*

### அரசு துறத்தல்

*தெள்ளிய ஞான வள்ளல் ஒருநாள்*
*தந்தையை வணங்கி, 'எந்தையே அரசைப்*
*பொன்னன் பெறுக; இந்நிலம் சுற்றித்*
*தொண்டு செய்யக் கொண்டனன் உறுதி'*
*என்று நவின்றனன்; சென்றன சின்னாள்;*
*பொன்னன் இடையிடை வள்ளலைக் காண்பன்*
*'முடிநீ ஏற்க; அடியனிங் கிருப்பன்'*
*என்று கூறுவன்; தந்தையும் போவன்,*
*'முடிநீ வெறுப்பின் குடியில் இருக்க -*
*துறவை அறவே மறக்க -' என்பன்;*
*உறுதியை வள்ளல் உடும்பெனப் பற்றினன்;*
*பெற்றவர் மற்றவர் உற்றனர் துயரம்;*

---

54. மெய்யுணர்வு – சத்திய ஞானம்.

60. அன்புப் பதியில் – அன்பு என்னும் பெயரையுடைய பதியில்.

61. ஒரு தாயின் மணிவயிற்றில் ஒரே வேளையில்.

69. பொறுப்பர் – தாங்குவர்.

77. அடியேன் எங்கும் போகாமல் இங்கேயே உன்னுடன் இருப்பன் என்றபடி.

78–79. தந்தையும் வள்ளலிடத்தில் போவன். குடியில் – குடும்பத்தில்.

வள்ளல் ஒருநாள் துள்ளி எழுந்தனன்
அறத்தொண் டாற்றப் புறப்பட்டனனே;

வள்ளல் உறுதி

தந்தையும் தாயும் தன்னுடன் பிறப்பும்
உற்றவர் உறவினர் மற்றவர் பலரும்
மறித்தனர்; உறுதியை வெறுத்தா னில்லை;
உறுதி கண்டே உள்ளம் உடைந்து
கதறிக் கதறிப் பதறி விழுந்தனர்
குமுறிக் குமுறிக் குமுறிக் குலைந்தனர்
புரண்டு புரண்டு புரண்டே அழுதனர்;
'அப்பா உன்னை எப்படிப் பிரிவம்!
ஐயா எம்மை எப்படிப் பிரிவை!'
என்று விம்மி விம்மிப் புலம்பினர்;
தாய் 'என் முகம்பார்' என்று தழுவினள்
'ஈன்ற வயிறிது எரிய லாமோ?'
என்று மெய்ம்மறந் தங்கே சாய்ந்தனள்;
வீடெலாம் துக்கம் காடெலாம் துக்கம்
எங்கும் கண்ணீர் எங்கும் கம்பலை
எங்கும் அழுகை எங்கும் அலமரல்
எங்கும் துன்பம் எங்கும் துயரம்
எங்கும் கவலை எங்கும் எங்கும்;

எல்லாம் உறவே

வள்ளல் மக்களை உள்ளி நோக்கி,
"யாரை வெறுத்தேன்? எதனை வெறுத்தேன்?
மாந்தருள் நீங்கள் சேர்ந்தவர் அலரோ?
உலகில் நம்பதி ஒருகூ றன்றோ?
நீங்களும் ஒக்கல் பிறரும் ஒக்கல்
'யாதும் ஊரே யாவரும் கேளிர்'
உலகெலாம் நாடே உயிரெலாம் உறவே
ஊரெலாம் சோறே உறங்கும் இடமே
இந்நிலை பெற்ற என்னைத் தடுத்தலென்?
விடுக அழுகை விடுக அலமரல்

99. கம்பலை – நடுக்கம்.

100. அலமரல் – நெஞ்சம் சுழலல்

106. ஒரு கூறு – ஒரு பகுதி.

107. ஒக்கல் – சுற்றம்

108. கேளிர் – நண்பர்; உறவினர்.

*விடுக துன்பம் விடுக துயரம்*
*விடுக கவலை விடுக என்னை*
*மறித்தல் வேண்டா மறித்தல் வேண்டா*
*நீங்களும் வாழ்க! பிறரும் வாழ்க!*
*அறத்தொண் டாற்றப் புறப்படு கின்றேன்*
*நன்மொழி பொழிக நன்மொழி பொழிக*
*வணக்கம் வணக்கம் வணக்கம்" என்று*
*செஞ்சொல் பொழிந்து நெஞ்சம் மலர*
*ஒற்றைத் துணியுடன் கற்றவன் நடந்தனன்;*

சொன்மலர்

*'வாழ்க வள்ளல் வாழ்க வள்ளல்*
*வெல்க அவன்பணி வெல்க அருளறம்'*
*என்று பல்லோர் சொன்மலர் பெய்தனர்;*
*ஒற்றைத் துணியை உற்று நோக்கிய*
*சில்லோர் நெஞ்சம் அல்லலில் தோய்ந்தது;*
*தொடர்ந்தும் அடர்ந்தும் சூழ்ந்தும் சென்றவர்*
*அங்கே அங்கே தங்கித் தங்கித்*
*தேங்கித் தேங்கித் தேங்கித் தியங்கினர்;*
*செறிந்த கூட்டம் இரிந்த தங்கே;*
*'இறையின் அருளோ முறைவிதிச் செயலோ*
*பெற்றவர் செய்த நற்றவம் என்னே!*
*மக்கள் எண்ணமே வள்ளல் வருகை;*
*பதியின் புண்ணியப் படிவம்' என்று*
*பேசிப் பேசி நேசர் சென்றனர்*
*கதைகள் பேசினர் காலங் கழிந்தது;*

முடி சூட்டல்

*'பொன்னனும் வள்ளல் வழியில் போவனோ!'*
*என்று கிளைஞர் சிந்தனை செய்தனர்;*
*சிந்தனை எல்லாம் தந்தையைச் சூழ்ந்தன;*
*பொன்னற் கறமுடி மின்னச் சூட்டி*
*முரசு முழங்க அரசை அளித்து*
*மனத்தால் வாழ்த்தி மலரால் வாழ்த்தித்*

130. இரிந்தது – கலைந்தது; விலகியது.

133. மக்களின் நல்லெண்ணம் திரண்டு வள்ளலின் பிறவியாய் வந்ததென்க.

134. வள்ளல் நம்பதியின் புண்ணிய உருவம்.

138. கிளைஞர் – சுற்றத்தார்.

140. பொன்னனுக்கு அறமுடி.

*தந்தை ஒதுங்கினன்; மைந்தன் நாட்டை*
*மனத்துற வேற்றுச்* ***சனகன்*** *போல*
*வழிவழி வந்த பழமையில் ஆண்டனன்;*

பதியைக் கடத்தல்

*வள்ளல் உள்ளம் தொண்டில் சென்றது*
*அரசு துறந்த அரசு நடந்தது*
*இளமை துறந்த இளமை நடந்தது*
*வளமை துறந்த வளமை நடந்தது*
*விழுப்ப முடைய ஒழுக்கம் நடந்தது*
*சீலம் ஒன்றிய கோலம் நடந்தது*
*பண்பு நடந்தது; பதியைக் கடந்தது;*
*'அருளறம் மலிக திருவறம் பொலிக!*
*திருவறம் மலிக அருளறம் பொலிக!*
*அருளறக் கூட்டம் பெருக' என்று*
*முனிவன் வள்ளல் முழங்கி நடந்தனன்;*

அறப்பணி

*நடந்து நடந்து நடந்தே ஊர்தொறும்*
*"பிறக்கும் போதும் இறக்கும் போதும்*
*ஒன்றையுங் கொண்டு வருவ தில்லை*
*ஒன்றையுங் கொண்டு போவ தில்லை;*
*இடையில் உள்ள உடைமை எல்லாம்*
*'அவர்க்கெனல் இவர்க்கெனல்' அறியா மையே;*
*'யானென தறுத்தல் ஞானம்' என்ற*
*சான்றோர் மொழியை ஊன்றிப் பார்க்க;*
*'அவர்க்கொரு காணி இவர்க்கிரு காணி'*
*என்று கொள்ளல் எந்த ஞானம்?*
*பிறர்தம் உழைப்பைப் பிடுங்கித் தின்னல்*
*அறமோ? மறமோ? அகத்தைக் கேட்க;*
*ஊரும் பொதுவாய் உழைப்பும் பொதுவாய்*
*இருந்த காலம் மறைந்து போச்சு;*
*கொல்லல் கொள்ளை தொல்லை சூழ்ந்தன;*
*'உலகம் இறைவன் உடைமை' என்ற*
*காந்தி மொழியை ஏந்தி நடக்க;*
*பொதுமையை மீண்டும் புதுக்க முயல்க;*

---

144. சனகன் – ஜனக மகாராஜன்; அவன் உள்ளத்துறவு பூண்டு நாட்டை ஆண்டவன்.

163. யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை அறுத்தலை.

*எதற்கும் மூர்க்கம் இனிய தன்று;*
*மாற்றவும் காந்தி மாற்ற வழியில்*
*நின்று நடத்தல் நன்று நன்று;*
*வேற்றுமைப் பேய்களை மாற்ற ஒன்றித்*
*தொண்டு செய்க" என்று பேசித்*
*திருப்பணி ஆற்றும் பொறுப்பை ஏற்றனன்;*

அறவன் எவன்?

*அறவன் எவனோ? அறவன் எவனோ?*
*பொன்னன் அறவனோ? வள்ளல் அறவனோ?*
*இருவரும் அறவரோ? எண்ணிப் பார்க்க;*
*அறமே தெய்வம் அறமே சமயம்*
*அறமே பழமை அறமே புதுமை*
*அறமே பொதுமை அறமே வீடு;*
*தாய்கை விடினும் சேய்கை விடினும்*
*அரசுகை விடினும் அறந்தலை காக்கும்;*
*அறத்தை எண்ணுக அறத்தைப் பேசுக*
*அறப்பணி ஆற்றுக அறந்தலை காக்கும்;*
*மாசில் மனத்தில் வாசம் செய்க*
***வள்ளுவர்** வாய்மை உள்ளி வாழ்க!*

---

176. மாற்றவும் – நிலைமையை மாற்றவும். மாற்ற வழியில் – சொல் வழியில்.

178. ஒன்றி – சேர்ந்து.

# 9. வேண்டுதல்

கூட்டுறவு

*அருளறம் வேண்டும் பொருளறம் வேண்டும்*
*வளர்ச்சி வேண்டும் வளர்ச்சி வேண்டும்*
*வளர்ச்சிக் கருளற உணர்ச்சி வேண்டும்;*
*கூட்டுற வியக்கம் நாட்டும் அருளறம்;*
*தனிமை உழைப்பும் தனிமைச் செல்வமும்,*
*தேவை அளவை மீறத் தூண்டின*
*முதல் - தொழில் வேற்றுமை மூளச் செய்தன*
*அடிக்கடி போரை முடுக்கி விட்டன;*
*கூட்டுத் தொழிலும் கூட்டு விளைவும்*
*ஓட்டும் மிகுபொருள் வேட்கைப் பேயை*
*முதல் - தொழில் வேற்றுமை இதயம் பிளக்கும்*
*கொலைச்செருக் களனைத் தொழிற்களன் ஆக்கும்;*
*கூட்டு வேண்டும் கூட்டு வேண்டும்*
*கூடி வாழப் பாடுக பாடல்;*

வேண்டும்?

*அருகன் அருளறம் பொருளறம் வேண்டும்*
*ஆக்கத் தொழிலில் ஊக்கம் வேண்டும்*
*இறப்பையும் பிறப்பையும் மறத்தல் வேண்டும்*
*ஈரம் சுரக்கும் வீரம் வேண்டும்*
*உலகொரு குலமெனும் உணர்வு வேண்டும்*
*ஊனக் கொலைபுலை உறங்கல் வேண்டும்*
*என்றும் பணிநினைந் தியற்றல் வேண்டும்*
***ஏசு** பொறுமையில் நேசம் வேண்டும்*
*ஒப்புர வுலகம் உயர்தல் வேண்டும்*

---

10. வேட்கைப் பேயை – ஆசைப் பேயை.

11. முதல் – தொழில் என்னும் வேற்றுமையின் இதயத்தைப் பிளந்து ஒழிக்கும் என்றபடி.

12. கொலைப் போர்க்களத்தை, மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படத் தக்க பொருள்களை உண்டாக்கும் தொழிற்களன் – சாலை – ஆக்கும் என்க.

23. ஐயம் – பிச்சை எடுத்தலை; இரந்துண்ணலை.

*ஓதா துணர்த்தும் ஓவியம் வேண்டும்*
*ஔவை உலவும் அகிலம் வேண்டும்;*
*தெய்வம் வாழ்க! வையம் வாழ்க!*
*வையம் வாழ்க! தெய்வம் வாழ்க!*

❍❍❍

24. ஒப்புரவு – ஒற்றுமை; சமம்; உபகாரம்.

# சித்தந் திருந்தல்

## அல்லது

# செத்துப் பிறத்தல்

(1951)

# முன்னுரை

*அறுபத்தாறு வயதுவரை, என் காலம், பகலில் பலதிறத் தொண்டுகளிலும் இரவில் எழுத்துத் தொண்டிலும் கழிந்து வந்தது. இப்பொழுதோ, என் கண்கள் படலத்தால் மறைக்கப் பட்ட நாள் தொட்டு, என் பொழுது பெரிதும் படுக்கையில் கழிகிறது. படுக்கையில் கிடந்துகொண்டு, சிற்சில வேளைகளில் சிறு சிறு நூல்களைப் பாக்களால் - பெரிதும் அகவற்பாவால் - சொல்லிவருகிறேன். அந்நூல்களுள் இந்நூலும் ஒன்று.*

*உயிரின் விடுதலைக்குரிய வழிகள் பல உண்டு. அவற்றுள் ஒன்று - சிறந்த ஒன்று. "சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்" என்பது. இக் கொள்கை விழுமியதென்று பெரியோர் பலரால் போற்றப்பட்டது. இதைச் சுருங்கிய முறையில் ஓதுவது இந்நூல்.*

*இந்நூலை யான் சொல்லிவந்த போது, என் சொற்களை எழுத்தால் பொறித்தவர் - சாது அச்சப் பொறுப்பாளர் - திரு. மு. நாராயண சாமி. அவர்க்கு எனது வாழ்த்து உரியதாக.*

*எவ்வித கைம்மாறுங் கருதாது, அச்சுத்தாள்களை அன் புடன் பார்வையிட்டு உதவியவர் டாக்டர் மு. வரதராசனார், தமிழ்ப் பேராசிரியர் - வித்துவான் - அன்பு. கணபதி, தமிழ்ப் பேராசிரியர் - க. பெருமாள், எம். ஏ. முதலியோர் அவர்க்கு எனது நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.*

*கண்ணொளி இழந்துள்ள வேளையில் இந்நூல் என்னால் யாக்கப்பெற்றது. இதன்கண் பிழைகள் இருக்கும். பிழைகளைப் பொறுத்தருளுமாறு நேயர்களை வேண்டுகிறேன்.*

*இராயப்பேட்டை*
*25-9-51.* **திருவாரூர் – வி. கலியாணசுந்தரன்**

# சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்

*__சித்தம்__ எனுமொரு __நத்தம்__ ஆண்ட*
*__வெள்ளி__ என்ற குள்ள மன்னவன்,*
*அற்ப அறிவால் பற்பல பாவம்*
*செய்து தொழுநோய் எய்த வருந்தினன்;*
*__சித்தன்__ ஒருவன் ‘சித்தம்’ ஏகினன்*
*அரசன் நிலைகேட் டணுகிப் பார்த்தனன்;*
*மருந்து கொடுத்தனன் அருந்தினன் மன்னன்;*
*கழிந்த தொருமதி ஒழிந்தது தொழுநோய்;*
*அயலூர் செல்ல ஐயன் விரும்பி*
*விடைபெற எழுந்தனன்; அடியில் பணிந்து,*
*நத்தத் தலைவன் அத்தனை நோக்கி,*

பாவ அறிக்கை

*“அருந்தவ அரசே! அருந்தவ அரசே!*
*உடல்நோய் தீர்த்தனை உளநோய் உள்ளது;*
*பாவி பாவி பெரிய பாவி*
*பாவ எல்லையைப் பார்த்த பாவி*
*ஐம்பெரும் பாவம் அழுந்திய பாவி*
*ஐம்பெருஞ் சீலம் அறியாப் பாவி;*
*பாவம் உடலெலாம் பாவம் ஊனெலாம்*
*பாவம் உளமெலாம் பாவம் உயிரெலாம்*
*பாவம் வாழ்வெலாம் பாவம் யானே;*
*எப்படி உய்வன் எப்படி? “ என்று*
*கண்ணீர் அருவி மண்ணில் சொரியக்*
*கதறு கின்றனன்; கதறு கின்றனன்;*

---

1. நத்தம் – ஊர் ; குடிமக்கள் நிரம்பிய பதி.

4. தொழுநோய் – குஷ்டரோகம்.

9. ஐயன் – சித்தன்.

11. நத்தத் தலைவன் – வெள்ளி மன்னன்.

**அழுகை**

*தவமிகு செல்வன் அவனைப் பார்த்தே,*
*"அழுகின் றாயே அழுகின் றாயே*
*பறந்தது பாவம் பறந்தது பாவம்*
*அழுகை, பாவம் கழிக்கும் மருந்தே*
*அழுகையால் பாவம் அலைந்து படுமே;*
*முதலைக் கண்ணீர் உதட்டின் அழுகை*
*நடிப்பால் பாவம் இடிப்புண் ணாதே*
*உன்றன் அழுகையில் உண்மை உளதே;*
*உடலெலாம் உருக ஊனெலாம் உருக*
*உளமெலாம் உருகஉன் உயிரழு கின்றதே;*
*உயிரின் அழுகை, ஒழிக்கும் பாவம்;*
*ஆவி அழுகைமுன் பாவம் என்செயும்?*
*ஏசு கிறிஸ்துவின் நேசச் செய்தி என்?*
*'கள்ளம் நீக்கி உள்ளம் திரும்பிக்*
*குலையா உறுதியில் மலையா நின்று*
*குறைகளை எல்லாம் முறையிட் டழுதால்*
*பாவமன் னிப்பு மேவல் திண்ணம்*
*என்னும் உண்மை' மன்பதை உய்ய*
*எழுந்த செய்திஉள் எழுதிப் பார்க்க;*
*கல்லை இரும்பைப் பொல்லா நெஞ்சை*
*உருக்கும் வாசகம் உரைப்ப தென்னை?*
*'முறையிட் டழுதால், கரையும் பாவம்*
*அன்பு பெருகும்' என்ப தன்றோ?*
*குறைமுறை யீட்டில் கரையில் கடலாய்த்*
*திகழும் அருட்பா புகல்வ தென்னை?*
*'அழுகை அழுகை அழுகை' அன்றி*
*வேறென்? ஆய்ந்தே ஆறுதல் அடைக;*

**ஊழ்!**

*ஊழில் கருத்தை ஆழப் பதித்தால்*
*வாழ்வு துயரில் மூழ்கிப் படுமே;*

---

24. தவமிகு செல்வன் – சித்தன். அவனை – வெள்ளிமன்னனை.

29. போலி அழுகை என்றபடி.

41. (என்று) மன்பதை உய்ய... மன்பதை – மக்கள்கூட்டம்.

42. செய்தி உள் – செய்தியை உள்ளத்தில்.

44. வாசகம் – திருவாசகம்.

47. குறைகளை முறையிடுவதில்.

*'தன்னை அறிந்த தத்துவ ஞானிகள்*
*முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்*
*பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்*
*சென்னியில் வைத்த சிவனரு ளாலே'*
*என்னும் மந்திரம்; பண்ணிப் பாடுக;*

பிறத்தல் இறத்தல்

*'பிறந்தான் வளர்ந்தான் இறந்தான் மீண்டும்*
*பிறந்தான் வளர்ந்தான் இறந்தான்' என்னல்*
*பருமைப் பேச்சே நுண்ணிய தன்று;*
*நாளும் நொடியும் நாளும் நொடியும்*
*பிறத்தலும் வளர்தலும் இறத்தலும் உண்டே;*
*ஒருசிறு நிகழ்ச்சி உரைப்பன் கேட்க :*

(கொந்தி)

*'கொந்தி என்னும் மந்தன் ஒருவன்*
*கொலைஞரைச் சேர்ந்து கொலைஞன் ஆயினன்;*
*கொல்லல் தீதெனும் எண்ணமும் அற்றவன்*
*வழிபறித் துண்டு வாழ்வை நடாத்துவன்;*
*நெல்மணி ஊரில் பன்மொழி வல்ல*
*புலவன் ஒருவன் மலையிற் பிறந்த*
*கலையின் பொருளை விளக்குவன்; ஒருநாள்,*
*வழியே சென்ற பழிமலி கொந்தி*
*கூட்டம் நுழைந்து நாட்டம் வைத்தனன்;*
*எங்கும் போகா தங்கே தங்கி*
*இரவில் புலவனை மறைவில் கண்டு*
*பேசினன் பலபல நேசம் கசிந்தது;*
*இறந்தனன் கொந்தி பிறந்தனன் மீண்டும்;*
*கொலையை மறந்தனன் மலையின் அன்புக்*
*கலைவழி வாழ்வை நிலைபெறச் செய்தனன்;*
*அந்தக் கொந்தியோ இந்தக் கொந்தி?*
*அவனெங் கேயோ இவனெங் கேயோ?*
*அவனிவன் அல்லன் இவனவன் அல்லன்';*
*இன்னும் ஒன்று சொல்லு கின்றேன்;*

---

57. மந்திரம் – (திருமூலர்) திருமந்திரம்.

61. நாளும் – நாள்தோறும். நொடியும் – க்ஷண க்ஷண நேரமும்.

69–70. மலையில் பிறந்த கலையின் – ஏசுகிறிஸ்துவின் 'மலைப் பொழிவு' என்னும் கலையினுடைய.

77–78. கிறிஸ்து பெருமான் மலைப்பொழிவாகிய அன்புக் கலைவழி என்றவாறு.

(பிள்ளை)

பிறப்பும் வளர்ப்பும்

*'இன்னல் அறியா மன்னவர் வழியில்*
*ஒருவன் தோன்றினன் மருவிய தின்னல்;*
*அந்தப் பிள்ளை அவமே உருவம்;*
***குழவி ஆடலில்** அழகைக் காணோம்*
*அழலைக் கண்டனர் அம்மையும் அப்பனும்;*
*'மரபின் பெருமைக் கெரியிட வந்த*
*பிள்ளை இவ'னென விள்ளுவர் பெற்றவர்;*

கருவில் புலியோ?

*தந்தையும் தாயும் மைந்தனைப் பார்ப்பர்*
*சிந்தை நைவர் நைந்துநைந் துருகுவர்*
*'கடும்புலிக் குட்டிநம் நடுவே வளர*
*என்ன செய்தனம்!' என்று குன்றுவர்;*
*'கருவுறு நேரம் கருத்தில் புலியுரு*
*நின்றதோ' என்று நினைப்பன் தந்தை;*
*பிள்ளை குணம்பெற உள்ளி உள்ளி*
*வள்ளற் கடவுளை உள்ளே வழுத்துவர்;*

பிள்ளையால் கவலை!

*கவலை அறியார் கவலை அறிந்தனர்*
*சவலை தெரியார் சவலை தெரிந்தனர்;*
*உடல்வளம் மடிந்தது; திடவுளம் உடைந்தது;*
*ஆட்சியால் கவலைச் சூழ்ச்சி இல்லை*
*அமைச்சால் கவலை அமைதல் இல்லை.*
*குடியால் கவலை படிதல் இல்லை*
*நாட்டால் கவலை நாட்டல் இல்லை*
*பிறவால் கவலை உறலே இல்லை;*
*எங்கும் மகிழ்ச்சி எங்கும் பொங்கும்*
*பிள்ளைக் கவலை தள்ளிய தல்லலில்;*
*இன்பம் எங்கே? துன்பம் எங்கே?*

இன்ப துன்ப இருப்பிடம்?

*கல்வி ஆட்சி செல்வம் பேறுகள்*

---

84. மருவியது இன்னல் – கலந்தது துன்பம்.

97. தாயும் தந்தையும் வழுத்துவர்.

103. குடியால் – குடிமக்களால்.

109. கல்வியும் ஆட்சியும் செல்வமும் மற்றப் பேறுகளும்.

*இன்ப துன்ப இருப்பிடம் அல்ல;*
*இன்ப துன்ப இருப்பிடம் பிள்ளை;*
*தூய பிள்ளையால் துன்பமும் இன்பமாம்*
*தீய பிள்ளையால் இன்பமும் துன்பமாம்;*
*நல்ல பிள்ளையை நல்குதல் தவமே*
*பிறப்பில் நல்லதாய் வளர்ப்பில் கெட்டதாய்*
*மாறும் பிள்ளையும் பாரில் உண்டு;*
*வளர்ப்பிலும் கருத்து வளர்தல் வேண்டும்;*

**ஆசானை அடித்தல் !**

*பரம்பரை ஆசான் வரம்பல உடையவன்*
*பலமொழி ஆய்ந்தவன் பலகலை தேர்ந்தவன்*
*சீலம் காப்பவன் நோன்பில் மேலவன்;*
*கல்வி,* ***பிள்ளை*** *நல்வழிப் பெறவே*
*சொல்லிக் கொடுக்கச் செல்லுவேன் நாளும்;*
*மைந்தனுக் கில்லை சிந்தனை கல்வியில்;*
*தீங்கை நினைத்துத் தூங்கி விழுவன்;*
*கோடி மூலையில் தாடியைக் கண்டதும்*
*ஓடி ஓடி ஒளித்துக் கொள்வன்*
*பிடித்து வரினும் படிப்ப தில்லை;*
*ஒருநாள் முதியனை ஓங்கி அறைந்தனன்*
*மறுநாள் தொட்டவன் வருவ தில்லை;*

**உயிர் வதை**

*பிள்ளை வளர்ந்தனன் கொடும்புலி என்னத்*
*தள்ளுவன் தொண்டரைத் தாக்குவன் தடியால்;*
*பூனையை அடிப்பன் நாயைச் சாடுவன்*
*ஆனைப் புடைப்பன் யானையை உதைப்பன்*
*மானை மாய்ப்பன் மாவை முடுக்குவன்;*
*முளையை முறிப்பன் விதையைக் கிளறுவன்*
*கொடியை அறுப்பன் செடியைச் சாய்ப்பன்*
*மரத்தை வெட்டுவன் சிரத்தைக் களைவன்*
*மலரைக் கண்டதும் கிளையை உலுக்குவன்*
*கீரையை மிதிப்பன் கீழே தேய்ப்பன்*
*முதலிய கொடுமையால் வதையே செய்வன்;*
*பெண்கள் சாபம் மண்ணினில் பெற்றனன்*

125. தாடியை – தாடியையுடைய ஆசானை.

133. ஆனை – பசுவை.

134. மாவை – குதிரையை.

*பிறர்குறை உணரவும் பேசவும் விரைவன்*
*தன்குறை எண்ணும் வன்மை இழந்தனன்;*
*பாவம் பெருகவும் ஆவி சுருங்கவும்*
*வளர்ந்தனன் மலையாய் வளர்ந்தனன் நாளும்;*
*பெற்றவர் வருந்துவர் கற்றவர் வருந்துவர் -*
*கண்ணீர் உகுப்பர் கடவுளை எண்ணுவர்;*

நல்லார் யார்?

*கைதவப் பிள்ளை செய்தவம் என்ன?*
*அந்தப் பதியை நந்தி என்னும்*
*முனிவன் அடைந்து மனித இயல்பைப்*
*பேசினன் நாடொறும் நீசப் பிள்ளையும்*
*கூட்டம் போந்து கேட்டனன் பன்னாள்;*
*மெய்யன் மொழிகள் செய்தன அற்புதம்!*
*நல்ல மொழிகளின் வல்லமை என்னே!*
*மனத்தில் மாற்றம் நினைப்பில் உற்றது*
*பாவி நெஞ்சப் பாறை பிளந்தது*
*அழுகை எழுந்தது பொழிந்தது விழிநீர்;*
*முனியை ஒருநாள் கனிவுடன் நோக்கிப்*
*'பொல்லா ஒருவன் நல்லான் ஆகும்*
*வழியும் உண்டோ? மொழிக' என்றனன்;*
*'உண்டு வழிகள் உண்டு பற்பல :*
*சடையை வளர்த்தலும் உடையை விடுத்தலும்*
*மொட்டை அடித்தலும் கட்டையாய்த் திரிதலும்*
*சீலம் என்று கோலம் மாற்றலும்*
*வேறு வேறு வேடம் பூணலும்*
*நாட்டைத் துறந்து காட்டுக் கோடலும்*
*புருவத் திடையே பெருகொளி உள்ளலும்*
*மூக்கு நுனியில் நோக்கம் வைத்தலும்*
*மதிகதிர் கலைகளை விதிமுறை ஈர்த்தலும்*
*உள்நா ஒழுக்கை உண்டு களித்தலும்*

147. உகுப்பர் – சிந்துவர்.

148. கைதவம் – கபடம் ; வஞ்சனை.

153. மெய்யன் – நந்தி முனிவன்.

155. மனத்தில் – பிள்ளையின் மனத்தில்.

158. (பிள்ளை) நோக்கி.

169. மதி கதிர் கலைகளை – சந்திர சூரிய கலைகளை; பெண் ஆண் கலைகளை.

170. ஒழுக்கை – அமிர்த ஒழுக்கை.

*மூலக் கனலைக் காலால் எழுப்பலும்*
*அபானம் அடக்க உபாயந் தேடலும்*
*இன்ன பிறவும் அல்ல அல்ல;*
*ஒன்று கூறுவன் நன்று கேட்க :*
*நல்லான் பிறர்குறை சொல்லான்' என்று*
*நந்தி அருளினன் மைந்த னிடத்தில்;*
*சித்திரம் ஆனான்; செத்தவன் ஆனான்;*
*தெளிவு பிறந்தது ஒளியும் பிறந்தது;*
*'நல்லவர் இணக்கமும் வல்லமை தரு'மென*
*மேலும் மொழிந்து சீல முனிவன்*
*சின்னாள் தங்கிச் சென்றான் அயலூர்;*
*நீசப் பிள்ளை நேசன் ஆயினன்*
*பிறர்குறை எண்ணும் நன்மை எய்தினன்*
*இறையை நினைந்து குறைமுறை இடுவன்;*
*பழைய பாவமும் பழியும் பிறவும்*
*கரைந்து கரைந்து கழிய லாயின;*
***சித்தம் திருந்தினன் செத்துப் பிறந்தனன்***
*புதியன் ஆயினன் மதியன் ஆயினன்*
*அறத்தொண்டாற்றும் திறத்தன் ஆயினன்;*
*பெற்ற வயிறு உற்றது மகிழ்ச்சி';*
*இவ்விரு நிகழ்ச்சியைச் செவ்விதில் ஆய்க;*

மனந்திரும்பல்

*எத்தனைக் கொலைஞர் எத்தனைக் கள்வர்*
*எத்தனைக் குடியர் எத்தனைத் தூர்த்தர்*
*எத்தனைப் பொய்யர் எத்தனைக் கபடர்*
*சித்தம் திரும்பிச் செத்துப் பிறந்தனர்!*
*சித்தம் திரும்பல் செத்துப் பிறத்தலே*
*மறப்பும் நினைப்பும் இறப்பும் பிறப்பாம்;*
*வெள்ளிநீ பாவப் பள்ளம் விழுந்தே*
*எழுந்தனை, இன்று பழஞ்செயல் குறித்தும்*
*அழுகின் றாயே! அழுகின் றாயே!*
*இறந்து பிறந்தனை வளர்க புதியனாய்;*

171. காலால் – காற்றால்.

172. அபானம் – அபான வாயுவை.

177. பிள்ளை சித்திரம் ஆனான்.

### பாவத்துக்கு அஞ்சும் நெஞ்சம்

*அரைகுறை மனிதன் ஆற்றுவன் பாவம்;*
*முறையிட் டழுதால் இறையருள் தாங்கும்;*
*பின்னே பாவம் உன்னிச் செய்ய*
*அஞ்சும் நல்ல நெஞ்சம் முகிழ்க்கும்;*
*நல்ல நெஞ்சம் வல்லமை யுடையது*
*வன்மை பிறர்க்கு நன்மை செய்வதே;*

### ஜெபதப தியானம்

*பொழுது போக்கும் வழிகள் உண்டு*
*தோத்திரம் உண்டு சாத்திரம் உண்டு*
*பாட்டும் உண்டு கூத்தும் உண்டு*
*பல்லியம் உண்டு சொல்லொலி உண்டு*
*விழவும் உண்டு தொழுமொலி உண்டே;*
*இவையெலாம் புலன்கட் கினிமை செய்யலாம்*
*அறவடி வான இறைநெறி அல்ல;*
*அமைதி இடத்தில் அமர்ந்து கடவுளைக்*
*கதியெனப் போற்றல் புதிய தன்று;*
*கூட்டங் கூட்டமாக் கூட்டு முறையில்*
*பழகும் தொழுகை பழமை யானதே;*
*தனிமை இடத்தில் தனிமை யாகி*
*இறையை நினைக்கும் முறையும் தொன்மை;*
*பாவம் வாழ்வைத் தாவா திருக்க*
*ஜெபதப தியானம் செய்தல் நன்று;*

### தெய்வச் சத்தி

*பயன்கரு தாத பரம தியானச்*
*செயலில் பிறக்கும் தெய்வச் சத்தி;*
*தெய்வச் சத்திமுன் இயற்கைச் சத்தியும்*
*இணங்கி ஏவல் வணங்கிச் செய்யும்;*
*தெய்வச் சத்தி எய்திய பெரியோர்*
*செய்யும் தொண்டால் வையம் வளரும்;*

### அன்பு எது?

*இன்னும் பலஊர் செல்லல் வேண்டும்*
*வெள்ளி உன்பால் விடைபெறு கின்றேன்"*

---

206. முகிழ்க்கும் – மலரும்.

212. பல் இயம் – பலவகை வாத்தியங்கள்.

213. விழவும் – திருவிழாக்களும்

221. தொன்மை – பழமையே.

என்றருள் புரிய, மன்னன் வெள்ளி,
"வீடும் வேண்டேன் பீடும் வேண்டேன்
பதியும் வேண்டேன் நிதியும் வேண்டேன்
ஆட்சியும் வேண்டேன் மாட்சியும் வேண்டேன்
ஒன்றும் வேண்டேன் பின்னே தொடர்வன்"
என்று முழங்கினன்; இன்சொல் அண்ணல்,
"அன்புனக் கென்பால் இருத்தல் உண்மை;
அன்பைச் செலுத்தல் பின்னே தொடர்தலோ?
வீட்டி னிடத்தில் நாட்டி னிடத்தில்
உலகி னிடத்தில் கலையி னிடத்தில்
தொழிலி னிடத்தில் உழைப்பி னிடத்தில்
வளர்ச்சியி னிடத்தில் அறத்தி னிடத்தில்
அன்பைச் செலுத்தல் என்பால் செலுத்தலாம்
உன்னுளம் குளிரும் என்னுளம் குளிரும்;
கொள்கை வளர உள்ளங் கொள்க;
வீர வழிபா டென்னும் பேரால்
தனித்தனி மனிதனைத் தலையில் தூக்கி
வெறிகொண் டாடல் அறிவா காது;
கொள்கை வளர்க்கக் கொள்க அன்பை"
என்று சொல்லிப் பின்னும் பேசுவன்:

(அறவுரை)

வள்ளல் போதனையும் சாதனையும்

***"புதிய வெள்ளி!*** *மதியொளிப் புலவீர்!*
சுற்றும் முற்றும் உற்று நோக்குக
இயற்கைக் கழகப் பயிற்சி பெறுக;
தெய்வம் தெளிக வையம் வளர;
வைய வழியே தெய்வம் உணரலாம்;
மிகுபொருள் விரும்பும் மிலேச்சப் பேயால்
வையம் போராய்த் தெய்வம் மறைக்கும்;
உயிரை வதைக்க அயிலமர் ஆணியைச்
சிலுவையில் அறைந்த கொலைஞ ரிடத்தும்
அருளைப் பொழிந்த பொறுமை **வள்ளல்**
போதனை வாழ்வில் சாதனை செய்க;

259. அயில் அமர் – கூர்மை பொருந்திய.

**விளைவு**

*செய்யச் செய்ய ஐயம் நீங்கும்*
*இறையின் இருப்பில் உறுதி நிலைக்கும்;*
*அத்தை ஆயும் தத்துவம் ஒடுங்கும்;*
*சிந்தனை அடங்கும்; உந்தலும் ஒழியும்;*
*தெய்வம் அன்பெனும் மெய்ம்மை விளங்கும்;*
*பலமத உணர்வு விலகிப் போகும்*
*ஒருநெறி உணர்வு கருவில் அரும்பும்;*
*கல்வி கேள்வி செல்வம் தொழிலே*
*அரசியல் சீலம் அறிவியல் பிறவும்*
*ஒருநெறிக் கூறெனும் உண்மை பிறங்கும்;*
*மாற்றார் பாலும் ஊற்றும் அன்பே*
*புறம்புறம் பேசாத் திறம்பெறல் எளிதாம்*
*தன்குறை முறையிடும் வன்மை பிறக்கும்*
*வெற்றுரை யாடல் அற்றுப் போகும்*
*மிகுபொருள் விரும்பாத் தகுதி படியும்;*
*மன்னிப் புள்ளம் மலர்ந்து மின்னும்*
*மன்னுயிர் தன்னுயிர் என்ப தறியலாம்;*
*சித்தம் திருந்தும் வித்தை பயிலலாம்*
*செத்துப் பிறக்கும் சத்தியம் காணலாம்;*
*அலகைப் பிள்ளையாய் அலையா திருக்கலாம்*
*ஈசன் பிள்ளையாய் வாசம் செய்யலாம்;*
*வகுப்பு நிறமொழி மதநா டென்னும்*
*தொகுப்பில் கருத்துப் புகுதல் அரிதாம்;*
*எங்கும் எவர்க்கும் புங்கத் தொண்டே*
*வேற்றுமை இன்றி ஆற்ற மனமெழும்;*

---

**264–6.** இறை, வாக்கு மனங்கட்கு எட்டாதது. ஆராய்ச்சி, வாக்கு மனங்களெனும் எல்லைக்குள் சுழன்று சுழன்று உழல்வது. இவ்வாராய்ச்சி, எல்லை கடந்த கடவுளை எப்படி அணுகும்? ஆராய்ச்சியைக் கடந்தது கடவுள். இறையின் உண்மையை உணர்ந்தபின்னர் ஆராய்ச்சியின் மூலமாகிய தத்துவமும், அதற்குரிய சித்தமும், பிறவும் அடங்கி ஒடுங்கும். தெய்வம் அன்பு என்னும் உண்மை விளங்கும்.

**265.** அத்தை – அதனை; அந்த இறையை.

**266.** சிந்தனை – ஆராய்ச்சி செய்யும் சித்தம். உந்தலும் – செலுத்தலும்.

**271.** அறிவியல் – விஞ்ஞானம்

**272.** கூறு – பகுதி; அம்சம். பிறங்கும் – விளங்கும்.

**273.** மாற்றார்பாலும் – பகைவரிடத்திலும்.

**282.** அலகை – பேயின்.

**பணிகள்**

*தொண்டால் மூர்க்கம் அண்டா தொழியும்*
*மூர்க்கப் புரட்சியால் பார்க்கு நாசம்*
*அகிம்சைப் புரட்சியால் அகிலம் உய்யும்;*
*கொலைபுலைக் குறையைக் கலையால் விளக்கும்*
*அறிவுக் குருகுலம் பரிவால் அமைக்க;*
*கொள்ளை காமம் கள்பொய் - கொலையென*
*உள்ளம் தெளியப் பள்ளி காண்க;*
*கொல்லும் கருவிசெய் அல்லல் களத்தைச்*
*சீல விளைவுசெய் ஆலயம் ஆக்குக;*
*அருளற நெறியின் பொருளைப் பரப்புக*
*அந்த நெறியால் ஐந்து பாவமும்*
*அருகி அருகி அருகிப் பொன்றும்;*
*அருளற நெறியில் பொருளிலர் இலரே*
*ஏழ்மை - பிச்சை - தாழ்வே தோன்றா;*
*சார்பில் கிழவர் செவிடர் குருடர்*
*ஊமர் நோயர் ஊன விலங்குகள்*
*உவப்புடன் வாழ அமைப்புகள் காண்க;*
*முதியர் மொழிகளை இளைஞர் கேட்க*
*மூத்த அநுபவம் மாக்கலை நிதியே*
*இக்கலை காக்கத் தக்கது புரிக;*
*பெற்றவர்ப் பேணல் நற்றவம் என்று*
*குழவிகள் உணரும் வழியைக் கோலுக;*
*உலகம் ஒருகுல மாகப் பணிசெய்*
*அருளறக் கூட்டம் பெருக முயல்க;*

**உயிர்த்தெழல்**

*மண்ணில் தோன்றும் எண்ணில் பிறவியுள்*
*மனிதப் பிறவி இனிதே இனிதே;*
*பிறப்பு நோக்கம் இறப்பைத் தடுத்தல்*
*இறப்பைத் தடுக்கும் திறத்தை அடைக;*
*செத்துப் பிறந்தால் வற்றும் இறப்பே*

---

**289.** பார்க்கு – உலகுக்கு.

**293.** கொல்லுதல் மட்டும் கொலை ஆகாது. கொள்ளையும் காமமும் கள்ளும் பொய்யும் கொலையே ஆகும் என்றபடி. அது பற்றியே இங்குக் கொள்ளையும் காமமும் கள்ளும் பொய்யும் "கொலை" என்றவாறாம்.

**297.** அருளற நெறியின் – அகிம்சா மார்க்கத்தின்.

**299.** பொன்றும் – மறையும்; அழியும்.

**307.** இக்கலை – இக்கலைகளாகிய முதியரை (ஆகுபெயர்).

*உயிர்த்தெழு நுட்பம் முயன்று தெளிக*
*அப்பன் சிலுவை செப்பும் நுட்பம்*
*உன்னுக அதனை ஒன்றுக அதனில்;*

நோன்பு

*உன்னவும் ஒன்றவும் பொன்னுடல் தேவை*
*உடம்பியல் நோயைக் கடந்து நிற்பது*
*மடமை வளர்ப்பே இடந்தரும் நோய்க்கு*
*நோய்கிடந் தருதல் மாய்வுக் கடிகொளல்*
*நல்ல உடம்பை அல்லல் படுத்தல்*
*கொடுமை! கொடுமை! அந்தோ! கொடுமை!*
*நோன்பும் ஜெபமும் நோய்க்கு மருந்தாம்*
*மற்ற மருந்தை நற்றவர் நாடார்;*
*நற்றவர் அல்லா மற்றவர் பொருட்டு*
*மருந்து சாலைகள் பொருந்த நிறுவலாம்;*
*விளம்பர நோன்பு களங்கம் ஆகும்*
*ஏசு நோன்பு மாசில் இலக்கியம்;*
*உடலை ஓம்புக உடலை ஓம்புக*
*உடலை ஓம்புதல் உயிரை ஓம்பலாம்;*

வேலை

*செயற்கை வழியின் செயலை விடுக்க*
*இயற்கை வழியில் இயங்கி வாழ்க;*
*உழவும் நூற்றலும் செழிக்க உழைக்க*
*காலத் தொழிலையும் சால வளர்க்க;*
*அவரவர் உடையை அவரவர் தோய்க்க*
*அவரவர் உணவை அவரவர் சமைக்க*
*அவரவர் வேலையை அவரவர் பார்க்க*
*கூலி அடிமை வேலையை ஒழிக்க*
*ஒப்புர வுப்பணி இப்புவி ஓங்க;*
*தால்ஸ்தாய் ரஸ்கின் சால்புக் காந்தி*
*சொற்ற நெறியைப் பற்றி நடக்க;*
*பேய்மனம் நீங்கிச் சேய்மனம் பூக்கும்*
*ஆண்டவன் உலகைக் காண்டல் கூடும்"*

321. உடம்பியல் – உடம்பின் இயல்பு.

323. மாய்வுக்கு – இறத்தலுக்கு.

342. ஒப்புரவு – உபகாரம்; சமமும் ஒற்றுமையுமாம்.

345. சேய் – குழந்தை.

அண்ணல் புறப்பாடு

*என்று கருணை நன்கு பொழிந்தே*
*அண்ணல் புறப்பட எண்ணி எழுந்தனன்;*
*வெள்ளி கதறும் உள்ளங் கண்டு*
*புலவோர், "வெள்ளி! நலமார் குருவின்*
*சொல்வழி நிற்றல் நல்ல தப்பா!"*
*என்றதும் கதறல் நின்று விட்டது;*
*சித்தன் சென்றனன் சித்தம் விடுத்தே;*

குருவழி நிற்றல்

*வெள்ளியும் பிறரும் அண்ணலை என்றும்*
*நினைந்து நினைந்து நினைந்தவன் சொல்வழி*
*நின்றே ஒழுகி ஒன்றாய்க் கூடி*
*அருளறம் எங்கும் பெருக வேண்டி*
*ஆற்றினர் பணியே ஆற்றினர் பணியே;*
*சித்தம் எங்கும் சுத்தம் ஆயது*
*சூழ்ந்த பதிகளும் வாழ்ந்தன அன்பில்*
*அன்பும் அமைதியும் இன்பும் மருவும்*
*பொதுமை அறத்துப் புதுமை பொங்க*
*ஆற்றினர் பணியே ஆற்றினர் பணியே;*

வாழ்க!

*வாழ்க தெய்வம் வாழ்க வையம்*
*வாழ்க உயிர்கள் வாழ்க பிறப்பு*
*வாழ்க சித்தம் வளம்படு வித்தை*
*வாழ்க செத்துப்* ***பிறக்கும் வாழ்வு***
*வாழ்க சான்றோர் வாழ்க அவர்மொழி*
*வாழ்க என்றும் வாழ்க நன்றே!*

**348.** அண்ணல் – பெருமையிற் சிறந்த சித்தன்.

**350.** வெள்ளியைச் சூழ்ந்து நின்ற புலவர்கள்.

# முதுமை உளறல்

(1951)

# முகவுரை

*'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு - பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு***' என்பது நக்கீரர் திருவாக்கு.*

*கருமுகில் சூழல்; பெரும்புயல் தாக்கல்; கருமுகில் இரிவு; பரிதித் தோற்றம்; உலக உவப்பு.*

*கருமுகில் - ஏகாதிபத்தியம்; பெரும்புயல் - புரட்சி; கரு முகில் இரிவு - ஏகாதிபத்திய முறிவு; பரிதித்தோற்றம் - சுதந்தர உதயம்; உலக உவப்பு - பொதுமை இன்பம்.*

*பொதுமை இன்பம் பிலிற்றும் காலம் இது. இக் காலத்துக் குரிய பலதிறத் தொண்டுகளை ஆற்ற என் வாழ்க்கை - ஏழ்மை வாழ்க்கை - இடந்தந்தது; இப்பொழுது இடந் தருவதில்லை. ஏன்? உடல்நலம் குலைந்தது; கண்ணொளி குன்றியது; முதுமை அடர்ந்தது. பொழுது பெரிதும் படுக்கையில் கழிகிறது. இந் நிலையில் கருத்தொளி பெருந்துணை செய்கிறது. அத்துணை யால் வாய்மொழி வாயிலாகச் சிறுசிறு நூல்களைச் சொல்லி வருகிறேன். அந் நூல்களுள் ஒன்று இம் 'முதுமை உளறல்'. தோற்றுவாய் பார்க்க.*

*என் வாய்மொழிச் சொற்களை எழுத்தில் பொறித்த சாது அச்சகப் பொறுப்பாளர் - திரு. மு. நாராயணசாமிக்கும், எவ் விதக் கைம்மாறுங் கருதாது அச்சுத்தாள்களை அன்புடன் பார்வையிட்டு உதவிய டாக்டர். மு. வரதராசனார்க்கும், தமிழ்ப் பேராசிரியர் - வித்துவான் - அன்பு கணபதிக்கும் எனது மன மார்ந்த வாழ்த்து உரியதாக.*

*முதுமை உளறலில் குற்றங் குறைகள் நிகழ்தல் இயல்பு. அவற்றைப் பொறுத்தருளுமாறு அன்பர்கட்கு வேண்டுதல் செய்கிறேன்.*

*இராயப்பேட்டை*
*20-10-51* **திருவாரூர் வி. கலியாணசுந்தரன்**

# 1. தோற்றுவாய்

*பிறந்தேன் வளர்ந்தேன் பறந்தேன் பன்னெறி;*
*அறுப தாண்டு நிறைவு பெற்றபின்*
*பறப்பை 'வாழ்க்கைக் குறிப்'பில் பொறித்தேன்;*
*அந்த நாட்களில் சிந்தனைப் பொருள்களை*
*விழிகள் நோக்க எழுதுவன் கையால்;*

படலம்

*அறுபத் தாறினில் சிறுபரல் ஆணிப்*
*படலம் கண்ணைப் படர்ந்து மறைத்தது;*
*பழைய வண்ணம் விழிகள் நோக்க*
*எழுதும் பேற்றை இழந்தனன் பாவி!*
*உளத்தெழும் கருத்தை உளறு கின்றனன்*
*உளறலும் நூலாய் வெளிவரு கின்றது;*
*ஒற்றைக் கண்ணிடர் உற்ற வேளையில்*
*'பரம்பொருள்' நூலைப் பகர்ந்தனன்* ***உரையால்;***
*இரண்டு கண்ணொளி வறண்டஇந் நாளினில்*
*'இருளில் ஒளி'யைக்* ***குறள்வெண் பாவால்***
*'இருமையும் ஒருமையும்', 'அருகன் அருகே'*
*'பொருளும் அருளும் - மார்க்கிஸ் காந்தி'*
*'சித்தந் திருந்தல் - செத்துப் பிறத்தல்'*
*என்னும் நூல்களைப் பன்னினன் அகவலால்;*

கருத்தொளி

*கண்ணொளி இழந்த வண்ணப் புலவோர்*
*நிலைமை நன்கு புலனா கியதால்;*

---

3. பறப்பை – வாழ்க்கை வேகமாகப் பறந்ததை. 'வாழ்க்கைக் குறிப்'பில் – 'திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்னும் நூலில்.

6. சிறுபரல் – சிறுகல். (கல் போன்ற ஆணி.)

13. உரையால் – வசனத்தால்.

16. 'அருகன் அருகே அல்லது விடுதலை வழி.'

17. 'பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்.'

18. 'சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்.'

19. பன்னினன் – வாயால் சொன்னேன்.

*கண்ணொளி பட்டதும் கருத்தொளி முன்னிலும்*
*மேலும் விளங்கல் சாலத் தெளிந்தேன்;*
*ஒருபுலன் ஒடுங்கின் மறுபுலன் விளக்கம்*
*அதிகம் அடைதலில் அதிசயம் இல்லை;*

**உரைநடை**

*'பழைய உரைநடை விழுமிய அகவல்'*
*பின்னே யாப்பணி துன்ன வேய்ந்தது*
*உளறுமென் அகவலும் ஒருவித உரையே;*
*பொழுது படுக்கையில் கழிக்க நேர்ந்தபின்*
*கடிதில் உரைநடை முடிதல் கண்டேன்;*
*பாவின் அமைப்போ ஓவியம் ஆகி*
*உருண்டும் புரண்டும் திரண்டும் நிற்கும்;*
*மொழிந்த பின்னும் அழிதல் அரிதாம்*
*ஆதலின் பாவால் ஓதலைக் கொண்டேன்;*
*இந்த நூலையும் அந்தப் பாவால்*
*சொல்லத் துவங்கினன் மெல்ல மெல்லவே;*
*உளறலுக் குண்டோ ஒழுங்கும் வரம்பும்!*
*இளமை உளறுமோ! உளறினும் வளமே!*
*முதுமை உளறும்; புதுமை பூக்குமோ?*

**மீண்டும் கண்ணொளி!**

*கண்ணொளி வருமெனக் காலக் கணக்கு*
*நண்பர் சில்லோர் எண்ணுவ தென்னோ?*
*'கண்ணொளி தந்தவன் தண்ணருட் கடவுளே*
*அவ்வொளி மறைத்தவன் அவ்வருட் கடவுளே'*
*என்று சொல்லி நன்று வாழ்த்துவன்!*
*வேறென் கூறி ஆறுதல் அடைவேன்!*

**தூக்கத் தேவி**

*பகலில் பல்பணி மிகமிகச் செய்து*
*நிசியில் எழுத்துப் பசியைத் தீர்ப்பன்;*

---

26–7. பழைய உரைநடையாகிய அகவற்பா, பின்னாளில் யாப்பிலக்கணம் என்னும் அணியைப் பொருந்தச் சூடியது.

33. (பாக்களை) மொழிந்த பின்னும்.

35. அந்தப் பாவால் – அந்த அகவற்பாவால்.

40–1. காலக் கணக்கு நண்பர் – சோதிடர்.

47. நிசியில் – இரவில்.

48. தூக்கத்தேவி – மூதேவி.

*தூக்கத் தேவி தாக்கினள் என்னைக்*
*கடந்தன ஆண்டுகள்; படர்ந்தது படலம்;*
*எனதே குற்றம் எனதே குறையும்*
*இயற்கை ஒறுத்தலைச் செயற்கை என்செயும்?*
*படுக்கையில் கிடந்து விடுக்கும் சொல்லால்*
*ஆகும் நூலில் ஏகும் பிழைகள்;*
*பொறுக்க புலவர் பொறுத்தே அருள்க.*

51. ஒறுத்தலை – தண்டித்தலை.

# 2. கடவுள்

பலதிறம்

*கடவுள் வாழ்க! கடவுள் வாழ்க!*
*'கடவுள் உண்டோ? இலையோ?' என்னும்*
*கேள்வி பிறந்த நாளெந் நாளோ?*
*ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆயின!*
*ஆய்வில் நுழைந்தால் ஆயுள் போதா*
*பெருக்கம் வேண்டா சுருக்கம் சாலும்;*
*பூதம் பொருளென வாதிப் போருளர்*
*பூதம் அவர்க்குக் கடவு ளாகும்;*
*நாதம் பொருளென நாட்டு வோருளர்*
*நாதம் அவர்க்குக் கடவு ளாகும்;*
*வேதம் பொருளென ஓது வோருளர்*
*வேதம் அவர்க்குக் கடவு ளாகும்;*
*அறிவென் போருக் கறிவே கடவுள்*
*அன்பென் போருக் கன்பே கடவுள்*
*அருளென் போருக் கருளே கடவுள்*
*உயிரென் போருக் குயிரே கடவுள்*
*உருவென் போருக் குருவே கடவுள்*
*அருவென் போருக் கருவே கடவுள்*
*எங்கும் எனிலோ எங்கும் கடவுள்*
*எல்லாம் எனிலோ எல்லாம் கடவுள்*
*உண்மை எனிலோ உண்மை கடவுள்*
*இன்மை எனிலோ இன்மை கடவுள்*
*தருமம் எனிலோ தருமம் கடவுள்*
*கருமம் எனிலோ கருமம் கடவுள்*
*சீலம் எனிலோ சீலம் கடவுள்*
*உரிமை எனிலோ உரிமை கடவுள்;*
*'காவியர் ஓவியர் கடவுளைத் தந்தனர்'*
*என்று சொல்லும் இனியரும் உளரே;*
*கண்ட மெல்லாம் ஒண்டும் மூல*

அகண்டங் கடவுளென் றறைவோ ருளரே;
எவரெவர் ஞானம் எவ்வெவ் வளவில்
முட்டு கின்றதோ முட்டல் கடவுள்;
முட்டி முட்டி முட்டிச் சென்றால்
முட்டல் முடிவைக் காண்டல் எளிதோ?
ஆதலின் ஆய்வாம் வேதனை ஏனோ?
கடவுள் ஆய்வில் மேய்தல் வேண்டா
கடவுள் நிலையை அடைதல் நன்றே
அந்நிலை பெறவே முன்னி முயல்க;

வழி

என்னைக் கிள்ளின் எனக்குத் துன்பம்
உம்மைக் கிள்ளின் உமக்குத் துன்பம்;
துன்பம் விழையும் அன்பரும் உளரோ?
துன்பம் நீங்க வாழ்தல் இன்பம்;
தன்னுயிர் போல மன்னுயிர் ஓம்புக;
தன்னுயிர் மன்னுயிர் என்னும் நிலையே
கடவுள் நிலையைக் கருத்தில் இருத்தும்;
கொலைபுலை காமம் கொள்ளை கள்பொய்
சூது வாது சூழ்ச்சிக் குப்பையை
அறிவால் விலக்கி அன்பால் மெழுகி
உண்மைக் களனாய் உளத்தை ஆக்கி
மிகுபொருள் விரும்பாத் தகுதி **மலரால்**
போற்றிப் போற்றி ஆற்றுக பணியைக்
கடவுள் நிலையை அடைதல் கூடும்;
கடவுள் வாழ்க! கடவுள் வாழ்க!

## 3. அம்மா! அப்பா!

*அம்மா! அப்பா! இம்மா நிலத்தில்*
*இல்லறம் என்னும் நல்லறம் ஏற்றீர்;*
*மக்கள் பிறந்தனர்; தக்க உம்மிடை;*
***நேயம்** வளரும் மாயம் என்னோ!*
*சோதர நேயம் ஆதி வித்தாய்*
*உலக நேயமாய் அலகில் கடலாய்ப்*
*பெருகிப் பெருகும் பெருமை என்னோ!*

ஒருமைக் காதல்

*அம்மா நீயும் அப்பா நீயும்*
*இருமை அற்ற ஒருமைக் காதலில்*
*ஒன்றி உமிழ்ந்த அன்பே அன்பே*
*வீடாய் ஊராய் நாடாய் உலகாய்க்*
*கரையில் கடலாய் உரையைக் கடந்தது!*

கருணை

*என்ன பிழைகள் சின்னவர் செய்யினும்*
*அன்னே மறந்து நன்மை செய்வீர்;*
*கருணை நீரே! கருணை நீரே!*
*என்ன நன்றி புன்மையர் செய்வம்!*
*உம்மை நினைக்க ஒருமனம் போதுமோ?*
*உம்மைப் புகழ ஒருநா போதுமோ?*
*உம்மை வணங்க ஒருதலை போதுமோ?*
*கைம்மா றெண்ணா அம்மா! அப்பா!*
*வளர்க வழிவழி; வளர்க உலகே!*

---

5. சோதர நேயம் – சகோதர நேயம்.

10. ஒன்றி – கலந்து; சேர்ந்து.

8–12. ஒருத்தியும் ஒருவனும் நடாத்தும் காதல் வாழ்க்கையில் சுரக்கும் அன்பு, (பிள்ளையாய்க் குடும்பமாய்) வீடாய்............ கடந்தது.

14. அன்னே – அப்பொழுதே.

16. புன்மையர் – அற்பர்.

21. (நீங்கள்) வளர்க வழிவழி.

# 4. வையம்

## என்றும் கன்னி

*வையம் பிறந்த வரலா றென்னை?*
*தத்துவ ஆய்வு நித்தமும் வளர்வது!*
*முழுமைக் காரணம் மொழிவ தெப்படி?*
*ஞாயிறு தாயென வையம் சேயென*
*விஞ்ஞா னக்கலை விளம்புதல் காண்க;*
*வையம் ஒருபெருந் தையல்; அவளது*
*கருவோ ஓய்வு பெறுவ தில்லை;*
*எத்தனைப் படைப்புகள்! எத்தனைப் படைப்புகள்!*
*எண்ணில! எண்ணில! எண்ணில! எண்ணில!*
*என்றும் படைப்பே! என்றும் படைப்பே!*
*என்றும் படைப்புத் தொண்டே ஆற்றினும்*
*இன்றும் கன்னியாய் இருக்கின் றாளே;*
*என்னே வியப்பு! என்னே வியப்பு!*
*முதுமை அறியாப் புதுமை உடையவள்;*
*அன்னை வாழ்க! கன்னி வாழ்க!*

## அகம் புறம்

*ஒருமை வையம், குறிஞ்சி முல்லை*
*மருதம் நெய்தல் பாலை என்னும்*
*ஐந்தாய்ப் பிரிந்தே அன்பை வளர்க்கும்;*
*'புறத்திணை - அகத்திணை'த் திறங்களை ஆய்க;*
*ஒன்று பருமை ஒன்று நுண்மை*
*பருமை அரண்கள் நுண்மைக் காப்பாம்*
*நுண்மை அமைதி, பருமை வாழ்வாம்;*
*புறமும் அகமும் அறத்தொடர் புடையன;*
*அகத்தில் இன்ப ஆறு பாயச்*
*செகத்தில் புறப்பொருள் தேவை தேவையே;*

4. ஞாயிறு – சூரியன். சேயென – பிள்ளையென்று, ஞாயிற்றினின்றும் விழுந்த ஒரு துண்டம் வையம். இதனால் தாய் சேய் உறவு சொல்லப்பட்டது.

21. பருமைப் புறத்திணை அரணாக நின்று, நுண்மை அகத்திணைக்குக் காவல் செய்யும் என்றபடி.

வழுக்கல்

*புறப்பொருட் கென்று மறப்போர் செய்தல்*
*வளர்ந்து வளர்ந்து பிளந்த தன்மை;*
*முதல் - தொழில் வேற்றுமை முடுகி மூண்டது;*
*ஆதி மனிதன் நீதியை மறந்தோம்*
*தேவை அளவை மீறி விட்டோம்*
*வழியை விடுத்து வழுக்கி வீழ்ந்தோம்;*
*குழப்ப அழைப்பு விழுப்பம் பெற்றது*
*வகுப்பு நிறமொழி மதநா டென்னும்*
*வெறிகள் சுழன்றே எரிந்தன எங்கணும்!*
*வையம் போரின் வைப்பா கியதே;*

போதனை

*இரத்தப் போர்புரி அரக்கன் ஒழியவும்*
*தொல்லைகள் நீங்கி அல்லல் போகவும்*
*கலகம் இன்றி உலகில் வாழ்ந்த*
*ஆதி மனிதன் போதனை ஏற்க*
*வாழும் வையம் வாழும் இனிதே!*

---

**29.** ஆதி மனிதன் நீதியைப் 'பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்' என்னும் நூலில் விளக்கம் செய்துள்ளேன். ஆதி நாளில் முதல்–தொழில் வேற்றுமை இல்லை. இஃது இங்கே சிறப்பாகக் கருதற்பாலது.

# 5. ஞாயிறு

மெய்யர் கொலை

*ஞாயிறு! வாழ்க ஞாயிறு! வாழ்க*
*மாயிரு ஞாலம் மாண்புற வாழ்க;*
*காலையில் எழுந்து மாலையில் சாய்தல்*
*மெய்யோ? புலவோர் செய்யுள் கற்பனை;*
*கற்பனை என்று முற்படச் சொன்னவன்*
*அலைய வதைத்த 'கலைஞரும்' வாழ்ந்தனர்*
*மெய்யரைக் கொல்லும் வையமும் உளதே1*

உயிர்ப்பொளி

*உலகெலாம் உவப்ப அலகில் உயிர்ப்பொளி*
*வழிய வழியப் பொழிகின் றாயே!*
*ஊற்றெங் கேயோ? நாற்றெங் கேயோ?*
*அத்தை உணர்த்தும் வித்தை எதுவோ?*
*சோறு மின்றி நீரு மின்றிக்*
*காற்று மின்றி வேற்றுண வின்றி,*
*அமைதி மரநிழல் அமர்ந்தெந் நாளும்*
*உயிர்ப்பொளி மூழ்கி உண்டவர் சிலரே;*

காலம்!

*அறிவியல் ஆய்வு செறியுங் காலம்*
*மன்பதைப் பெருக்கால் துன்புறுங் காலம்*

---

1. ஞாயிறு! – ஞாயிறே; சூரியனே.

5–6. பூமி சூரியனைச் சுற்றுகிறதா அல்லது சூரியன் பூமியைச் சுற்றுகிறதா என்பதைப்பற்றிய ஐயமும் ஆராய்ச்சியும் நிகழ்ந்த காலமும் உண்டு. சூரியனைப் பூமியே சுற்றுகிறது என்ற கருத்தை முன்னாளில் வெளியிட்டவர் **கோபர்னிகன், கலிலியோ** உள்ளிட்ட சில அறிஞர். அவருள் இங்கே குறிக்கத்தக்கவர் கலிலியோ. அவர்தம் உயிர் அலைய அலைய அவர் வதைக்கப்பட்டனர். இக்கூற்றை மறுப்போரும் உளர்.

8. அலகு இல் – அளவு இல்லாத. உயிர்ப்பு ஒளி – பிராண ஒளியை.

13. வேற்றுணவு – வேறு உணவுகள்.

15. பிராணனை உண்டவர் சிலரே.

16. அறிவியல் ஆய்வு – விஞ்ஞான ஆராய்ச்சி.

17. மன்பதை – மக்கள் கூட்டம்.

*பண்ட நெருக்கே அண்டுங் காலம்*
*உற்றுள துனக்குச் சொற்றல் வேண்டுமோ!*
*உன்னிடம் பிறக்கும் இன்ப உயிர்ப்பொளி*
*அன்புடன் பலரும் அருந்தி வாழச்*
*செய்யும் நிலைமை பையவே அணுகும்;*
*ஞாயிறு! வாழ்க மாயிரு ஞாலம்*
*காக்க! காக்கப் பூக்க அருளே.*

---

18. பண்ட நெருக்கே – பண்டங்களின் நெருக்கடியே.

19. உற்றுள்ளது; (அதை) உனக்குச் சொல்லலும் வேண்டுமோ?

21. அருந்தி – உண்டு.

22. பையவே – மெல்லவே.

# 6. பிள்ளைப் பேறு

காதலும் குழவியும்

*பெரிது பெரிது பிள்ளைப் பேறு*
*பிள்ளைப் பேற்றால் உள்ளம் வளரும்*
*உலகம் வளரும் உணர்வும் வளரும்;*
*இருவரை ஒருவர் ஆக்கிய காதல்*
*பிள்ளை ஆகும் 'கள்ளம்' காண்க*
*அன்புக் காதல் இன்பக் குழவியாம்;*

தியாகம்

*குழலும் யாழும் அமிழ்தும் கலந்து*
*குழைந்தே ஒழுகும் மழலை பருகும்*
*செவிகள் செவிகள்; தவழ்தல் காணும்*
*கண்கள் கண்கள்; கண்ணெனக் குழவியைப்*
*பெற்றவர் வளர்ப்பர் உற்ற அவர்நலம்*
*அற்றுப் போகும் பற்றும் அவரைத்*
*தொண்டும் தியாகமும் பண்பொப் புரவும்;*

வளர்ப்பு

*தடிந்தும் கடிந்தும் அடித்தும் வளர்க்கும்*
*மகவு நோயுறும்; அகவை குன்றும்;*
*தீய குணஞ்செறி தாயின் வளர்ப்பால்*
*சேயும் தீயதாம் தேயும் மூளையும்;*
*ஒருதாய் சினந்து மறுமா தோடு*
*சண்டை யிட்டனள் அண்டையில் குழந்தை*
*அழுதலைக் கண்டே அணைத்துப் பாலை*
*உண்ண விட்டனள் உள்ளனல் கொதிக்க*
*இன்பக் குழவி எங்கே எங்கே?*
*உள்ளனல் கொதிப்பு வெள்ளைப் பாலை*

---

**11–13.** பெற்றவர், பிள்ளையை வளர்க்க வளர்க்க அவர்தம் தன்னலம் படிப்படியே அற்றுப் போகும். தொண்டும் தியாகமும் பண்பும் ஒப்புரவும் அவரைப் பற்றும்.

**15.** அகவை – வயது.

**18–25.** இஃது உண்மை வரலாறு; அமெரிக்காவில் ஓரிடத்தில் நிகழ்ந்தது.

*ஆலம் ஆக்கி அலைத்தது குழவியைப்*
*பூரணர் கூறிய காரணம் இதுவே;*
*அன்பு நெஞ்ச இன்பத் தாயின்*
*குழவி வளரும் அழகுடன் நாளும்*
*மகிழ்வும் பொங்கும் வயதும் பொங்கும்*
*பெரிது பெரிது பிள்ளைப் பேறே;*
*பிள்ளைப் பேறு நல்ல வளர்ப்பில்*
*என்று உணர்க நன்று நடக்க*
*அகிம்சை என்னும் அருளற மாண்பும்*
*மிகுபொருள் விரும்பா மேன்மைத் தகுதியும்*
*குழந்தை நெஞ்சில் நுழைந்து படிய*
*வளர்த்தல் இனிதே! வளர்த்தல் இனிதே!*

25. பூரணர் – மருத்துவ நிபுணர்.

# 7. மனிதன்

*மனிதன் எவனோ? மனிதன் எவனோ?*
*'விலங்கி னின்றும் விலகி வந்தவன்*
*மனிதன்' என்னும் தனிவிஞ் ஞானம்;*

நாடு

*நரிக்கண் நரிமை சரித்தல் உண்டு*
*நாயில் நாய்மைக் கோயில் உண்டு*
*புலியுள் புலிமை மலிதல் உண்டு*
*மனித னிடத்திலோ பலவிதம் உண்டு;*
*நரியும் நாயும் புலியும்* ***தெய்வமும்***
*கூடி மருவும் காடு - மனிதன்;*

விலங்கியல்பு

*ஐந்து பாவ மைந்தன் அவனே*
*அரசை நாட்டிய முரசன் அவனே*
*சட்டம் கோலும் துட்டன் அவனே*
*சண்டை பெருக்கும் மிண்டன் அவனே*
*குழப்பம் நிகழ்த்தும் சழக்கன் அவனே*
*இரக்கம் கெடுக்கும் அரக்கன் அவனே*
*விலங்கி னின்றும் வெளியே வந்தும்*
*விலங்கை மனிதன் விலக்க வில்லை;*
*என்னே கொடுமை! என்னே கொடுமை!*

தெய்வ இயல்பு

*தெய்வம் மனிதனுள் எய்தியும் உள்ளது*
*அந்த உள்ளம் உந்தும் நலன்களைக்*
*கல்வி பயிலும் செல்வன் அவனே*
*கருணை நினைக்கும் அருளன் அவனே*
*அறத்தை ஓம்பும் திறத்தன் அவனே*

---

4. சரித்தல் – வசித்தல்; இயங்கல்.

9. மருவும் – கலக்கும்

13. மிண்டன் – அறிவில்லாதவன்; திண்ணன்; தடியன்.

14. சழக்கன் – தீயவன்.

*ஆலயம் கட்டும் சீலன் அவனே*
*பூசை செய்யும் நேசன் அவனே*
*உயிரெல்லாம் ஒன்றென உரைப்பவன் அவனே*
*பொதுமை பேசும் புதியன் அவனே*
*திருத்தம் செய்யும் கருத்தன் அவனே;*
*இருதலை நெஞ்சில் இருக்கும் மனிதன்*
*ஒருமை பெறினே உரிமை யுறுமே;*

என்ன வேண்டும்?

*என்ன வேண்டும்? என்ன வேண்டும்?*
*குருகுல கல்வி பெருகல் வேண்டும்*
*காதல் மணமே ஆதல் வேண்டும்*
*பழியில் தொழிலில் செழுமை வேண்டும்*
*வாழ்வை ஒழுங்கு சூழ்தல் வேண்டும்;*
*புறஒழுங் கொன்றால் இறையொளி ராதே*
*அகமும் ஒழுங்கில் புகுதல் வேண்டும்*
*இறையொளிக் காட்சி நெறிபுல னாகும்;*
*சடத்தை மட்டும் கடித்துக் கிடப்பவன்*
*மனிதன் ஆகான்; புனிதன் ஆகான்;*
*சடத்தைக் கலந்து கடந்த கடவுளை*
*நாடக வாழ்விடை நாடிடம் வேண்டும்;*

புரட்சி எது?

*சடத்தைக் கடந்த கடவுளை உணர்தல்*
*புரட்சி பெரிய அறிவுப் புரட்சி;*
*அருகன் ஆற்றிய அருளறப் புரட்சியைப்*
*புத்தன் புரிந்த உத்தமப் புரட்சியை*
*ஏசு நிகழ்த்திய நேசப் புரட்சியைச்*
*சங்கரர் அறிவுத் துங்கப் புரட்சியை*
*ஆய்ந்து பார்க்க; ஓய்ந்து பார்க்க;*
*சரித்திரம் கூறும் இரத்தப் புரட்சிகள்*
*அல்லல் விளைக்கும்; தொல்லை பெருக்கும்;*
*கொல்லல் பரப்பும்; நல்லன அல்ல;*

---

**29.** இருதலை நெஞ்சில் – விலங்கியல்பும் தெய்வ இயல்பும் பொருந்திய நெஞ்சினில்.

**30.** ஒருமை பெறினே – விலங்கியல்பு மாய்ந்து தெய்வ இயல்பு ஒன்றையே பெற்றால்.

**41.** சடத்தைக் கலந்தும் கடந்தும் நிற்பது கடவுள் இயல்பென்க.

**45.** அருளறப் புரட்சியை – அஹிம்சா தர்மப் புரட்சியை.

**48.** துங்கப் புரட்சியை – பரிசுத்தமான புரட்சியை.

குறிக்கோள்

*மனித வாழ்க்கையின் இனிய குறிக்கோள்,*
*மாயையில் வாழ்ந்து மாயையில் வளர்ந்து*
*மாயையை ஆய்ந்து மாயையைக் கடந்தே*
*எல்லை யில்லா நல்லதைக் காண்டல்;*
*இதுவே வீர* ***அறிவுப் புரட்சி***
*இந்நிலை மனிதனை என்ன செய்யும்?*
*'இன்பம் வருங்கால் இருங்களி எய்தலும்*
*துன்பம் வருங்கால் துயருற் றழுதலும்'*
*அவன்முன் சூநியம் ஆகி விடுமே;*
*இன்பமும் துன்பமும் அன்பிறைச் சாயல்*
*என்ன விளங்கும்; பன்மை மாயும்;*
*'அவனை யன்றி அணுவும் அசையா'*
*தென்ற மொழியுளம் நன்கு தெரியும்;*
*மாயா உலகம் மாண்டு போச்சே*
*சித்த விகாரம் செத்துப் போச்சே*
*சிவமே எங்கும் திகழ லாச்சே*
*அறிவுப் புரட்சியின் பெருமை என்னே!*
*பயில்க அதனைப் பயில எழுக*
*எழுக எழுக எழுக மகனே!*

---

**54.** மாயையில் – மாயை என்னும் சடத்தில்.

**56.** நல்லதை – கடவுளை; 'நன்றுடையானைத் தீயதில்லானை' – ஞானசம்பந்தர்.

**59–61.** இன்ப துன்ப விளைவுகளெல்லாம் சூநியமாகும் என்றபடி.

**62.** அன்பிறைச்சாயல் – அன்பாகிய இறைவனுடைய சாயல்; 'மாயையாற் கலங்கி வருந்திய போதும் வள்ளலுன் றன்னையே மதித்துன், சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால் தலைவவேறெண்ணிய துண்டோ, தூயபொற் பாதம் அறியநான் அறியேன் துயரினிச் சிறிதுமிங் காற்றேன், நாயகா எனது மயக்கெலாந் தவிர்த்தே நன்றருள் புரிவதுன் கடனே'
**– அருட்பா.**

**63.** பன்மை – மாயா விகாரப் பன்மைகள்.

**64.** 'அவனன்றி ஓரணுவும் அசையாது.'

# 8. மலை

*மலையே! நீதான் சிலையோ கலையோ!*
*மோனச் சிலையாய் வானக் கலைகளைக்*
*காட்டல் உனது நாட்டம் போலும்!*

கலைகள்

*மென்மைத் தென்றலும் வன்மை வாடையும்*
*இறங்கிச் சுழன்றே உறங்கும் முகிலும்*
*பொன்மணி கொழிக்கும் மின்னல் அருவியும்*
*தண்மை சொரியும் வண்மைக் காடும்*
*இளமை பொழியும் வளமைப் பொழிலும்*
*அரும்பு மலரும் விரும்பு கனியும்*
*மேயும் மீனும் பாயும் தவளையும்*

*நந்தும் நண்டும் மந்த ஆமையும்*
*ஓடும் பாம்பும் தேடும் கீரியும்*
*ஊதும் வண்டும் ஓதும் கிளியும்*
*கூடும் புறவும் நாடும் பூவையும்*
*பாடும் குயிலும் ஆடும் மயிலும்*
*இருண்ட பன்றியும் மருண்ட மானும்*
*ஒதுங்கும் புலியும் பதுங்கும் கரடியும்*
*பிடியுடன் அன்பில் நடக்கும் களிறும்*
*வாலுடைக் குரங்கும் வாலில் குரங்கும்*
*இன்ன பிறவும் உன்றன் கலைகள்;*

மக்கள்

*மைந்தரை முதல்முதல் தந்ததும் நீயே*
*உன்பால் வாழ்ந்தனர் உன்பால் வளர்ந்தனர்*
*பண்புகள் கண்டனர் மண்ணில் பரவினர்;*
*பரவிப் பரவிப் பரவினும் உன்னை*

11. நந்தும் – நத்தையும்.

14. புறவும் – புறாவும்.

18. பிடியுடன் – பெண்யானையுடன், களிறும் – ஆண்யானையும்.

*மறப்பதும் இல்லை - துறப்பதும் இல்லை;*
*நோன்பில் விழவில் ஓய்வில் உன்னிடை*
*வருவர் போவர் பருகுவர் அமிழ்தம்;*
*சீல மருத்துவர் மூலிகை தேடுவர்*
*விண்ணை நோக்கி எண்ணுவர் கணிதர்*
*நல்லிசை பயில வல்லவர் செல்வர்*
*காவியர் மேவி ஓவியம் ஆவர்*
*ஓவியர் ஏகிக் காவியம் ஆவர்*
*உடம்பினை ஓம்பும் கடன்களைக் காண்பர்*
*அலையும் நெஞ்சம் நிலையுறச் சூழ்வர்*
*சித்தர் யோகர் பித்தர் தங்குவர்*
*பலதிற அறிஞர் நிலைகளை ஆய்வர்;*

பெருமை

*உமையவள் அருகன் அமைதிப் புத்தன்*
*கிறித்து மகம்மது அறத்து வண்மையர்*
*உன்னை அடைந்ததை இந்நிலம் அறியும்;*
*உன்னை நினைந்தால் மன்னும் மன்னும்*
*பொறுமை அமைதி அருந்தவம் தியானம்*
*உள்ளம் உயரும் வள்ளுவம் போலக்*
*குணமலை யாகத் துணையும் வருமே;*
*மண்ணின் றெழுந்து விண்ணில் உயர்ந்தனை*
*உயர்வை உன்பால் உஞற்றினர் யாரே!*
*அமைதியை உன்பால் அமைத்தவர் யாரே!*
*பொறுமையை உன்பால் பொருத்தினர் யாரே!*
*சாந்தியை உன்பால் சாத்தினர் யாரே!*
*வளர்ச்சியை உன்பால் வகுத்தவர் யாரே!*
*அருமை மலையே! உரிமை மலையே!*
*உன்றன் பெருமையை என்னென் றுரைப்பது?*
*நிலநூல் நீயே சலநூல் நீயே*
*மரநூல் நீயே மாநூல் நீயே*

26. விழவில் – திருவிழாக்களில்.
37. உமையவள் தவங்கிடந்ததைக் 'கந்த புராணம்' முதலிய நூல்களிற் பார்க்க.
40. மன்னும் – நிலைபெறும்.
42. வள்ளுவம் – வள்ளுவர் கொள்கை.
45. உஞற்றினர் – செய்தவர்.
52. சலநூல் – நீர்நூல்.
53. மரநூல் – தாவரநூல். மாநூல் – விலங்குநூல்.
54. உளநூல் – மனோதத்துவநூல்.

*உளநூல் நீயே உயிர் நூல் நீயே*
*வளர்நூல் நீயே வளநூல் நீயே*
*பொறைநூல் நீயே பிறநூல் நீயே*
*எல்லாம் நீயே எல்லாம் நீயே*
*உலகம் உய்ய இலகு கலைநீ*
*வாழி வாழி வாழி இனிதே!*

**சாந்தி! சாந்தி!**

*மீன்கடை நகரில் ஏன்வதை கின்றீர்?*
*பழைய மலையை, விழையும் சார்பை*
*அடைக அடைக விடுக நரகை*
*கொலைவதை நீங்க மலை, மருந் தாகும்;*
*கண்ணால் நோக்கிக் கருத்தால் நோக்கிப்*
*பண்ணால் பாடி எண்ணால் எண்ணி*
*மலையை மனத்தில் நிலைபெறச் செய்க;*
*ஞானம் பெருக்கும் மோனம் பயில்க*
*மலையாய் வளர்க கலையாய் வளர்க;*
*வாழ்க பொதிகை வாழ்க பொதினி*
*வாழ்க திருமலை வாழ்க கயிலை*
*வாழ்க இமயம் வாழ்க மலைக்குலம்*
*வாழ்க சாந்த மலைகள் வாழ்க*
*உலகம் சாந்த மலையாய் வாழ்க.*

---

**56.** பொறை – பொறுமை.

**61.** விழையும் சார்பை – விரும்பத்தக்க (மலையின்) சார்பு நிலங்களை.

**62.** நரகை – நரகத்தை யொத்த நகரத்தை.

**69.** பொதினி – பழனி. (பழநி என்பது பிற்கால ஆட்சி.)

**70.** திருமலை – திருவேங்கடமலை (திருப்பதி).

# 9. மனம்

உலகப் பேச்சு

*மனத்தின் இயலை நினைத்தவர் கூறுவர்*
*அதனை ஆய்தல் நிதநிதம் நடக்கும்*
*பலவிதக் கருத்துகள் உலவல் வெளிப்படை;*
*மாயை குரங்கு பேயென மனத்தை*
*ஏசி இழித்துப் பேசு வோருளர்*
*மனமே எண்ணம் மனமே கரணம்*
*மனமே உடலம் மனமே உலகம்*
*மனமே எல்லாம் எனமொழி வோருளர்*
*இன்னும் பலபடப் பன்னு வோருளர்;*

இரு மனைவியர்

*ஒருவன் ஒருத்தி திருமணம் செய்தனர்*
*பன்னாள் கழிந்தபின் அன்னா ரிடையே*
*அன்பு சாய்ந்தது துன்பு மேய்ந்தது*
*தலைவன் தள்ளினன் தலைவியை வெறுத்தே*
*மறுமணஞ் செய்து திருவுடன் வாழ்ந்தனன்*
*ஐந்து திங்களில் வெந்தது சிந்தை*
*தலைவன் முதன்மைத் தலைவியை அழைத்தனன்*
*என்னே மனத்தின் தன்மை என்னே!*

நட்பு?

*பண்பு மிக்க நண்பர் இருவர்*
*மலர்மணம் என்ன உலகில் வதிந்தனர்*
*பணத்துப் பேய்மை பிணக்கு விளைத்தது*
*உட்பகை மூண்டது நட்புக் குலைந்தது*
*அவனைக் கொல்ல இவன்மனம் நினைந்தது*
*இவனைக் கொல்ல அவன்மனம் நினைந்தது*
*ஆண்டுகள் சென்றன; தாண்டவ புரியில்*
*ஒருதெரு வழியே இருவரும் நடந்தனர்*

20. பணப்பேய்.

*கண்கள் கண்டன - பண்டை நட்பால்*
*அழுகை பெருகத் தழுவிக் கொண்டனர்*
*மனத்தின் இயலை அளந்து பார்க்க;*

தண்டனை

*இன்று நட்பு நாளை பகைமை*
*இன்று பகைமை நாளை நட்பே*
*எங்கே பகைமை? எங்கே நட்பு?*
*முட்டுக் குத்து வெட்டுகள் ஏனோ?*
*தூக்குத் தண்டனைப் போக்குக் கெட்டது*
*சீற்றம், கொலையை ஆற்றி விட்டது*
*கொலைஞன் மனத்தை நலமுறச் செய்யலாம்*
*தூக்கி லிட்டால் வாய்ப்புக் கிட்டுமோ?*
*காட்டு மிராண்டி நாட்களில் தோன்றிய*
*தண்டனை இந்நாள் கொள்வது தவறே;*
*ஒறுக்கும் நெஞ்சம் பெருக்கும் குற்றம்*
*அச்சிறு நெஞ்சின் உச்சி இடிந்தால்*
*குற்றங் குறைகள் அற்றுப் போகும்;*
*அகத்து நிலையை முகக்கலை காட்டும்*
*ஒருவ னிடத்தே ஒருநாள் எழுப்பும்*
*அகங்கள் ஆயிரம் முகங்கள் ஆயிரம்;*
*விகார நெஞ்சம், விகார முகத்தை*
*விகார வாழ்வை விகார உலகைப்*
*படைக்கும்; அதனைத் தடுக்கப் பயிலும்*
*கல்வி பெரிதே; செல்வம் அதுவே;*
*நல்லன செய்தலும் அல்லன செய்தலும்*
*உளமே என்று தெளிதல் அறிவு;*

சார்பு

*மனவியல் சார்ந்த வண்ண மாகம்;*
*பன்றி யிடத்தவன் பன்றி இயல்பை*
*ஆவி னிடத்தவன் ஆவின் குணத்தை*
*மூர்க்கக் கூட்டால் மூர்க்கத் தன்மையை*
*நல்ல சேர்க்கையால் நல்ல பண்பை*
*அடைதல் இயற்கை நடையில் உணர்க;*

---

34. ஆற்றி – செய்து.

39. ஒறுக்கும் – தண்டிக்கும்.

*'சேரிட மறிந்து சே'ரெனக் கிழவி*
*ஆழ்ந்து மொழிந்ததை வாழ்வே ஆக்குக;*

**கவிகள்**

*மாதவி மீதும் தீதெணாக் கண்ணகி*
*உள்ளம் மதுரையில் அள்ளிய தனலை;*
*துறவு பூண்ட அறமகள் உள்ளம்*
*உதய குமரன் வதையில் கசிந்தது;*
*சீவகன் மனத்தை மேவித் தேர்க*
*மனைவியர் பலரை மணந்த மனமே*
*அவரைத் துறந்து தவநிலை அடைந்தது;*
*சேக்கிழா ரருளிய பாக்கள் மனநூல்*
*வேறு நூலெனக் கூறுவோர் கூறுக;*
*பரத்தையை அணைந்த வரத்து நீல*
*கண்டர் நெஞ்சம் பெண்டிரை மறந்தது;*
*இயற்பகை சிந்தை இனியளை ஈந்தது*
*செயலை உறவோர் சிந்தை கடிந்தது;*
*முத்தன் சித்தம் குத்திய தன்பரை*
*இவர்தம் சித்தம் இரங்கிய தவன்பால்;*
*எறியைக் கொல்ல எழுந்த மன்னவன்*
*வன்ம உளம்பின் வணங்கிய தன்றே;*
*மற்றவர் மனங்களைக் கற்றவர் ஆய்க*
*திறங்க ளெல்லாம் அறஞ்செய லாகும்;*
*சீதையைக் கெடுக்கப் போதை கொண்டனன்*
*இராவணக் கொடியன் எனுமொரு கவிமனம்;*
*அன்னையின் அடியில் சென்னியைத் தாழ்த்தி*
*வாழ்த்தினன் என்னும் மற்றொரு கவிமனம்;*
*வாலியைத் தம்பியைச் சீல அநுமனைக்*
*கலைநவில் குரங்கெனச் சொலுமொரு கவிமனம்*
*இராவணன் அரக்கன் எனுமொரு கவிமனம்*

---

57. கிழவி – ஔவை.

62. உதயகுமரன் வரலாற்றை 'மணிமேகலை'யிற் பார்க்க.

63. சீவகன், 'சிந்தாமணி' என்னும் பெருங்காவியத் தலைவன்.

72. முத்தன் – முத்தநாதன். அன்பரை – மெய்ப்பொரு நாயனாரை.

74. எறியை – எறிபத்த நாயனாரை.

76. மற்றவர் – மற்ற நாயன்மார்களின்.

80. அன்னையின் – சீதையின்.

81. (இராவணன்) வாழ்த்தினன்.

*விஞ்சையர் இவரெனும் வேறொரு கவிமனம்;*
*திரௌபதை ஐவர் தேவி என்றும்*
*அருச்சுனன் ஒருவன் அன்பே என்றும்*
*கவிகள் மனங்கள் கருதிய துண்டு;*
*கவிகள் மனத்தியல் புவிகளைப் படைத்தலால்*
*அலைகள் அடங்கும் அமைதி நிலவும்;*

தவமனம்

*பழமை விழைந்தே உழுமனம் உண்டு*
*புதுமைப் பொருளை விதைமனம் உண்டே*
*அதையும் இதையும் துதிமனம் உண்டே*
*ஒன்றைப் போற்றி ஒன்றைத் தூற்றிப்*
*பழகிப் பழகி உழல்மனம் உண்டே*
*இவையெலாங் கடந்த தவமனம் உண்டு;*
*தவமனம் பெறவே புவியில் பிறந்தனம்*
*பிறவி நோக்கை நிறைசெயல் அறமே;*

அகவிளக்கம்

*மேலை நாட்டில் கால மனநூல்*
*பெருகி வருதல் கருதல் நல்லது;*
*மனநூல் ஒவ்வொரு மனையே யாக*
*உழைத்தல் வேண்டும்; உழைக்க உழைக்கப்*
*புறமனம் ஒடுங்கும்; அகமனம் மலரும்;*
*மேலும் அகமனம் சால ஒளிர,*
*அதிகப் பொருளில் மதிநுழை யாத*
*அறவழி நின்று முறைமுறை வாழ்க*
*பிறர்க்கென வாழும் திறத்தரைப் போற்றுக*
*நீலம் பவளம் கோலம் எண்ணுக*
*நிறைந்த ஏரியைப் பரந்த கடலை*
*உயர்ந்த மலையை முயன்று நோக்குக*
*அங்கண் விசும்பில் திங்களை உள்ளுக*
*சிவந்த பரிதியை உவந்து முன்னுக*
*எங்கும் எல்லாம் தங்கிக் கடந்து*

---

85. விஞ்சையர் – வித்தியாதரர் (ஜைன இராமாயணம் பார்க்க).

87. ஜைன பாரதம் பார்க்க.

91. விழைந்தே – விருமபியே.

96. தவமனமும் உண்டு.

111. அம் கண் விசும்பில் – அழகிய இடமகன்ற ஆகாயத்தில். திங்களை – சந்திரனை.

112. பரிதியை – சூரியனை. முன்னுக – ஆழ்ந்து எண்ணுக.

*நிற்கும் ஒன்றை நினைக நாளும்;*
*சீற்றம் இகல்பகை தூற்றல் வெற்றுரை*
*களவு காமம் கள்பொய் கொலையும்*
*மற்றக் குறைகளும் அற்றுப் போகும்;*
*இந்நிலை எய்திய செந்தண் மனமே*
*வாழி வாழி நீ! வாழி வாழியே!*

---

**114.** ஒன்றை – ஒருபொருளை; கடவுளை.

**115.** சீற்றம் – கோபம். இகல் – மாறுபாடு. தூற்றல் – பிறர் குறைகளைத்தூற்றுதல்.

# 10. வாழ்க்கை

*உலக வியப்புகள் பலபல உண்டு*
*சிறந்தது வாழ்க்கை; பிறந்த தென்றோ?*
*வாழ்க்கைத் தோற்றம் ஆழ்ந்து பார்க்க*
*உடம்புயிர் ஒன்றி நடப்பதை ஆய்க*
*வழியைக் காணும் வழிகள் திறக்கும்;*

**போரோ! சீரோ!**

*வாழ்க்கை எதுவோ? வாழ்க்கை எதுவோ?*
*போரோ வாழ்க்கை? சீரோ வாழ்க்கை?*
*போரெனப் புகலும் பூரியர் உளரே*
*சீரெனச் செப்பும் நீரரும் உளரே*
*இரண்டும் விரவித் திரளும் என்றும்*
*கூறுநர் உளரே; தேறுக உண்மை;*

ஆழ்த்தல்

*ஒருயிர் மற்ற ஒருயிர் விழுங்கல்*
*இயல்பெனக் கொண்டு செயலில் இறங்கல்*
*தவறு தவறு தவறு தவறே;*
*ஒருவனை வருத்தி ஒருவன் ஒறுத்தல்*
*ஒருவன் பொருளை ஒருவன் கவர்தல்*
*ஓரினம் ஓரினம் போரிட் டுழலல்*
*சூழ்பதி உழைப்பைப் பாழ்நகர் பறித்தல்*
*நாட்டை நாடு வாட்டி வதைத்தல்*
*பட்டினி மரணம் முட்ட விடுதல்*

---

2. வியப்புகளுள் சிறந்தது வாழ்க்கை. அவ்வாழ்க்கை பிறந்தது என்றோ?
8. பூரியர் – கீழ்மக்கள்.
9. நீரரும் – நல்ல குணமுடையவரும்.
10. விரவி – கலந்து.
11. தேறுக – தெளிக.
15. ஒறுத்தல் – தண்டித்தல்.
18. சூழ்பதி – சூழ்ந்துள்ள கிராமங்களின்

*முதலிய வினைகள் மதியழி போரில்*
*வாழ்க்கையை வீழ்த்தி ஆழ்த்துத லாகும்;*

### அழகு

*முன்னாள் வாழ்க்கை எல்லாம் அறமே*
*ஒவ்வொரு கூறும் செவ்விய அறமே*
*உள்ளும் அறமே புறமும் அறமே*
*அறமே வாழ்க்கையாய் முறைமுறை வளர்ந்தது*
*சூழ்ச்சி போட்டி ஆட்சியில் இல்லை*
*உறவோர் தோன்றினர் அறவோர் தோன்றினர்*
*அலைகள் எழும்பாக் கலைகள் தோன்றின*
*சாந்தம் சிந்தையைச் சார்ந்து நின்றது*
*தேவை அளவை மேவிய துள்ளம்*
*தன்னுயிர் போல மன்னுயிர் தம்மை*
*விரும்பிய வாழ்க்கை அரும்பிய தந்நாள்*
*பழைய வாழ்க்கையின் அழகை எண்ணுக;*

### வாணிபம்

*அந்த வாழ்க்கையில் இந்த நாளினில்*
*நுழைந்தது வாணிபம் கழிந்த தறவே;*
*வாணிபம் கல்வியில் வாணிபம் தொழிலில்*
*வாணிபம் உணவில் வாணிபம் உடையில்*
*வாணிபம் மணத்தில் வாணிபம் பிள்ளையில்*
*வாணிபம் வீட்டில் வாணிபம் கூட்டில்*
*வாணிபம் நாட்டில் வாணிபம் காட்டில்*
*வாணிபம் மருந்தில் வாணிபம் வழக்கில்*
*வாணிபம் எழுத்தில் வாணிபம் பேச்சில்*
*எல்லாம் வாணிபம்! எங்கும் வாணிபம்!*
*வாணிப வண்ணம் வாழ்க்கை வளர்ந்தது!*
*வாணிப வாழ்க்கை கோணல் செய்தல்*
*இயற்கை யென்றே இயம்பல் வேண்டுமோ?*
*அல்லல் தாட்களின் தொல்லைகள் அதிகம்*
*கொலையும் கொள்ளையும் கலைகள் ஆயின*
*தேவை அளவை மீறிய துள்ளம்*
*நேயம் வாழ்க்கையில் போயது போயது*
*உலகம் வழங்கல் கலகக் காட்சியே;*

---

21. வினைகள் – செயல்கள்.

27. சூழ்ச்சி போட்டி முதலிய சிறுமைகள்.

29. அலைகள் – தீய எண்ணங்களாகிய அலைகள்.

48. தாட்களின் – பத்திரிகைகளின்.

திருத்தம்

*திருத்தம் நிகழ்த்தும் கருத்து வேண்டும்
என்ன செய்வது? என்ன செய்வது?
அறிவுப் புரட்சி அறவழிச் செய்க
தரும நெறியே கருமம் ஆற்றுக
வாணிப வாழ்க்கையின் கோணல் நீங்கும்
பொருந்திய போக்கில் திருந்தும் உலகம்
நல்ல வாழ்க்கையை நல்கல் உறுதி;
அருளறம் பொலியும் அந்நல் வாழ்க்கையில்
அருளற வாழ்க்கையில் பொருளறம் பூக்கும்
சாந்தம் சிந்தை ஏந்தி நிற்கும்
தேவை அளவில் மேவும் நெஞ்சம்
எந்த உயிரையும் சொந்த உயிராய்க்
கருதும் வாழ்க்கை பெருகும் பெருகும்;
இதுவே வாழ்க்கைக் குறிக்கோள் இதுவே;*

தேவை

*வறுமை செல்வம் இரண்டும் அற்ற
வாழ்க்கை தேவை; வாழ்த்துக அதனை;
இயற்கைப் பள்ளியில் பயிற்சி பெறுக
செயற்கை, தானே அயர்ச்சி அடையும்;
வழுக்கல் அழுக்குகள் கழிய நாளும்
ஓவியம் உள்கி ஆவியில் பதிக்க
அலையும் கரணம் நிலைபெற் றிருக்கும்
அகத்தில் ஒழுங்கு புகுந்து படியும்;
உள்ளம் உருக்கும் நல்லிசைப் பாக்களை
ஓதுக ஓதுக பொருளுணர்ந் தோதுக
கன்மனம் குழைந்து நன்மனம் ஆகும்;
தழைக்கும் வாழ்க்கை உழைக்கப் பிறர்க்கு;
வாழ்க்கை இனிதாய் வளர்ந்தே ஓங்கும்;
சீரிடை வாழ்க்கை நேரிய முறையில்
வளர்க இனிதே; வளர்க இனிதே.*

---

**56.** கருமம் – காரியங்கள்; செயல்கள்.

**59.** (அவ்வுலகம்) 'நல்ல வாழ்க்கையை... நல்கல் அளித்தல்.

**60.** அருளறம் – அஹிம்சா தர்மம்.

**61.** பொருளறம் – மிகுபொருள் விரும்பாத தர்மம்

**72.** உள்கி – ஆழ நினைந்து

**73.** கரணம் – மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

**78.** பிறர்க்கு உழைக்க வாழ்க்கை தழைக்கும்.

# 11. ஒழுக்கம்

*ஒழுக்கம் உயிரினும் விழுப்பம் உடையதே!*
*சொல்லோ பொருளோ நல்ல ஒழுக்கம்?*
*எழுத்துச் சொல்லில் ஒழுக்கம் பழுக்குமோ?*
*வாழ்க்கையில் ஒழுக்கம் பழுத்தல் வேண்டும்*
*மொழிகள் விடுக்க; வழிகள் காண்க;*

திருடர் எல்லை

*ஒழுக்கம் பேசும் வழக்குப் புலவோர்*
*திருடர் எல்லையை வருடிச் சேர்ந்தனர்*
*காரணங் கேட்டனர் பூரணமாக;*
*'பட்டினி, திருட்டில் நெட்டிய தெங்களை*
*உணவு மில்லை பணமு மில்லை*
*தொழிலு மில்லை வழியு மில்லை*
*என்ன செய்குவம்! என்ன செய்குவம்!*
*உணவுந் தொழிலும் பணமும் கிட்டின்*
*திருட்டை இன்றே உருட்டி ஓட்டுவம்'*
*என்ற விடையைச் சென்றவர் பெற்றனர்;*

ஈன விடுதிகள்

*தொடர்ந்து பின்னே நடந்து புலவோர்*
*மானம் விற்கும் ஈன விடுதியுள்*
*புகுந்து பார்த்தனர் புலம்பல் கேட்டது;*
*'இந்நிலை எய்தற் கென்ன காரணம்?'*
*என்று வினவினர்; ஒன்றிப் பெண்கள்*
*அழுங்குர லோடு விழிநீர் பெருகச்,*
*'சோறு கூறை பேறேயில்லை*
*இழிந்த தொழிலில் நுழைந்து விட்டோம்*

1. 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் – உயிரினும் ஓம்பப் படும்' – குறள்.
5. மொழிகள் – வாய்ப் பேச்சுகளை.
7. வருடி – தடவித் தடவி.
20. ஒன்றி – ஒன்றுகூடி.
22. கூறை – உடை. பேறே – பாக்கியமே.

*சோறு கூறை பேறு கிடைப்பின்*
*இன்னே ஒதுக்குவம் இந்தத் தொழிலை'*
*என்ற பதில்கள் குன்றெனக் குவிந்தன;*

மூலம் வறுமை

*'இங்கே கொள்ளை அங்கே கொல்லல்*
*இங்கே பொய்ம்மை' என்று முழங்கல்*
*வீணே; மூலம் காண எழுக*
*மூலங் களைந்தால் சீலம் சிறக்கும்;*
*அருளற ஒழுக்கம் அருளிய பெரியன்*
*மிகுபொருள் விரும்பாத் தகுதியும் சொற்றனன்;*
*ஒருபால் செல்வம் மறுபால் வறுமை*
*உள்ள இடங்களில் நல்ல ஒழுக்கம்*
*நிலவல் அரிதே குலவல் அரிதே;*
*செல்வச் செருக்கும் அல்லல் வறுமையும்*
*வழுக்கல் நிகழ்த்தும்; ஒழுக்கம் கெடுக்கும்;*
*ஒழுக்கம் பொதுமை ஒழுங்கில் நிலைக்கும்;*
*அந்நிலை காணச் செந்நாப் புலவீர்!*
*முயல்க முயல்க; முயல்க நன்றே.*

---

25. இன்னே – இப்பொழுதே; இந்நொடியிலேயே.
31. பெரியன் – ஆதி அருகன்.
35. குலவல் – குலாவுதல்
38. பொருமை – பொதுமை அறத்தில்

# 12. நட்பு

எது?

*நட்பே! உன்னை நட்பென் றழைத்தவர்*
*அன்பில் மூழ்கி அன்பே ஆனவர்;*
*உள்ளம் உள்ளம் நள்ளல் நட்பே;*
*எந்த மொழியிலும் இந்தப் பொருளே;*
*நட்புச் சிறப்பை நண்பர் அறிவரோ?*
*நட்பே அறியுமோ? உட்புகுந் துணர்க;*

வள்ளுவர்

*செய்ய அரியது மெய்ம்மை நட்பெனத்*
*திருக்குறள் சொல்லும் கருத்தைத் தெளிக;*
*ஓரதி காரச் சீரில் நின்ற*
*வள்ளுவர் நட்பில் மாறிய தென்னை?*
*அகத்து நட்பே செகத்தை வளர்க்கும்*
*நாடக நட்பு வேடம் ஆகும்*
*கொடிது! கொடிது! பெரிதுங் கொடிதே!*

புன்மை நட்பு

*புன்மை நட்பு நன்மைய தாமோ?*
*தன்னலம் பெருக்கும் அன்பைச் சுருக்கும்*
*நடிக்கும், உடைக்கும், வடிக்கும் கண்ணீர்;*
*உற்ற வேளையில் பற்றே இன்றி*
*ஓடும் ஒதுங்கும் உயிர்க்குலை வைக்கும்*
*தீயினும் தீயது பேயினும் பேயது*
*நஞ்சினும் நஞ்சு நரகினும் நரகே;*

---

3. ஒருள்ளத்தை மற்றோர் உள்ளம் நள்ளல். (நட்டல் – நண்ணுதல் – அடைதல்)

7. ‘செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் – வினைக்கரிய யாவுள காப்பு’ – குறள்.

9–10. ஒவ்வொரு பொருள் பற்றி ஒவ்வோர் அதிகாரம் அருள்வது திருவள்ளுவர் வழக்கம். ஆனால், ‘நட்பு’ என்னும் பொருளில் மட்டும் திருவள்ளுவர் தமது வழக்கத்தை மீறியது கருதற்பாலது. திருக்குறளிலுள்ள ‘நட்பைப்’ பற்றிய அதிகாரங்களை நோக்குக.

17. உற்ற வேளையில் – ஆபத்து நேர்ந்த வேளையில்.

18. உயிர்க்கு உலை வைக்கும்.

*'அற்பச் சேர்க்கை ஆபத் தாகும்'*
*என்னும் மொழியை உன்னி நடக்க;*

**நல்ல நட்பு**

*நல்ல நட்புச் செல்வ மாகும்*
*அழியாச் செல்வம் பழியாச் செல்வம்*
*உற்ற வேளையில் உறுதுணை செய்யும்*
*அளிக்கும் என்பை அளிக்கும் உயிரையும்*
*தாயினும் காக்கும், மாயினும் தொடரும்*
*நல்ல நட்பினும் நல்லதொன் றில்லை;*

**தெய்வ நெஞ்சு**

*தெய்வ நெஞ்சம் வெய்ய நட்பையும்*
*செய்ய தாக்கி உய்ய வைக்கும்;*
*தெய்வ நெஞ்சம் எய்தா மைந்தனை*
*வெய்ய நட்பு வேகவே செய்யும்;*
*செய்ய நட்பால் தெய்வ நெஞ்சம்*
*உறவே முயல்க உறுதி கொள்க;*

**கூட்டு நட்பு**

*தனித்தனி மாந்தர் இனித்த நட்பைக்*
*கூட்டுற வியக்கம் ஈட்டும் பொதுவில்;*
*பொதுமைத் தொழில்முறை புதுக்கும் நட்பால்*
*சாயுந் தனிமை; மாயுந் தன்னலம்;*
*கூட்டு நட்பால் ஆட்சி அமைந்து*
*வளருங் காலம் மலர்க விரைந்தே.*

---

21. 'அற்ப சகவாசம் பிராண சங்கடம்' என்பது பழமொழி.

30. செய்யதாக்கி – செம்மையதாக்கி.

## 13. நோன்பி

*‘உலகம் வாழ்க உலகம் வாழ்க’*
*என்று நலமே எண்ணும் நோன்பி,*
*நடப்பன் நடப்பன் நண்ணுவன் ஊரூர்*
*காலை மாலைக் கடன்களை முடிப்பன்;*
*போற்றும் ஒளியும் காற்றும் ஊற்றும்*
*உடலை ஓம்பித் திடமுறச் செய்யும்;*
*அறத்துக் கடவுள் அகத்தில் நிற்கும்;*
*பாலும் பழமும் சீல உணவாம்;*
*நண்பகல் கழியின் உண்ணான் ஒன்றும்*
*இரவில் ஒன்றும் ஏற்ப தில்லை*
*நோன்பு நாளில் நுகர்வே இல்லை;*
*அறப்பணி அவன்செய் சிறப்பு வேலை*
*அகமே புறமெனும் தகைமைச் சொல்லின்*
*பொருளாய் விளக்கும் திருவாழ் வுடையன்;*
*வாழ்க அவன்வழி வாழ்க வாழ்கவே!*

---

2. நோன்பி – விரதி
9. நண்பகல் – உச்சி வேளை.
11. நுகர்வே – சாப்பிடுதலே.

# 14. தவம்

பொய்கை

*வெயிலினும் வற்றாப் பொய்கை ஒன்றதில்*
*வெள்ளைத் தாமரைக் கள்ளை மாந்தி*
*மயங்கிக் கிடக்கும் வண்டுகள் உளறும்;*
*பளிங்கு மீன்கள் களங்கம் போக்கி*
*ஓடும் மறையும் கூடும் பிரியும்;*
*ஆனும் மானும் அருந்தும் தண்ணீர்;*
*பரிதி உமிழொளி பாம்பெனச் சுழலும்;*
*கலைமதி நிலவு கலங்களில் அலையும்;*
*வீசும் தென்றலில் வாசங் கமழும்;*
*ஏற்றப் பாட்டுக் காற்றில் உலவும்;*

ஆல்

*நுணல்கள் குதிக்கும் மணல்செறி கரையில்,*
*மரகதக் கற்கள் உருகி உருகிப்*
*பரந்து பாய்ந்து விரிந்தாற் போல*
*ஒருமரம் பொலியும்; உயர்ந்த ஆலது;*
*இயற்கைப் பசுங்குடை இறக்கிய நிழலில்,*
*குரங்குகள் கனியிடை உறங்கிக் கிடக்கும்*
*வழியே செல்வோர் வழிகள் வளரும்*
*வாழ இடமிலா ஏழைகள் இருப்பர்*
*அறவோர் முனிவர் துறவோர் தங்குவர்*
*ஆடு மாடுகள் தேடிச் சேரும்;*
*அந்தப்* ***பொய்கையும்*** *இந்தக்* ***குடையும்***
*வழியே சென்ற பழியில் நோன்பி*
*வள்ளல் நெஞ்சை அள்ளி அழைத்தன*

---

1. பொய்கை – குளம். 2. கள்ளை மாந்தி – தேனை உண்டு.

7. பரிதி – சூரியன்

8. மதி – சந்திரன்

11. நுணல்கள் – தவளைகள்

17. வழியே செல்வோர் தூங்குவர் என்றபடி.

*அவனும் நண்ணி அமர்ந்தனன் தவத்தில்;*

**துறவு**

*காற்றுண வன்றி வேற்றுண வின்றி*
*நாச்சுவை இன்றிப் பேச்சும் இன்றி*
*அசைவும் இன்றிக் கசிவும் இன்றி*
*ஒற்றைக் கலையுடை அன்றி வேறோர்*
*போர்வையும் இன்றி வேர்வையும் இன்றிக்*
*காலங் கழிக்கும் சீலத் தவமே;*
*குலையும் கூடு தலையை நாடும்;*
*உதிர்பழ இலைகள் அதிர்ச்சி செய்யா*
*குருவிகள் தோளில் மருவி நிற்கும்*
*அஞ்சா வண்ணம் அணில்கள் ஏறும்*
*காகம் கரையா வேகம் என்று*
*மந்திகள் சூழ்ந்து சிந்தையில் மூழ்கும்*
*உலவும் பாம்பு குலவும் மடியில்*
*சிலையாய் நிற்கும் அலையாத் தவமே;*

**கோலம்**

*பெற்றவர் வருவர் உற்றவர் வருவர்*
*கற்றவர் வருவர் நற்றவர் வருவர்*
*உள்ளூர் வெளியூர் உள்ளவர் வருவர்*
*வாயால் வாழ்த்துவர் கையால் தொழுவர்;*
*தவனச் சடையும் குவளைக் கண்ணும்*
*பவள வாயும் பசும்பொன் மேனியும்*
*கமலம் மலர்ந்த கையும் காலும்*
*அருள்நில வொழுக்கும் அறிவொளி மின்னும்*
*பதுமா சனத்தில் பதிந்த கோலமும்*
*ஐந்தையும் கண்ணில் முந்தச் செய்யும்*
*ஓவியம் ஆகி மேவும் நெஞ்சில்;*

25. காற்று உணவு அன்றி, வேறு உணவு இன்றி.......

31. கூடு – பறவைகளின் கூடுகள்

43. தவனச்சடை – செஞ்சடை. (தவனம் – நெருப்பு).

‘சிவனோ பெடாக்கும்........ பொன்னொளி மின்னும் தவனச்சடை.....’ – திருமூலர்.

46. அருள் நிலவு ஒழுக்கும்.

48. ஐந்தையும் – (பார்க்கின்றவர்களின்) ஐந்து புலன்களையும். ‘ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள’ என்பது சேக்கிழார் திருவாக்கு.

49. நெஞ்சில் – (பார்க்கின்றவர்கள்) நெஞ்சினில்.

மாண்பு

*தவத்தின் மாண்பைத் தவமே உணரும்;*
*நல்ல பிள்ளையை நல்கும் தவமே*
*கலைகளை உணர்த்தும் அலைவில் தவமே*
*ஆசையை அறுக்கும் நேசத் தவமே*
*அகத்து மாசை அகற்றும் தவமே*
*ஒழுங்கை வாழ்வில் வழங்கும் தவமே*
*அறநெறிக் காக்கம் அருளும் தவமே*
*புவனம் எங்கும் பொலிக தவமே.*

**56.** அறநெறிக்கு ஆக்கம்.

**57.** (அத்தகைய) தவமே புவனமெங்கும பொலிக.

# 15. சீர்திருத்தம்

வழுக்கல்

*இயற்கை வழியே இயங்கும் உலகம்*
*அவ்வழி நடத்தல் செவ்வை வாழ்வாம்*
*வழியை விடுத்தால் வழுக்கல் நேரும்;*
*வழுக்கல் இழுக்கை ஒழித்துத் திருத்தப்*
*பக்தர் வருவர் சித்தர் வருவர்*
*தத்துவர் வருவர் சித்தர் வருவர்*
*தத்துவர் வருவர் சத்தியர் வருவர்*
*கற்றவர் வருவர் நற்றவர் வருவர்*
*வலிய மூர்க்கர் வருதலும் உண்டு;*
*பொருந்திய முறையால் திருந்தும் உலகம்*
*மற்றது காற்றில் வற்றிப் போகும்;*

முறையிடல்

*ஒழுங்கு, பொருளில் நுழைந்து விட்டால்*
*பலபல பாவம் உலவா நெஞ்சில்;*
*குறைகள் நிகழின் முறையிடல் வேண்டும்*
*முறையிடும் பயிற்சி குறைக்கும் குற்றம்;*
*குறைகள் குற்றம் முறையிடல் வீரம்*
*பாவம் வெளியிடல் ஆவி வீரம்*
*வெளியிட அஞ்சும் எளியன் கோழை;*
*முறையிடல் முதிர முதிரப் பாவம்*
*நினைக்க அஞ்சும் நெஞ்சம் மலரும்;*
*பாவச் செயல்களை ஏவா ஆட்சி*
*அமைக்க முயலல் அறிவுக் கழகே;*

தியானமும் கருணையும்

*தியானம் வேண்டும் தியானம் வேண்டும்*
*அருள்வடிவான பொருளைத் தியானம்*
*செய்தல் நன்று; செய்தல் நன்று;*

---

10. மற்றது – பொருந்தாதது; இயற்கைக்கு அரண் செய்யாதது.

25. கருணையாகிய ஊற்றை

தியானம், கருணை ஊற்றைத் திறக்கும்
கருணை வெள்ளம் கரைக்கும் பாவம்;
எண்ணுக இமயம் எண்ணுக கங்கை
இமயம், தியான அமைதிக் கறிகுறி
கங்கை, கருணைத் துங்க அறிகுறி;
இமயத் தியானமும் கங்கைக் கருணையும்
உலகம் ஆக உழைத்தல் வேண்டும்
தடைகள் எல்லாம் உடைபடல் வேண்டும்;

தூறுகள்

உலகம் ஒருகுலம் ஆகும் நாளிது
புதுமையில் பொதுமை பூக்கும் நாளிது
இந்த நாளினில் எந்த நாளோ
படர்ந்த தூறுகள் அடியில் வாழ
எண்ணல் தவறவ் வெண்ணம் வீழ்க;

தெய்வப் பெண்

இயற்கையில் ஆண்பெண் இயங்கல் காட்சி
உயர்வு தாழ்வு பயந்த தெங்கே?
ஐயோ! உரிமைத் தெய்வப் பெண்ணை
நிறைகாப் பென்று சிறையில் வைத்தல்
அறிவோ அன்போ அருளோ என்னோ!
தாயின் சிறையால் சேயும் சிறையாம்
பின்னே எல்லாம் சிறையில் துன்னும்;
நிறையைக் காப்பது சிறையோ? வெட்கம்!
நிறையைக் காக்க நிறையே வல்லது;
தோலும் என்பும் காலுங் கையும்
மயிரும் பிறவும் மங்கை அல்ல;
பெண்மை, தாய்மை இறைமை கொண்ட
நுண்மை காண்டல் உண்மைத் தவமே;

இன்பக் காதல்

ஒருத்தி ஒருவன் கருத்துற வாழ்தல்
அன்பின் ஐந்திணை இன்பக் காதல்;

---

29. துங்க – பரிசுத்தமான

36. தூறுகள் – புதர்கள்

37. தவறு அவ்வெண்ணம்...............

41. நிறை – ஒழுககம் ; கற்பு.

52. கைக்கிளையும் (ஒருதலைக் காமமும்), பெருந்திணையும் (பொருந்தாக் காமமும்) அல்லாதது அன்பின் ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை). விளக்கம் தொல்காப்பியம் முதலிய நூல்களிற் பார்க்க.

*பிறரைத் தாயெனக் கருதிப் போற்ற*
*உறுதல் காதல் பெறுதல் அன்பே;*
*அன்பின் முழுமை அந்தணச் செல்வம்;*
*இந்தச் செல்வம் தந்த தாயைச்*
*சிறையில் அடைத்தல் நிறையோ அன்பீர்!*
*அன்னை விலங்கை இன்னே உடைக்க;*
*மாதர் உரிமை ஆடவர் உரிமை*
*ஆடவர் உரிமை மாதர் உரிமை*
*ஒருவர் உரிமை ஒருவின் சிறுமை*
*எவர்க்கும் உரிமை இருத்தல் அறமே*
*உரிமை சிதைத்தல் பெரிய பாவம்;*

சாதி

*பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும்*
*இழிவுகள் இன்னும் ஒழிய விலையே;*
*ஓரின அன்பு வேறினப் போராம்*
*அன்பைக் கட்டல் துன்பச் சூழல்;*
*சாதி அன்பு நீதி அன்று*
*சாதி உணர்வும் சாதி நினைவும்*
*சாதிப் பேச்சும் சாதி எழுத்தும்*
*சாதிச் சங்கமும் சாதிமா நாடும்*
*போக உழைத்தல் புனிதத் தொண்டு;*

மதப் பேய்

*மதத்தின் பெயரால் அதமே செய்து*
*பூசல் இடுதல் நேசமோ? நீசம்;*
*'மதம்வெறி' என்றும் 'மதம்பேய்' என்றும்*
*உண்மை ஆய்ந்தவர் உரைத்த தென்னை?*
*மதவெறி எத்தனை மக்களை எரித்தது!*
*மதப்பேய் எத்தனை மக்களை அலைத்தது!*
*மதப்பிடி வாதம் அதட்டும் அறிவை*
*அறிவை அதட்டும் வெறிசண் டாளம்;*
*வெறியை ஊட்டும் நெறியுங் குறியும்*
*வேடமும் கோலமும் பீடமும் ஏடும்*
*மடமும் கோயிலும் இடமும் பிறவும்*
*இகலிருள் ஓட்டும் அகவிளக் கல்ல;*

---

**61.** ஒருவின் – நீங்கின்.

**66.** ஒரு சாதியினிடத்தில் அன்பு செலுத்தல், மற்றச் சாதிகளிடத்தில் பகைமைப் போராக முடியினும் முடியும் என்றபடி.

**84.** இகல் – மாறுபாடு; பகை.

*திருத்தம் உறவே கருத்து வேற்றுமை*
*எழுதல் இயற்கை; பழுதில் அதனை*
*வெறிக்கிரை ஆக்கல் தரித்திரச் சிறுமை;*
*பேத வாதப் பேய்வெறி இழிவுகள்*
*சிறைநீ ராக்கும் சிறந்த வாழ்வை;*

மெய்ந்நெறி

*திருத்தம் பெறவே கருத்தைக் கொள்க*
*நெறிகளை எல்லாம் அறிவால் ஆய்க*
*புறத்தை ஆய்ந்தபின் அகத்துள் நுழைக*
*பன்மை எல்லாம் ஒருமையாய் ஒளிரும்;*
*ஒருமை எதுவோ? அருளறத் தெய்வம்;*
*அந்த ஒன்றை எந்தப் பெயரால்*
*அழைப்பினும் அழைக்க அவையெலாம் ஒன்றே;*
*வாதம் விடுத்துப் பேதம் விடுத்துத்*
*தொண்டு செய்தால் உண்மை விளங்கும்;*
*தொண்டு செய்க தொண்டு செய்க*
*செய்கை மெய்ந்நெறி; உய்யும் நெறியே;*

உலக ஒருமை

*உலக உணர்வு நிலைபெறப் பயில்க;*
*உலகம், உறுப்புப் பலபல உடையது*
*உறுப்புப் போர்செயின் பொறுப்புல கேது?*
*கண்ணும் காதும் மூக்கும் நாக்கும்*
*கழுத்தும் தோளும் கையும் காலும்*
*குழப்பம் விளைத்தால் செழிப்புட லேது?*
*நாடு மொழிப்போர் கேடே பெருக்கும்*
*நிறத்திமிர்ப் போரும் மறத்தைப் பெருக்கும்*
*உறுப்புப் போர்கள் ஒழிக ஒழிக;*
*உலகில் ஒருமை நிலைபெற உழைக்க;*
*பொருளறம் உலகை ஒருமைப் படுத்தும்*
*அருளற மென்னும் அகிம்சை வளர்க்கும்;*
*மனிதக் குறிக்கோள் புனித அகிம்சை*
*அகிம்சா தர்மம் அகிலம் ஆக;*
*அகிம்சை வெல்க! அகிம்சை வெல்க!*

---

**89.** சிறைநீர் – சிறைப்பட்ட நீர் ; ஓடாமல் அடைபட்டுக் கிடக்கும் நீர்நிலை.

**111–2** பொருளறமென்னும் பொருட்பொதுமை, உலகை ஒன்றுபடுத்தும்; அருளறமென்னும் அஹிம்சா தர்மத்தையும் வளர்க்கும் என்றபடி.

## 16. முன்னோர் மொழி

*முன்னோர் மொழியைப் பொன்போல் போற்றுக;*
*அன்னவர் செம்மொழி மன்னி வானில்*
*ஒலியாய்ப் படிந்தே உலகை ஓம்பலை*
*உன்னி உன்னிப் பன்முறை உன்னுக;*
*தெளிவுண் டாகும் ஒளியுண் டாகும்*
*முனைப்பறுந் தொழியும்; நினைப்புத் தூயதாம்;*
*அந்நினைப் புடையார் நன்மொழி அமிழ்தம்*
*இடையீ டின்றித் தொடர்ந்து வழிவழிப்*
*பெய்து பெய்து மெய்ந்நெறி காக்கும்;*
*முன்னோர் மொழியைப் பொன்போல் போற்றுக;*
*திங்கள் மும்மழை எங்கும் பொழியும்*
*உலகெலாம் ஓங்கும் கலையெலாம் ஓங்கும்*
*பொருளறஞ் செழிக்கும் அருளறங் கொழிக்கும்;*
*முன்னோர் மொழியைப் பொன்போல் போற்றுக;*
*என்றும் போற்றுக; என்றும் போற்றுக.*

ooo

2. மன்னி – நிலைபெற்று.
6. முனைப்பு – செருக்கு.

# வளர்ச்சியும் வாழ்வும்

## அல்லது

# பருக்கைப் பிதற்றல்

(1953)

# முன்னுரை

எனது தொண்டுகள் பல திறத்தன. அவற்றுள் ஒன்று நூல்இயற்றல். கண்ஒளி இழந்த பின்னரும் சிறு சிறு நூல்கள் சில என்னால் யாக்கப்பெற்றன. இப்பொழுது படுக்கையில் கிடக்கிறேன். பருவுடல் மெலிந்து மெலிந்து வருகிறது. ஆனால், உணர்ச்சியின் எழுச்சி மட்டும் குன்றவில்லை. இவ்வேளையில் இச் சிறு நூலை இயற்றலானேன். இதற்கு, **'வளர்ச்சியும் வாழ்வும்** அல்லது **படுக்கைப் பிதற்றல்'** என்னும் தலைப்புச் சூட்டப்பட்டது.

இந்நூல் ஒருவிதத் தத்துவத்தை அடிப்படையாக் கொண்டது. அது வளர்ச்சித் தத்துவம். வளர்ச்சித் தத்துவக் கூறுகள் பலவிதத் தலைப்பில் - பலவகையில் - சுருங்கிய முறையில் - இந் நூற்கண் ஓதப்பட்டுள்ளன. அக் கூறுகளை ஒன்றுபடுத்திப் பார்த்தால் தத்துவ ஒருமைப்பாடு நன்கு புலனாகும். இந் நுட்பம் தொகுப்பில் இனிது விளங்கும்.

வளர்ச்சி, வாழ்வுக்கு இன்றியமையாதது. இரண்டும் விரவிவருமாறு இந் நூலைப் பிதற்றினேன். பிதற்றலில் பிழையுறுதல் இயல்பு. பிழை பொறுத்தருளுமாறு நேயர்களை வேண்டுகிறேன்.

இந் நூலை யான் சொல்லிவந்தபோது, எனது அருகே அமர்ந்து, அதை எழுத்தில் பொறித்து உதவிசெய்த சாது அச்சகப் பொறுப்பாளர் - மு. நாராயணசாமிக்கும், எவ்விதக் கைம்மாறும் கருதாது, நூல் நன்முறையில் வெளி வருதல் வேண்டும் என்னும் நோக்குடன் அச்சுப்பிழைப் பார்த்துத் துணைபுரிந்த டாக்டர் மு. வரதராசனார்க்கும், தமிழ்ப் பேராசிரியர் - வித்துவான் - அன்புகணபதிக்கும் எனது நன்றி யறிதல் உரியதாக. அவர்கள் வாழ்க! நீடு வாழ்க!

*இராயப்பேட்டை.*

*26-8-53* **திருவாரூர். வி. கலியாணசுந்தரன்**

# 1. கடவுள்

*உலகை நோக்குக உலகை நோக்குக*
*தோன்றி ஒடுங்கலை ஊன்றி நோக்குக*
*பற்பல பொருள்களின் அற்புதம் விளங்கும்;*
*வளர்ச்சி இயல்கள் உளத்தில் படியும்;*
*படியப் படியக் கடவுள் உண்மையில்*
*திடமே நிலைக்கும் இடமே கோயில்.*

---

கடவுள் உண்மையை நிறுவ வல்லன பல. அவற்றுள் ஒன்று வளர்ச்சித் தத்துவம். அத் தத்துவம் இங்கே சிறப்பாகக் குறிக்கப்பட்டது.

வளர்ச்சி – ஒரு தத்துவம்; உள்ளது சிறத்தல் அல்லது கூர்தல் (Evolution).

## 2. வளர்ச்சி

*சிந்தனை செய்க சிந்தனை செய்க*
*எந்தப் பொருளையும் சிந்தனை செய்க*
*சிந்தனை,* ***ஆய்வை உந்துதல்*** *உறுதி;*
*ஆய்க ஆய்க எதையும் ஆய்க*
*எதையும் ஆய்க பதைபதைப் பின்றி;*
*விதையை ஆய்க விளைவை ஆய்க*
*முதலை ஆய்க முடிவை ஆய்க*
*கருவை ஆய்க உருவை ஆய்க*
*பருமையை ஆய்க நுண்மையை ஆய்க*
*அணுவை ஆய்க மலையை ஆய்க*
*அண்ட பிண்டம் அனைத்தையும் ஆய்க*
*ஆழ்ந்தே ஆழ்ந்தே ஆய்ந்து தோய்க;*
*பிரியும் - உறையும் - மறையும் - பொருள்கள்*
***அழிவ தில்லை;*** *ஒழிவ தில்லை;*
*மாறுதல் நிகழ்ச்சி தேறுதல் கூடும்*
*மாறுதல் வழியே வீறும் புதுமை*
*பழமை புதுமையாய்ப் பழகுதல் உண்மை;*
*மாற்றம் புரியும் ஆற்றல் எதுவோ?*
*சிந்தனை செய்க; சிந்தனை செய்க;*
*'வளர்ச்சி' என்றே உண்ணாச்சியில் படுமே.*

---

3. ஆய்வை – ஆராய்ச்சியை. உந்துதல் – செலுத்துதல்.

7. முதலை முடிவை – ஆதி அந்தத்தை

13. பொருள்கள் பிரியும் உறையும் (கரையும்) மறையும்.

14. உள்ளது போகாது, இல்லது வாராது; சத்காரிய வாத விளக்கம் பார்க்க.

15. தேறுதல் – தெளிதல்.

16. புதுமை உள்ளதினின்றும் தோன்றுவதென்க; அது பழமையினின்றும் தோன்றுவது என்பது கருத்து.

18. ஆற்றல் – சக்தி.

## 3. உருகல்

*வளர்ச்சிக் கல்வியைக் களத்திற் பயில்க*
*அந்தக் கல்விநம் சொந்தக் கல்வி*
*சிந்தனைக் குரியது சந்த முடையது;*
*தோற்ற ஒடுக்க ஊற்றை உணர்த்தும்*
*வல்லமை வாய்ந்தது; நல்லன கொண்டது;*
*இப்புவி வாழ்வைச் செப்பஞ் செய்ய*
*மாற்றி மாற்றி ஏற்றிச் செல்வது;*
*உள்ளம் உருகலைத் தள்ளி வந்த*
பாவ **அணுக்களால்** மேவிய உடலைச்
*செய்ய அணுக்களால் உய்யப் படைப்பது;*
*உருகும் செயலால் அருகும் பாவம்*
*இரியும் இருளே; விரியும் அருளே.*

---

1. களத்தில் – இயற்கைக் களத்தில்.
4. ஊற்றை – மூலத்தை.
6. செப்பஞ் செய்ய – சீர் செய்ய.
7. உள்ளதை அழிவு செய்யாமல் அதை மாறுதல் செய்து செய்து மேலும் மேலும் வளர்த்துச் செல்வதென்க.
8. தள்ளி – ஒதுக்கி.
10. செய்ய – செம்மையான; நல்ல.

8–12. உருகும் செயல் பாவத்தைக் கழுவும். பாவ அணுக்கள் உருகும் செயல் நிகழாதவாறு காலந் தள்ளிக்கொண்டே இருக்கும். உருகும் செயலால் பாவ அணுக்கள் நல்ல அணுக்களாக மாறும். அதனால் பாவ உடல் மாறி நல்ல உடல் அமைந்து ஏற்றமுறும். உருகும் செயலில் வளர்ச்சி இருத்தல் இங்கே கருதற்பாலது.

12. இரியும் – தேய்ந்து மறையும்.

# 4. நூல்

*நூலெது? நூலெது? காலப் புலவீர்!*
*அன்று காகிதம் அன்று கருமை;*
*அன்றே அட்டை அன்றே எழுத்துரு;*
*இன்ன யாவும் பன்னும்* ***பருமை***
*யுறுப்புக் குறிகளைத் திறக்கும் கருவிகள்;*
*பருமை வழியே நுண்மை இயங்கும்;*
*நூலோ நுண்மை; மாலோ இல்லை;*
*நுண்மை நூலின் வண்மை பெரிதே;*
*கருவை ஓம்பும் திருவை உடையது*
*குழவி உள்ள வழியைப் பெற்றது*
*முறைமுறை வாழ்க்கைத் துறைகளைக் கொண்டது*
*மன்பதை* ***பொதுவெனும்*** *அன்பைப் பூண்டது;*
*வகுப்பு நிறமொழி மதநா டென்று*
*துன்ப மூட்டா* ***அன்பு,*** *நூலே*
*எங்கும் எல்லாம் தங்கும் நெஞ்சைப்*
*பெற்றுக் கற்று உற்றது நூலே*
*அறிவும் அறமும் செறிந்து நிறைந்தது*
*தெய்வ நூலே தெய்வ நூலே*
*தெய்வம் நூலே வையம் நூலே*
*சான்றவர் பலரும் ஆன்ற நூலே;*
*நூலைப் பயில்க நூலைப் பயில்க;*
*காலப் புலவீர்! சீல நூலைப்*
*பாடுக பாடுக பாடுக நாளும்*
*என்றும் வாழ்க இன்ப நூலே.*

2. காகிதம் அன்று. கருமை – கரிய மை.
4. பன்னும் – பகரும்; சொல்லும்.
4–5. பருமையின் உறுப்புக்களை.
7. மாலோ – மயக்கமோ.
8. வண்மை – கொடை.
12. மன்பதை – மக்கள் கூட்டம்.
17. செறிந்து – நெருங்கி.
22. சீலமுடைய நூலை.

# 5. மரத்தடி

*மனத்து மாசினை நினைத்துப் போக்க*
*உலகம் கண்டது அலகில் வழிகளை*
*நல்லன வாழ்க; நல்லன வாழ்க;*
***ஒன்றைக்** குறித்தல் நன்று நன்று :*
*காடும் மலையும் ஓடும் யாறும்*
*பாடும் காற்றும் ஆடும் முகிலும்*
*சூழ்ந்த இயற்கை ஆழ்ந்த இடத்தில்*
***ஒருமரம்** அடைந்து திருவடி நிழலில்*
*அமர்ந்து பார்க்க அமைதி கூடும்;*
*இயற்கையை உள்ளுக இயற்கையில் படிக*
*இயற்கையில் மூழ்க இயற்கையில் ஆழ்க*
*இயற்கையே யாக; இயங்கும் **பரமே;***
*அடிக்கடி செய்க; படிப்படி மாசு*
*நீங்கி அகலும்; ஓங்கும் அறஒளி*
*மரத்தடி என்றவ மதியா திருக்க*
*மரத்தடி மாண்பு **பரத்தடி** யாகும்;*
*அருகர் புத்தர் பெரியர் பலரும்*
*எங்கே சென்றனர்? எங்கே இருந்தனர்?*
*மரத்தடி அன்றோ? பரத்தடி அன்றோ?*
*செயற்கை பெருகிய அயர்ச்சி இடத்தில்*
*இயற்கை படமாய் இறங்கிய பாட்டை*
*ஓதி ஓதி உருகி நிற்க*
*ஆதி இயற்கை நீதி நிகழ்த்தும்*
*மனத்து மாசை நினைத்துப் போக்க*
*இயற்கை வழியே எளிய தென்க.*

---

2. அலகில் – அளவில்லாத.

8. திருவடி – மரத்தடி.

14. அற ஒளி – தர்ம ஜோதி.

15. என்று அவமதியாதிருக்க.

16. பரத்து அடி – கடவுளின் திருவடி.

23. ஆதி இயற்கை – மூல இயற்கை.

# 6. வேட்டை

*வேட்டை வேண்டா; வேட்டை வேண்டா;*
*காட்டில் ஆடும் வேட்டை வேண்டா;*
***கல்விப்** புலிகள் **செல்வ** யானைகள்*
*கீதக் கரடிகள் சீதக் கழுகுகள்*
*பிறவும் வாழ்ந்தே உறவு பெருக்கும்*
*காட்டில் ஆடும் வேட்டை வேண்டா;*
*கொடிது கொடிது வேட்டை கொடிது*
*வழிவழித் தாக்கிப் பழிகள் வாங்கும்;*
*வேட்டை நின்றால் நாட்டில் உயிர்வதை*
*அருகும், ஆக்கள் பெருகும் நாளும்*
*கன்றுகள் துள்ளும் குன்றுகள் மகிழும்*
*எங்கும் எங்கும் பொங்கும் பாலே;*
*மக்கள் பொருளெலாம் தக்கதிற் செலவாம்*
*போர்கள் நிற்கும்; ஏர்கள் ஓடும்;*
*மற்றவர் பொருட்டு நற்றவம் செய்யும்*
*முனிவர் வதியும் இனிய காட்டில்*
*வேட்டை ஆடுதல் கேட்டைச் செய்யும்;*
*முனிவர் தவமே கனிதரும் நாட்டில்*
*காட்டில் ஆடும் வேட்டை வேண்டா;*
*கடலிலும் வேட்டை ஆடுதல் தீதே*
*வேட்டை நாட்டம் எங்கும் வேண்டா;*
***உள்ளத் துள்ளே உள்ளது காடு***
*வேட்டை ஆடி ஓட்டுக விலங்கை*
*விலங்குக் கரணம் நலங்கிளர் பண்பாம்.*

---

4. கீதம் – சங்கீதமுடைய. சீதம் – குளிர்ச்சியுடைய
5. உறவு – அன்பை.
10. ஆக்கள் – பசுக்கள். (மற்ற உயிர்களும்).
13. தக்கதில் – தக்க வழியில்.
23. விலங்கை – கெட்ட எண்ணங்களாகிய விலங்கை.
24. விலங்குகளாகிய கரணங்கள் நல்லனவாய்ப் பண்படும்.

# 7. தவநெறி

*பற்பல கலைகள் பற்பல மதங்கள்*
*பற்பல அரசுகள் பற்பல வாணிபம்*
*பற்பல தொழில்கள் பற்பல துறைகள்*
*பற்பல இயக்கம் பற்பல அமைப்புகள்*
*'பற்பல!' 'பற்பல!' அற்புதம் உண்டோ!*
*உலகில் சோதரம் இலகல் இலையே;*
*போர்கள் பெரும்பெரும் போர்கள் நிகழ்ச்சி*
*ஆயிரம் ஆயிரம் ஆவிகள் நாசம்!*
*பட்டினி, மரணம் முட்டும் கோரம்!*
***கோயில் மடங்களின்** மாயிரு அமைப்பும்*
*நன்மை செய்யும் தன்மையில் இல்லை;*
*என்ன செய்வது? என்ன செய்வது?*
*போரை ஒழிக்கப் போரில் இறங்கினோம்*
*குண்டைத் தொலைக்கக் குண்டை எறிந்தோம்*
*வாளை வீழ்த்த வாளை ஏந்தினோம்*
*விளைந்த தென்னை? அளந்து பார்க்க;*
*மூர்க்கம் வீறி மூண்டது கண்டோம்*
*மூர்க்கம் அற்ற மார்க்கம் தேவை;*
***புதுப்பெயர் மார்க்கம்** எதுவும் வேண்டா*
*அருகர் புத்தர் உருகும் கிறிஸ்து*
*மற்ற அறவோர் சொற்ற துண்டு*
*கற்றதைப் பற்றி நற்றவம் செய்க;*
*'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'*
*என்ற மொழியில் ஒன்றி ஒன்றி*
*எண்ணி எண்ணி நண்ணுக தவமே;*
*கல்வியில் தொழிலில் செல்வ நிலையில்*
*பிறபிற நிலையில் அறநெறி யென்னும்*

---

**6.** சோதரம் – சகோதரம்; சகோதர நேயம். இலகல் – விளங்கல்.

**22.** கற்று அதை.

**24.** ஒன்றி – பொருந்திக் கலந்து.

**பொதுமை** புகுத்திப் புதுமை செய்க
தவமெளி தாகிப் புவியில் பரவும்
தவநெறி யாலே அவனி காக்க;
மூர்க்கம் அற்ற மார்க்கம் செழிக்கும்
'பற்பல' குறும்புகள் கற்பனை ஆகும்.
**ஒருமை நாட்டம்** பெருமை கொள்ளும்
உலகில் சோதரம் இலகி நிற்கும்.

30. அவனி – உலகை.

# 8. சமயம்

*வேண்டும் சமயம் வேண்டா என்று*
*பேசு வோருளர் ஏசு வோருளர்*
*போற்று வோருளர் தூற்று வோருளர்;*
***இயற்கை சமயம்,*** *செயற்கை அன்று*
*எங்கே ஓடும்? எங்ஙனம் ஒடுங்கும்?*
*அறநெறி சமயம், மறையுங் கொல்லோ?*
*என்றும் உள்ளது நன்று வாழ்வது*
*உயிரைத் துலக்கி உயர்த்தும் சற்குரு*
*கூர்தல் அறத்தின் வேர்கொள் தாயகம்;*
*வளர்ச்சி இயலைக் கிளரும் சமயம்*
***பொதுமை*** *வாய்ந்தது புதுமை அன்றே;*
*துண்டு துண்டாய்க் கண்டங் கண்டமாய்த்*
*தனித்தனி இனமாய்ச் சனித்த தன்றே;*
*ஏற்றத் தாழ்வு வேற்றுமை யின்றி*
*எங்குமோ ரியல்பாய்த் தங்கி நிற்பது;*
***பேதம்*** *எழுப்பும் வேதனைப் போர்களைத்*
*தடுக்க அபேதச் சாதனம் வேண்டும்*
*சமயம் அதுவே அமைதி அமைவு;*
*ஊழிப் போரிடை வாழி சில்லோர்*
*நல்சமா தானம் சொல்லப் புகுதலின்*
*மூலம் எதுவோ? சீலச் சமயமே;*
*சமயம் இன்றி அமையா துலகம்;*
*உலக மெல்லாம் ஒருகுலம் என்னும்*
*உண்மை விளக்கும் வண்மை கொண்டது;*
*இப்பொது அறத்தை - ஒப்பில் ஒன்றைக்*
*கூறுகூ றாக்கி ஊறுகள் செய்தவன்*

---

1. சமயம் வேண்டும் வேண்டா என்று.

10. கிளரும் – எழுப்பும்.

13. சனித்தது – தோன்றியது.

19–21. சண்டைக் காலத்தில் சிலர் சமாதானம் பேச முயல்கின்றனர். இதற்கு மூலம் எது? சமயம் என்க.

**பொல்லா மனிதன்** வல்லான் அல்லனோ!
விலங்கி னின்றும் விலகி வந்தவன்
மேலும் உயரக் காலச் சமயத்
துணைபெறல் வேண்டும்; துணைபெறல் எப்படி?
வழிபா டாற்றின் விழித்துணை பெறலாம்;
சமய நுட்பம் அமையும் நெஞ்சில்;
அருந்தவர் கண்ட பெருந்திரு நெறிபல
உண்டு நேர்மையில் கண்டு நடக்க;
**வள்ளுவம்** சொல்லும் வழிபாடுள்ளது
இயற்கையாய் இயங்கும் இயல்பு வாய்ந்தது:
கல்வி கற்றல், இல்லறம் ஏற்றல்,
குழவி ஈனல், உழுது பயிரிடல்,
அருளால் பொருள்பெறல், பொருளால் அருளுறல்,
மக்க ளாட்சி, தக்கது கொள்ளல்,
வறுமை போக்கல், பொறுமை காத்தல்,
வருவிருந் தோம்பல், அருந்தவங் கிடத்தல்
முதலிய எல்லாம் முதிர்வழி பாடே;
**கடன்களைச்** செய்தலும் திடவழி பாடாம்
காலைக் கடன்களை மாலைக் கடன்களை
வீட்டுக் கடன்களை நாட்டுக் கடன்களை
வீட்டுக் கடன்களை நாட்டுக் கடன்களை
சுற்று முள்ள மற்றக் கடன்களைக்
குறைவற ஆற்றலும் முறைவழி பாடாம்;
ஈசனைப் போற்றும் நேசப் பாக்களை
ஓதி உருகல் உயர்வழி பாடாம்;
குற்றங் குறைகளை முற்றும் முறையிட்
**டழுதலும்** சிறந்த வழிபா டென்க;
சடமுங் கடவுளும் சார்ந்து நிற்பினும்
சடத்துக் கேற்றம் தந்து வழிபடின்
பாசம் முற்றும் நாசம் ஆகா;
கடவுளுக் கேற்றம் கருதி வழிபடின்
பாசம் முற்றும் நாசம் ஆகும்;
சடத்தைக் கடந்த கடவுளை வழிபடல்
இயலா தப்பா! இயலா தப்பா!
**உயிர்க்கிதம்** செய்தல் உயர்வழி பாடாய்

---

53. சடம் – அறிவில்லாதது. கடவுள் – அறிவு.

58–59. கடவுள் சடத்தில் கலந்தும் அதைக் கடந்தும் நிற்பது. கடந்த கடவுள், வாக்கு மனத்துக்கு எட்டாதது. அதை எப்படி வழிபடுவது? இயலாதென்க.

நிறைவழி பாடாய் இறைவழி பாடாம்;
வழிகள் காட்டும் வழிபாட்டாலே
சமய வாழ்வு அமையும் நன்கே;
எல்லாங் கடவுள் எங்குங் கடவுள்
என்று சமயம் ஒன்றே சாற்றும்;
இருளெலாம் தகர்க்கும் அருளொளி சமயம்
அவ்வொளி இலையேல் இவ்வுல கென்னாம்?
அன்பும் அருளும் மன்பதை வாழ
வைத்தது சமயம்; சத்தியம் இதுவே;
அன்பரு ளின்றேன் மன்பதை என்னாம்?
சமயம் தேவையே; சமயம் தேவையே;
உலகைப் புரப்பது கலக மற்றது
சமயம் என்று இமயம் ஏறலாம்;
**மதங்கள்,** சமய இதங்கள் அல்ல
சமய வழியே அமைந்தவை அவைகள்;
தத்தம் மதத்தில் சித்தம் வைத்தால்
சமய வாழ்வு அமையினும் அமையும்
சமயம் ஆறு, அமைதுறை மதங்கள்;
போரிடின் துறையில் நீரிடை நெஞ்சம்
படியுங் கொல்லோ! கொடிது மதப்போர்!
சண்டை எழுந்தால் மண்டையும் உடையலாம்;
**வெறியைக்** கடந்தது அறிவுச் சமயம்
நெறி அர ணாவது பெரிய ததுவே;
போரெலாம் போக்கிச் சீரெலாம் செய்ய
வல்லது சமயம்; நல்லது கொள்க;
உலக மெல்லாம் ஒருகுலம் ஆகப்
போற்றிச் சமயம் ஆற்றுக கடனே;
போற்றுக போற்றுக; சமயம் போற்றுக;
போற்றிப் போற்றி ஆற்றுக கடனே;
சமய வாழ்வு அமர வாழ்வாம்;
அந்த வாழ்வுச் சிந்தனை வேண்டும்
வேண்டும் வேண்டும் சமயம் வேண்டும்.

72. புரப்பது – காப்பது.

78. ஆறு – நதி; அமை துறை – (ஆற்றில் இறங்க) அமைந்ததுறைகள்.

87. சமயத்தைப் போற்றி.

# 9. தொண்டு

*அமைதி கூட்டும் சமய வாழ்வு;*
*பண்டை வாழ்வது தொண்டால் மலர்வது;*
*தன்னல மற்ற நன்னயத் தொண்டு*
*முனைப்புத் திரண்டு கனைப்ப தன்று;*
*கல்விப் பயனென்? செல்வப் பயனென்?*
*திருத்தொண் டாக உருக்கொள லன்றோ?*
*கொள்ளை போர்கள் துள்ளச் செய்யும்*
*கல்வி யாலோ செல்வத் தாலோ*
*ஆகும் தொண்டால் **வேகும்** உலகம்;*
*அப்பேய்த் தொண்டோ? அப்பா எரியே!*
*'யாதும் ஊரே யாவரும் கேளிர்'*
*என்று மொழிந்தான் அன்று குன்றன்*
*இன்று நோக்குக நன்று நோக்குக;*
*தொண்டால் அந்த அண்டம் படைக்கலாம்*
*குண்டால் எந்தப் பிண்டமும் தோன்றா;*
*தொண்டைக் கொண்டவ் வண்டம் படைத்தல்*
*உறுதி உறுதியென் றறுதி யிடலாம்;*
*பிளவும் பிரிவும் பிணக்கும் மறையும்*
*அன்பும் அருளும் இன்பும் மலியும்;*
*'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'*
*என்னுஞ் செம்மொழி மன்னும் எங்கும்;*
*தொண்டு வாழ்வில் அண்டப் பயில்க*
*இளமை தொட்டே வளமைத் தொண்டைப்*
*பயிற்சி செய்யும் முயற்சி தேவை*
*எதையும் பயிற்சியால் துதையப் பண்ணலாம்;*
***நல்ல தொண்டை** மெல்ல மெல்லத்*

4. முனைப்பு – செருக்கு; ஆணவம்.
12. குன்றன் – பூங்குன்றனார்.
14. அந்த அண்டம் – குன்றனார் கூறிய உலகம்.
25. துதைய – செறிய; நிரம்ப.

*தந்தை யாற்றின் மைந்தன் ஆற்றுவன்*
*ஆற்றும் வழிவழி ஆற்றும் சுற்றம்*
*வீடு கொள்ளும் நாடு கொள்ளும்*
*உலகம் ஏற்கும் கலகம் விலகும்;*
*தொண்டு வண்ணம் அண்டம் ஆகும்*
*சமய வாழ்வே அமையும்* ***தானே***
*தொண்டு செய்க; தொண்டு செய்க.*

# 10. அன்பு

அன்பே தெய்வம் அன்பே வையம்
தெய்வத் தன்பே வையத் தன்பாம்
வையம் உணர்ந்தால் **உய்ந்து** விடுமே;
தெய்வத் தன்பு வையம் தன்னுள்
அளவள வாகி உளதாய் நின்று
தேங்கித் தேங்கி ஓங்கித் தனது
முழுப்பெருக் குணர்த்தலின் விழுப்பம் ஓர்க;
ஒருத்தி ஒருவன் கருத்தில் ஒன்றலைக்
காதல் என்று ஓதினர் முன்னோர்;
காதல் பெருகி ஆதி அன்பாம்
இன்பக் காதல் **அன்பின் திறவே;**
**வள்ளுவர்** நூலில் உள்ளன முப்பால்
இன்பப் பாலில் என்ன காட்சி!
திறவுக் காட்சியென் றறைதல் வேண்டுமோ?
அறமும் பொருளும் திறவின் அரணே
தெய்வத் தன்பு வைய வழியே
தேங்கித் தேங்கி ஓங்கிப் பெருகிக்
**காத லாகும்** நீதியை ஆய்க;
பண்டை மக்கள் கண்ட உண்மை
இதுவே யாகும் புதுவ தன்று;
தத்துவ நூல்கள் சத்துவ நூல்கள்
காதல் நெறியைப் போதனை செய்யும்;
நாயக நாயகி பாவனை என்ன?
தலைவன் தலைவி கலவி என்ன?
காவிய ஓவிய ஆவி என்ன?

---

3. அதனை வையம் உணர்ந்தால்.

7. முழுப்பெருக்கு – முழுஅன்பை; தனது பூரண நிலையை. விழுப்பம் – சிறப்பை. ஓர்க – சிந்திக்க.

10. ஆதி – முதல்வன்.

14. திறவு – அன்புக் காதலாகிய திறவு.

15. அறத்துப்பாலும் பொருட்பாலும்.

*காத லன்றோ? சோதனை செய்க;*
*காதல் நெறியை வேதனை செய்து*
*சிதைத்துச் சிதைத்து வதைத்தல் அறமோ?*
*சட்டத் தாலே கட்டல் தவறு*
*சாதி யாலே மோதல் தவறு*
*நிறத்திமி ராலே ஒறுத்தல் தவறு*
*நாட்டுப் பற்றால் வாட்டல் தவறே;*
*பெருமைக் காதல் உரிமை உடையது*
*வளர விடுக; வளர விடுக;*
***அன்பு மூலம்,** இன்ப ஆண்பெண்*
*சேர்க்கைக் காதலென் றார்த்தனர் அறிஞர்;*
***வாசகன் ஆண்டாள்** நேசர் பலரும்*
*காதலில் மூழ்கிச் சாதனை செய்தனர்;*
*காதல் மாண்போ ஓதற் கரியது*
*உடலைக் கடக்கும் உளத்தைக் கடக்கும்*
*உயிரில் ஒன்றும் உயிர்க்குயி ராய*
*தெய்வங் கலக்கும் மெய்ம்மைக் காதல்:*
*இருமை கெடுத்தே ஒருமை கூட்டும்*
*தெய்வத் தன்பை வைய மாக்கும்*
*பெற்றி வாய்ந்த வெற்றி யுடைய*
*காதல் வாழ்க காதல் வாழ்க*
*அன்பு வாழ்க அன்பு வாழ்க*
*தெய்வம் வாழ்க வையம் வாழ்க.*

---

**31.** ஒறுத்தல் – தண்டித்தல்.

**36.** ஆர்த்தனர் – ஆரவாரித்தனர்.

**37.** வாசகன் – மாணிக்கவாசகன்.

**42.** தெய்வம் – தெய்வத்தை.

**43.** இரண்டற்ற நிலையைக் கூட்டும் என்றபடி.

# 11. எண்ணம்

*அணுவைப் பற்றி நுணுகி ஆய்தல்*
*தொன்று தொட்டதே; அன்று முதலா*
*ஆய்தல் வளர்ந்தது தேய்தல் இல்லை;*
*எண்ணம்* ***அணுவே*** *திண்ணம் என்க;*
*உண்மை கண்டனர் மண்ணில் அறிஞர்*
*நுண்மை வாய்ந்தது திண்மை பெற்றது*
*எண்ணம், எல்லாம் பண்ணி விடுமே*
*புலியைப் பசுவாப் பொலியச் செய்யும்*
*மகனைப் புலியா மருவ மாற்றும்*
*மழையை அழைக்கும் புயலை எழுப்பும்;*
*நல்லுடல் உள்ளம் பல்கலை உலகம்*
*படைப்பதும் எண்ணம் நடக்க உணர்ந்தே;*
*நல்லுடல் உள்ளம் பல்கலை உலகம்*
*வேண்டு மன்றோ? யாண்டும் வேண்டும்;*
*இலையேல் தீய அலைகள் வீசிக்*
*கலகம் குழப்பம் பலதிறப் புரட்சிகள்*
*எழுப்பி எழுப்பி அழிக்கும் வாழ்வை;*
*நல்லன படைக்க நல்ல எண்ண*
*ஊற்றெழல் வேண்டும்; தோற்றம் காண்க;*
*எப்படிப் படைப்பது? செப்படி வித்தையோ?*
*மொழிகள் பலவுள வழிகள் பலவுள*
*வாழ்க அவையெலாம் வாழ்க என்றும்;*
*இயற்கை நாட்டமும் இறைமை உறவும்*
*இடையீ டின்றி நடையில் கொண்டால்*
*நல்ல எண்ணச் செல்வம் சுரக்கும்;*
*நல்லன கற்க நல்லன கேட்க*
*நல்லன காண்க நல்லன தொடர்க*
*நல்ல எண்ண வல்லமை பெறலாம்.*

---

9. மருவ – விளங்க.

11. நல்ல உடலையும், நல்ல உள்ளத்தையும், நல்ல பல கலைகளையும், நல்ல உலகத்தையும்.

12. உணர்ந்து நடப்பாராக.

21. மொழிகள் – பெரியோர் உரைகள்.

# 12. வாழ்வு

*உடம்பும் உயிரும் இடம்பெறு கருவில்*
*அறிவும் உலகும் செறியும் நெறியில்*
*அருளும் பொருளும் விரவும் நிலையில்*
*அரும்புதல் வாழ்வு விரும்புதல் வேண்டும்*
*வாழ்வு வளர்வது தேய்வ தன்று*
*நாடுக வளர்ச்சியைப் பாடுக வாழ்வை;*
***பகுத்தறி** வற்ற வகுப்புயி ரெல்லாம்*
*தளர்ச்சி யின்றி வளர்ச்சி யடைதலென்?*
*இயற்கை வாழ்வின் பயிற்சி போலும்;*
*மக்கள் வளர்ச்சியில் சிக்கல் உறுதலென்?*
***பகுத்தறி வுடைய** வகுப்போ காரணம்?*
*செயற்கை வாழ்க்கையில் பயிற்சி பெற்றான்*
*வளர்ச்சி வாழ்வில் தளர்ச்சி யடைந்தது;*
*மனித்தன் என்றோ சனித்து விட்டான்;*
*காலங் கணித்துக் கோலல் அரிதே*
*எத்தனை யுகமோ? எத்தனை ஊழியோ?*
*இன்னும் அவன்வாழ் தொன்மை உலகம்*
***தெய்வ** மயமாய் உய்ய வில்லை*
***சாந்தம்** முற்றும் ஏந்த வில்லை*
*என்ன காரணம்? உன்னிப் பார்க்க;*
*மனிதன் முதல்முதல் இனிது வாழ்ந்தான்*
*உழைத்தும் உழுதும் பிழைத்து வந்தான்*
*ஒருவன் பொருளை ஒருவன் கவரும்*
*கல்வி பயிலாச் **செல்வம்** பெற்றான்*
*கொலையுங் களவுங் கள்ளுங் காமமும்*
*பொய்யும் அற்ற மெய்யில் நின்றான்*
***சுரண்டல்** வாழ்வில் புரண்டா னில்லை*
***பின்னே கெட்டான்;** என்னே செய்வது?*

7. அஃறிணை உயிர்கள்.

11. உயர்திணை உயிர்கள்.

12. மனிதன் பெற்றான்.

ஒருவன் பொருளை ஒருவன் கவரும்
இழிவு வளரும் வழியைக் கண்டான்;
கொலையுங் களவுங் கள்ளுங் காமமும்
பொய்யும் வாழ்வில் மொய்த்துக் கொண்டன
சுரண்டல் வாழ்வு திரண்டு மதர்த்தது
செயற்கை வாழ்க்கையில் பயிற்சி பெற்றான்
வளர்ச்சி வாழ்வில் உணர்ச்சி யற்றது;
ஞாயிறும் திங்களும் மாபே ருடுக்களும்
கொள்ளி **நிபுலையும்** வெள்ளி வீதியும்
பிறவும் விண்ணில் முறையே துணைசெய -
மலையும் காடும் வயலும் கடலும்
மண்ணில் சூழ்ந்து நண்ணித் துணைசெய-
புல்லும் செடியும் நெல்லும் புள்ளும்
விலங்கும் பிறவும் கலந்து துணைசெய -
வளர வந்தவன் தளர்ந்து வீழ்ந்தான்;
சுரண்டல் வாழ்வில் புரளு கின்றனன்
அத்தைப் பயிலும் வித்தை எங்கும்
அரசுகள் எங்கும் முரசுகள் எங்கும்
குண்டுகள் எங்கும் தண்டுகள் எங்கும்
எத்தனைப் போர்கள்? எத்தனை மரணம்?
அச்சோ! மனிதன் செத்தே போனான்!
கட்டிடப் **படிப்பும் பட்டப் படிப்பும்**
எரியில் நெய்யைச் சொரிதல் ஆகும்
கூடை கூடையாய் மேடையில் பொழியும்
போதனை என்செயும்? வேதனை நீக்குமோ?
வேதனை நீக்கும் சாதனை என்ன?
நெருக்கு முடிக்கின் கருத்துத் திருந்தும்
வறுமை பட்டினி சிறுமைப் போர்கள்
கண்ணைத் திறக்கும் எண்ணச் செய்யும்
ஒருவன் பொருளை ஒருவன் கவரும்
இழிவைப் போக்க வழியைத் தேடுவர்
கொலையுங் களவுங் கள்ளுங் காமமும்
பொய்யும் அற்ற மெய்யை நாடுவர்
சுரண்டல் சேற்றில் புரள ஒருப்படார்;
குண்டுகள் வீசும் தண்டுகள் கொண்ட

36. மா பேர் உடுக்கள் – பெரிய பெரிய நட்சத்திரங்கள்.

37. நிபுலை என்பது நெருப்புக் குழம்பு போன்றிருக்கும் ஓர் அண்டம். வெள்ளி வீதி (Milky Path).

**அரசுகள் மாறும்;** முரசுகள் முழங்கும்;
அன்பும் அருளும் மன்பதை சூழும்
அருளின் ஆட்சி வருதல் நேரும்
ஏத்தும் ஔவை ஆத்தி சூடியும்
கொன்றை வேந்தனும் ஒன்றும் வாழ்வாம்;
மனிதன் வளர்ந்தே இனிது வாழ்வன்
இனிது வளர இனிது வாழ
**இறையின் நினைப்பும்** முறையே வேண்டும்;
வாழ்வு வளர்வது வீழ்வ தன்று
சடத்தின் அளவில் கிடப்பதும் அன்று
சடத்தைப் பயின்றவர் சடத்தைக் கடவும்
**மறைபொருள்** உண்டெனும் உரையை வழங்கினர்
அப்பொருள் இறையெனச் செப்பினர் புலவோர்
இறையை உணர்த்தும் கருவி சடமென்
றாய்ந்தவர் கண்டனர் ஓய்ந்து தெளிக;
**அறிவில்** சடமே பொறியில் நின்றால்
சித்த விகாரப் பித்தம் பொங்கும்
இரக்கம் அற்ற அரக்கக் கூட்டம்
எங்கணும் மலியும் எங்கணும் போர்கள்;
**இறையோ அறிவு** நிறைநிறை அறிவே
அன்பை - அருளை - இன்பைப் பொழியும்
இறையை நினைக இறையை வாழ்த்துக
இறையைப் போற்றுக; மறையும் இடர்கள்;
அரக்கக் கூட்டமும் இரக்கக் கூட்டமாம்;
பிறர்குறை பேசிப் புறம்புறம் கூறும்
புன்மை விடுத்துத் தன்குறை சொல்லி
முறையிட் டழுதே இறையை வேண்டும்
ஒழுக்கமும் வாழ்வின் அழுக்கைப் போக்கும்;
அழுக்கைப் போக்கும் வழக்கம் முதிர்ந்தால்
முத்திற உடலின் சித்திரம் புலனாம்
பருவுடல் பாவமும் அருவுடல் பாவமும்
முதலுடல் காட்சியால் நிதநிதங் கழியும்
நல்ல வாழ்வு செல்லும் மேலும்
சொல்லா லதனைச் சொல்ல முடியுமோ?

---

74. கடவும் – செலுத்தும்.

79. அறிவில்லாத சடம். பொறியில் – ஐம்பொறியில்.

94–95. பருவுடல் – ஸ்தூல சரீரம். அருவுடல் – சூட்சும சரீரம். முதலுடல் – காரண சரீரம். இவை முத்திற உடல்கள்.

*குறையை முறையிட் டிறையை வேண்டின்*
*இனிது வளரலாம் இனிது வாழலாம்*
*தெய்வ மயமாய் வையம் உய்யும்*
*வாழ்வில் இறைமை ஆழ்தல் நல்லது;*
*ஆண்டவ! நின்னருள் தாண்டவம் புரிக*
*வளர்க வாழ்வு; வளர்க நன்றே.*

# 13. அறவோர்

*'கண்டதே காட்சி கொண்டதே கோல'மென்*
*றுண்டு களித்து மண்ணில் வாழ்வதோ*
*வாழ்வின் முடிவு? வாழ்வீர்! நினைமின்;*
*பூசல் வழக்கு வாசம் செய்யும்;*
*மக்க ளூடே தொக்க* ***ஒருமை***
***அன்புண் டெழுப்புவர்*** *இன்ப அறவோர்;*
*'நீத்தார் பெருமை' யாத்தார் வள்ளுவர்*
*'அறவோர்'* ***தொண்டின் உறவோர்*** *என்றனர்;*
*புத்தர் காலம் உத்தம அறவரைத்*
*தெரிந்து தந்தது பரிந்து பரவினர்;*
*தந்நல மற்றவர் நன்னய அறவோர்*
*அவருடல் ஊரே அவருயிர் தொண்டே*
*என்ன வாழ்ந்தனர்; பின்னே அவர்தம்*
*வழிவழி வந்தவர் பழிகள் நிகழ்த்தினர்;*
***தந்நலம்*** *அவரைப் பின்னிக் கொண்டது*
*கலக மூட்டி உலகைக் கெடுத்தனர்;*
*கலைகள் பள்ளி நிலைகள் மாறின*
*ஏட்டுப் படிப்பும் போட்டிப் படிப்பும்*
*பொருத்த மற்றவை; திருத்தம் செய்யா;*
*மெய்ம்மை அறவோர் வையம் தேவை;*
***குருகுலக் கல்வி*** *தருமே அறவரைத்*
*தவமும் தருமே தவத்தைச் செய்க;*
*ஆத்திக மென்றும் நாத்திக மென்றும்*
*பேசலு முண்டே; ஏசலு முண்டே;*

---

1–2. கோல மென்று உண்டு களித்து.

4. உலகாயத வாழ்வில் பூசலும் வழக்கும் வாசம் செய்யும் என்க.

5–6. மக்கள்பால் ஒருமை அன்பு உண்டு. அவ்வன்பு எழுமிடத்தில் பூசல் வழக்கு முதலியன தோன்றா. அவ்வன்பை எழுப்பவல்லார் அறவோர் என்க. ஒருமை அன்பு என்பது மக்களிடத்தில் கலந்துள்ள அன்பை உணர்த்துவது. அவ்வன்பு இருமையன்று; ஒருமை.

11. தந்நலம் – தமது நலம்.

20. வையத்துக்குத் தேவை.

**தத்துவக்** குப்பையை நித்தலும் கிளரும்
சித்தம் வாளா கிடத்தல் அரிதே
வாதம் தர்க்கம் வேதனை மூட்டும்;
ஆத்திக நாத்திகம் கடந்தது அறமே
அறத்தில் நிற்பவர் அறவோர் என்க;
ஆத்திகர் உயிர்க்கும் நாத்திகர் உயிர்க்கும்
நன்மை செய்யும் தன்மையர் அறவோர்
**பகைமை அறியாத் தகைமையர்** அறவோர்
அன்புக் கடவுளுக் கன்பர் அவரே
மண்ணுக் கினிய தொண்டர் அவரே;
அறவோர் அளிக்கத் தறையோர் முயல்க
தவத்தைச் செய்க தவத்தைச் செய்க
புத்தர் காலம் புத்துயிர் பெறுக.

---

26. வாளா – சும்மா.

26–27. அச் சித்தம் வாதத்தையும் தர்க்கத்தையும் வேதனையையும் மூட்டும் என்றபடி.

35. அறவோரை அளிக்க. தறையோர் – மண்ணில் வாழ்வோர்.

# 14. பொதுமை?

***முன்னை*** *நாளில்* ***மன்னர்*** *இல்லை*
*பின்னை நாளில் வந்தனர் அவரே;*
*தொன்மை மரபில் நன்மை வழிவழி*
*வளர்ந்தவர் மன்னராய் வளம்பல செய்தனர்;*
***கல்விக்*** *கடலும்* ***செல்வ*** *மலையும்*
*பரந்து குவிந்து நிரம்பின அந்நாள்;*
*இயற்கை வாழ்வுப் பயிற்சி காணலாம்;*
*குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்*
*பண்கள் பாடும்; பண்புகள் பரவும்;*
*மழையும் தானே விழைந்து பொழியும்*
*அருவி அழைக்கும் திருவைக் கொழிக்கும்;*
*ஆடும் பாம்புகள் நாடும் பறவைகள்*
*குரங்குகள் திரியும் மரங்க ளிடையே*
*கோழி நாளும் வாழி கூறும்*
*மங்கல முழங்கும் சங்க நாதம்*
*வண்டுகள் இசைக்கும் நண்டுகள் உலவும்*
*வாளை பாயும் காளை யாகும்*
*கன்றுகள் துள்ளும் அன்றில் பார்க்கும்;*
*தென்னை பனைகள் அன்னைக ளாகும்*
*ஆலும் அரசும் பாலி வேம்பும்*
*நீழல் நிலையமாய்த் தோழமை வழங்கும்*
*மாவின் கிளைகள் தாவும் மண்ணைக்*
*கிச்சிலி இனங்கள் நச்சை அகற்றும்;*
*காலையில் மணியொலி மாலையில் மணியொலி*
*உழவின் அழகில் வழியும் பள்ளு*

---

9. விழைந்து – விரும்பி.
20. பாலி – பாலையுடைய
21. நிலையமாய் – ஆசிரமமாய்.
23. நச்சை – நஞ்சை; விஷத்தை.
24. எருதுகளின் மணி ஒலி.
25. பள்ளுப் பாட்டு.
26. மணிகள் – தானியங்கள் முதலியன.

*உதிரும் மணிகள் சிதறும் குப்பை;*
*ஓலைக் குடில்கள் காலும் அமைதி*
*தாயும் குழவியும் வாயில் அணிகள்*
*பெண்ணொளி விருந்தை மண்வெளி அருந்தும்*
*முதுமை ஊற்றில் புதுமை சுரக்கும்*
*பாடல் தெருவில் ஆடல் தெருவில்;*
*தமிழின் மணத்தால் கமழும் மணமே*
*காக்கையும் பூனையும் காக்கும் நாயும்*
*அகமும் முகமும் மகிழ வாழும்;*
*கலைகள் உவக்கும் நிலைகள் அமையும்*
*ஒருகுலம் படைக்கும் குருகுலம் ஆகும்;*
*தத்துவர் தோன்றுவர் சத்துவர் தோன்றுவர்*
*காவியர் தோன்றுவர் ஓவியர் தோன்றுவர்*
*வானவர் தோன்றுவர் கானவர் தோன்றுவர்*
*மருத்துவர் தோன்றுவர் திருத்துவர் தோன்றுவர்*
*அறவோர் தோன்றுவர் உறவோர் தோன்றுவர்*
*நற்றவர் தோன்றுவர் மற்றவர் தோன்றுவர்*
*தோற்றம் வாழ்வின் காற்றொளி யாகும்*
*மன்னர் ஆட்சியின் நன்னிலை என்னே!*
*அன்னவர் ஆட்சி மன்பதை ஆட்சியாய்*
*அருளின் ஆட்சியாய்ப் பொருளாய் விளங்கும்;*
*சிற்சில இடத்தில் அற்பர் செயலால்*
*கொடுங்கோ லிடையிடை நடுங்கச் செய்தது;*
*மக்கள் விழித்துச் சிக்கல் அறுத்தனர்*
*சிக்கல் அறுத்தும் புக்கது கொடுமை;*
*மன்னர் ஆட்சியில் பின்னம் உற்றதே*
*ஆட்சியின் மாட்சி வீழ்ச்சி யுற்றதே*
*அரசியல் துறையின் முறைகள் மாறின*
*துரிசுகள் அரசின் பரிசுகள் ஆயின*
*அந்த ஆட்சியாம்! இந்த ஆட்சியாம்!*
*பெயரால் பெரிது! செயலால் சிறிது!*

---

**27.** குடில்கள் – குடிசைகள், காலும் – உமிழும்.

**29.** வெளி – ஆகாயம். மண்வெளி – மண்ணும் வெளியும், (ஐம் பூதங்களும்.)

**32.** தமிழின் மணத்தால் – இனிமையுடைய திருமணத்தால், (கலியாணத்தால்.) மணமே – வாசனையே.

**39.** வானவர் – வானநூல் வல்லவர். கானவர் – இசை ஞானியர்.

**40.** மருத்துவர் – வைத்தியர். திருத்துவர் – சீர்திருத்தக்காரர்.

**45.** மன்பதை – மக்கள் கூட்டத்தின்.

**54.** துரிசுகள் – குற்றங் குறைகள்.

**57.** கிட்டியது அரசே.

*கெட்டவ ரிடத்திலும் கிட்டிய தரசே*
*போக்கிலிக் குழுவின் தாக்கல் நேர்ந்தது;*
*பேச்சோ எழுத்தோ காய்ச்சிய இரும்பு*
***மேடைகள் நஞ்சின்** ஓடைகள் ஆயின;*
*வாக்குத் தேர்தல் ஏய்ப்பு வித்தை*
*வரிகள் சிறைகள் எரிகள் பெரிதும்*
*வட்டி வகைகள் கொட்டல் பெரிதும்*
*பட்டினி சாவு முட்டல் பெரிதும்*
*துட்டக் கூட்டம் வட்டம் அதிகம்*
*அணுகுண் டாக்கப் பணிகள் அதிகம்*
*குழப்பம் புரட்சி அழைப்புகள் அதிகம்*
*கலகம் எழும்பின் உலகம் அழியும்*
*செய்வ தென்னே! உய்ய முயல்க;*
*மாற்றஞ் செய்ய ஆற்றுக கடனே*
*மன்னர் ஆட்சி துன்ன மீண்டும்*
*அன்னவர் ஆட்சியில் பின்னம் உறாமல்*
*காக்க வல்ல போக்குக் கோலலாம்*
*அறவோர் மன்றம் உறவால் அமைக்கலாம்*
*மன்றத் துணையால் நன்றே விளையும்;*
*நல்ல ஆட்சியே அல்லல் களையும்*
*பெயரால் என்ன? செயலே தேவை;*
*'எந்த ஆட்சி வந்தால் என்ன?*
*சோறு வேண்டும் ஊறு வேண்டா'*
*என்று குடிசைகள் இன்றும் பேசும்;*
*அருகரும் புத்தரும் பெரிய மன்னவர்*
*தருமம் வளர்த்த பெருமை உடையவர்*
*அவர்தம் தருமம் புவிக்கே உரியது*
*மன்னர் ஆட்சியில் ஒன்றின் நலமே;*
***தெருவில் திரியும் ஒருவன்** தலைவனாய்*
*இடர்கள் செய்யும் இடங்களும் உண்டு;*
*பழியறியாத வழிவழி வந்த*
*மன்னர் நெஞ்சில் வன்மம் எழுமோ?*
*தவறினும் ஒருகால் தவநெறி அறவோர்*
*மன்றம் குறுக்கிடும்; குன்றெனத் தடுக்கும்;*
*மற்றவர் பொருட்டே உற்றவர் அறவோர்*
*மூர்க்கம் அற்ற மார்க்கம் நிற்பவர்*

---

74. மன்றம் – சபை. உறவால் – அன்பால்.

84. ஒன்றின் – (அத்தருமம்) கலந்தால்; சேர்ந்தால்.

***மார்க்கிஸ் - காந்தி*** *மார்க்கம் தெரிந்தவர்*
*அமைதி உலகம் அமைக்க வந்தவர்*
*அவர்தம் துணையால் அவனி காக்கும்*
*மன்னருள் பொதுமை மின்னல் வேண்டும்;*
*வளர்ச்சித் தத்துவ உளத்தைப் பயில்க:*
*மூர்க்க சக்தியின் ஆக்கம் குன்றும்*
*மூர்க்கப் பொதுமை பார்க்குள் வெறுப்பாம்*
*தனித்தனி மன்னரை இனித்தரை வேண்டா;*
*அறவோர் மன்ற உறவால் அமையும்*
*மன்னருள் பொதுமையை இந்நிலம் ஏற்றல்*
*உறுதி உறுதியென் றறுதி யிடலாம்*
*மன்னர் பொதுமையில் மன்பதைக் கருவில்*
*அருளே படியும் அருளே வளரும்*
*பொதுமை அருளாம்;* ***புதுமை மலரும்;***
*அருளின் ஆட்சியென் றருளிச் சென்ற*
***பெரியோர் வாழ்க;*** *பெரியோர் வாழ்க;*
*போற்றுக தெய்வம் ஆற்றுக கடனே*
*போற்றிப் போற்றி ஆற்றுக கடனே.*

106. அருளாகும்.

# 15. முறையீடு

*எல்லாங் கடந்த நல்லான் ஒருவனே*
*மனத்தி லவனை நினைத்தலுங் கூடுமோ?*
*எங்கும் நிறைந்து தங்கும் நிலையும்*
*கொண்டவன் அவனே அண்டம் உய்ய;*
*பாவம் எப்படி மேவ இடம்பெறும்?*
*அவனை மறந்தே இவனை மதித்தால்*
***பாவம்** விரைந்து தாவும் போலும்!*
*கலைகள் பயிலவும் பலதிற வாழ்க்கையில்*
*இறங்கவும் துணைசெய் பரம்பொருள் இறைவனை*
*மறந்து தம்மையே மதிக்கும் மனிதர்*
*இடமெலாம் ஆணவம் நடமே புரியும்*
*பாவம் சூழ்ந்தே ஆவியைக் கெடுக்கும்;*
*இளமையில் விழும்வித் தளவையும் மீறிக்*
*கொழுத்துக் கொழுத்துச் செழுமை நாற்றாய்க்*
*கரந்து கதிர்விடும் மறைந்து முதிரும்*
*நல்ல விளைவே **அல்லற்** காடு*
*கவலை பிணிகள் சவலை **உணவே***
*பல்வகை முயற்சி எல்லாம் பாழே*
*படுக்கையில் மகன்படும் இடுக்கண் என்னே!*
*கடலை நீந்தி அடைதல் கரையை*
*இயலுங் கொல்லோ! புயலும் எழுந்து*
*சாடச் சாட வாடி வதைவன்;*
*இன்னல் களைய என்ன செய்வது?*
*அங்கும் இங்கும் அலைதல் வேண்டா*
*அதிலும் இதிலும் மிதியுணல் வேண்டா;*
*உள்ளத் துள்ளே **வள்ளல்** உள்ளான்*

---

1. இஃது இறைவனது சொரூபம். (இதனை நிர்க்குணப் பிரம்மம் என்றுஞ் சொல்லலாம்.)
3. இஃது இறைவனது தடஸ்தம். (இதனைச் சகுணப் பிரம்மம் என்றுஞ் சொல்லலாம்.)
4. அண்டம் – அகிலம்.
6. அவனை – இறைவனை. இவனை – மனிதனாகிய தன்னை.
28. பாறை – மனப்பாறை.

அவனை நினைந்தே அவதி எல்லாம்
முறையிட் டழுதால் உருகும் பாறை;
அழுகையில் பொழுது கழிதல் வேண்டும்
உருகல் மேலும் பெருகல் வேண்டும்
வேண்டுதல் ஓயா வேண்டுதல் வேண்டும்;
**மெய்ம்மை** கண்டு மெய்யன் அருள்வன்
**மெய்யன் கருணை** உய்வே செய்யும்
பாவங் கழிக்கும் தேவன் அவனே
குறைகளை முறையிடும் துறையே சிறந்தது;
இறைவனை மறந்தால் உறுதலை ஓர்க
ஓர்ந்தே ஓர்ந்து சார்பு பெறுக
குறைகளை முறையிட் டிறைவனை நினைக்க;
குறைகளை **அகம்புறம்** முறையிடல் வீரம்
அந்த **வீரம்** சிந்தை **ஈரமாம்**
ஈர நெஞ்சில் கோரம் படியுமோ?
பாவம் பறக்கும்; **ஆவி** நலமுறும்;
குறைகளை முறையிடல் கரைபுரண் டோடின்
உலகம், தெய்வ உலக மாகும்
வையம் வளர்க தெய்வம் வாழ்க.

---

32. மெய்ம்மை – அழுகையின் உண்மையை. (அழுகை மெய்ம்மையதாயிருத்தல் வேண்டும்; பொய்ம்மையதா யிருத்தல் கூடாது. மெய்ம்மையும் பொய்ம்மையும் மெய்ப்பொருளாகிய ஆண்டவனுக்குத் தெரியும்.)

33. மெய்யனே கருணை. அக் கருணை உய்யவே செய்யும்.

36. உறுதலை – அடைதலை; விளைதலை.

37. ஓர்ந்து – ஆழமாகச் சிந்தித்து.

## 16. தொகுப்பு

*இந்நாள் உலகைச்* ***செந்நாய்*** *என்று*
*பழித்துக் கூறல் பழமை யாயது*
*இழித்துக் கூறல் இயற்கை யாயது*
*காரணம் என்னை? பூரணம் வேண்டா;*
*அளவில் பிரிவு பிளவு பிணக்குகள்*
*சீற்றம் பகைமை தூற்றல் சுரண்டல்*
*ஆசை மோசம் நாச எண்ணம்*
*வலியர் மெலியரை நலியக் கெடுத்தல்*
*ஒப்புர வற்ற தப்புகள் நிகழ்த்தல்*
*ஒழுக்கம்* ***ஏட்டில் விழுப்பம்*** *பெறுதல்;*
*காதல் அற்ற வேதனை மணங்கள்*
*கலப்புச் சட்டக் கலக்க அலக்கண்;*
*சிற்றூர் உழைப்பை மற்றோர் கவர்தல்*
*நகரம் மட்டும் இன்பம் நுகர்தல்;*
*குழந்தை அழகெலாம் ஒழிந்து போச்சே*
*என்புக் கூடாய்த் துன்புறல் ஆச்சே;*
*விஞ்ஞா னத்தால் இஞ்ஞா லத்தில்*
*மண்ணில் நீரில் விண்ணில் போர்செயல்*
*முதலிய கொடுமை வதைகள் மலியும்*
*இந்நாள் உலகைச் செந்நாய் என்கிறார்;*
*இம்மண் என்றோ செம்மையுற் றிருக்கும்*
*வளர்ச்சிக் கிடையிடை தளர்ச்சி நேர்ந்தது*
*மக்க ளிடையே புக்கன மாசுகள்*
*வள்ாச்சிக் கொழுக்க வளப்பமும் தேவை*

---

1. செந்நாய் – காட்டில் வாழ்வது; இரக்கமற்றது; மற்ற உயிர்களை வதைப்பது அதன் குணங்களுள் ஒன்று.
4. பூரணம் வேண்டா – முழுமையும் சொல்ல வேண்டுவதில்லை. (சில சொல்லுதல் சாலும்.)
9. ஒப்புரவு – ஒற்றுமை; பரோபகாரம்.
10. விழுப்பம் – சிறப்பு.
13. மற்றோர் – நகரம், பட்டணம் முதலிய இடங்களில் வாழ்வோர்.
24. வளர்ச்சிக்கு ஒழுக்க..........

இனியோ மனிதர் இனிதே வாழ்வர்!
அல்லல் தொல்லை எல்லை கடந்தால்
கருத்தில் பொருந்திய திருத்தம் உறுமே
மக்கள் தாமே தக்கன காண்பர்
வளர்ச்சித் தத்துவக் கிளர்ச்சியும் வாளா
கிடத்தல் அரிது நடத்தும் கடன்களை;
அளவில் பிரிவால் பிளவால் பிணங்கார்
தீய குணமெலாம் தூயன ஆகும்;
வலியர் மெலியரை நலியச் செய்யார்
ஒப்புர வாலே இப்புவி இயங்கும்
ஒழுக்கம் வாழ்க்கையில் விழுப்பம் பெறுமே;
**காதல் மணமே** நீதி காக்கும்
கலப்புச் சட்ட அலக்கண் ஒழியும்;
சிற்றூர் உழைப்பை மற்றோர் கவரார்
நகரம் மட்டும் நுகரா தின்பம்
குழவி உடலில் அழகு பொழியும்
கப்பல் வாணிபத் தெப்பம் ஆகும்
சுரண்டல் உலகம் வறண்டே போகும்;
விஞ்ஞா னக்கலை மெய்ஞ்ஞா னத்தின்
துணையாய் நின்று பணிகள் ஆற்றும்
விளைவு பெருகும் வளமை கொழிக்கும்;
இல்லம் எல்லாம் நல்ல பள்ளிகள்
**கலப்பை இராட்டை** புலப்படும் காட்சி;
அருகர் புத்தர் கிறிஸ்து முதலியோர்
அருளிய மொழிகள் பொருளில் ஒன்றாம்
ஒன்றே குலமும் ஒன்றே உலகமும்
ஒன்றே தெய்வமும் என்றே வாழ்வர்;
என்பி னுள்ளும் அன்பு நிலவும்;
இதுவே பொதுமைப் புதுமை மலர்ச்சி
காம தேனுவாய்ப் பூமி பொலியும்
தொண்டு செய்க தொண்டு செய்க
வையம் வளரும் தெய்வம் வாழும்.

❖❖❖❖

41. கப்பல் சுரண்டலுக்குப் பயன்படாதென்க.